பவளவிழா மலர்

# திருஞானம்




யா / சுன்னாகம் திருஞானசம்பந்தர்

வித்தியாசாலை

# பவளவிழா சிறப்பு மலர்

## யா/ திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
## சுன்னாகம்

வெளியீடு :

**மலர்க்குழு**

யா/ திருஞானசம்பந்த வித்தியாசாலை,

சுன்னாகம்.

# பாடசாலைக் கீதம்

பெருஞானம் தரும் எங்கள் - அன்னையே
திருஞான சம்பந்த வித்தியாசாலையே
தருவாளே கல்வியும் கலைகள் எங்களுக்கே
மருவியே பணிவோம் எம் மாதாவே தினமும்

அறிவொளி ஏற்றியே அகத்திருள் - நீக்கியே
செறியும் செந்தமிழ் மொழி செழுந்தேனென இனிக்க
நெறிமுறை காட்டியே நெஞ்சில் பக்தி ஊட்டியே
சிறிய பாலர் எமக்கு சேர் கல்வி தரும் அன்னை

அதிபர் ஆசிரியரை அனுதினம் பணிவோம் - எம்
மதிநிறை கல்வி தந்தே மகிழ்கலையும் தருவாயே
பதியெனும் சுன்னாக நகரில் வளர்கின்ற
திருஞான சம்பந்த வித்தியாலை வாழி
வித்தியாசலை வாழி!

# ஸ்தாபகர்



சேர். முகாந்திரம் நாராயணர்

# ஆசிச்செய்தி

**தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு**
**காமுறுவர் கற்றறிந்தார்** *(திருக்குறள் - 399)*

கற்றறிந்த அறிஞர் தம் கல்வியால் தாம் இன்புறுவதோடு உலக மக்களும் இன்புறுவதைக்கண்டு மேன்மேலும் கற்கவும் கற்பிக்கவும் விரும்புவர்.

பவள விளாக்காணும் இக் கல்வி ஆலயம் புதுமைகள் பல கண்டு இன்புறுவதுடன், இம்மலரானது பாடசாலையின் கல்விப் பணியையும் இதனூடாக ஏற்பட்ட சமூக அபிவிருத்தியையும் எடுத்துக்காட்டும் சிறந்த ஆவணமாக இருக்கும். இம்மலர் இன்று கல்விகற்கும் மாணவர்களிடையேயும் வருங்கால மாணவர்களிடையேயும் பெரும் மனவெழுச்சியை ஏற்படுத்துமென உறுதியாக நம்புகிறேன்.

கடந்த காலங்களில் கல்வியிலும், பிற துறைகளிலும் சாதனை நிலைநாட்டியது போன்று தொடர்ந்தும் மாணவர் சமூகத்திற்கு சிறந்த பயில்களமாக விளங்க வாழ்த்தி, வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைவதுடன் வரிசப்புல மகாமாரியம்பாளை பிரார்த்தித்து மேன்மேலும் வளர நல்லாசிகள்.

சுபமஸ்த்து


பிரம்மஸ்ரீ கணேசசபாபதிக் குருக்கள்
பிரதமகுரு,
வரிசப்புலம் ஸ்ரீ மகாமாரி அம்பாள்,
சுன்னாகம்.

# பேராசிரியர் திரு. சி. தில்லைநாதன் அவர்களின்
# வாழ்த்துச் செய்தி

எனது வாழ்க்கைப் பயணத்தில் நான் எங்கெங்கு சென்றிருந்தாலும் எங்கெங்கு தங்கியிருந்தாலும், பிறந்த ஊரையும் பிள்ளைப் பருவத்தில் படித்த பள்ளிக்கூடத்தையும் எண்ணிப்பார்க்குந்தொறும் இதமளிப்பவை வேறெதுவும் இல்லை. கேடு தீர்க்கும் அமுதம் எனப்படும் கல்வி அறிவினை ஊட்டி வரும் சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் பவளவிழாக் கொண்டாட்டம் பற்றி அறிந்து பேருவகை எய்துகின்றேன். அங்கு நான் பெற்ற ஆரம்பக்கல்வி எனது வாழ்நாளில் யான் அடைந்த பேறுகள் அனைத்துக்கும் அத்திவாரமாய் அமைந்தது.

திருஞானசம்பந்தர் வித்தியாசாலையிலே கற்ற கால நிகழ்வுகள் பல நினைக்கும் போதெல்லாம் உவகையளிப்பனவாக என் உள்ளத்திற் பதிந்துள்ளன. எங்களுக்குக் கற்பித்த ஆசிரியர்கள் எங்களிடத்துக் காட்டிய அன்பும் ஆர்வமும் கண்டிப்பும் இன்றைய ஆசிரியர்களுக்கு எடுத்துக்காட்டுக்களாக அமையக்கூடியவை.

என்னை உருவாக்கிய ஆசிரியர்கள் அனைவரது பெயர்களையும் ஐந்தாறு தசாப்தங்களின் பின்னர் இன்று நினைவுக்கு மீட்க முடியுமோ தெரியவில்லை என்றாலும்; அன்று தலைமை ஆசிரியராக விளங்கிய திரு. ஆ. தம்பிப்பிள்ளை மற்றும் மதிப்புக்குரிய ஆசிரியர்களான திருவாளர்கள் வல்லிபுரம், தங்கம்மா அக்கா, பன்னக்கா, வேலுப்பிள்ளை, பொன்னுத்துரை, நடராசா, இளையப்பா, கனகசபை, செல்லத்துரை, கந்தையா முதலானவர்களை நன்றியுடன் நினைவுகூர முடிகிறது. உலகப்போரின் காரணமாகப் பிரதான வீதி வழியாகப் பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பப் பெற்றோர் அஞ்சிய அக்காலத்தில் எங்கள் வீடுகளுக்கு வந்து எங்களைப் பள்ளிக்கு அழைத்துச் சென்ற இராசா மாஸ்டரை மறப்பதற்கில்லை.

எடுக்கப்படும் பவளவிழா வெகுசிறப்பானதாய் அமையவும் பவளவிழாக் காலத்தில் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் யாவும் செவ்வனே கைகூடவும் எங்கள் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை நெடுங்காலம் நிலைத்து நின்று சீரிய முறையில் கல்விப் பணியினைத் தொடரவும் ஐயனார் அருள்வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.


**பேராசிரியர். கலாநிதி . சி. தில்லைநாதன்**
அரச கரும மொழிகள் ஆணைக்குழு,
ஆலோசகர், தேசிய ஒருமைப்பாட்டுச்
செயற்றிட்டப் பணியகம்.

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

"கல்வி கரையில கற்பவர் நாள் சில" என்ற வாசகத்தை மனதிற்கொண்டு சுன்னாகம் வாழ் மக்கள் தமது சிறார்கள் சமய அறிவையும் கல்வி அறிவையும் ஒருங்கே பெறவேண்டும் என்ற வேணவாவினால் திரு.முகாந்திரம் நாராயணர் என்ற பெருவள்ளலால் 1933ம் ஆண்டு வைகாசி மூல நட்சத்திரத்தில் யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டு இன்று தனது 75ம் அகவையில் தனது பணியினைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இப்பாடசாலையின் தொடக்க காலத்தில் திரு.நா.கந்தையா என்பவரால் காணி வழங்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்டமை இப்பாடசாலையின் சிறப்பினையும் கிராம மக்களின் நாட்டுப் பற்றினையும் வள்ளன்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. இப்பாடசாலையின் ஸ்தாபகரான திரு. முகாந்திரம் நாராயணர் என்பவரின் மேற்பார்வையில் திரு.ஆ.மார்க்கண்டு என்பவர் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டு இலவசமாக மாணவர்களுக்கு கல்வி வழங்கிய பெருமையைக் கொண்டது இப்பாடசாலை. இங்கு கல்வி கற்று உயர் நிலையினைப் பெற்ற சுன்னாகம் வாசிகள் மலேசியாவில் திரைகடலோடிச் சென்று திரவியம் திரட்டிய காலத்தில் தம்மை வளர்த்தெடுத்த பாடசாலைக்கு நிதி உதவி செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டு நிதி திரட்டி தமது நன்றிக்கடனைச் செலுத்தினர். இந்நிதியை மூலதனமாகக் கொண்டு ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்கி பாடசாலை பாலர் வகுப்பில் இருந்து உயர் வகுப்பு வரை வளர்த்துச் சென்ற பாடசாலை அப்போதைய நிர்வாகத்தினரின் செயற்பாடு பாராட்டத்தக்கதொன்றாகும்.

ஏழைச்சிறார்களின் வயிற்றுப் பசியைப்போக்குவதற்கு பாடசாலையின் அயலவர்கள் உதவியமை பாடசாலை மேலும் மேலும் வளர வேண்டும் என்ற எண்ணத்தை கொண்டிருந்தனர் என்பதுடன் பாடசாலை நிர்வாகத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள அசையாத நம்பிக்கையையும் உறுதியையும் வெளிப்படுதக்துகின்றது. இங்கு கல்வி கற்ற மாணவர்கள் விளையாட்டுத் துறையிலும் ஏனைய கலைத்துறைகளிலும் போட்டிகளில் பங்குபற்றி பெற்ற தங்கப்பதக்கங்களும் வெள்ளிப் பதக்கங்களும் பாடவிதானத்துடன் இணைபாடவிதான செயற்பாடும் இங்கு ஒருங்கே நடைபெற்றதை உறுதிப்படுத்துகின்றது.

காலப்போக்கில் நாட்டில் ஏற்பட்ட கல்விச் செயற்பாட்டின் மாற்றங்களால் இப்பாடசாலை ஒரு ஆரம்ப பாடசாலையாகச் செயற்பட வரையறுக்கப்பட்டது. 1962ம் ஆண்டு நாடு பூராவும் நடைமுறைக்கு வந்த "அரச பாடசாலைகள்" ஆக்கப்படும் செயற்பாடு உட்படுத்தப்பட்டமையால் இது 1-5 வகுப்புக்களைக் கொண்ட அரச பாடசாலையாக இயங்கத் தொடங்கியது. அக்காலங்களிலும் அதிபர்கள், ஆசிரியர்களின் வழிகாட்டலுக்கு இணங்க மாணவர்கள் தமது திறன்களை வளர்த்து உயர் கல்விக்காக பெரிய பாடசாலைக்கு செல்ல வழிகாட்டிய பெருமையை தனதாக்கிக் கொண்டது என்றால் மிகையாகாது.

பாடசாலை முகாமையாளர்கள், ஆதரவாளர்கள், நலன்விரும்பிகள் ஆகியோர்களின் செயற்பாட்டினாலும் அர்ப்பணிப்பாலும் இன்று இப்பாடசாலை வளர்ச்சியடைந்தமைக்கு எல்லாம் வல்ல இறைவனின் திருவருள் தொடர்ந்தும் கிட்டவேண்டும் என்று பிரார்த்தித்து வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**திரு. ப. விக்னேஸ்வரன்**
வலயக் கல்விப்பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம்,
மருதனார்மடம்.

# பவளவிழா வாழ்த்துச் செய்தி

சைவப் பாரம்பரியமும், தமிழ்மொழி தழுவிய கலாசாரமும் தமது இரு கண் எனப் போற்றிக் காத்து வருகின்ற மக்களைக் கணிசமான அளவில் கொண்டிருந்த யாழ்ப்பாணக் குடாநாட்டில் கால ஓட்ட வரலாற்றில் முகிழ்ந்தெழுந்த எதிர்விசைப் பண்புகளின் செல்வாக்கினால் சந்ததிகளுக்கிடையிலான பாரம்பரியங்களின்கையளிப்பில் ஊறு ஏற்படாமல் பாதுகாத்துக்கொள்வதற்காக அன்றைய காலச் சமூகப் பெரியவர்களினால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் ஒன்றாக சைவப்பாடசாலைகளின் ஸ்தாபிதம் விளங்குகின்றது.

மனிதவாழ்வின்படி மலர்ச்சிக்கும் நிலையான முன்னேற்றத்திற்கும், ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிகாட்டுகின்ற வாழ்வியல் நடைமுறைகளை பேணிப்பாதுகாத்துக் கையளிக்கின்ற அளப்பரிய கைங்கரியத்தினை யா/சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலை மூன்று கால் நூற்றாண்டு காலம் ஆற்றித் தான் சார்ந்த சமூகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக சுடர்விட்டுப் பிரகாசித்து வந்திருக்கின்றது.

கல்வி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகளின் மூலம் மாணவர்களின் ஆளுமை விருத்தியில் பல்வேறு படிமங்களை ஏற்படுத்தி வெற்றிப்பூரிப்புடன் பவளவிழா நிறைவைக் கொண்டாடுவதனை அகமகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

கடந்தகால வரலாற்றை மீட்டுப் பார்த்து எதிர்கால செயற்பாடுகளில் வெற்றிகரமாகத் தடம் பதிப்பதற்கு உந்துவிசையாக இப்பவள விழா நிகழ்வும், மலர் வெளியீடும் அமையும் என்பதில் ஐயமில்லை. இப்பாடசாலை மேன்மேலும் முன்னேறி நிறுவுனரின் இலட்சியத்திற்கும், சமூக எதிர்பார்க்கைகளுக்கும் வலுச்சேர்க்க வேண்டுமென இறையாசியை வேண்டி நிற்கின்றேன்.

**திரு. சு. சுந்தரசிவம்**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
(நிர்வாகம்)
வலிகாமம் கல்வி வலயம்,
மருதனார்மடம்.

# பவளவிழா வாழ்த்துச் செய்தி

"மனிதனுக்குள் புதைந்திருக்கும் பூரணத்துவத்தை வெளிப்படுத்துவதே கல்வி"
சுவாமி விவேகானந்தர்

யா/ திருஞானசம்பந்தர் வித்தியாலயம் தனது பவளவிழாவினைக் கொண்டாடும் இவ்வேளை மலரினை வெளியிடுகின்றமை கண்டு மகிழ்வடைகின்றேன்.

பல முன்னணிப்பாடசாலைகள் அயலில் சூழவிருப்பினும், தனக்கென்றோர் நிலையினை உருவாக்கி குடும்பத்திலிருந்து பாடசாலைக்குள் நுழையும் சின்னஞ் சிறார்களைப் பற்றும், பாசமும் வைத்து ஆக்கமும் ஊக்கமும் தந்து ஆரம்பக் கல்வியை புகட்டிப் புலமைப்பரீட்சையிலும் சித்திசெய்தச் செய்யும் இப்பாடசாலையின் செயற்பாடுகள் மேலும் மேலும் வளர வாழ்த்துகின்றேன்.

அறிவு, திறன், மனப்பாங்கு விருத்தியினூடாக ஆளுமை விருத்தியினை ஏற்படுத்தவல்ல பருவம் ஆரம்பக்கல்வியைப் பருவம். அப்பருவத்தினருக்கு ஏற்க வேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்தி அவர்கள் தொடர்ந்து கற்கும் பாடசாலையில் நல்லவர்களாக; வல்லவர்களாக மிளிரவைக்கும் ஆசிரியர்களின் பணி சிறப்பானது.

அதிபரோடு இணைந்து ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் இம்மலரினை மலரச் செய்வதில் மிக்க ஆர்வங்காட்டி நிற்கின்றமை பாடசாலையின் எதிர்காலம் மிக ஒளிமயமானதாக அமையும் என்ற நம்பிக்கையினை ஏற்படுத்துகின்றது.

தொடர்ந்து இப்பாடசாலை சிறப்புடன் செயற்பட இறையாசி வேண்டுகின்றேன்.

**திருமதி ச. நாகராஜா**
பிரதிக் கல்விப்பணிப்பாளர்,
(கல்வி அபிவிருத்தி)
வலிகாமம் கல்வி வலயம்,
மருதனார்மடம்.

# பவளவிழா வாழ்த்துச் செய்தி

ஊருக்குப் பெருமை சேர்ப்பன கல்விச்சாலைகள், ஆலயங்கள், அறப்பணி நிலையங்கள், இயற்கை வளங்கள் என்பனவாகும். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிப் பாதையில் பாரிய பங்கினை வகித்துவருபவை கல்விச்சாலைகள் என்று கூறுவது மிகையாகாது. அந்த வகையில் உடுவில் கோட்டத்தில் அமைந்துள்ள யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாலயம் தனது கல்விச் சேவையில் எழுபத்தைந்து ஆண்டுகளினைப் பூர்த்தி செய்து பவளவிழா கொண்டாடும் இவ்வேளையில் பவளவிழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பசுமையான பயிர்கள் விளையும் செம்மண் வளமும், நீர்வளமும் கொண்ட வலிகாமத்தின் மத்தியில் சுன்னாகம் என்றும் சிறிய நகரத்தின் மத்தியில் கல்வித்தரம்மிக்க, ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் காலத்தின் தேவையறிந்து 1933ம் ஆண்டு ஸ்தாபகர் முகாந்திரம் நாராயணர் அவர்களால் முன்னெடுக்கப்பட்டது. குறிப்பாக சைவப் பாரம்பரியம் மிக்க ஓர் சைவப் பாடசாலை தேவையென உணரப்பட்ட நிலையில் ஆரம்பிக்கப்பட்டதாக அவ்வூர் மக்கள் கூறுகின்றனர். அதனால்தான் இப்பாடசாலைக்கு யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை என பெயரிட்டதாகக் குறிப்பிடுகின்றனர்.

பாடசாலை என்பது மனிதவள அபிவிருத்தியில் முக்கியத்துவம் பெறும் ஒரு ஒழுங்கமைப்பாகும். இவ்வொழுங்கமைப்பு குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. அதில் பலர் தொடர்புபடுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்கள் பல உண்டு. அந்தப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாதபோது பாடசாலையின் நோக்கத்தை அடைவது சிரமம். ஒரு பாடசாலையிலிருந்து மற்றைய பாடசாலை வேறுபடுகின்றது. எனவே நிறைவேற்றவேண்டிய பொறுப்புக்களும் வேறுபடும். இதிலிருந்து அறிவது எல்லாப் பாடசாலைகளுக்கும் சிறப்பான ஒரு பொறுப்பு இருக்கலாம். அது ஒழுங்கமைப்பு என்ற வகையில் பாடசாலை பல வளங்கள் பெற்று கல்வி வளர்ச்சியால் முன்னெடுக்கப்படுகின்றன. இதுவே யதார்த்தம். வேறு கருத்தில் கூறுவதாயின் மாணவரின் கற்றலில் அவர்களது சமூக, பொருளாதாரச் சூழல், சமுதாயத்தின் சமூகப் பண்பாட்டுப் பின்னணி, பெற்றோரின் எழுத்தறிவு, ஆகியன ஆதிக்கம் செலுத்துகின்றன. இதுவே பாடசாலை வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகின்றன.

இக்கல்வி நிர்வாகத்தைக் கட்டியெழுப்புவதற்கு இதுவரை காலமும் அயராது உழைத்த அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் எனப் பலர் காணப்படுகின்ற அவர்களது அர்ப்பணிப்பான சேவையினை மனதார வாழ்த்திப் பாராட்டுகின்றேன். பவளவிழாவினைக் காணும் வேளையில் ஆக்கபூர்வமான பல கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்து தனது சேவையின் ஊடாக எதிர்கால சந்ததியினராகிய மாணவ சமுதாயத்தின் நல்வாழ்விற்கு வழிகாட்ட தொடர்ந்து பணியாற்ற வேண்டுகின்றேன். குறிப்பாக, பாடசாலைச் சமூகத்தினர் அயராது தொடர்ந்து பாடுபடவேண்டிய சக்தியை அவர்களுக்கு வழங்க எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**திரு. செ. குபேரநாதன்**<br>
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,<br>
உடுவில்.

# பாரை உயர்த்திட எழுந்த
# கலைக்கூடம் வாழி!

அன்னசத்திரம் ஆயிரம் வைப்பதும், ஆலயம் பதினாயிரம் வைத்துப் பூசிப்பதும், இலட்சம் கனிமரங்களைத் தெருவழியே நாட்டி நாடு பயன்பெற வழிசெய்வதும், வழிச்செல்வோரும் வாயில்லாப் பிராணிகளும் தாகந்தீரப் பகுருகும்படியாகத் தண்நறுங்கூவமும், கேணியாதியவும் தொடுதலும் புண்ணியங்கள்தான். இவற்றினும் கோடி மடங்கு புண்ணியம் ஏழையொருவனுக்கு எழுத்தறிவித்தல் ஆகும்.

சோற்றுப் பருக்கைக்கு ஏங்கும் ஏழைக்குச் சோறிடல் புண்ணியம்தான்! அதிலும் பார்க்க அவனுக்கோ அவன் பிள்ளைகளுக்கோ சோற்றுக்குழைக்க வழிகாட்டல் மகாபுண்ணியமாம்.

வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் – இங்கு
வாழும் மனிதருக்கெல்லாம்
பயிற்றிப் பலகலைதந்து – இந்தப்
பாரை யுயர்த்திடல் வேண்டும்

என்ற பாரதியின் பாமுரசில் விழித்தெழுந்தது சுன்னையம்பதி. சைவத்தமிழ் மரபு வளர்ச்சி நோக்கில் எழுந்த கல்விக்கோயில் இது. இங்கு கற்றவர்கள், நாடறிந்த பேராசிரியர்களாகவும், அறிவாராய்ச்சியுணர்ச்சியொழுக்கங்களில் மேம்பட்டவர்களாகவும் விளங்குகிறார்கள்.

எழுபத்தைந்து வயதாகின்றதாயின் பீடும் பெருமையும் பேணிவரும் ஊரவர், பழையமாணவர், பெற்றோர், நலன்விரும்பிகள், ஆசிரியர், மாணவர் யாவரும் பாராட்டுக்குரியவர்கள். இப்பாடசாலையிலே பணிபுரிந்த நாள்கள் இன்றும் பசுமையாக நெஞ்சில் நிழலாடுகின்றன.

இக்கலைக்கோயில் நீடுபுகழ் படைத்து நிலவ என் வாழ்த்துக்கள். மலர்க்குழுவும் அதிபர், ஆசிரியர்கள், மாணவரும் வாழி! வாழி!

**திரு. வி. ஏரம்பமூர்த்தி**
(ஓய்வுபெற்ற அதிபர்)

# அதிபரின் வாழ்த்துரை

சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை 1933ம் ஆண்டு வைகாசி மாத மூல நட்சத்திரநாளில் ஆரம்பிக்கப்பெற்று இவ்வாண்டு 75ஆவது ஆண்டில் காலடி வைத்து பவளவிழாவைக் கொண்டாடும் முகமாக வெளியிடும் கன்னி பவளவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

இப்பாடசாலையின் வரலாற்றை மலராக வெளியிட முன்னர் பலமுறை முயன்றும் காலம் கனியாத நிலையில் தற்போதைய பாடசாலைச் சமூகம் இதனை வெளியிட உதவிய பவளவிழாக் குழுவுக்கு எனது முதற்கண் நன்றிகள்.

இப்பவள விழா மலர் வெளிவரமுன் நான் இப்பாடசாலையிலிருந்து ஓய்வுபெறுவதால் எனது வாழ்த்துரையுடன் எனது கருத்துக்கள் சிலவற்றையும் சுருக்கமாகக் கூறவேண்டிய நிலையில் உள்ளேன். இப்பாடசாலையில் 08.03.2001 தொடக்கம் அதிபராக சேவையாற்றி 30.06.2008இல் ஓய்வுபெறும்வரை எனது பணியை சிறப்பாக ஆற்ற வழிகாட்டிய இறைவனுக்கும், ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எனது சேவைக்காலத்தில் இப்பாடசாலைக்கு விளையாட்டு மைதானம், குடிநீர்த்தாங்கி வசதி, பாடசாலை மண்டபம் புனரமைப்பு போன்ற பௌதிக வளங்களைப் பெற உதவிய பாடசாலைச் சமூகத்திற்கும் கல்வித் திணைக்களத்திற்கும் எனது மனமார்ந்த நன்றிகள். அத்தோடு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் என்னால் முடிந்த பங்களிப்புக்களை ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் செய்துள்ளேன்.

எனினும் கடந்த இரண்டு வருடங்களில் மாணவர் வளம் இப்பாடசாலையில் குறைந்து வருவது மிகவும் வேதனை தரும் விடயம். போதிய பௌதிக வளங்கள் இருந்தும் அதன் பயன்களை பெற மாணவர் வளத்தை அதிகரிக்க உரிய பங்களிப்பை இனிவரும் காலங்களில் உரிய முறையில் பாடசாலைச் சமூகம் வழங்கி பாடசாலையின் பெருமையைக் காப்பாற்ற முன்வரவேண்டும்.

இவ்வித்தியாசாலையின் அன்னை மென்மேலும் கல்விப்பணி சிறப்புற்று, சீரிய வழியில் நின்று ஆயிரம் காலத்து பயிராக அறிவொளி பரப்ப அருள் தருவதற்கு வேண்டி எனது நல்லாசிகளையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். கல்வி வானில் ஒ ளிரும் தீபமாகத் திகழ்ந்து நானிலம் போற்றும் நற்பிரசைகளை உருவாக்கி பல்வளமும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ எல்லாம்வல்ல வரியபுலம் முத்துமாரியம்மனை பிரார்த்தித்து எனது நல்வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்து விடை பெறுகிறேன்.

**திரு. பொ. கணேஸ்வரலிங்கம்**
அதிபர்,
யா/திருஞானசம்பந்தர் வித்தியாசாலை,
சுன்னாகம்.

# முன்னாள் அதிபர் திரு. சீ. நடேசு அவர்களின் 75 ஆவது ஆண்டு நிறைவு வாழ்த்து

சுன்னாகம் வரியப்புலம் திருஞானசம்பந்த வித்தியாசாலை பவளவிழாக் கொண்டாடுகிறது என்ற செய்தியைக் கேட்டு அகமகிழ்பவன் நான். ஏனெனில் எனக்கும் திருஞான சம்பந்த வித்தியாலைக்கும் 15 வருடகாலப் பழக்கமுண்டு.

புண்ணியங்கள் எல்லாவற்றிலும் சிறந்தது எழுத்தறிவித்தல், எழுத்தறிவிக்கும் இடமே வித்தியாசாலை, அன்னசத்திரம் ஆயிரம் கட்டலிலும் ஆலயங்கள் பதினாயிரம் அமைத்தலிலும் ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிக்கும் இடமாகிய வித்தியாசாலைகள் அமைப்பது கோடி புண்ணியம் தரும் என்பது ஆன்றோர் வாக்கு.

அதற்கமைய சுன்னாகம் மக்கள் கல்வி கற்கக்கூடியதாக வித்தியாசாலை ஒன்று அமைக்கப்படவேண்டுமென்ற எண்ணங்கொண்ட பெரியோர்கள் நன்கொடையாகக் கிடைத்த நிலத்தில் வித்தியாசாலையை அமைத்தனர். முதலில் மாணவர்களைச் சேர்க்கவேண்டும். பின்னர் கல்வி போதிக்கும் ஆசான்களைத் தேடவேண்டும் என்ற நிலை முயற்சி பலன் தந்தது. சிலர் தாமாகவே முன்வந்து இலவசமாகக் கல்வி போதிக்கச் சம்மதம் தெரிவித்தனர். படிப்படியாக வளர்ச்சி பெற்று உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதும் ஆசிரியர்களுக்கும் வேதனம் கிடைத்தது.

பாலர் வகுப்புத் தொடக்கம் கல்விப் பொதுத்தராதர சாதாரணதர வகுப்பு வரை வகுப்புக்கள் நடைபெறத் தொடங்கின. பணவசதி படைத்தவர்கள் கல்லூரிகளை நாடிச் செல்ல ஏழைகளின் பிள்ளைகளே இங்கு கல்வி பயில்வாராயினர். எனினும் கல்லூரிகளுடன் போட்டிபோடக்கூடிய நிலையில் விளையாட்டு, கலைகலாசார செயற்பாடுகளில் மாணவர்கள் திறமையை வெளிப்படுத்தினர். மாகாண மட்டத்தில் மாத்திரமல்லாமல் அகில இலங்கை மட்டத்திலும் கலந்து கொண்டு பெருமை பெற்றது.

அரசாங்கம் பொறுப்பேற்றபின் மாணவர் பற்றாக்குறையினால் வகுப்புக்கள் மூடப்பட்டு 5ம் வகுப்பு வரையுள்ள ஆரம்ப பாடசாலையாக வந்தமை வேதனைக்குரிய விடயமாகும். ஆரம்பகாலத்தில் இங்கு கல்விகற்றவர்கள் பலர் உயர் பதவிகளில் பணிபுரிந்தமை பாராட்டத்தக்கது. வேறு சிலர் வெளிநாடுகளிலும் சிறப்புடன் வாழ்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நான் இங்கு 1963ம் ஆண்டு வைகாசி மாதம் 2ந் திகதி கண்டி மாவட்டத்திலிருந்து மாற்றம் பெற்று வந்தேன். அப்போது 9 ஆசிரியர்கள் கடமைபுரிந்து வந்தனர். 1971ம் ஆண்டு ஆவணி 1ந் திகதி அதிபராகப் பதவியேற்றேன். 7 வருடங்கள்தான் அங்கு அதிபராகக் கடமைபுரிய முடிந்தது. 1978ல் மாற்றம்பெற்று ஓய்வுபெறும்வரை மாற்றம் பெற்ற கல்லூரியிலேயே கடமையாற்றி 1984ல் ஓய்வுபெற்றேன்.

இப்போது பாடசாலை கட்டடவசதி, விளையாட்டு வசதி எல்லாம் பெற்று வளமாக உள்ளதைக் காண மனம் மகிழ்கிறது. கல்வியிலும் சிறப்புடன் விளங்குவதாக அறிகிறேன். இப்போது கடமைபுரியும் அதிபர் திரு.பொ.கணேஸ்வரலிங்கம் அவர்களது முயற்சி பாராட்டத்தக்கது. ஆசிரியர்களும் பாராட்டப்படவேண்டியவர்களே.

இப்பவளவிழாவை நடத்தவேண்டுமென்ற எண்ணம் ஏற்பட்டு அதனைச் செயற்படுத்தும் அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதேபோன்று நூற்றாண்டு விழாவையும் சிறப்பாகக் கொண்டாடும் நிலையும் வரவேண்டுமென்றும் வாழ்த்துகிறேன்.

**திரு. சி. நடேசு**
முன்னாள் அதிபர்.

# பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளரின் இதயத்திலிருந்து...

யா/ சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை பவளவிழா ஆண்டில் பிரவேசிப்பதை முன்னிட்டு வெளியிடும் பவள விழா மலருக்கு (திருஞானம்) வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு விருப்படைகிறேன்.

எமது சங்கம், பவளவிழாச் சபை, மைதான நலனோம்புச் சபை ஆகியவற்றுடன் இணைந்து பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை முன்னெடுத்தது. அதன் ஓர் அங்கமாகவே இம்மலர் வெளி வருகின்றது.

ஒரு பாடசாலையின் வளர்ச்சியானது அந்தப் பாடசாலையை ஒட்டிய சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டி நிற்கின்றது. சமூகமானது பாடசாலையின் வளர்ச்சியிலே, உயர்ச்சியிலே அக்கறை செலுத்தும் போது பாடசாலையின் பணி மேலும் சிறக்க வாய்ப்பாக அமைகிறது. இந்த வகையில் எமது வித்தியாசாலையும் சமூகத்தின் ஒத்துழைப்புடன் மேலும் வளர்ச்சி அடையும் என்பது உறுதி.

இம்மலரானது பாடசாலையின் வரலாறு, பாடசாலையின் தோற்றம், வளர்ச்சியில் அக்கறை கொண்ட பெரியோர்கள், கல்விச் செயற்பாடுகளை முன்னெடுத்த ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களின் புகைப்படங்களையும் தாங்கி வருவது சிறப்பம்சமாகும்.

இம்மலர் வெளிவருவதற்கு அயராது உழைத்துவரும் மலராசிரியருக்கும், பவள விழாக் குழுவினருக்கும், அதிபர், ஆசிரியர் குழாத்தினருக்கும், மாணவச் செல்வங்களுக்கும் ஏனைய பாடசாலைச் சமூகத்திற்கும் எமது சங்கம் சார்பில் பாராட்டி, மென்மேலும் வித்தியாசாலை வளர இறையருளை வேண்டி அமைகிறேன்.

**திரு. ஐ. தவபாலசிங்கம்**
செயலாளர்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
யா/திருஞானசம்பந்தர் வித்தியாசாலை,
சுன்னாகம்.

# பவளவிழாச் செயலாளரின் பேனா முனையிலிருந்து...

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு*
*மாடல்ல மற்றையவை"*

என்பது வள்ளுவர் வாக்காகும். "எல்லாத் தானங்களிலும் சிறந்தது வித்தியாதானம்" என்ற கருத்து நாவலர் அவர்களின் உள்ளத்தில் இருந்து உதித்தது. அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தலிலும் ஆங்கோர் ஏழைக்கு அறிவூட்டுதல் மேலானது. இம்முதுமொழிக்கிணங்க பல அனுபூதிமான்கள் பாடசாலைகளை நிறுவினர். இந்த வகையில் முகாந்தரம் நாராயணரும்நாகர் கந்தையாவும் இணைந்து திருஞானசம்பந்தர் வித்தியாசாலை எனும் கல்விக் கூடத்தை நிறுவினர். இக்கல்விக்கூடம் உருவாகி இன்று மூன்று கால்நூற்றாண்டு நிறைவு பெறுகின்றவேளையில் பவளவிழாவினை முன்னிட்டு மலர் ஒன்றை வெளியிடவும், பவளவிழாவினைக் கொண்டாடவும் பாடசாலைச் சமூகம் முன்வந்துள்ளதையிட்டு சபையின் செயலாளர் என்ற வகையில் பெரு விருப்படைகிறேன்.

வரலாறு எமக்குப் பல புதிய பாடங்களை தந்துகொண்டிருக்கின்றன. பல புதிய நாயகர்களைத் தரத் தவறுவதுமில்லை. அந்தவகையில் வரலாற்று நாயகர்களை உருவாக்கும் பணியில் முக்கிய பங்கு வகிப்பவை கல்விச் சாலைகளே.

எமது யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையும் பல வரலாற்று நாயகர்களை உருவாக்கித் தந்துள்ளமையால் ஈழத்திலும், வெளிநாட்டிலும் வித்தியாசாலையின் மேன்மை பரவி வருகின்றது.

வரலாற்று புருஷர்களைத் தந்தும், உருவாக்கிக்கொண்டு இருக்கும் எமது வித்தியாசாலைக்கு வரலாறு எழுதி வெளியிடவேண்டும் என்று பவளவிழாச் சபையினர் முன்வந்துள்ளது. அம்பாளின் கருணையே என்று கூறுவதில் மிகையாகாது.

நாகரிகத்தைக் காப்பாற்றும் நிறுவனங்களாக இல்லம், பாடசாலை, தொழில்சார்ந்த துறை, அரசு ஆலயம் எனப்பல உள்ளன. இவை பழமையைப் போற்றியும் புதுமையைப் புகுத்தியும் ஓர் முற்போக்காக எதிர்காலத்தை எமக்கு உருவாக்கித் தருகின்றன. சமூகத்தில் உள்ள பிள்ளைக்கு சமூகத்தில் ஒட்டி வாழத்தக்க அறிவு ஆற்றல், மனப்பாங்கு என்பவற்றைக் கொடுக்கும் நிறுவனம் பாடசாலை ஆகும். எனவே இப்பாடசாலையின் வரலாறு பற்றியும், பாடசாலை சார்ந்த இடம்பற்றியும், சமூக விழுமியம் பற்றியும் ஒவ்வோர் மழலைச் செல்வங்களும், சார்ந்த சமூகத்தவரும் அறிந்துகொள்வதற்கு இந்நூல் அவசியமாகின்றது.

அதேசமயம் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் தனது சொந்த நாட்டின் வரலாறு பற்றி அறிந்து கொள்வது எவ்வளவு முக்கியமோ அவ்வாறு தனது பாடசாலை பற்றி அறிய இம்மலர் உதவும்.

இந்த வகையில் பாடசாலை வரலாறு வருஷப்புலம் மகாமாரி அம்மன் கோவில் வரலாறு போன்றவை ஒழுங்குபடுத்தும்போது தொடர்புபட்ட பல சம்பவங்களைத் திரட்டியெடுத்து உருவாக்கவேண்டிய நிலையேற்பட்டது. எமக்குக் கிடைத்த தகவல்களைக் கொண்டு பல்வேறு

ஆதாரங்களை ஒப்பிட்டு நோக்கி முரண்பாடுகளை நீக்கிச் சரியான முறையில் இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் இம்மலர் எமது ஒற்றுமையின் பெறுமானத்தை எடுத்துக் காட்டுவதுடன் பல தசாப்தங்கள் நிலைத்திருந்து நம்முன்னோர்களுடைய சேவைகளை பரம்பரை பரம்பரையாக ஞாபகப்படுத்துவதுடன் எதிர்கால சந்ததியினரையும் நற்பிரஜைகளாக உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.

இம்மலரில் குறைகள் இருப்பின் அவற்றை தெரியப்படுத்தினால் அக்கருத்துக்களையும் ஆலோசனைகளையும் நாம் மனமுவந்து ஏற்று எதிர்காலத்தில் மலரும் நூற்றாண்டு மலரில் சிறப்புடன் வெளிவரும் என்பது திண்ணம்.

இவ்வேளையில் வித்தியாசாலையின் முன்னேற்றத்துக்கு பலவழிகளிலும் பங்களிப்புச் செய்தவர்களை நன்றியுடன் நிறைவுகூரக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் இப்பவளவிழா ஆண்டில் முன்னெடுத்து சகல சேவைகளுக்கும் ஒத்துழைப்பு நல்கிய மைதான நலனோம்பு சபையினருக்கும் அதிபர், ஆசிரியர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கும், பழைய மாணவர் சங்கத்தினருக்கும் சபை சார்பாக நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு"

**திரு. ந. பழனிவேல்**
செயலாளர்,
பவளவிழாச் சபை.

# மலர் ஆசிரியரின் உள்ளத்திலிருந்து
# எழுத்துருவில்

யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் 75வது ஆண்டு நிறைவை முன்னிட்டு (பவள விழா) வெளியிடப்படும் பவளவிழா மலருக்கு ஆசிரியராகக் கடமையாற்ற சந்தர்ப்பம் கிடைத்தமை எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது. இப்பணியை என்னிடம் ஒப்படைத்த மலர்க் குழுவிற்கும் எனது மதிப்பார்ந்த அதிபர் திரு. பொ. கணேஸ்வரலிங்கம் அவர்களுக்கும், ஆசிரியர் குழாத்துக்கும் பவளவிழாச் சபையினருக்கும், பாடசாலைச் சமூகத்துக்கும் எனது மனம் கனிந்த நன்றிகள்.

இம்மலரானது எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலையுடன் தொடர்புடையவர்களின் ஆக்கங்களைத் தாங்கி நிற்கின்றது. மாணவர்களின் ஆக்கங்கள், செயற்றிறனை வெளிப்படுத்தும் புகைப்படம் மேலும் வருஷப்புலம் ஸ்ரீமகமாரி அம்மன் ஆலய வரலாற்றுக் குறிப்புகள் தாங்கி வரவேண்டும் எனும் நோக்குடன் இம்மலர் வெளியிடப்பட்டுள்ளது. இம்மலர் நாட்டின் அசாதாரண சூழலில் வெளிவந்த எம் வித்தியாசாலையின் முதலாவது மலராகும்.

இம்மலரை சிறந்த முறையில் வெளியிடுவதற்கு தமது முழுப்பங்களிப்பையும் நல்கிய கோண்டாவில் Andra நிறுவனத்தார்க்கும் ஏனைய பணியாளர்களுக்கும் எனது விஷேட நன்றிகள். வேண்டிய ஆலோசனைகளை வழங்கி எனது பணி சிறக்க உதவிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மலர்க்குழு, ஆசிச் செய்தி வழங்கிய சமயப் பெரியோர்க்கும் கல்விசார் உத்தியோகத்தர்களுக்கும் மலர் ஆசிரியர் என்ற வகையில் நன்றி பகர்கின்றேன்.

**திருமதி. ஜெ. சுரேஸ்**<br>
மலர்க்குழு சார்பில்<br>
ஆசிரியர்,<br>
யா/திருஞானசம்பந்தர் வித்தியாசாலை.

# பழைய மாணவர் உள்ளத்திலிருந்து...

எமது அன்னை "சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை" பவளவிழா சிறப்பாக கொண்டாடுவதையிட்டு பழைய மாணவர்களாகிய நாம் பெருமிதமும் மட்டற்ற மகிழ்ச்சியும் அடைகிறோம்.

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்

என்ற பாரதியாரின் பாடலுக்கு இணங்க எங்கள் கிராமச் சிறார்களின் ஆரம்பக்கல்வி வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு எமது மூதாதையினரான திரு. முகாந்திரம் நாராயணரால் ஆரம்பத்தில் திண்ணைப்பள்ளியாக ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை பொன்விழா, மணிவிழா கடந்து பவளவிழா கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் இப்பாடசாலை விருட்சத்தின் பல விழுதுகள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பரந்துபட்ட பழைய மாணவர் சமூகத்தினைக் கொண்டுள்ளது. அதேவேளை இக்குறுங் காலத்தில் தனது பல்துறை செயல்திறன் காரணமாக தனக்கென ஒரு தனித்துவத்தைக் கொண்டு திகழ்கின்றது.

ஒரு மனிதனின் ஆரம்பக்கல்வி அடித்தளம்தான் அவனின் கல்வி வளர்ச்சிக்கு ஆணிவேர் ஆகும். இதற்கமைய இக்கட்டான சூழ்நிலையிலும்கூட பாடசாலைச் சமூகத்தின் விடா முயற்சியும் விறுவிறுப்பான போக்கும் அதனை ஆக்கும் திறனும், பொறுப்புணர்வும் சீரான சிறப்பான செழுமையுடன் கடமையாற்றும் பாங்கும் இப்பவளவிழாவினைக் கொண்டாட உதவியுள்ளன. உண்மையில் இவை வரவேற்கத் தக்கதும், போற்றத்தக்கதும் மற்றோருக்கு எடுத்துக்காட்டாகவும் அமையும் என்றால் மிகையாகாது.

சமூகத்திற்கும் நாட்டிற்கும் உகந்த நற்பிரஜைகளை உருவாக்குவதே கல்வியின் நோக்கம். இதனை எய்தும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலையின் வரலாற்றினை ஆவணப்படுத்தவும், காலத்தின் கோலத்தினை பிரதிபலிக்கவும் இப்பவளவிழா சிறப்பு மலர் வெளிவருவதை வாழ்த்தி வரவேற்கின்றோம். இதில் இடம்பெறும் ஆக்கங்கள் இக்கால சிந்தனையில் பிரதிவிம்பமாக விளங்குவதோடு எதிர்காலத்திற்கு திசைகாட்டும் கலங்கரை விளக்காகவும் திகழவேண்டும்.

நூற்றாண்டுவிழாவின்போது இப்போதுள்ள சிறப்புக்களையும் வளங்களையும்விட மிக உன்னதமான உயர்வுகளைப் பெறுகின்ற ஆரம்ப பாடசாலையாக மிளிர வேண்டும் என்பது பழைய மாணவர்களாகிய எமது அவாவாகும்.


**பழைய மாணவர்கள்**
**கு. தயாளன்**
**கு. தயானந்தன்**
**கு. தயாகரன்**
வருஷப்புலம்,
சுன்னாகம்.

# பாடசாலைத் தகவல்கள்

| | | |
|---|---|---|
| பெயர் | : | யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை |
| இடம் | : | சுன்னாகம் |
| பாடசாலை ஆரம்பம் | : | 09-06-1933 ஸ்ரீ முகவருடம் வைகாசி 27ம் நாள் வெள்ளிக்கிழமை மூலநட்சத்திரம் |

***இலக்கமும் குறியீடும்***

| | | |
|---|---|---|
| பாடசாலை இலக்கம் | : | 09210 |
| தொகை மதிப்பு இல : | : | 10 / 10 / 023 |
| பரீட்சை இல. | : | 11355 |
| தேர்தல் தொகுதி | : | மானிப்பாய் |
| பிரதேச செயலாளர் பிரிவு | : | வலிதெற்கு, உடுவில் |
| கிராம சேவையாளர் பிரிவு | : | சுன்னாகம் நகர் வடக்கு J/195 |
| தரம் | : | III |
| வகுப்புக்கள் | : | 1 - 5 ஆண்டுகள் வரை (முன்பு க.பொ.த (சா/த) |
| காணி | : | 9 பரப்பு 2 குளி |
| கட்டடம் | : | 4212 சதுர அடி |
| ஆசிரியர் தொகை | : | 06 |
| மாணவர் தொகை | : | 91 |

மின்வசதி உண்டு

குடிநீர் வசதி : நீர்த்தாங்கி

15.03.1962ம் ஆண்டு வர்த்தமானிப் பிரகாரம் பாடசாலை அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| இடப்பெயர்வு | : | 1995.09.12 |
| சொந்த இடத்தில் ஆரம்பமானது | : | 1996.05.06 |
| கற்றல் நடவடிக்கை ஆரம்பம் | : | 1996.05.07 |
| மைதானம் | : | 4.5 பரப்பு விளையாட்டு மைதான நலனோம்புச் சபையினால் கொள்வனவு செய்து பராமரிக்கப்பட்டு வருகின்றது. |

## எங்கள் அதிபர்



திரு.பொ.கணேஸ்வரலிங்கம்

# பொருளடக்கம்


பாடசாலைக் கீதம்

ஆசிச் செய்தி

வாழ்த்துச் செய்திகள்

பாடசாலைத் தகவல்கள்

| | |
|---|---|
| பாடசாலை வரலாறு | 1 |
| ஐயனார் வழிபாடு | 6 |
| பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களின் | |
| திருஞானசம்பந்தர் வித்தியாசாலை ஞாபகப் பதிவுகள் | 10 |
| மைதானம் பிறந்த கதை | 11 |
| சிறுவர் அரங்கு | 15 |
| கந்தரோடை தமிழர் தொல்லியல் ஆய்வுக்கான ஒரு தொடக்கப் புள்ளி | 17 |
| உடற்கல்விச் செயற்பாடுகளும் சமூக மேம்பாடும் | 22 |
| சுன்னாகம் வரிசப்புலம் மகமாரி அம்பாள் வரலாற்றுப் பாதையில்... | 24 |
| என்னை வளர்த்த வித்தியாசாலை | 29 |
| இளம்பிள்ளை பராய விருத்தியும் ஆரம்பகாலக் கல்வியும் | 31 |
| ஆரம்பக் கல்வி வளம் தேர்ச்சி பெறவேண்டுமா? | 33 |
| கல்வித் திட்டமிடல் எவ்வகையில் ஒரு நாட்டின் கல்வி விரயங்களைத் | |
| தவிர்க்க உதவும் | 36 |
| ஞாபகம் | 39 |
| புவளவிழாக் காணும் என் பாடசாலை | 45 |
| நீங்களும் ஒரு சிறந்த ஆசிரியர் | 46 |
| சூழல்பாதுகாப்பின் அவசியம் | 48 |
| கலையும் வாழ்வும் | 50 |
| ஆரோக்கியமும் வாழ்வும் | 51 |
| இளைய சமுதாயத்தினரின் கல்வியின் போக்கு | 53 |

ஆசிரியரும் சிறுவர் உளநலமும் 58

அன்றைய எங்கள் ஆசான்கள் 61

கல்வியின் முக்கியத்துவம் 63

மனிதனை மனிதம் மிக்கவனாக வளர்க்க இளம்
பராயத்திலே சாரணியத்தைப் பின்பற்றுவோம் 65

1990களின் நிறைவுகளோடு... 67

வித்தியாசாலையின் மலர்ச்சியிலும் வளர்ச்சியிலும் பெரியோர்கள்
நினைவாக... 68

English in Sri Lanka 70

பொது அறிவு 71

விடுகதை 73

கிளி 74

நான் ஓர் ஓவியரானால் 74

உங்களுக்குத் தெரியுமா? 75

சிறுவர்களும் பாடசாலை வாழ்வும் 76

நல்லதைச் செய்வோம் 77

தமிழ் மொழி 78

பாரதியார் 78

Mahatma Gandhi 79

தாய் சொல்லைத் தட்டாதே 80

*நவிலும் நன்றிகள்* *81*

# அன்றைய பாடசாலை நிர்வாகிகள்



திரு. நா. கந்தையா



திரு. சி. இராமலிங்கம்



திரு. வே. தம்பு



திரு. சோ. முருகேசு

திரு. இ. கனகசபை

திரு. க. ஐயாக்குட்டி

# பாடசாலை வரலாறு

## அமைவு

இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்கையின் வடக்கே இயற்கை அழகு கொண்ட யாழ்ப்பாண மாவட்டத்தில் நீர்வளமும், நிலவளமும் நிறைந்தும் பழமையும், பெருமையும் வாய்ந்த பண்டைய அரசர்களினால் பேணப்பட்டதுமான புண்ணிய பூமியாகத் திகழ்கின்ற நகரமே சுன்னாகமாகும். இவ் வெள்ளியம் பதியிலே பண்டைய காலம் தொட்டே தமிழ் மொழியைக் கற்றலும், பல்துறைகளில் புலமைத் தன்மைகளும், சமயப் பற்றுகளும் மேலோங்க வெள்ளியங் கிரியாக மிளிர்கிறது. இந்நகரின் வடக்கே காங்கேசன்துறை வீதியில் சுன்னாக நகரின் முடிவு எல்லையிலும் மல்லாகம் நகரின் ஆரம்ப எல்லையிலும் மக்களின் வாழ்க்கைக்கு அத்திவாரமாகிய கல்வியைப் போதிக்கின்ற கல்விக் கூடமாக அன்று தொட்டு இன்றுவரையும் பிரகாசித்துக் கொண்டிருப்பதுதான் யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர்வித்தியாசாலை. இக்கல்விக்கூடமானது 4 பரப்புக்காணியில் 4200 சதுர அடி பரப்பில் நிரந்தரக் கட்டடத்தில் அமைந்துள்ளது.

## தோற்றம் :

காலத்தின் தேவை கருதியும், மக்களின் கல்வி அறிவை மேம்படுத்தவேண்டும்; அவர்களையும் அறிவாளிகள் ஆக்க வேண்டும், என்ற நோக்கில் ஊரில் வாழ்ந்த பல பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து ஆலோசித்து ஒரு சைவ வித்தியாசாலையை ஆரம்பிக்க முடிவு செய்தனர். இவ் அரும் பெரும் பணியினை நிறைவேற்றுவதற்கென ஓர் முகாமைத்துவக் குழுவினையும் அமைத்துக் கொண்டனர். இவ் வித்தியாலயத்திற்கான நிலத்தினை திரு. நா. கந்தையா அவர்கள் அன்பளிப்பாக வழங்க தாபக முகாமையாளராக திரு. முகாந்திரம் நாராயணர் கடமை வகித்தார். இவர்களது முயற்சியினால் (1933) ஆயிரத்து தொளாயிரத்து முப்பத்து மூன்றாம் ஆண்டு ஆனி மாதம் ஒன்பதாம் நாள் வெள்ளிக்கிழமை வைகாசி மாதம் மூல நட்சத்திர (திருஞானசம்பந்தர் குருபூசைத் தினம்) நன்னாளில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வித்தியாசாலையின் முகாமைத்துவ தலைவராக திரு முகாந்திரம் நாராயணர் விளங்கினார். இவருக்குப் பக்கத்துணைகளாக திரு.வே.தம்பு தலைமையில் மலேசியாவிலுள்ள சுன்னாகம் வாழ்மக்களின் உதவிகளும் கிடைக்கப்பெற்றன. இவர்களின் உதவியினாலேயே பாடசாலையின்பிரதான மண்டபம் அமைக்கப்பட்டது. பாடசாலையில் அமைந்துள்ள ஏனைய மண்டபங்கள் சுன்னாகத்தில் வாழ்ந்த மக்களின் சரீர, பண உதவிகளினாலேயே கட்டப்பட்டன. அதாவது தம்மிடமிருந்த மரங்கள், மண்கள், கற்கள் என்பவற்றைத் தாமே சுமந்து வந்தும் வண்டிகளில் ஏற்றி இழுத்து வந்தும் பாடசாலையின் கட்டடங்களை அமைத்தனர். இவ் வித்தியாசாலையின் கட்டட அமைப்பு விடயங்களில் மிக ஊக்கமாக தமது சொந்த அலுவல் போன்று மக்கள் அக்கறை காட்டியமை குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

## பாடசாலை வளர்ச்சி

பாடசாலையின் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டு கடமை ஆற்றியவர் திரு. ஆ.மார்க்கண்டு அவர்கள். உதவி ஆசிரியராக செல்வி சின்னப்பு தங்கம்மா கடமை ஆற்றினார். ஓராண்டுகாலம்திரு. ஆ. மார்க்கண்டு அவர்கள் தலைமையாசிரியர் பதவியில் இருந்து விலக செல்வி சின்னப்பு தங்கம்மா இரண்டு ஆண்டுகள் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். (1935 - 1937) (தகவல்கள் உறுதிப்படுத்தப்படவில்லை). இக்காலத்தில் உதவி ஆசிரியர்களாக திரு. கனக சுந்தரம், திரு.வ.கந்தையா, திரு. ஆ.தம்பிப்பிள்ளை போன்ற ஆசிரியர்கள் கடமை ஆற்றினர்.

இரண்டு வருடங்களாக வித்தியாசலையின் தலைமை ஆசிரியராகக் கடமை ஆற்றியவர் செல்வி சின்னப்பு தங்கம்மா. பெண் என்பதனாலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்

தமையினாலும் 1937ம் ஆண்டில் ஆசிரியராகக் கட மையாற்றிய திரு. ஆ. தம்பிப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியராகப் பதவி ஏற்றார். இவர் காலத்தில் பாடசாலை கட்டடங்கள் பலவிதத்தில் விருத்தியும், வளர்ச்சியும் அடைந்தன. கட்டடங்கள் அமைத்துக் கொண்டிருந்த காலமாக இருந்த மையினால் மாணவர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்பட்டமையினால் திரு. நா. கந்தையாவின் வீட்டிற்கு அண்மையிலிருந்து மரநிழலில் கற்பித்தல் செயற்பாடுகள் மேற்கொள் ளப்பட்டதுடன் மண் நிலத்திலேயே எழுதி பயிற்சி கொடுக்கப்பட்டது. திரு. சி. தம்பித்துரை, திரு.நா.இளையப்பா, திரு.ந.பொன்னுத்துரை, திரு.க.வேலுப்பிள்ளை, திரு.வ.கந்தையா, திரு.சி.வல்லிபுரம், திருமதி மயில்வாகனம் தங்கம்மா, செல்வி பரிமளம் போன்ற ஆசிரியர் களின் அயராத உழைப்பினாலும் ஊக்கத்தினா லும் முன்னைய பாலர் வகுப்புத் தொடக்கம் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு வரை கல்வி புகட் டப்பட்டது. இக்காலகட்டத்தில் கல்வி போதித்த ஆசிரி யர்களிற்கான சொற்ப வேதனத்தை மலேசியாவி லுள்ளவர்கள் அனுப்பி வைத்தனர். மாணவர்களின் முன்னேற்றத்தினை நோக்கமாகக் கொண்டு ஆசிரி யர்கள் தொழிற்பட்டமையினால் சொற்ப வேதனத்து டனேயே ஆசிரியர்கள் கல்வியைப் போதித்தனர்.

திரு. ஆ. தம்பிப்பிள்ளை தலைமையாசி ரியராக இருந்த காலத்தில் விளையாட்டுத்துறை யில் விசேடமாக குத்துச் சண்டையில் யாழ் குடா நாட்டில் அமைந்த பல ஆங்கிலப் பாடசாலை களுடன் போட்டியிட்ட ஒரு தமிழ்ப் பாடசாலையாகத் திகழ்ந்தது. அப்போட்டியிலும் நான்கு விருது களைத் தட்டிக் கொண்டமை பெருமைக்குரிய தாகும். குத்துச் சண்டையை பயிற்றுவித்தவர்கள் திரு.நா. இளையப்பா, திரு. த. பொன்னுத்துரை என்ப வர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். நாவற் குழியைச் சேர்ந்த பண்டிதர் திரு. சு. வேலுப்பிள்ளை தமிழ் சமய பாடங்களை சிறப்பாகப் போதித்தார். இசைக் கலையைப் பயிற்றுவிக்க திரு.சுப்பிர மணிய ஐயர் நியமிக்கப்பட்டார். இப்பாடசாலை யில் கொடிகாமத்திலிருந்துவந்த கார்த்திகேசு அவர்களும் கற்பித்தல் பணியை மேற் கொண்டார்.

இவ் வித்தியாசாலையில்அன்று பல சமய விழாக்கள், கலை விழாக்கள் கலாசார விழாக்கள் நிகழ்த்தப்பட்டன. சுன்னாகம் தமிழ் மன்றம் பிரதேச வாயிலாக முத்தமிழ் விழாவை நடத்தியது. விழாக் களின்போது சைவப் பெரியார்கள் இந்தியாவிலி ருந்து வரவழைத்து சொற்பொழிவுகளினை ஆற்றி னர். பாடசாலையின் கட்டட வளங்களை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நிதியினைத் திரட்டிக் கொள்வதற்காக இந்தியாவிலிருந்து கலைஞர்கள் அழைத்துவரப்பட்டு நாடகங்கள் நிகழ்த்தப்பட்டு நிதி சேகரித்து பாடசாலைக்கான பௌதிக வளங்களினை மேம்படுத்திக்கொண்டனர்.

அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டதும் இவ் வித்தியாசாலை நாளொரு வண்ணம் பொழு தொரு மேனியாக வளர்ந்து வந்தது. இங்கு சிறு வர்களிற்கான ஏடு தொடக்க வரும் சிறார்களிற்கு உரிய ஏடுகளை திரு. விசுவலிங்கம் அவர்கள் இலவசமாக எழுதிக்கொடுத்தார். பாடசாலையில் கற்பித்தல் பணி திறம்பட அமையும் வகையில் ஏனைய கற்பித்தல் உபகரணங்களையும் இல வசமாக வழங்கினர். அக்காலத்தில் பாடசாலைக்கு வரும் மாணவர்களிற்கான மதிய உணவை ஆசி ரியர்களும், அயலவர்களும் வழங்கி மாணவர் களினை ஊக்கப்படுத்தினர். இவ்வாறு முகாமைத்து வக் குழுவின் பயன் கருதாப் பணியின் அழியாச் சின்னமாகப் பாடசாலை விளங்குகிறது.

இலங்கை அரசாங்கத்தின் பாடசாலை களைச் சுவீகரிக்கும் சட்டத்தின்கீழ் வித்தியாசாலை யும் 1962ம் ஆண்டு சுவீகரிக்கப்பட்டு அரச பாட சாலை ஆனதும் பாடசாலையின் வளர்ச்சி மென் மேலும் அதிகரித்தது. ஆரம்பகாலக் கல்வியைப் போல மாணவர்கள் உயர் வகுப்பு வரை கல்வி கற்றனர். இக்காலத்தில் முகாமைத்துவக்கால அதிபராக கடமையிலிருந்த திரு. ஆ. தம்பிப் பிள்ளையே பணியை மேற்கொண்டார்.

ஆசிரியர்களாக திரு. சி. தம்பித்துரை, திரு. நா. இளையப்பா, திரு. ந. பொன்னுத்துரை, திரு. க. வேலுப்பிள்ளை, திரு. வ. கந்தையா, திரு. சி. வல்லிபுரம், திருமதி ம. தங்கம்மா, செல்வி சி. பரிமளம் போன்றோர் கடமை ஆற்றினர். இக்

காலத்தில் இவ்வித்தியாசாலை யாழ்ப்பாணத்தில் சிறந்த ஒரு கல்விக்கூடமாகப் பெயர் பெற்று விளங்கியது. இதற்கு சான்றுபகர்வதுபோல இப்பாடசாலையில் திறமையாக சித்தியெய்திய மாணவர்கள் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற னர். அந்த வகையில் திருமதி செல்லம்மா செல் லத்துரை, திருமதி தவமணி இராசையா, திரு. த. நட ராசா, திரு. கா. ஐயம்பிள்ளை, திரு. கா. கனகசபை, திரு. சு. கனகரத்தினம், திருமதி இ. சிவானந்தம் போன்றவர்கள் ஆசிரியர்களாகினர். வித்தியாசா லையில் கல்விகற்ற மாணவர்கள் பலர் வைத்தி யர்களாகவும், அரச திணைக்களங்களிலும், பொறியியலாளர்களாகவும், பரிஸ்டராகவும் பல் கலைக்கழகப் பேராசிரியர்களாகவும் பணிபுரிந்து வருகின்றனர் என்பதனை அறியமுடிகிறது.

அரசாங்கம் மேற்கொண்ட தரப்படுத்தல் காரணமாக இவ்வித்தியாசாலை இரண்டு தடவை கள் தரப்படுத்தப்பட்டு ஆரம்ப பாடசாலை ஆக்கப் பட்டது. வகுப்பு 1 தொடக்கம் வகுப்பு 5 வரையான வகுப்புக்கள் ஆக்கப்பட்டு மாணவர்கள் கல்வி கற்று வந்தனர். இவ் வகுப்புக்களிலும் மாணவர்கள் திற மையாக சித்திபெற்றனர். இங்கு சமூகமளித்து வந்த கல்வியதிகாரிகள் இதன் சிறப்பைப் பாராட்டி வந்தமை குறிப்பிடத்தக்கது.

திரு. ஆ. தம்பிப்பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் 1970ஆம் ஆண்டு திரு. சி. நடேசு அவர் கள் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்றுக் கொண் டார். ஆசிரியராக கடமையாற்றிய காலத்திலும் பாடசா லையின் வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவர். பாடசாலையை கற்றல், கற்பித்தல் பணிகளில் மேலோ ங்கச் செய்ததுபோல பௌதீக வளங்களைப் பேணு வதிலும் அயராது பாடுபட்டு அவற்றைப் பேணி பாதுகாத்தமை குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

01.11.1978இல் திரு.கா.ஐயம்பிள்ளை அவர் கள் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் காலத்தில் அரசாங்கத்தின் நிதி உதவியினால் பாலர் வகுப்புக் கட்டடம் சீமெந்துக் கட்டடமும், ஓட்டுக் கூரையும் ஆக்கப்பட்டது. புதிய பாடத்திட்ட கற்பித்த லுக்கு ஏற்ற வகையில் மாணவர்கள் கல்விக்கான களப் பயணங்களினையும் மேற்கொண்டனர்.

03.05.1983இல் திரு. சி.பே. சூசைப்பிள்ளை அவர்கள் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். இவர் காலத்தில் பாடசாலையில் கலை விழாக்கள் நடாத்தப்பட்டமை சிறப்பு மிக்கதாகும். 21.03.1984இல் திரு.நா. நடேசன் அவர்கள் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் காலத்தில் பாடசாலை யின் வளர்ச்சி வலுப் பெற்றுக் காணப்பட்டது.

21.05.1984இல் திரு.சோ.சோமஸ்கந்த ஐயர் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் காலத்தில் சமயம் தொடர்பான விழாக்கள் குருபூசை, நவராத்திரி விழா என்பன சிறப்பான முறையில் நடாத்தப்பட்டு வந்தன.

06.01.1986இல் திரு. பாலநாதன் அவர்கள் தலைமை ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார். இவர் காலத்தில் மாணவர்கள் விளையாட்டுத்துறை சார்ந்த திறமைகளினைப் பெற்றுக்கொண்டனர். பொருட்காட்சி விழாவும் இடம்பெற்றது.

04.09.1987இல் திருமதி த. இராசையா அவர்கள் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இவர் காலத்தில் மாணவர்கள் கணிச மான தொகையில் காணப்பட்டனர். ஆசிரியவளம் குறைவாக இருந்தபோதிலும் கல்வித் திணைக் களங்களின் உதவிகள் பெற்று மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் திறம்பட முன்னெடுக்கப் பட்டன. பாடசாலை நிர்வாகம் தொடர்பாக மீள்கட்ட மைப்பைப் பெற்றுக்கொள்ள வழி ஏற்படுத் தப்பட்டது. இதேநேரம் நாட்டின் அசாதாரண சூழ்நிலையில் பாடசாலையில் வலிவடக்கைச் சேர்ந்த 122 பேர் கொண்ட 26 குடும்பங்கள் தங்கியிருந்தன.

06.07.1989இல்திருமதி இ. சிவானந்தம் அவர்கள் பதில் தலைமை ஆசிரியராக கடமை யேற்று பாடசாலை நிர்வாகத்தினை செம்மைப்பட நடாத்தினார். மதிய உணவுத் திட்டத்தினை ஏனைய ஆசிரியர்களின் உதவியுடன் மாண வர்களிற்கு வழங்கும் செயற்திட்டம் நடைமுறைப் படுத்தினார். மாணவர்களிற்கான போசாக்கு, சுகா தாரம் தொடர்பாக பிராந்திய சுகாதார அதிகாரிகளின் கண்காணிப்புக்களும் ஏற்படுத்தப்பட்டன.

01.04.1990இல் திரு.க. தெட்சணாமூர்த்தி அவர்கள் தலைமை ஆசிரியராக நியமனம் பெற்றார். இக்காலத்தில் மாணவர்கள், கொத்தணி, கோட்ட மட்டத் தமிழ்த்தினப் போட்டிகளிலும் விளையாட்டுத்துறை சார்ந்த போட்டிகளிலும் பங்குகொண்டு வெற்றிபெற்றனர். ஏனையன தொண்டு நிறுவனங்களின் மூலம் பாடசாலைக்கான உபகரணங்கள் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. ஓய்வு பெற்ற திருமதி இ. சிவானந்தம் வழிபாட்டுப் பீடத்தை அன்பளிப்புச் செய்தார்.

28.09.1991இல் திருமதி ப.கனகசபை அவர்கள் பதில் தலைமை அதிபராக கடமையை ஏற்றுக்கொண்டார். இவரது குறிப்பிட்ட காலத்தில் பாடசாலையின் பல்துறை சார்ந்த செயற்பாடுகளும் உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டன.

07.11.1991இல் திரு.வி.ஏரம்பமூர்த்தி அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். இவரது காலத்தில் பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் திறம்பட செயற்படுத்தப்பட்டன. மாணவர்கள் நாடகப்போட்டி, பண்ணிசைப் போட்டி, திருமுறைப் போட்டி, விளையாட்டுப்போட்டிகள் போன்றவற்றில் பயிற்சிகொடுத்து வழிப்படுத்தப்பட்டனர். பாடசாலைக்கு மைதானம் இல்லாமையினால் அயலவர்களின் வளவில் மாணவர்களிற்கான இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி ஆண்டு தோறும் நடாத்தப்பட்டது. பல நலன்விரும்பிகள் பாடசாலைக்கென வெற்றிக் கிண்ணங்களையும், வெற்றிக் கேடயங்களையும் அன்பளிப்புச் செய்தனர். தரம் ஒன்றிற்கான கட்டடம் அரசாங்கத்தின் நிதி உதவியுடன் புனரமைப்புக்குள்ளானது. வகுப்பறையில் ஆரம்பக்கல்வி மாணவர்களிற்கு உரியமுறையில் படங்கள் வரையப்பட்டன. இக்காலத்தில் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் அயராத பணியினால் சிறார்களிற்கான விளையாட்டு முற்றம் அமைக்கப்பட்டது. மாணவர்களிற்கான மலகூடம், சலகூடம் என்பன அமைக்கப்பட்டன. இதற்கான ஒரு தொகுதி நிலத்தினை அருகிலுள்ள திரு. ஆ. நவரத்தினம் இவர்கள் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதுவரைகாலமும் அதிபரிற்கான தனி அலுவலகம் இல்லாதிருந்தது. இக்குறையினை நிவர்த்தி செய்யும் வகையில் கட்டி குறையாக இருந்த அலுவலகம் நிர்மானிக்கப் பெற்று புதுப்பொலிவு பெற்றுள்ளது. பாடசாலைக்கான நூலகத்திற்கான நூல்களும் அலுமாரியும் பாடசாலை மண்டபத்தில் பேணப்பட்டன. புலமைப்பரிசில் பரீட்சையிலும் கணிசமான மாணவர்கள் சித்தி எய்தினர்.

02.02.2002இல் திருமதி சி.சிவலிங்கம் அவர்கள் வித்தியாசாலையின் பதிற்கடமையை ஏற்றார். இவர் குறித்த காலத்தில் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிலும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறப்புற்றுக் காணப்பட்டது.

08.03.2001இல் திரு.பொ.கணேஸ்வரலிங்கம் அவர்கள் வித்தியாசாலையின் அதிபராகக் கடமையேற்றார். இவர் இவ்வித்தியாசாலையினைப் பல துறைகளிலும் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்ற பெரு நோக்கம் கொண்டவர். கடமை ஏற்று ஒரு சில மாதங்களிலேயே பாடசாலைக்கான நுழைவாயில் காங்கேசன்துறை பிரதான வீதியில் அமைக்க வழி ஏற்படுத்தினார். இதற்கான நிதியினை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பெற்றுக் கொடுத்தது. இல்ல மெய்வல்லுநர்ப் போட்டிகள் 3 ஆண்டுகளாக துரதிஷ்டவசமாக அயற்கோவிலான முருகமூர்த்தி ஆலய வீதியிலேயே நடைபெற்று வந்தது. பாடசாலையின் அருகிலுள்ள காணியினை பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினரும், நலன் விரும்பிகள், ஓய்வுபெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள், பழைய மாணவர்கள், அயற்சூழல் மக்களிடமும் நிதி திரட்டி பாடசாலை மைதான நலனோம்புச் சபை ஒன்றை உருவாக்கி அதன் பெயரில் காணி கொள்வனவு செய்யப்பட்டது.

மைதானத்தின் மேற்குப் பகுதியில் நிரந்தரமான கொட்டகை ஒன்று அமைக்கப்பட்டது. பாடசாலையின் தெற்குப் பகுதியில் பாடசாலையுடன் இணைந்ததாக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளிற்கு ஏற்றவாறு திறந்த கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டது. பாடசாலைப் பிரதான மண்டபத்தின் ஒரு பகுதி கூரை பழுதடைந்து மழை காலங்களில் மாணவர்கள் கல்வி பயிலமுடியாத நிலை ஏற்பட்டது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் G.T.Z - I.S. என்ற வெளிநாட்டு நிறுவனம் கூரையை

யும் தரையினையும் புனர்நிர்மாணம் செய்துள்ளது. பாடசாலைக்கான மின்சாரத்தினைப் பெறும் வகையில் G.T.Z வெளிநாட்டு நிறுவனம் மின் இணைப்பை ஏற்படுத்திமின்சார வசதி பெற்றுக் கொண்டமை மாணவர்களின் புதிய கல்விச் சீர் திருத்த கல்விச் செயற்பாடுகளிற்கு ஏதுவாகியது. மாணவர்களின் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்கும் வகையில் அரச நிதி கிடைக்கப்பெற்றது. இதற்கான இடவசதி இல்லாதிருந்தது. இந்நீர்த் தாங்கியினை அமைப்பதற்கான நிலத்தினை திருமதி நந்தினி நாகராஜாவிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்டது.

மாணவர்களது வாசிப்புத்திறனை மேம்படுத்தும் வகையில் புத்தாண்டுப் பரிசாகவும், மாணவர்களது பிறந்ததினப் பரிசாகவும் நூலகத்திற்கான நூல்கள் அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளப்பட்டன. பாடசாலை வளவில் அமைந்துள்ள குடிநீர்க் கிணறு பழுதடைந்த நிலையிலும், பாதுகாப்பற்ற முறையிலும் காணப்பட்டது. இதனை அமரர் திருமதி ச. அன்னபூரணத்தின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் புனரமைப்புச் செய்தனர். பாடசாலையின் நலன்விரும்பிகளினால் செல்லத்துரை வீதியில் அமைந்துள்ள சிறிய நுழைவாயில் இரும்பினால் அமைக்கப்பெற்றது. யுனிசெவ் நிறுவனம் மாணவர்களிற்கான விளையாட்டு முற்றம் ஒன்றை அமைத்துள்ளது. இயற்கை அழகோடு பாடசாலை திகழவேண்டும் எனும் வகையில் பூந்தொட்டிகளில் பூமரங்களை நாட்டி அழகு சேர்க்கப்பட்டது.

மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் அதிக கவனம் காணப்பட்டது. புலமைப்பரிசில் மாணவர்களிற்கான மேலதிக வகுப்புக்களும், மேலதிக பரீட்சைகளும் அதிபரின் தலைமையிலேயே முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக மேலதிக பயிற்சி வகுப்புக்களை அதிபரே எடுத்துக்கொள்வார். மாணவர்கள் போட்டிகளில் பங்குகொள்ள வளவாளர்களை அழைத்து பயிற்சி அளிக்கப்பட்டது. ஆங்கில தினப்போட்டி, தமிழ்த்தினம், விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் மாவட்டமட்டம் வரை சென்று பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர்.

மாணவர்களின் ஆளுமையை விருத்தி செய்யும் வகையில் மாணவர் மன்றங்கள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. பாடசாலையிலிருந்து தரம் 5 கற்றும் வேறு பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களினாலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவவர்களினாலும் விளையாட்டுத்துறைசார்ந்த உபகரணங்களும் ஆசிரியர்மேசை, அலுமாரிகள் என்பன அன்பளிப்புக்கள் செய்யப்பட்டன. மாணவர்களிற்கான மதிய உணவுத் திட்டமும் நடைமுறையில் இருந்து வருகிறது.

மேலும் பாடசாலையில் வளர்ச்சியை அதிகரிக்கும் வகையில் அதிபரின் வழிகாட்டலில் வெளிநாட்டிலும், உள்ளூரிலும் பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டது. 2008ம் ஆண்டு பவள விழா ஆண்டாக அமைந்தமையினால் பவள விழாச் சபையும் அமைத்து விழா தொடர்பாக மலர் வெளியிடவும் திட்டமிடப்பட்டது. திட்டமிட்டபடி வைகாசி மூல நன்நாளில் விழாவை நடாத்தமுடியவில்லை.

18.07.2008இல் திரு. கு. சிவகுமார் அவர்கள் பாடசாலையின் அதிபராகக் கடமை ஏற்றார். இவர் காலத்தில் பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் அக்கறை காட்டப்படுகிறது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த எமது பாடசாலை புலமைப் பரிசில் பரீட்சைகளிலும் போட்டி நிகழ்ச்சிகளிலும் சிறந்த பெறுபேற்றினைப் பெற்று வருகின்றது. வருடந்தோறும் நவராத்திரி விழா, சமயகுரவர் தினங்கள், பரிசளிப்பு விழா, விளையாட்டு விழா, ஆசிரியர் தின விழா, கால்கோள் விழா, ஆடிப் பிறப்பு நடாத்தப்பட்டு வருகின்றன.

"கற்க மறுப்பவர் வாழ மறுப்பவர்" என்னும் மகுட வாசகத்தையும் நீலமும், வெள்ளையும், மஞ்சளும் கலந்த சீரோங்கும் கொடியினையும் கொண்ட எமது பாடசாலையானது எதிர்காலச் சந்ததியினருக்குச் சிறந்த கல்விப் பணியாற்றும் என்பது எமது தளராத நம்பிக்கை.

"வினையுயர வெற்றித் திருவுயரும்"

◆ ◆ ◆

# ஐயனார் வழிபாடு

ஐயனார் வழிபாடு இலங்கையிலே இந்துக்கள் மத்தியில் மட்டுமன்றிப் பௌத்த மக்கள் மத்தியிலும் பரவியிருக்கின்றது. இரு பகுதியினிடையேயும் குறிப்பாக விவசாய வாழ்வினர் அத்தெய்வத்தை வழிபடுகின்றனர். ஐயனாருக்கு அரிகர குமரன், அரிகரபுத்திரன், வனரட்சகன், மாசாத்தன், செண்டாயுதன் முதலிய நாமங்கள் வழங்குகின்றன. சிங்கள மக்கள் அத்தெய்வத்தை ஐயநாயக்க என்றும் ஹரிகரபுத்ர என்றும் அழைப்பர்.

இந்துக்களின் நம்பிக்கைப்படி அவர் வளை செண்டு ஆயுதத்தையும் கோழிக்கொடியையும் உடையவர். யானையும் குதிரையும் அவரது வாகனங்கள். அவருடைய மனைவியர் பூர்ணாவும் புஷ்களாவுமாவர். அவர் இந்திரனுடைய வேண்டுகோளுக்கிணங்க மாகாளனை ஏவிச் சூரபது மனது தங்கையாகிய ஆட்டுமுகத்தையுடைய அசமுகி என்ற அசுரப் பெண்ணுடைய கைகளை வெட்டி, இந்திரன் மனைவியாகிய இந்திராணி யைக் காப்பாற்றியவர் என்பது கந்தபுராணக் கதையாகும்.

ஐயனார், திருமாலுக்கும் சிவனுக்கும் பிறந்த பிள்ளையாகையால் அரிகர புத்திரர் எனப்பட்டார். அப்பிறப்புப் பற்றிய கதை சுவையானதாகும். பாஸ்மாசுரன் என்ற பொல்லாத அசுரனுக்குத் தொட்டதையெல்லாம் சுட்டுச் சாம்பலாக்க வல்ல சக்தியைச் சிவன் வரமாக அளித்தார். வரம் கொண்ட அசுரன் சிவனையே தொட எத்தனித்த போது சிவன் ஓட்டம் பிடித்தார். சிவனைக் காப்பாற்றக் கருதிய திருமால் மோகினி வேடங் கொண்ட பஸ்மாசுரனைக் கவர்ந்து வசமிழக்கச் செய்தார். மோகினியிடம் இச்சை கொண்ட அசுரன், அவள் எண்ணெய் தேய்த்து நீராடி வரும்படி வேண்டியதற்கிணங்கித் தன்னுடம்பில் எண்ணெய் தேய்க்க முயன்றபோது எரிந்து சாம்பலானான். மோகினியின் வசீகரத்தாற் சிவன் கவரப்பட்டுக் கூடிய கூட்டத்தால் ஐயனார் தோன்றினார்.

கர்வங்கொண்ட தாருகாவனரிகிகள் ஞான, பக்தி மார்க்கங்களைக் கைவிட்டு நீரீச்வர வாதிகளாய் வேள்விகள் செய்வதில் முனைந்த வேளையில், அவர்களுடைய கர்வத்தைக் குலைக்கும் பொருட்டுச் சிவன் பிக்ஷாடன வேடம் கொண்டு ரிசி பத்தினிகளையும், திருமால் மோகினியுருப்பூண்டு ரிசிகளையும் மயக்கிய பின் இருவருங் கூடி ஐயனாரைப் பெற்றதாக வழுவூர் ஸ்தலபுராணம் கூறும். திருப்பாற்கடலிற் கடையப்பட்ட அமிர்தத்தை அபகரிக்க முயன்ற அசுரர்களை மயக்கவே திருமால் மோகினி வேடம் கொண்டனரென்றொரு கதையும் வழக்கிலுள்ளது.

ஐயனாரைக் கையனாரென்றும் கூறுவர். சிவன் மோகினியின் கையைப் பிடித்ததும் உண்டானதால் அவர் கையனார் எனப்பட்டதாகத் தமிழ் நாட்டிலே கூறப்படுகிறது. ஹஸ்த நக்ஷத்திராப மானி ஆகையாற் கையானார் எனப்படுகிறார் என்று மலையாளத்திலே கூறப்படுகிறது.

தமிழ் நாட்டுப் பாமர மக்களிடையே பிரசித்தி பெற்றுள்ள ஐயனாரைப் பற்றி அங்கு வழங்கும் ஒரு கதை ஐயனார் வழிபாட்டு வரலாறு பற்றிய சமூகவியல் ஆய்வாளருக்குச் சுவை பயப்பதாகலாம். சிவனுக்கும் திருமாலுக்கும் பிள்ளையாகத் தோன்றிய ஐயனார் சிவனுடன் சமர் தொடுத்து, "உன்னுடைய இரத்தத்தைக் குடிப்பேன்" என்றாராம். சினங்கொண்ட சிவன், "நீ இரத்தம் குடிப்பவனாகவே இரு; சூத்திரபூசை உனக்கு உண்டாகட்டும்' என்று சபித்தாராம். பின்னர் ஐயனார் வேண்டிக் கொண்டதற்கு இரங்கி, 'மூவரைப் பூசிக்கத் தகுதியில்லாதவரும் உன்னைப் பூசித்து நற்கதி அடையவேண்டும்' என்று சிவன் அருளினாராம்.

தென்னிந்தியக் கிராமங்களில் வடக்குப் புறத்தே ஊர்க்காவல் தெய்வமாக வைத்து ஐயனார் வழிபடப்படுகிறார். அநேக கிராமங்களில் ஐயனாருக்குக் கோவில் உண்டு. புயல், வெள்ளம், வரட்சி, தொற்றுநோய், திருட்டு முதலானவற்றிலிருந்து காப்பாற்றும் பொருட்டுக் கிராம மக்கள் ஐயனாருக்கு நேர்த்திக்கடன் வைப்பதும் விழா வெடுப்பதும் உண்டு.

மேலக்கடற்கரைப் பிரதேசத்திலுள்ள சிவ, விஷ்ணு கோவில்கள்தோறும் தென்மேற்கு, மூலையில் ஐயனாருக்கென ஆலயம் இருக்கும். மேற்கு மலைத் தொடர்ச்சியில் உள்ள எட்டு மலைச் சிகரங்களில் அவருக்கு ஆலயங்கள் உள்ளன. அவற்றுட் சபரிமலையிலுள்ள கோவில் பெரும் பிரசித்தி பெற்றது.

மலையாள நாட்டிலே காளியைப் பூசிப்பது போல, ஐயனாரையும் பார்ப்பார் பூசிப்பர். திருப்பிட வூரில் உள்ள ஐயனாரின் கையில் ஒரு சுவடி காணப்படுகின்றது. சேரமான் பெருமாள் நாய னார் கைலாயத்திலே பாடி அரங்கேற்றிய ஞான வுலா திருப்பிடவூர் ஐயனார் மூலமாக வெளிவந்த தாக அங்கு நம்பப்படுகின்றது.

தமிழ்நாட்டிற் கிராமதேவதையாகக் கொண் டாடப்படும் ஐயனாருக்குரிய பூசை பார்ப்பனர் அல்லாத பூசாரிகளாலேயே நடாத்தப்படுகிறது. அக்காவற் தெய்வம் கிராமத்தைச் சுற்றி வந்து கெட்டதேவதைகளை விரட்டியடிப்பதாக நம்பப்படு கிறது. அத்தெய்வத்திற்கு நன்றி பாராட்ட விரும்பும் அடியார்கள் மண்குதிரை வாகனங்களைச் செய்து கோவில் முற்றத்தில் வைப்பர்.

மேல்மட்ட வாழ்வினர் நவராத்திரி காலத்தில் பொம்மைக் கொலு வைப்பது போலவே, கீழ்மட்ட மக்கள் வேனிற் காலத்தில் மண்குதிரைகள் செய்து ஐயனாருக்குக் காணிக்கையாக வைப்பது புரவி எடுப்பு எனப்படும். தமிழ்நாட்டின் பல பாகங்களிற் காணப்படும் ஐயனார் உருவங்களும், குதிரை உருவங்களும் பிரசித்தி பெற்ற கைவினை ஞர்களான குலாலர்களின் கலைத்திறனுக்குச் சான்றாகும்.

தமிழ்நாட்டுக் கிராமங்களிற் செவ்வாய் தினமொன்றில் அலரிப் பூப்பறிந்து ஐயனாருக்கு வைத்து, அடுத்த செவ்வாய்க்கிழமை கொடியேற்ற விழாவினை நினைவுபடுத்தும் வகையில் மூன்று கிளைகளையுடைய வேப்பங்கொம்பொன்றி னைக் கோயில் முன்றலில் நாட்டுவது முதல் பத்துநாள் நிகழ்ந்து, ஒரு தெருக்கூத்துடனோ சதிர் ஆட்டத்துடனோ நிறைவுறும் விழா கம்பம் திருவிழா எனப்படும்.

யாழ்ப்பாணத்திலே சுன்னாகம், வேலணை, வரணி, அராலி, சண்டிலிப்பாய், அனலைதீவு, காங்கேசன்துறை முதலிய இடங்களில் ஐயனார் கோவில்கள் உண்டு. இவ்வாலயங்கள் பலவற்றி லும் பார்ப்பனரல்லாத பூசாரிகளினாலேயே பூசைகள் நடாத்தப்படுகின்றன. இவ்வாலயங் களுட் பிரசித்தி பெற்றதான சுன்னாகம் ஐயனார் கோவிலில் வதியும் ஐயனார் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன் தாழையம் புதர்கட்கு மத்தி யிலே தோன்றியதாகக் கூறப்படுகின்றது. அவ்வா லயத்தின் பின் புறத்தே தாழை மரங்கள் மிகுந்தி ருந்தமையால் 'தாழைக்குள் அப்பனே' என்றும் அத்தெய்வம் விளிக்கப்படலாயிற்று.

தாழை மரங்களுக்குப் பக்கத்திலே ஓர் உழவன் உழுதபோது ஐயனாரின் உருவச்சிலை நிலத்துள் இருந்து வெளிவந்ததாகக் கூறப்படு கிறது. இத்தெய்வத்தின் மகத்துவம் குறித்துப் பல கதைகள் வழங்குகின்றன. கெடுதி செய்கிறவர் களையும், பொய்ச்சத்தியம் பண்ணுகிறவர்களை யும் இத்தெய்வம் துன்பத்துக்குள்ளாக்குமென நம்பப்படுகிறது. குரோதத்தால் அங்கிருந்த கொடிச் சேலையை அவிழ்த்த வண்ணான் ஒரு வன் குருடாகி மூன்றாண்டு துன்புற்று மாண்டதா கக் கூறப்படுகின்றது. முன்னொரு காலத்தில் வயலில் வேலை செய்த இருவர் மண்வெட்டிகளால் வெட்டுப்பட்டதில் ஒருவன் இறந்துபோனதாகவும், இறந்தவனை மற்றவன் மறைவாகப் புதைத்து விட்டதாகவும், பின் ஐயனாரே நீதிமன்றமேறிச் சாட்சி பகன்று உண்மையை வெளியிட்டதாகவும் கதையொன்று நிலவுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்னர்வரை ஆடுகளும் கோழிகளும் பலியிடப் பட்ட சுன்னாகம் ஐயனார் கோவிலில், இப்போது உயிர்ப் பலியிடப்படுவதில்லை; திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

பௌத்த மக்கள் ஐயனாயக்க தேவரைக் கானகத்தில் வதியும் தெய்வமாகக் கொள்வர். அவ ருடைய இடத்தில் ஸ்கந்தனும் வைக்கப்படுவதால் இரு தெய்வ வழிபாடுகளும் சில இடங்களில் ஒன் றாகி விடுகிறது. சில இடங்களில் ஐயனார் யானை முகத்துடன் காணப்படுகிறார். விநாயக வழிபாடும் சேர்ந்துவிட்டதை அது காட்டும். வடமத்திய மாகா ணத்திலும் வடமேல் மாகாணத்திலும் பிரசித்தி

பெற்றுள்ள ஐயனாயக்க தேவர் சிங்கள மக்களால் வழிப்போக்கரது தெய்வமாக வழிபடப்படுகிறார். யாத்திரைக்கோ, வேட்டைக்கோ செல்பவர்கள் இவரை வழிபட்டுச் செல்வர். புதிய குளம் கட்டியவுடனும் அறவடை முடிந்தவுடனும் இவருக்கு விழா வெடுப்பர். அவ்விழா முட்டிமங்கல்ய விழா எனப் படும். இரசகியமான இடமென்று கொள்ளப்படும். ஒரு குளக்கரைக்குச் சென்று, புதிய சிவப்புப் பானைக்குள்ளே ஏற்றி தீபங்களை வைத்து நிவேதனஞ் செய்து ஐயனாயக்க தேவரை வழிபடுவதே இவ்விழாவின் முக்கிய அம்சமாகும்.

சிங்கள மக்களும் ஐயனாயக்கரின் தாய் மோகினியென்றே கொள்வர். கிறிஸ்து சகாப்தத்திற்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னர் தொடங்கியே அத்தெய்வம் இலங்கையில் வழிபடப்பட்டு வந்ததாகக் கூறப்படுகிறது. ஐயனாயக்க தேவர் மதுரையிலிருந்து இலங்கைக்கு வந்ததாகக் கூறும் பரம்பரைக் கதையொன்று சிங்கள மக்கள் மத்தியில் நிலவுகிறது.

புல்வன் பெண்ணுருவங் கொண்டு ஒரு கானகத்திலிருந்த இருடிகளைச் சந்தித்ததாகவும், அச்சந்திப்பின் விளைவாகப் பெண்ணின் வலது பக்க வழியே பிறந்தவரே ஐயனாயக்க என்றும் பழைய சிங்களக் கவி ஒருவர் எழுதியிருக்கிறார். புல்வன் என்று அவர்கள் குறிப்பிடுவது திருமாலையே. திருமால்பெண்ணுருப்பூண்டுசிவனைக் கூடியதாகக் கூறும் கதையினின்றும் இக்கதை சற்று மாறுபட்டதாகக் காணப்படுகிறது.

புல்வன் பெண்ணுருக் கொண்டு பெற்ற ஐயனாயக்க என்ற அந்தப்பிள்ளை யானையொன்றின்மீது ஏறிக்கொண்டு தேவர்களின் சபைக்குச் சென்றதாம். தேவர்கள் அவரை வரவேற்றனர். புத்தர் மல்லவ வனத்துக்குச் சென்ற போது உலகினை ஐயனாயக்காவின் பொறுப்பில் விட்டுச் சென்றதாகவும் கூறப்படுகிறது.

ஐயனாயக்கா ஆயிரக்கணக்கான தெமல யக்கர்களோடும் ('தெமல யக்க' புத்தரால் அடக்கப்பட்ட அரக்கன் என்று சொல்லப்படுகிறது). மல்லவ தேசத்தின் ஐந்து பெருந்தெய்வங்களோடும் நாற்பது முழ நீளப் படகொன்றிற் கடற்பயணம் தொடங்கினாராம். அப்படகு கம்பிலியக்க என்பவன் பல தேசங்களிலிருந்தும் பெற்ற பளிங்குப் படிவத்தைக் கொண்டு ஏழடுக்குக் கூடாரங் கொண்டதாக நான்கு மாதங்களில் உருவாக்கப்பட்டதாம். அப்படகு இடைவழியில் நீருக்குள்ளே தாழத் தொடங்க மல்லவ தெய்வங்கள் ஒரு யானையைப் பலியிட்டு அதனை மிதக்க வைத்தனவாம்.

அப்படகு யாழ்ப்பாணத்தை வந்தடைந்ததாகவும், ஐயனாயக்க தேவர் அங்கிருந்து வெள்ளை யானையொன்றிலேறிக் கடலோரப் பாதைவழியே களுத்துறையிலுள்ள ஆலயத்தை அடைந்ததாகவும், வீரக்குழிய என்னும் இடத்தில் ஓராலயத்தைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது. புவனேகபாகுவின் ஆட்சிக் காலத்திலே ஆரியவம்ச இளவரசியுடன் ஐயனாயக்க இலங்கைக்கு வந்ததாகக் கூறும் ஒரு வரலாறும் வழக்கில் உள்ளது. முத்துமாரியுடனும் அவரைத் தொடர்புபடுத்துவர். ரன்ஹலம்ப கவி, ஹலம்ப சாந்திய ஆகிய சிங்கள நூல்களிலே நெருப்பை உண்டாக்குவதாகக் கருதப்படும் ஐயனாயக்கரின் வளையல் பரவப்படுகிறது.

ஐயனார் என்ற சொல் 'சாஸ்தா' அல்லது 'சாத்தான்' என்னும் வடசொல்லிலிருந்து பிறந்ததென்றும், 'சாஸ்தா' என்பது புத்தருக்குரிய பெயர்களுள் ஒன்று என்றும் கூறும் மயிலை – சீனி வேங்கடசாமி அவர்கள், தமிழ்நாட்டிற் பௌத்த மதம் அழிந்த பின்னர் இந்துக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு பௌத்த தெய்வமே ஐயனார் என்பர்.

"இந்தத் தெய்வம் பௌத்தம், சமணம் என்னும் இரு சமயங்களிலிருந்து இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. பரிவாரத் தெய்வங்களில் ஒன்றாகச் சமணர் இதனை இன்றும் வணங்குகின்றனர். இத்தெய்வத்திற்கு 'பிரம்ம யட்சன்' 'சாத்தனார்' முதலிய பெயர்களை அவர்கள் கூறுகின்றனர். சமணராக இருந்து இந்துக்களாக மாறிய ஆருகதர்களால் இது இந்து மதத்தில் புகுத்தப்பட்டிருக்க வேண்டும். பௌத்த ஐயனாருக்கும் சமண ஐயனாருக்கும் உள் வேற்றுமை யாதெனில் பௌத்த ஐயனாருக்கு வாகனம் குதிரை; சமண ஐயனாருக்கு வாகனம் யானை என்பதே" என்று மயிலை சீனி வேங்கட சாமி அவர்கள் இன்னோ

ரிடத்தில் கூறுகிறார். ஐயனாரின் வாகனங்களாக யானை, குதிரையாகிய இரண்டும் கொள்ளப்படு வதை இங்கு அவதானிக்கலாம்.

ஐயனாரை பௌத்தமதத் தெய்வமென்றும், சமணமதத் தெய்வமென்று கூறும் திரு.வேங்கட சாமியின் கூற்றுச் சிறிதும் பொருத்தமாகத் தோன்றவில்லை. புத்தரின் பெயரான 'சாஸ்தன்' ஐயனாராயிற்றென்றால், சமணர்கள் அவரை ஏன் வழிபடவேண்டுமென்பது தெரியவில்லை. சமண ஐயனாருக்கும் பௌத்த ஐயனாருக்கும் இடை யிலே வாகனத்தில் மட்டும் வேற்றுமை காணும் திரு. வேங்கடசாமி, சமண ஐயனாரின் வாகனமே யானை என்கிறார். ஐயனாயக்க தேவசபைக்குச் சென்றதும், யாழ்ப்பாணத்திலிருந்து களுத்து றைக்குச் சென்றதும் யானையிலென்று பௌத்த மக்கள் நம்புவதை அவர் அறியார் போலும்.

'சாஸ்தன்' என்பதே ஐயனாராயிற்றென்பதும், ஐயனார் பௌத்தமதத் தெய்வமென்பதும் உண்மையானால், அவரை ஐயனாயக்க என்றும் ஹரிகர புத்ர என்றும் புல்வனின் புத்திரர் என்றும், மோஹினியின் குமாரர் என்றும், புத்தரால் உலகி னைக்காக்க நியமிக்கப்பட்டரென்றும், மதுரை யிலிருந்து இலங்கை வந்து யானையிலேறிக் களுத்துறை சென்றவரென்றும் பௌத்த மக்கள் கருதிவரக் காரணமில்லை. இந்து மதத்தினர் வழிபட்ட தெய்வத்தைப் பௌத்தரும் சமணரும் தங்கள் மதங்களோடு இணைத்துக்கொண்டன ரென்று ஏன் கொள்ளக்கூடாது?

சிவபக்தர்களுக்கும், விஷ்ணு பக்தர்களுக் கும் இடையே ஒற்றுமையைக் கொண்டு வரு வதற்கு அரிகரபுத்திர வழிபாடு தொடக்கப்பட்டதாக வரலாற்றுப் பேராசிரியர் கோசாம்பி கூறுவர். வைதிக சமயத்தினர் தம்முள் மோதிக் கொண்டது இம் மதங்களைச் சிதைக்க முயன்ற அந்நிய மதத்தினருக்கு உதவியாக இருந்ததால், அவர் களுக்கிடையே ஒற்றுமையைக் கொண்டுவர வேண்டியது அவசியமாயிற்றென்றும், ஒரு பாதி சிவனாகவும், மறுபாதி விஷ்ணுவாகவும் உருக் கொண்ட அரிகரர் வழிபாடு ஒன்பதாம் நூற்றாண்டு முதல் முக்கியத்துவம் பெறலாயிற்றென்றும் கூறுவர் இப்பேராசிரியர்.

முதலாம் இராசராசன், இரண்டாம் இராச ராசன் ஆகியோர் காலங்களில் ஐயனார் கோயில் கள் சோழநாட்டில் இருந்தமைக்குரிய சான்றுகள் உளவெனினும், இருபெரும் இந்துக் கடவுளர் களான சிவனும் திருமாலும் (பாதிபாதியாய் அர்த்தநாரீஸ்வர உருவத்தைப்போல) இணைந்த அரிகர உருவங்களுட் காலத்தால் முந்தியதென அறியப்படுவது கம்பூச்சியாவைச் சேர்ந்ததாகும். ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்த அழகான அவ்வுருவத்தை ஆனந்தக் குமார சுவாமியின் (History of Indian and Indonesian art, figure 333) நூலிற் காணலாம்.

ஐயனார் குறித்துத் தென்னகத்தில் வழங்கும் ஒரு கதை சுவாரஸ்யமானது. சோழ மன்னன் ஒருவன் வடமொழிப் புலவர்களுடன் வடநாட்டு யாத்திரை மேற்கொண்டான். தெலுங்கு தேசத்தின் ஓர் இடத்தில் ஐயனார் மூக்கின் மேல் விரலை வைத்த வண்ணம் காணப்பட்டார். அவர் எதை நினைத்து அவ்வாறு இருக்கிறார் என்பதைச் சரியாகக் கூறினாற் கையை மூக்கிலிருந்து எடுத்து விடுவார் என அங்குள்ளோர் கூறினர். மன்னன் பண்டிதர்களை நோக்கினான். 'விஷ்ணு வின் புதல்வனாகையாற் பிரம்மனுக்குச் சமம். தேவர்களால் வணங்கப்படுகிறேன். ஆனால், சிவனது புதல்வனாகையாற் பூதபிசாசுகளாற் சூழப்பட்டிருக்கிறேன் என்று கவலைப்படுகிறார்' என்றொரு பண்டிதர் கூறியபோது ஐயனாரின் கை அசையவில்லை. அப்பைய தீக்ஷிதர் என்ற கவி மேல் வரும் பொருள்படும் சுலோகத்தைக் கூறிய வுடன் ஐயனார் மூக்கின் மேலிருந்து விரலை அகற்றினாராம். 'தந்தை எவ்வளவு பெண்களை மணந்தாலும், தனயனுக்குத் தாயாதலின் பார்வதியை அம்மா என்று அழைப்பேன். லக்ஷ்மியை எவ்வாறு அழைப்பது? தாய்க்கு மனைவியாயிற்றே! என்று வியப்புக் கொண்ட ஐயனாரை இஷ்டத்தைப் பெறத் துதிக்கிறேன்.

**பேராசிரியர் சி. தில்லைநாதன்**

*நன்றி : பேராசிரியர் சி. தில்லைநாதன் மணிவிழா மலர்.*

♣ ♣ ♣

# பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களின் திருஞானசம்பந்தர் வித்தியாசாலையின் ஞாபகப் பதிவுகள்

தனது ஆரம்பக் கல்வியைப் பற்றி விரித்து ரைக்கத் தொடங்கிய பேராசிரியர் யாருமல்லர், அவர் பேராசிரியர், கலாகீர்த்தி சி. தில்லைநாதன் அவர்களேயாவர். அன்று பசுத்தானத்துடன் எழுத் தறிவித்தல் என்ற சம்பிரதாயத்துடன் ஆரம்பித்த கல்வி, இன்று "தமிழ்ப் பேராசிரியர்" என்ற அந்தஸ்து வரையும் உயர்ந்து ஆல விருட்சமாய்க் கால் பரப்பி அவையத்து முந்தியிருக்கச் செய்துள்ளது.

சுன்னாகம் என்ற பட்டினம், யாழ்ப்பாணத்தி லிருந்து வடக்கே காங்கேசன்துறை செல்லும் சாலையின் ஐந்தாவது மைல் தொலைவில் உள்ளது. சுன்னாகச் சந்தை மிகவும் பிரபலம் வாய்ந்தது. வடக்கே காங்கேசன்துறை, வடகிழக்கே வடமராட்சி, கிழக்கே தென்மராட்சி மற்றும் வலி காமம் முதலிய இடங்களிலிருந்து வரும் வழித் தங்களின் சந்திப்பு இங்குண்டு. ஆகவே விவசாயி கள் தமது விளைபொருட்களைச் சுன்னாகச் சந்தைக்கே எடுத்து வருவது வழக்கம். இங்கிருந்து தான் தென்னிலங்கை வரையும் கிழங்கு வகைகள், காய்கறி வகைகள், கனி வகைகள் முதலியன அனுப்பப்பட்டன. சகலதரப்பு உபபயிர்ச் செய்கை யாளரும், நாட்டின் சகல இனங்களையும் சேர்ந்த வியாபாரிகளும் ஒன்று கூடும் இடமாகச் சுன்னாகம் விளங்கியது. சிறு வணிகப்பட்டினமே நமது பேராசிரியது ஜென்ம பூமியாகும்.


சின்னத்தம்பி - நாகம்மா தம்பதிகளிற்கு 02.05.1937 ஆம் ஆண்டில் பிறந்த ஆண் பிள்ளைக்குத் "தில்லைநாதன்" என்ற நாம கரணஞ் சூட்டி மகிழ்ந்த பெற்றோர், உரிய பரு வத்தில் எழுத்தறிவித்து, **சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலையில்** ஆரம்பக் கல்வி பயில வைத்தனர். தனது ஆரம்பக் கல்வி ஆசிரி யர்களை அன்புடன் இன்றும் நினைவு கூரு கின்றார் பேராசிரியர்.

"அந்தக்காலம் இரண்டாம் உலக யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருந்த காலம், எனக்குப் பாடசாலை யில் அரிச்சுவடி கற்பித்தல் தங்கம்மா அக்கா என்ற ஆசிரியை. (அக்காலத்தில் ஆசிரியைகளை அக்கா என்றும், ஆசிரியர்களை உபாத்தியாயர் என்றும் அழைப்பதுதான் வழக்கம்) அவர் எனது கையைப் பிடித்து மணலிலே தமிழ் நெடுங்கணக்கை எழுதப் பழக்கியது இன்றும் பசுமையாக இருக்கின்றது".

என்று கூறுகின்றார். அக்காலத்தில் அந்தப் பாடசாலையின் அதிபராக இருந்தவர் ஆ. தம்பிப் பிள்ளை ஆவார். மேலும் வல்லிபுரம், இளையப்பா என்போரும் ஆசிரியர்களாகவிருந்தனர். இளை யப்பா பேராசிரியரது மாமனார். அவர் குத்துச் சண்டை வீரரும்கூட. ஆறாம் வகுப்பு வரையில் திருஞான சம்பந்தர் வித்தியாசாலைக் கல்வி இடம்பெற்றது. இக்காலத்துள் இளையப்பா ஆசிரியரின் தூண்டுதலால் குத்துச் சண்டை பயிலச் சென்று ஒரு நாளுடன் அதை வெறுத்தது, சங்கீதம் படிக்கப் போய் அது தனக்குச் சரிப்பட்டு வராது என்று அந்த ஆசையைத் துறந்தது முத லான நிகழ்வுகள் இடம்பெற்றன. ஆயினும் தன் னிடம் வாசிப்புப் பழக்கம் ஒரு வெறியாகவே இருந்து வந்துள்ளது என்றும் அவர் குறிப்பிடு கின்றார். "பாடசாலைக்கு வீட்டிலிருந்து நடந்து செல்லும்போது இடையே ஓர் வாசிகசாலை உண்டு. பாடசாலை விட்டு வரும்போது அங்கு சென்று வாசிக்காமல் நான் வீடு சென்ற நாட்கள் குறைவு" என்று குறிப்பிடுகின்றார். அக்காலத்தில் ஐயனார் கோயிலில் உயிர்ப் பலியிடுவதைத் தடை செய்யும் போராட்டம் இடம்பெற்றது. இப்போராட் டத்தில் ஈடுபாடு கொண்ட இவர் "நோட்டீஸ்" ஒட்டும் பையனாக உதவி புரிந்ததைப் பெருமையுடன் நினைவு கூருகின்றார். 1948ஆம் ஆண்டில் முதன் முதலாக வெலிங்டன் திரையரங்கில் தாம் பார்த்த "நாம் இருவர்" படமும் அவருக்கு நல்ல ஞாபகம்.

*நன்றி : பேராசிரியர் சி. தில்லைநாதன் மணிவிழா மலர்*

# வித்தியாசாலையின் சாதனையாளர்கள்



வாழ்நாட் பேராசிரியர் சி.தில்லைநாதன்

## 2008 பவளவிழா ஆண்டில் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்தோர்



இ.வ.: கௌ.கஸ்பிரியா, மோ.பவித்திரா.ம.மதுஷா

# மைதானம் பிறந்த கதை

**தம்பிஐயா வாமதேவன்**

*பொருளாளர்,*

*திருஞானசம்பந்த வித்தியாசாலை மைதான நலனோம்பு சபை,*

*(அதிபர், யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க. பாடசாலை)*

ஒரு சமயமோ, பண்பாடோ, நிறுவனமோ நிலைத்திருக்கவேண்டுமாயின் காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற மாறுதல்களுக்கும், தேவைகளுக்கும் முகங்கொடுக்கும் ஆற்றல் பெற்றதாய் அது இருத்தல் வேண்டும். முன்னைய காலங்களில் ஈட்டிய அனுபவங்களினைத் துணையாகக் கொண்டு எதிர்கால வளர்ச்சிக்கு வேண்டிய புதிய முயற்சிகளிலும் முனைந்து செயற்பாடு ஆற்ற வேண்டியது அவசியமானதாகும். இந்த வகையில் எமது பாடசாலையாகிய திருஞானசம்பந்தர் வித்தியாசாலைக்கு மழலைகள் விளையாடிவந்த இரவல் விளையாட்டு மைதானம் அடைக்கப்பட்ட வேலிக்குள் அடக்கப்பட்ட மழலைகளின் தேவையினை நிறைவு செய்யவேண்டிய சவாலினை எதிர்கொண்டு வெற்றியுடன் புதிய மைதானம் பிறந்த கதையினை விபரிக்கின்றேன்.

அன்று வழமையைப் போல காலை உடற் பயிற்சி நடைபெற்றுக்கொண்டிருந்தது. பாடசாலைக்குத் தெற்குப் பக்கம் உள்ள அந்தக் காணி. அந்தக் காணியை முன்னர் பாடசாலை விளையாட்டு மைதானமாகப் பாவித்தது. அதை விளையாட்டு மைதானமாக்குவதற்குப் அப்போதைய அதிபர், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பெரியவர்கள், அமைப்பு சார்ந்தவர்கள் ஆகியோரது கடின உழைப்பே காரணம். பாரிய குன்றும் குழியுமாக இருந்த அந்தக் காணியைச் செப்பனிட்டுத் தந்தவர்கள் பல தேசங்களிலும் வாழ்கின்றார்கள். காணியின் உரிமையாளர் வெளிநாட்டிலிருந்தபடியால் இங்கு தத்துவம் பெற்றவர்கள் காணியை ஆட்சி செய்தார்கள். அப்படியான ஒரு சூழ்நிலையில் அக்காலத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு.வி. ஏரம்பமூர்த்தி அவர்களுக்கு பதிவுத்தபால் ஒன்று வந்தது. அதன் உள்ளடக்கம் அந்தக் காணியைப் பாவிப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற தொனியில் காணியைப் பார்த்த தத்துவக்காரரினால் கடிதம் வரையப்பட்டிருந்தது. உடனடியாகவே வேலி அடைக்கப்பட்டு மைதானமாகப் பாவித்த காணியின் தொடர்பு அறுக்கப்பட்டது. அதன் பின்னர் விளையாட்டுப் போட்டிகள் மயிலணி முருகமூர்த்தி ஆலய வீதியிலேயே நடைபெற்று வந்தது. பெரும் சிரமத்தின் மத்தியில் பிள்ளைகளையும் பொருட்களையும் ஒன்று சேர்த்து போட்டி நடைபெற்று வந்தது.

ஆனால் அன்று காலை அந்தக் காணிக்குள் கிணற்றுக்கு நிலையம் எடுப்பதற்குரிய ஏற்பாடுகள் நடைபெற்றது. உடனே நாங்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்த திரு.க. கந்தசாமி அவர்களுடன் தொடர்பு கொண்டோம். அவரும் நாங்களும் சேர்ந்து காணி விற்கப்பட்டுவிட்டது என்பதை உறுதி செய்தோம்.

காணி வாங்கியவரிடம் நானும் முன்னாள் ஆசிரியர் திரு. கனகசபை அவர்களும் சென்றோம். காணி வாங்கியவர் பிரதான வீதியிலே நாங்கள் காணி வாங்கியிருக்கிறோம் என்ற காரணத்தை முன்வைத்தார். ஆனால் எங்கள் பணி ஓயவில்லை. பலரிடமும் சென்றோம், நிலைமையை விபரித்தோம். இறுதியாக பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தைக் கூட்டி கூட்டம் நிறைவு பெற்றதும், பாடசாலையில் இருந்து காணி வாங்கியவர் வீடு வரை கூட்டமாகச் சென்றோம். காணி வாங்கியவர் எங்கள் நிலைமையை உணர்ந்து தான் வாங்கிய பணத்துடன் வட்டிப் பணத்தையும் சேர்த்துத் தந்தால் காணியைத் தரமுடியும் என்றார். உடனே எல்லோரும் அதை ஏற்றுக்கொண்டு திரும்பினர்.

இந்தத் தருணத்தில் திரு. கனகசபை, திருமதி. பரமேஸ்வரி கனகசபை (குஞ்சு ரீச்சர்) ஆகியோரின் பங்களிப்பும் செயற்பாடும் அதிகமாகவே இருந்தது.

அதன்பின் பணம் சேர்க்கும் படலம். பணத்தை வெறுமனே பெற்றோர் சேர்ப்பதுடன் நிற்காமல் பழைய மாணவர்களையும் இதில் இணைக்கும்படி அப்போது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தில் உள்ளவரான திரு. சி. டியூக் பல்குணன்லாலா (லாலா சேர்) அவர்கள் கருத்துத் தெரிவித்ததன் பலனாக பழைய மாணவர் சங்கம் ஒன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டோம். ஆனால் கூட்டத்திற்கு வருகை தந்த பழைய மாணவர்கள் எண்ணிக்கை போதாமையினால் அம்முயற்சி கைவிடப்பட்டது. ஆனாலும் காணி வாங்குவதில் அனைவரும் உறுதியாக இருந்தனர்.

அடுத்து பெற்றோர், பழைய மாணவர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஆகியோரை இணைத்து பாடசாலை விளையாட்டு மைதான நலனோம்பு சபை அமைக்கப்பட்டது. இதற்கான யோசனையை முன்வைத்தவரும் லாலா சேர் அவர்களே. அத்துடன் எவ்வாறான செயற்பாட்டின் ஊடாக பணம் திரட்டுவது என்பது மட்டுமல்லாமல் மிக அர்ப்பணிப்போடு எங்களோடு சேர்ந்து நின்றவர் லாலா சேர். தலைவராக இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் திரு.பொ. செல்வரத்தினம் அவர்களும் பொருளாளராக நானும் தெரிவு செய் யப்பட்டோம். செயலாளராக திரு. சி. டியூக் பல்குணன்லாலா அவர்களும் தெரிவு செய்யப் பட்டார். தலைவராக விளங்கிய திரு.பொ. செல்வரத்தினம் அவர்களுடைய பெயரை பொதுவாக ஒருவரும் உச்சரிப்பதில்லை. காரணம் அவர் அணியும் உடையின் பெயரைக் கொண்டே அவர்களைச் சொல்லிக் கொள்வார்கள். அவர் வெள்ளை நிறத்திலேயே எப்போதும் உடை அணிவார் அது சேவையின் போதும் பின்னர் இளைப்பாறிய பின்னரும் அதுதான் நடைமுறை.

அடுத்து வெளிநாட்டில் உள்ளவர்களிடம் தொடர்பு கொள்ளப்பட்டது. குறிப்பாக பாட சாலையின் எல்லையில் வசித்தவரும் பாட சாலையில் பற்றோடு இருந்தவருமான திரு. ஐயம்பிள்ளை அவர்களின் பிள்ளைகளுடன் தொடர்பு கொண்டோம். அவர்கள் உடனடியாகவே சம்மதம் தெரிவித்தார்கள். நீங்கள் உங்கே மேற்கொள்ளவேண்டியவற்றைச் செய்யுங்கள் நாங்கள் பணம் திரட்டுகிறோம் என்றார்கள். அவர்களுக்கு எம்மை நேரடியாகத் தெரியாது. ஆனாலும் பாடசாலையின் பெயரைக் கேட்டதும் அவர்கள் அதிர்ந்தார்கள். உடனே அந்த முயற்சி யில் இறங்கினார்கள். நாங்கள் உள்ளூரிலே பணம் திரட்டுவதற்குரிய முயற்சிகளில் இறங்கி னோம். என்னுடன் அதிபர் திரு. பொ. கணேஸ்வர லிங்கம், ஆசிரியர்களான திருமதி. ரேவதி குமாரதாஸன், செல்வி. த. ஜெயகௌரி, ஐந்து பிள்ளைகள். இப்படியாகப் பெற்றோர்களுடைய வீடுகளுக்குச் சென்றோம். எங்களுக்கு மிகப்பெரிய ஆதரவு இருந்தது. காரணம் வரிசப்புலம், மயிலணி வடக்கு பகுதிகளில் உள்ளவர்கள் பெரும்பாலா னோர்கள் ஆரம்பக் கல்வியை எமது பாடசாலை யிலேயே பூர்த்தி செய்தவர்கள். அதனால் பாடசாலைப் பற்று அதிகமாக இருந்தது.

இக்காலத்தில் அதிபராகக் கடமையாற்றியவர் சுன்னாகத்தைச் சேர்ந்த திரு. பொ. கணேஸ்வர லிங்கம் அவர்கள். எமது முழுமையான செயற் பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் எம்முடன் பணம் திரட்டும் முயற்சிகளுக்கும் எங்களுடன் கூட ஒவ்வொரு வீடுகளுக்கும் வருவார். சந்திக்க வேண்டியவர்களை எல்லாம் சந்திப்பார்.

விளையாட்டு மைதான நலனோம்பு சபையை அமைப்பதற்கு ஆலோசகராக கலாநிதி S.T.B. இராஜேஸ்வரன், முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ. நா. சர்வவேஸ்வரக் குருக்கள், செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் அவர்களும் விளங்கினார்கள். இதில் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் இப்பாடசாலையில் முதல் நியமனம் பெற்று ஆசிரியராகக் கடமையாற்றியவர். அக்காலத்தில் விளையாட்டு மைதானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்தவராய் இந்தக் காணியை மைதான மாக்குவதற்கு பல முயற்சிகளை எடுத்தவர். அத்துடன் ஒரு தடவை அருகில் உள்ள ஐயம் பிள்ளை அவர்களுடைய வாழைத் தோட்டத்தில் விளையாட்டுப் போட்டியை நடாத்தியதில் இவரின் பங்கும் அதிகம். முதல் நியமனம் பெற்ற பாடசாலை என்பதினாலேயோ இவருக்குப் பாடசாலை மீது அளவு கடந்த பற்று. எந்தப் பேச்சிலும் இப்பாடசாலையைப் பற்றி எடுத்துக்

கூறுவார். கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி இவரைக் கௌரவித்தபோது, அதில் ஏற்புரை யாற்றும்போதும் இப்பாடசாலையைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.

கலாநிதி S.T.B இராஜேஸ்வரன் அவர்கள் எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவிற்குப் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். அத்துடன் முதலாவது விளையாட்டு மைதானக் கூட்டத்தில் கலந்துகொண்டு பெற்றோர் மத்தியில் நல்ல விழிப்புணர்வை ஏற்படுத்தியவர்.

முத்தமிழ்க்குருமணி சிவஸ்ரீ. நா. சர்வேஸ் வரக் குருக்கள் அவர்கள் போசகராக இருப்பதற்கு மிகுந்த சம்மதம் தெரிவித்திருந்தார். நாங்கள் வெளிநாட்டிலும் பணம் திரட்டுவதனால் சர்வதேச ரீதியாக அறியப்பட்டவர் குருக்கள் ஐயா அவர்கள். அதனால் எங்களுடைய முயற்சிக்கு முழுமையாக ஒத்துழைத்தவர்.

நாங்கள் நிறைய கடிதத் தலைப்புக்கள் அடித்து எல்லா பழைய மாணவர்களுக்கும் அனுப்பியிருந்தோம். அந்த வகையில் கலாகீர்த்தி பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களுக்கும் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தோம். உடனே பதில் அனுப்பியது மட்டுமமல்லாமல் ஒரு தொகைப் பணத்தையும் அனுப்பிவைத்தார். இவ்வாறு பல பழைய மாணவர்களும் தாமாக முன்வந்து நிதியுதவிகளை வழங்கிக்கொண்டிருந்தனர். அந்தக் காலத்தில் வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த பழைய மாணவர் வீடுகளுக்குச் செல்வோம். அவர்களும் தாராளமாக உதவி செய்தார்கள்.

லண்டனில் திருமண வரவேற்புபசார விழாவில் இரண்டு மேசைகள். ஒன்று திருமணத்திற்கு, மற்றையது சுன்னாகம் திருஞான சம்பந்தர் வித்தியாசாலை விளையாட்டு மைதானத்திற்கு என பணம் திரட்டப்பட்டது.

இந்த நிலையில் லண்டனில் இருந்து முதலாவது தொகைப்பணம் வந்து சேர்ந்தது. காணி எழுதப்பட்டது. அந்த நாள் மிக முக்கியமான நாள். எமது பாடசாலைச் சமூகத்திற்கு மட்டுமல்ல, இலங்கை முழுவதற்கும் முக்கியமான நாள். காரணம் பெப்ரவரி 22ம் திகதி 2002ம் ஆண்டு முக்கியமான ஒப்பந்தம் கைச்சாத்தான நாள்.

தலைவராகக் கடமையாற்றிய திரு. பொ. செல்வரத்தினம் அவர்களது மறைவுக்குப் பின் தலைவராக திரு. க. கந்தசாமி அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். அடுத்து செயலாளராகக் கடமை யாற்றிய திரு. சி. டியூக் பல்குணன்லாலா அவர்களது உடல்நலக் குறைவு காரணமாக அவரது இடத்திற்கு திருமதி. ஜெயகௌரி சுரேஷ் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தக் காணி கொள்வனவிற்காக எங்கு செல்வதானாலும் உடனே கந்தசாமி அண்ண னுடைய மோட்டார் சைக்கிள். அதுவும் எம்மைப் போல் ஓய்வின்றி ஓடியபடியே இருந்தது.

காலத்தின் தேவையினையும், புதிய சவால் களினையும் எதிர்கொள்ள தோற்றம் பெற்ற மைதான நலனோம்புச்சபை தனது சேவையினை பல வகையிலும் பாடசாலையின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் உதவுவதோடு இன்று வரை உயிரோட்டமும், உறுதியும் வாய்ந்த சபையாகத் திகழ்ந்து கொண்டிருப்பது பாடசாலைக்குப் பெரும் பக்கபலமாக அமைகிறது.

இவ்வாறு எல்லோரதும் ஒட்டுமொத்த கூட்டுமுயற்சியின் விளைவாக -

*பிறந்தது விளையாட்டு மைதானம்.*
*மலர்ந்தது முயற்சி யாளர் உள்ளங்கள்;*
*மகிழ்ந்தது மழலைகள்;*
*புத்தெழுச்சி கொண்டது பாடசாலை.*

◆ ◆ ◆

ஒருவர் மற்ற எல்லோரையும் விட அதிக தைரியத்தைப் பெற்றிருப்பதால் வீரனாவதில்லை. மற்றவர்களைவிட ஒரு பத்து நிமிடங்கள் அதிகமாகத் தைரியசாலியாக இருப்ப தாலேயே வீரனாகிறார்.

**- ரால்ஃப் வால்டோ எமர்சன்**

# சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை
## விளையாட்டு மைதான நலனோம்பு சபை
# Chunnakam Thirugnanasambanthar Vidyasalai
## Playground Welfare Society

காப்பாளர்கள்
* முத்தமிழ்குருமணி சகலாகமசங்கரர் வாகீசவாரிதி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள்
* செஞ்சொற்செல்வன் ஆறு. திருமுருகன்
* கலாநிதி S.T.B.இராஜேஸ்வரன்

---

தலைவர்
திரு.பொ.செல்வரத்தினம்

உபதலைவர்
திருமதி.ப.ஜெயவாணி

செயலாளர்
திரு.சி.டியூக்பல்குணன்லாலா

உபசெயலாளர்
திரு.பொ.புவனேந்திரராஜா

பொருளாளர்
திரு.த.வாமதேவன்

நிர்வாகசபை
உறுப்பினர்கள்
திரு.பொ.மனோகரன்
திரு.சேது.விபுலானந்தா
திரு.கு.தயாதரன்
திருமதி.ர.ரதி
செல்வி.த.ஜெயகௌரி
திரு.பொ.கணேஸ்வரலிங்கம்
திருமதி.க.பரமேஸ்வரி
திரு.ப.பாலச்சந்திரன்
திருமதி.ம.பத்மநாயகி
திரு.க.கந்தசாமி

அன்புடையீர்,

எமது பாடசாலைக்கு விளையாட்டு மைதானமொன்று இல்லாத குறை நீண்டகாலமாக இருந்து வருவதைத் தாங்கள் அறிவீர்கள். பாடசாலையின் தெற்கு எல்லையாகவுள்ள நாலரைப்பரப்புக் காணியை எமக்கு விற்பனை செய்ய அதன் உரிமையாளர் சம்மதித்துள்ளார். காணியின் பெறுமதி 430000/-. காணியைச் சட்டபூர்வமாக எழுதுவதற்கான கட்டணம் ரூ 23000/-. இதன் பொருட்டு லண்டனிலுள்ள எமது பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஒன்றுசேர்ந்து பழைய மாணவன் திரு.ஐயம்பிள்ளை முருகதாஸ் அவர்களூடாக ரூ 300000/- வழங்கியுள்ளார்கள். எனவே இன்னும் உடனடித் தேவையாகவுள்ள ரூ 153000/- இனைத் திரட்ட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை கற்கும் சின்னஞ்சிறு மாணவர்களால் உபயோகிக்கப்படவிருக்கும் இந்த மைதானம் ஆங்காங்கே காணப்படும் கற்பாறைகள் அகற்றப்பட்டு நல்ல மண்ணினால் நிரவப்பட வேண்டும். இந்த மண் மழை நீரால் அடித்துச் செல்லப்படாது காப்பதற்கு தெற்கு, கிழக்கு எல்லைகளில் காப்பரண் சீமெந்தினால் அமைக்கப்பட வேண்டும்.

இவற்றிற்கான நிதி திரட்டும் பணி கைகூடத் தங்கள் நிதியுதவியை எதிர்பார்க்கின்றோம். தங்களின் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் இப்பணிக்கு உதவத் தூண்டும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

நன்றி

| | |
|---|---|
| எமது சேமிப்புக் கணக்கு இல | : 21520 |
| வங்கி | : இலங்கை வங்கி, சுன்னாகம் கிளை, சிறிலங்கா |
| கணக்கின் பெயர் | : Chunnakam Thirugnanasambanthar Vidyasalai Playground Welfare Society |

.............................
தலைவர்

.............................
செயலாளர்

19/02/2002
திகதி

.............................
பொருளாளர்





# வித்தியாசாலையின் பதிவுகளிலிருந்து....







# சிறுவர் அரங்கு

**திரு. த. சிவகுமாரன்**
*முகாமையாளர்*
*ஆசிரிய நிலையம்,*
*வலிகாமம் கல்வி வலயம்,*
*மானிப்பாய.*

சிறுவர்களை இலக்குப் பார்வையாளர்களாகக் கொண்டதும், சிறுவர்களுக்கான ஆற்றுகையும், அதன் விளைவுகளும் பற்றிய கருத்துகள் கொண்டதுமாக சிறுவர் அரங்கு என்னும் இக்கட்டுரை கவனம் செலுத்துகிறது.

சிறுவர்களை இலக்காகக் கொண்டு ஆற்றுகைக்கான முழுமைத் திட்டமிடல் படியெங்கும் இங்கு கட்டமைப்புச் செய்யப்படுகின்றன. வளர்ந்தோரும், சிறுவர்களின் பண்புகளை உள்வாங்கிப் பார்வையாளர்களாகப் பங்கு கொள்வதும், பயன் பெற விளைவதும் இங்கு சாத்தியமானதே.

சிறுவர்கள் என இங்கு குறிப்பிடப்படும் பருவத்தினர் ஏறத்தாழ "11" வயதிற்குட்பட்டவர்களின் உளவயதுப் பருவத்தையே குறித்து நிற்கின்றது. இங்கு "3" வயதிற்கும், "5" வயதிற்கும் உட்பட்ட உளவயதுப் பருவத்தினர்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அவர்களுக்கென விசேட ஏற்பாடுகளுடன் இத்திட்டமிடலை மேற்கொள்வது பொருத்தமானது. இங்கு இவர்கள் முன்பள்ளிக்கானவர்களாக இருப்பதனால், முறைமையான விருத்தியின் முன் ஆரம்ப ஏற்பாடுகளை ஒழுங்கமைக்கும் பருவமாகும். சிறுவர் நாடக விடயங்களில் கவனத்தைக் குவிப்பதே முன்பள்ளிப் பிள்ளைகளுக்கு சிறந்த விருத்தியைத் தரும். இனி "5" வயதிற்கும் "11" வயதிற்கும் இடைப்பட்ட ஆரம்பக்கல்விப் பருவத்துச் சிறுவர்களே இங்கு இலக்குப் பார்வையாளர்களாகக் கருதிக் கொள்வோம். இப்பருவத்தினரின் உளப்பருவம் கவனத்தில் கொள்ளப்படுவது இங்கு முக்கியமாகின்றது. அவர்களின் விருப்பங்கள், நாட்டங்கள், ஈடுபாடு, இரசனைப்போக்கு, புரிதல் வீச்சு, கிரகித்தல், முன்னறிவு மட்டம் போன்ற கற்றலுக்கான பண்புகளில் கவனம் பதித்து, செயற்பாடுகள் இட்டமைக்கப்படவேண்டும். இலக்குப் பார்வையாளர்களாகக் கொள்ளப்படும் சிறுவர்களிலும் மேற்சொல்லப்பட்ட கற்றல் பண்புகள், தனியாள் வேறுபாடு நிலைக்குட்பட்டிருக்கும். இருந்தும் மகிழ்ச்சியையும், விருப்பமும் கலந்த ஆற்றுகை வேளைகளில் இத்தனியாள் வேறுபாடுநிலை சற்றுத் தணிவாகி இருக்கும்.

பொதுவாகச் சிறுவர்கள் ஆடல், பாடல், விளையாட்டு விநோதங்கள், வீரதீரச் செயற்பாடுகள், கற்பனை ஆக்கச் செயல்கள், தேடியறிதல் போன்ற விடயங்களில் இயல்பாகவே விருப்பங்கள் கொண்டவர்களாக இருப்பார்கள். எனவே மேற்குறித்த விடயங்களை சிறுவர் அரங்கச் செயற்பாடுகளில் நன்கு செறிய விடப்படுதல், பயனுள்ள வெளிப்பாடு விளைவுகளைச் சிறுவர்களிடத்தில் ஏற்படுத்தி விடும். இவை அனைத்து விடயங்களும் எமது பாரம்பரிய அரங்கச் செயற்பாட்டின் மூலவடிவத்தில் நிறைந்து காணப்படுகின்ற எமது சிறுவர்களுக்கான உள்ளுந்தல்களாக இருக்கின்றன. எமது பண்பாட்டினையும், பாரம்பரியதினையும் அடியொற்றியதாக சிறுவர்களுக்கான அரங்கச் செயற்பாடுகளைக் கட்டமைக்க வேண்டும் என்னும்பொழுது புதிதாகக் கிடைக்கின்ற விடயங்களை முற்றும் முழுதாக விட்டு விடுவது என்பதல்ல. எந்நிலையில் இருந்து வருகின்றன? எங்கிருந்து வருகின்றன? என்பவற்றைத்தாண்டி, பொருத்தமானவற்றில் கவனம் செலுத்தி, தவறாது இணைத்துக் கொள்ள வேண்டும். பாரம்பரியமாக வருகின்ற விடயங்கள், சிறுவர்களுக்கு இலகுவில் ஜீரணிக்கப்படுவதும், ஆறுதல் தருவதும், மீள் உருவாக்கப்படுவதும் இயல்பாகவே நடந்துவிடும்.

வகுப்பறையில் கற்றல் முறைமையாகப் பாட விடயங்களைக் கற்கும் உத்தியாக இணைத்தல் உபகரணமாக நாடகங்களை ஆசிரிய வழிப்படுத்தலில் சிறுவர்கள் இணைந்து உருவாக்ககி "கற்றல்

பேறடைதல்" என்ற நிலையில் பயன்படுத்தப்படுவது சிறுவர் நாடகம் எனப்படுகின்றது. குறித்த இந்நிலையில் இருந்தும், தனித்தும் விரிவாக்கம் செய்யப்பட்டு பார்வையாளரை கதை உருவாக்கம், வேட உடை, ஒப்பனை, இசைப்பின்னணி என்றவாறு அரங்கியல் பரிமாண வளர்ச்சிநிலையில் அது சிறுவர் அரங்கு எனப்படுகின்றது.

சிறுவர் அரங்கில் வருகின்ற அரங்கியல் விடயங்கள் அனைத்தும் சிறுவர்களுக்கானதே என்பதில் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். சிறுவர்களுக்கான இசை என்பது இன்று உலகியல் பார்வையில் விரிவாக்க வளர்ச்சி பெற்று வருகின்றது. "புதியவை கண்டு கொள்ளல்" என்பது இங்கு ஆர்வம், அர்ப்பணிப்பு நிலையில் தேடுதலுக்கு உட்பட வேண்டும்.

எமது சிறுவர்களுக்கான பாடல்கள் உருவாக்கம் போதிய அளவில் உற்சாகம் தருவதாக இல்லை. சிறுவர் நாடகம், மற்றும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் கதை இன்றியும் உருவாக்கி முடியும். இருந்தாலும் சிறுவர்களுக்கான கதை உருவாக்கம் இங்கு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இன்றைய நிலைமைகளில் சிறுவர்களுக்கான நடத்தை சார்ந்த ஒழுக்க நடைமுறைகளை, அறிவுசார் ஒழுக்கங்களை, உணர்வுசார் ஒழுக்கங்களை கற்றுக்கொள்வதற்கு சிறுவர் அரங்கச் செயற்பாடுகள் முக்கிய பங்காற்ற விளைவது காலத்தின் கட்டாயமாகின்றது. ஒழுக்க விடயங்கள் என்றால் என்ன? ஏன் அது ஒழுக்கமாகின்றது? ஒழுக்க விடயங்களை எப்படிக் கற்றுத் தருவது? எப்படிக் கற்றுக் கொள்வது? என்ற விடயப் பரப்புகளில் நாம் சிறுவர்களைப் பொறுத்த வரையில் அதிகமாக உதவ முன்வருவதற்கு அரங்க செயற்பாடுகளை ஊடகமாக்கிக் கொள்வது ஒழுக்கமடைவதை இலகுபடுத்தி நிற்கும். சிறுவர் அரங்கச் செயற்பாட்டில் ஈடுபடுகின்ற சிறுவர்களிடத்தே ஏற்படுகின்ற நேரான விளைவுகளில் இங்கு முக்கியம் பெறுகின்றன. இன்றைய சிறுவர்கள் பலர் பல்வேறு நிலைகளில் பிரச்சினைகளை அவர்களின் கொள்ளளவு, தாங்குநிலை, மீளும் எல்லை. இவற்றையெல்லாம் மீறி எதிர்கொள்ளுகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் தமது அன்றாடச் செயற்பாடுகள், வகுப்பறைக் கற்றல் செயற்பாடுகள் என்பவற்றில் இயல்பாக ஈடுபட முடியாதுள்ளனர். இவர்களுக்குப் பரிகாரக் கற்றல் நிலைமைகள் உருவாக்கப்படுகின்றன. இவர்களை முதலில் குழுவாக்கி நாடக மூலகங்களை ஒன்றிணைத்து, ஒழுங்குபடுத்தி மகிழ்ந்திருக்கும் சூழலை உருவாக்கும் செயற்பாடுகள் அவசியமானவை. சிறுவர் அரங்கச் செயற்பாட்டில் ஏற்கனவே இணைந்த பிள்ளைகளிடத்தே குறிப்பிடக்கூடிய அளவில் நேரான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. அரங்கச் செயற்பாட்டில் ஈடுபடும் பிள்ளைகள், மகிழ்ந்திருத்தல், குதூகலமடைதல் போன்றவற்றால் நெருக்கீட்டு அனுபவங்களில் இருந்து விடுபட்டு ஆறுதல் உணர்வு பெறுகின்றனர். மகிழ்வூட்டி, ஆறுதல் தந்து, அறிவூட்டும் சாதனமாக பயன்பட்டுக்கொண்டிருக்கும் சிறுவர் அரங்கச் செயற்பாடுகளில் சிறுவர்களை முடிந்த வரையில் முழுமையாகி இணைத்துக்கொள்ள வேண்டும்.

சிறுவர்களிடத்தே விவேகத்தை, கற்பனையை, உற்சாகத்தை, முன்வருதலை சிறுவர் அரங்கு ஊக்குவிப்பதனால் வகுப்பறைச் செயற்பாட்டுப் பின்னடைவு விடயங்களில் இருந்து விடுவித்து வாழ்க்கையை எதிர்கொள்ளும் ஆளுமைப் பண்புகளை மேலோங்க வைக்கிறது. மேலும் தன்னம்பிக்கை பெற்றவர்களாகி வாழ்வில் ஈடுபட, அன்றாடக் கருமங்களை ஆற்ற, கற்றலில் அடைவு நிலைகள் மேம்பட ஊக்குவிக்கின்றது.

சிறுவர்களுக்கான அரங்கச் செயற்பாடுகள் சிறுவர்களின் ஆளுமை விருத்திப் பரிணாமங்களுடன் பின்னிப் பிணைந்திருப்பதனால் ஒவ்வொரு அரங்கக் கூறுகளும் மிகவும் தெளிவாக்கப்பட்டு வளர்த்தெடுத்துச் செல்லப்பட வேண்டும். இக்கட்டுரை சிறுவர்களும், அவர்களுக்கான அரங்கச்செயற்பாடுகளும், மற்றும் இவற்றின் பயன்கொள் முறைகளும் பற்றிய மேலோட்டமான காலப் பொருத்தமுள்ள ஒரு சில குறிப்புகளை மட்டும் காட்டி நிற்றலையே நோக்காகக் கொண்டது. இந்த வகையில் சிறுவர் அரங்கு பற்றிய, இன்றைய நிலை பற்றிய மேலதிக கருத்துப் பரிமாற்றத்தை தோற்றுவிக்கவும் அதற்கான சிந்தனைத் திறமையையும் குறித்த நோக்கம் விளைவித்திருந்தால் இக்கட்டுரை பயனுள்ளதாக அமையும்.

♣ ♣ ♣

## பவளவிழா நிகழ்வுகளிலிருந்து....












# கந்தரோடை தமிழர் தொல்லியல் ஆய்வுக்கான ஒரு தொடக்கப் புள்ளி

**பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்**
*வரலாற்றுத்துறை,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

தென்னாசியாவில் பல்லினப் பண்பாடு கொண்ட நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். அதில் தமிழ், சிங்கள மொழி பேசும் மக்களுக்குத் தொன்மையான, தொடர்ச்சியான நீண்டகால வரலாறு உண்டு. அதிலும் மொழியடிப்படையில் தனியொரு இனக்குழுவாக 2000 ஆண்டு களுக்கு மேலாக வாழ்ந்து வரும் வரலாற்றுச் சிறப்பு தமிழருக்கு உண்டு எனவும் கூறப்படுகிறது (Indrapala : 2005). இருப்பினும் சிங்கள மக்களது வரலாற்றுடன் ஒப்பிடும்போது தமிழரின் பண்டைய வரலாறு இலங்கை வரலாற்றுப் பாளி நூல்களில் மிகத்தொய்ந்த நிலையிலேயே காணப்படு கிறது. இதற்கு பௌத்த மதத்தின் பரவலுடன் சிங்கள மக்களுக்கென ஒரு வரலாற்று இலக்கிய மரபு தோன்றியதைப் போல் தமிழருக்கென ஒரு வரலாற்று இலக்கிய மரபு தோன்றாததே காரணம் கூறப்படு கிறது. இது பொருத்தமான விளக்கமாக இருப்பினும், இதனால் தமிழரின் பூர்வீக வரலாற்று உண்மைகள் வெளிச்சத்திற்கு வரமுடியாது என்ற முடிவுக்கு வர வேண்டும் என்பதல்ல. ஏனெனில் இலங்கைத் தமிழரைப் போல் தமிழ் நாட்டுத் தமிழருக்கும் கி.பி.14ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் ஒரு வரலாற்று இலக்கிய மரபு இருக்க வில்லை. ஆனால் இந்தியா சுதந்திர மடைந்ததற்குப் பின்னர் தமிழகத்தில் மேற்கொள்ளப் பட்ட தொல்லியற் கண்டுபிடிப்புக்களும், தொல்லியல் ஆய்வுகளுமே அந்நாட்டுத் தமிழரின் பூர்வீக வரலாற்றின் பன்முகத்தன்மையை வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டின. அவ்வாறான தொல்லியல் ஆய்வுகள் இலங்கையில் தமிழர் பிராந்தியங்களில் இருந்து வெளிக்கிளம்புமாயின் தமிழரின் வரலாறும் துலக்கம் பெறும் என்பதில் சந்தேகமில்லை. அந்த நம்பிக்கையின் தொடக்கப் புள்ளியாகவே கந்தரோடை பார்க்கப்படுகிறது.

அண்மைக்காலத் தொல்லியல் கண்டுபிடிப்புக்கள் பண்டு தொட்டு இலங்கையில் பல்வேறு இன, மத, பண்பாடு கொண்ட மக்கள் பரந்துபட்ட வட்டாரங்களில் வாழ்ந்து வந்ததை உறுதிப்படுத்து கின்றன (Indrapala : 2005). இதனால் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வரும் இடங்களில் கண்டுபிடிக்கப்படும் தொல்லியற் சின்னங்கள் எல்லாம் தமிழருக்கு மட்டும் உரியவை எனக் கூறமுடியாது. அதேபோல் தென்னிலங்கையில் கண்டுபிடிக்கப்படுபவை எல்லாம் சிங்கள மக்களுக்கு மட்டும் உரியவை எனவும் வாதிடமுடியாது. ஆனால் பரந்துபட்ட அளவில் வாழ்ந்த இனங்களுக்கிடையே ஏற்பட்ட அரச உருவாக்கம், ஆள்புல உரிமைக்கான அரச போர்கள், அயல் நாட்டுப் படையெடுப்புக்கள் போன்ற காரணங்களால் இவர்கள் தம்மை இனம், மதம், மொழி, பண்பாடு என்பவற்றால் தனித்து அடையாளப்படுத்தும் நோக்கில் குறிப்பிட்ட வட்டாரங்களில் செறிந்து வாழ முற்பட்டனர். இந்த வரலாற் றுப் பின்னணிதான் தமிழர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பெரும்பான்மையாக வாழ்ந்து வரக் காரணமாகும்.


இன்று இலங்கையில் பல்வேறு இடங்கள் தொல்லியல் அகழ்வாய்வுக்குரிய மையங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் சில பூர்வீக குடியேற்றங்களுடன் தொடர்புடையன. வேறுசில பௌத்த சிங்கள கலாசார உருவாக்கத் துடன் தொடர்புடையன. இன்னும் சில தொல்லியல் மையங்கள் இடைக்கால வரலாற்றுடன் சம்பந்தப் பட்டவை. ஆனால் ஒரு சில தொல்லியல் மையங்களே மனித வரலாற்றின் தொடக்கம், நாகரிக உருவாக்கம், வளர்ச்சி, அதன் தொடர்ச்சியான தற்கால வரலாறு என்பவற்றுடன் சம்பந்தப்பட்டவை. அப்பெருமைக்குரிய தொல்லியல் மையங்களில் கந்தரோடைக்குத் தனிச்சிறப்புண்டு எனலாம். இத்தொல்லியல் மையம் மனித வரலாறு தொடங்கிய காலத்தில் இருந்து ஐரோப்பியர் ஆட்சிக்காலம் வரை வாழ்ந்த மக்களின் பலவகைப்பட்ட பண்

பாட்டுச் சின்னங்கள் கொண்ட இடமாக காணப்படுகின்றது. இதனால் இங்கு கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற் சின்னங்கள் பற்றிய ஆய்வானது ஏறத்தாழ 3000 ஆண்டு காலம் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் வாழ்ந்த மக்கள் பற்றிய ஆய்வாக அமைகிறது.


பெருநிலப்பரப்பில் அநுராதபுரம், மாந்தையைப் போல் யாழ்ப்பாணத் தீபகற்பத்தில் கந்தரோடை முக்கிய தொல்லியல் மையமாகவும், தொல்லியலாளரின் கவனத்தை ஈர்த்த பிரதேசமாகவும் காணப்படுகிறது. சுன்னாகம் என்ற வட்டாரத்தில் அமைந்துள்ள இவ்விடம் யாழ்ப்பாண நகரில் இருந்து ஐந்து மைல் தொலைவிலும், கடற்கரையில் இருந்து ஆறு மைல் தொலைவிலும் காணப்படுகிறது.




ஏறத்தாழ இரண்டரை மைலுக்கு மேல் பரந்துள்ள இத்தொல்லியல் மையங்கள் சிறிய குளங்களாலும், வழுக்கையாற்றாலும் இணைந்து கடற் பிரதேசத்துடன் தொடர்பை ஏற்படுத்தியிருக்கலாம் என்பது தெரிகிறது. மிகப்புராதன குடியிருப்புக்கள், அயல்நாட்டுத் தொடர்புகள், நகரமயமாக்கம், அரச உருவாக்கம் என்பனவற்றிற்குரிய சான்றுகள் இங்கு காணப்பட்டாலும் ஒப்பீட்டு அடிப்படையில் மாந்தையைக் காட்டிலும் இவ்விடம் பற்றிய சான்றுகள் இலக்கியங்களில் மிகக் குறைவாகவே உள்ளன. பாளி இலக்கியங்களில் கூறப்படும் பண்டைய ஜம்புக்கோளப்பட்டினம் கந்தரோடையின் முக்கிய துறைமாக இருந்துள்ளது. 14ஆம் நூற்றாண்டில் எழுந்த ***நம்பொத்த*** என்ற சிங்கள இலக்கியத்தில் இவ்விடம் கதுறுகொட எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் கதிரமலை அரசின் தலைநகர் கந்தரோடையென அடையாளம் காணப்படுகிறது (Rasanayagam 1928).





1917 இல் போல் பீரிஸ் என்ற அறிஞர் இங்கு மேற்கொண்ட முதலாவது தொல்லியல் ஆய்வு தமிழ்ப் பிராந்தியத்தின் வரலாறு பற்றிய ஆய்வின் தொடக்கப் புள்ளியெனலாம். இந்த ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட பூர்வீக மக்கள் பயன்படுத்திய பலவகைப்பட்ட மட்பாண்ட ஓடுகள், அம்




மக்கள் பயன்படுத்திய கல், சுடுமண், உலோகம் என்பவற்றால் வடிவமைக்கப்பட்ட கலைச் சின்னங்கள், அழகு சாதனப் பொருட்கள், நாளாந்த பயன்பாட்டிலிருந்த இரும்புக் கருவிகள், ஆயுதங்கள், கிரேக்க, உரோம, மற்றும் சங்க கால நாணயங்கள், பௌத்த கட்டிட சிற்ப அழிபாடுகள் என்பன கந்தரோடையை தென்னிலங்கையில் இருந்த அநுராதபுரம், மகாகமை முதலான புராதன அரச தானிகளுடன் ஒப்பிட வைத்தது. இதனால்தான் போல் பீரிஸ் கந்தரோடையை அநுராதபுரத்திற்கு அடுத்துத் தோன்றிய புராதன நகர் என வருணித்தார் (Peris, P.E., 1922). அண்மையில் இக்கட்டுரை ஆசிரியர்எமது பல்கலைக்கழகத் தொல்லியல் மாணவர்களுடன் இணைந்து கந்தரோடையின் பல்வேறு தொல்லியல் மையங்களில் மேற்கொண்ட




தொல்லியல் கள ஆய்வின்போது பெருங்கற் காலப் பண்பாட்டு மட்பாண்டங்களுடன்உரோம மட்பாண்ட ஓடுகளும், இலங்கையில் கி.மு. 4ஆம் நூற்றாண்டளவில் புழக்கத்திற்கு வந்த வடஇந்திய அச்சுக் குத்தப்பட்ட நாணயங்களையும (படம் -1), சமகாலச் சங்க கால நாணயங்களையும் (படம் -2), உரோம நாணயங்களையும் (படம்-3) சேகரிக்க முடிந்தது.

போல்பீரிஸ்தை தொடர்ந்து 1946-1960 காலப் பகுதியில் இலங்கைத் தொல்லியற் திணைக்களம் இங்கு சில இடங்களில் அகழ்வாய்வினை மேற்

கொண்டு மேலும் பல தொல்லியற் சின்னங்களை கண்டறிந்தது. இக்கால ஆய்வுகளின் போதுதான் பௌத்த விகாரைகளின் அத்திவாரங்கள், கட்டிட அழிபாடுகள், புத்தர் சிலைகள் என்பன கண்டறியப்பட்டு அவற்றின் வரலாற்றுப் பெறுமதி வெளிக் கொணரப்பட்டது (சுயபரியவால 1987). அதன் அடிப்படையில் அங்குள்ள பௌத்த தூபிகள் மீள் உருவாக்கம் பெற்று தற்காலத்தில் மக்கள் பார்வைக்குரியதாகக் காட்சியளிக்கின்றன (படம் - 4). ஆயினும் 1970 இல் பென்சில்வேனியப் பல்கலைக்கழக அரும்பொருள் ஆய்வாளர்கள்

4




விமலா பேக்லே தலைமையில் விஞ்ஞானபூர்வமான முறையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் தான் கந்தரோடையின் வரலாற்று முக்கியத்துவத்தை வெளியுலகிற்குத் தெரியப்படுத்தின எனக் கூறலாம். இந்த அகழ்வின் மூலம் கந்தரோடையில் இரு வேறுபட்ட கலாசாரப் படைகள் இனம்காணப் பட்டன (Begley Vimala: 1973). ஒன்று இங்கு முதலில் குடியேறிய பூர்வீக மக்கள். இரண்டு அம்மக்களுடன் காலப் போக்கில் பௌத்த மதம் கலந்து பண்பாட்டில் ஏற்படுத்திய மாற்றங்கள்.

பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் யாழ்ப்பாணத்தின் பூர்வீக மக்கள் தொடர்பான வரலாறு புகைபடர்ந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இந்நிலையில் கந்தரோடையில் மேற் கொள்ளபட்ட அகழ்வாய்வுகள் இங்கு வாழ்ந்த பூர்வீக மக்கள் யார்?, எங்கிருந்து வந்தார்கள்?, எப்போது வந்தார்கள்?, அவர்களுக்கும் தற்காலத்தில் இப்பிராந்தியத்தில் வாழும் மக்களுக்கும் இடையிலான தொடர்பு, தொடர்ச்சி என்ன? என்பன தொடர்பான கேள்விகளுக்குப் பொருத்தமான விடைகாண உதவுகின்றன.

இங்கு மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளின் போது கிடைத்த தொடக்ககாலத் தொல்லியற் சின்னங்களில் இருந்து இங்கு முதலில் குடியேறிய மக்கள் பெருங்கற்காலப் பண்பாட்டைப் பின்பற்றிய திராவிட இனத்தவர் என்பது தெரிய வந்துள்ளது. கந்தரோடையின் சில மையங்களில் இவர்கள் வாழத் தொடங்கிய காலம் கி.மு. 1000 மாகவும் வேறு சில இடங்களில் கி.மு.500 ஆகவும் காந்த சக்தி அளவை முறைமூலம் கணிப்பிடப் பட்டுள்ளது (சுயபரியவால 1987). இந்த இன மக்களே படிப்படியாகக் குடாநாட்டின் ஏனைய இடங்களுக்கும் சென்று குடியேறியிருக்க வேண்டும். அண்மையில் யாழ்ப்பாணத்தின் பூவீக குடியேற்றங்கள் பற்றி ஆய்வு மேற்கொண்ட கலாநிதி இரகுபதி இங்கு 40க்கு மேற்பட்ட இடங்களில் பூர்வீக மக்களது குடியிருப்புக்கள் இருந்ததாகவும் அதன் தலைமைக் குடியிருப்பாக கந்தரோடை இருந்ததென வும் குறிப்பிட்டுள்ளதை இவ்விடத்தில் சுட்டிக் காட்டுவது பொருத்தமாகும் (சுயபரியவால 1987). இம்மக்கள் உடற்கூற்றியல், வரலாற்று மொழியியல், பண்பாடு, தொல்பொருட்கள், அவற்றின் தொழில் நுட்பம் என்பவற்றால் சமகால தமிழகப் பெருங்கற் காலப் பண்பாட்டு மக்களை ஒத்தவர்கள் என்பது விமலாபேக்கிலேயின் கருத்தாகும் (Begley Vimala 1973). இதனால் யாழ்ப்பாணத்தில் குடியேறிய பூர்வீக மக்கள் தமிழகத்தில் இருந்தே வந்தனர் என்பது தொல்லியலாளர்களின் கருத்தாகும் (Sittampalam 1990). இப்பண்பாடுடன்மங்கிய நிலையில் இந்திய, உரோம மட்கலன்கள் உரோம, சங்க கால மற்றும் இந்திய நாணயங்கள் காணப்பட்டன. இவ்வாதாரங்கள் இப்பண்பாட்டு மக்கள் உரோம இந்திய நாடுகளுடன் வணிக உறவு கொண்டிருந்ததையும், அதனால் பல நாட்டு மக்கள் இங்கு வந்து தங்கியதையும் உறுதிப்படுத்துகின்றன. இதனால்

மக்கள் தொகைப் பெருக்கமும், அதனால் நகரமயமாக்கமும் ஏற்பட்டு காலப்போக்கில் இங்கு சிற்றரசுகள் தோன்றுவதற்கு வழியேற்பட்டன.



5

இதற்கு ஆனைக்கோட்டையில் கிடைத்த கி.மு. 3–கி.மு.2 ஆம் நூற்றாண்டுக்குரிய சாசன முத்திரையில் வரும் "கோவேத" என்ற பெயர் சான்றாகும் (படம் – 5). மேலும் வடஇலங்கையில் கிடைத்த சமகாலத்திற்குரிய பிராமிக் கல்வெட்டுக்கள் இவ்வட்டாரத்தில் ஆட்சி புரிந்த நாகச் சிற்றரசுகள் பற்றிக் கூறுகின்றன (Paranavitana, S., 1970). மேலும் ஒரு பிராமிக் கல்வெட்டு வடஇலங்கையில் இருந்த "நாகநகர்" பற்றிக் கூறுகிறது. இந்த நகரை கலாநிதி இரகுபதி கந்தரோடை என அடையாளப்படுத்துகிறார் (சுயபரியவால 1991).


கி.மு.3ஆம் நூற்றாண்லிருந்து இலங்கைக்குப் பௌத்த மதம் பரவியபோது கந்தரோடையில் வாழ்ந்த பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களில் ஒரு பிரிவினர் பௌத்த மதத்தையும் பின்பற்றியிருக்க வேண்டும். அதையே பெருங்கற்காலப் பண்பாட்டின் மேற்படையில் உள்ள பௌத்த எச்சங்கள் உறுதிப்படுத்துகின்றன. தமிழகத்தில் பெருங்கற்காலப் பண்பாட்டின் பின்னணியில் தமிழ்ப் பௌத்தம் செல்வாக்குடைய மதமாக வளர்ந்ததால் தமிழகத் தொடர்பால் அம்மதம் கந்தரோடையிலும் வளர்ந்திருக்க வேண்டும். பாளி இலக்கியமான மகாவம்சத்தில் சங்கமித்தை தலைமையிலான பௌத்த தூதுக்குழு வெள்ளரசக் கிளையுடன் ஜம்புகோளத் துறைமுகத்தில் வந்திறங்கியதாகக் கூறப்படும் செய்தி இத்தூதுக்குழு தமிழகம் ஊடாகவே இங்கு வந்ததைக் கூறுவதாக உள்ளது. கந்தரோடையிலும் மற்றும் சுன்னாகம், வல்லிபுரம், புத்தூர், புங்குடுதீவு ஆகிய இடங்களிலும் கிடைத்த புத்தர் மற்றும் பௌத்த வழிபாட்டுச் சின்னங்கள் ஆந்திர மாநிலத்திற்குரிய ஒருவகைப் பளிங்குக் கல்லில் அமராவதிக் கலைமரபில் வடிவமைக்கப்பட்டு அங்கிருந்தும், தமிழகம் ஊடாகவும் இங்கு கொண்டுவரப்பட்டதை உறுதி செய்கின்றன. ஆகவே கந்தரோடையில் தமிழர்களும் பௌத்தர்களாக வாழ்திருப்பினர் எனக் கொள்வதில் தவறில்லை. ஏனெனில் பண்டைய காலத்தில் இலங்கையில் இந்து மதமோ அல்லது பௌத்த மதமோ குறிப்பிட்ட ஒரு மொழி பேசும் மக்களுக்கு மட்டும் உரிய மதங்களாக இருக்கவில்லை. பாளி இலக்கியங்களையும், பிராமிக் கல்வெட்டுக்களையும் ஆராய்ந்து பார்த்தால் தமிழர்களும் பௌத்தர்களாக, பௌத்த மதத்திற்கு ஆதரவு கொடுத்து வளர்த்தவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதற்குப்பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. உதாரணமாக கதிர்காமம், அறகம, அநுராதபுரம் ஆகிய இடங்களில் கிடைத்த கி.பி.5ஆம் நூற்றாண்டுகுரிய கல்வெட்டுகள் 16 ஆண்டுகள் ஆட்சிபுரிந்த பரிந்தன், தாடிகன் ஆகிய தமிழ் மன்னர்கள் பௌத்தர்களாக இருந்து அம்மதத்தை வளர்த்ததால் அவர்கள் புத்ததாசன், பரிதேவன் முதலான பட்டங்களைப் பெற்றதாகக் கூறுகின்றன. இவ்வாதாரங்கள் தமிழகத்தைப் போல் இலங்கையிலும் தமிழ்ப் பௌத்தம் வளர்ந்திருந்ததைக் காட்டுகின்றன. இதனால் கந்தரோடையில் கண்டறியப்பட்ட பௌத்த எச்சங்களை அக்காலத்தில் வாழ்ந்த தமிழர்களுடனும் தொடர்புபடுத்திப்பார்க்க இடமுண்டு. இங்கு பௌத்தம் கி.பி. 5ஆம் நூற்றாண்டுவரை ஓரளவுக்கு வளர்ந்திருந்தமைதான் அநுராதபுர மன்னர்களது பண்பாட்டு உறவுகள் வடஇலங்கையின் ஏனைய இடங்களைக் காட்டிலும் கந்தரோடையுடன் தொடர்புடைய இடங்களில் அதிக மாக இருந்ததற்கு காரணம் எனலாம். ஆனால் கி.பி. 6ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்தில் ஏற்பட்ட பக்தி இயக்கத்தின் செல்வாக்கால் அங்கு பௌத்தம் வலுவிழந்து இந்து மதம் எழுச்சி பெற்றபோது அதன் தாக்கம் இலங்கையின் ஏனைய இடங்களைக் காட்டிலும் வடஇலங்கையில் அதிகமாக இருந்ததால் இங்கு பௌத்தம் படிப்படியாக வீழ்ச்சியடைய இந்து மதம் மலர்ச்சி பெற்றது.

பௌத்த மதத்தின் வருகையைத் தொடர்ந்து அம்மதத்திற்குரிய பாளி, பிராகிருத மொழிகளும் இலங்கைக்கு அறிமுகமானது. தென்னிலங்கையில் அவற்றை எடுத்துக் காட்டும் ஆதாரங்களாக பௌத்த துறவிகளுக்கு அளிக்கப்பட்ட தானம் தொடர்பான குகைக்கல்வெட்டுக்கள் பல ஆயிரக் கணக்கில் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து தெரிகிறது. ஆனால் வடஇலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்



6

தில் அவ்வகையான குகைக்கல்வெட்டுக்கள் எவையும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. இருப்பினும் 1970 இல் கந்தரோடையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட மட்பாண்டச் சாசனமொன்று (படம் - 6) பிராகிருத மொழியில் அமைந்துள்ளது (Indrapala 2005). அது பௌத்த துறவியின் மட்பாத்திரம் பற்றிப் பேசுகிறது. இது பிராகிருத மொழி கந்தரோடைக்கு அறிமுகமானதற்குச் சான்றாக அமைகிறது. அண்மையில் எமது துறையைச் சேர்ந்த பேராசிரியர் செ.கிருஷ்ணராசா தனிப்பட்ட முறையில் இங்கு மேற்கொண்ட அகழ்வாய்வின் போது அரிய பல மட்பாண்டச் சாசனங்களைக் கண்டுபிடித்துள்ளார். (படம் - 7). அச்சாசனங்களில் தமிழ் மொழிக்கே உரிய தமிழ் எழுத்துக்கள் காணப்படுகின்றன. அண்மையில் இலங்கையில் அநுராதபுரத்திலும்,



7

தமிழகத்தில் ஆதிச்சநல்லூரிலும் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வில் கிடைத்த மட்பாண்டச் சாசனங்கள் காபன் காலக் கணிப்பிற்கு உட்படுத்தியதிலிருந்து இந்நாடுகளுக்கு பௌத்தம் பரவுவதற்கு இரு நூற்றாண்டுகளுக்கு முன்னரே பிராமி எழுத்தின் பயன்பாடு இருந்ததை உறுதிப்படுத்தியுள்ளன. ஒரு மொழி தோன்றிப் பல நூற்றாண்டுகளுக்கு பின்னரே அதற்குரிய எழுத்துக்கள் தோன்றுகின்றன. இதனால் தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் தோன்றுவதற்கு முன்னரே தமிழ் மொழி பயன்பாட்டிலிருந்தமை தெரிகிறது. பேராசிரியர் இந்திரபாலா கி.மு.500 அளவில் இலங்கையில் தமிழ் மொழி பயன்பாட்டிலிருந்ததென்பதற்கு பொருத்தமான விளக்கம் கொடுக்கிறார் (Indrapala 2005). இவ் விளக்கம் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் வாழ்ந்த காலத்திலேயே தமிழ் மொழி பயன்படுத்தப்பட்டதென்பதற்குச் சான்றாக அமைகிறது.

பெருங்கற்காலப் பண்பாட்டின் முதிர்ச்சி நிலையில் ஏற்பட்ட பௌத்த மதத்தின் வருகையைத் தொடர்ந்து இலங்கையில் தமிழ், சிங்களம் என இருமொழிப் பண்பாடு தோற்றம் பெற்றது. அதில் பௌத்த மதத்துடன் வந்த பிராகிருத மொழியே காலப் போக்கில் சிங்கள மொழி உருவாகுவதற்கும், தமிழ் மொழி மேலும் வளர்வதற்கும் முக்கிய காரணமாக இருந்தது. கந்தரோடையைப் பொறுத்தவரை பிராகிருத மொழி பௌத்த மதத்திற்குரிய மொழியாகப் பயன்படுத்தப்பட்டாலும் காலப்போக்கில் பௌத்தம் இங்கு வீழ்ச்சியடைந்ததால் பிராகிருதமும் பயன்பாட்டிலிருந்து மறைந்து விட்டது எனலாம். இதனால் கந்தரோடை தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வரும் இடமாகத் தொடர்ந்தும் இருந்திருக்க வேண்டும். இவ்வரலாற்றுப் பின்னணிதான் எட்டாம் நூற்றாணடில் யாழ்ப்பாணத்தில் இருந்த தமிழ் அரசின் தலைநகரான கதிரமலையைக் கந்தரோடையுடன் தொடர்புபடுத்தி தமிழ் இலக்கியங்கள் பேசக் காரணமாகும். இங்கு விஞ்ஞானபூர்வமான அகழ்வாய்வுகள் திட்டமிடப்பட்ட முறையில் முழுமையாக மேற்கொள்ளப்படுமாயின் புனைபடர்ந்துள்ள இலங்கைத் தமிழரின் ஆதிகால, இடைக்கால வரலாறு வெளிச்சத்திற்கு வரும் என்பதில் ஐயமில்லை.

◆ ◆ ◆

# உடற்கல்விச் செயற்பாடுகளும் சமூக மேம்பாடும்

**சின்னத்துரை மகாலிங்கம்**
*(பழைய மாணவன்)*
*உதவிக் கல்விப் பணிப்பாளர்,*
*(உடற்கல்வி)*

சமுதாயம் என்பது தனிமனிதனின் கூட்டு அல்லது எண்ணிக்கை மட்டுமன்றி அது பல சமூகத் தத்துவங்களையும் உள்ளடக்கியதாகும். சமுதாயத் தத்துவங்கள் என்பது பழக்கவழக்கங்கள், மரபுகள், அறிவு, கலாசாரம், மொழி, சமயம், பண்பாட்டுப் பெறுமதிகள் என்பவற்றை உள்ளடக்கியதாகும். இப்பண்பாட்டுக் கூறுகளுள் பிள்ளைகள், மாணவர்களை ஈடுபடுத்துபவர்கள் குடும்பமும் பாடசாலைச் செயற்பாடுகளுமே யாகும்.

உளவியல் தத்துவார்த்த அடிப்படையில் பெற்றோர், ஆசிரியர்களூடாக மாணவர்கள் இப்பண்பாட்டுக் கூறுகளுள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். தனிநபர் தொடர்பான பிரச்சினைகள், ஆர்வங்கள், தேவைகள், சுபாவங்கள் ஆகிய தனிநபர் உளவியல் அம்சங்களுக்கூடாக மாணவர்கள் வழிகாட்டப்படும்போது அவர்கள் ஆற்றல் மிக்கவர்களாக, சமூக இசைவாக்கத்திறன் கொண்டவர்களாக வளர்வார்கள். கல்வி என்பது தனியே பாடசாலைகள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற எல்லைக்குள் முடிவடைவதில்லை. அது சமூகத்துடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. மனித வாழ்க்கை முறையையும் அவனுடைய மனித இயல்பையும் கொண்டே கல்வி என்னும் அம்சம் பெறப்படுகின்றது.

சமுதாயத்தின் சிறந்த அனுபவங்கள் வாயிலாகப் பெற்ற பாரம்பரியங்களை ஒரு தலைமுறையிலிருந்து மற்றைய தலைமுறையினருக்கு கொண்டு செல்வதற்கு வழிகாட்டியாக இருப்பவை பாடசாலைகள், ஆசிரியர்கள், பெற்றோர், சமூகம் என்பனவாகும். இவை யாவற்றினதும் நோக்கம் ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதேயாகும்.

ஆரோக்கியமான சமுதாயம் என்பது நல்ல பழக்க வழக்கம், உழைக்கும் ஆற்றல், குடும்பப் பொறுப்பை பொறுப் பேற்கும் தன்மை, சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு அவற்றைத் தீர்க்கக்கூடிய திறன், மனிதத் தேவைகளைக் கருத்திற்கொண்டு செயற்படக்கூடிய மனப்பாங்கு, சரியெனப்பட்டதை உரிய நேரத்தில் செய்யக்கூடிய ஆற்றல், மழுங்காத ஆர்வம், அருட்டப்பட்ட மூளை, எதற்கும் ஈடுகொடுக்கக்கூடிய முற்போக்குச் சிந்தனை என்பவற்றை கொண்ட அங்கத்தவர்களைக் கொண்ட அமைப்பேயாகும்.

ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதில் பாடசாலை விளையாட்டுச் செயற்பாடுகள் ஏதோ ஒரு முறையில் வெவ்வேறு மட்டத்திலும், படிகளிலும் தொழிற்படுகின்றது. மனிதனின் கூட்டு வாழ்க்கை முறைமை, சேர்ந்து வாழும் பண்பை கருத்தளவில் மட்டுமன்றி, செயல்வடிவிலும் பெறுவதற்கு விளையாட்டுக்கள் வாய்ப்பு வழங்குகின்றது.

விளையாட்டுக்களில் ஈடுபடும்போது குழுவாக, ஒரு சமூகமாகத் தொழிற்படுகின்றனர். விளையாட்டில் பங்குகொள்ளும் ஒவ்வொருவரும் தமது ஆற்றல்கள், திறன்கள் என்பவற்றின் எல்லைகளை அறிவதற்கு வாய்ப்பு வழங்குவதுடன் அவரின் நிலையையும் அவருக்கு உணர்த்துகின்றது. இதனாலேயே விளையாடும் குழுவில் தனக்குரிய இடத்தை எடுத்து அதன் மூலம் தனது குழுவின் முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் தனது பங்களிப்பைச் செய்ய முயற்சிக்கின்றனர். விளையாட்டு மூலம் பெறப்படும் இத்தகைய பயிற்சிகள், அனுபவங்கள் என்பன சமூகத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

ஒரு சமூகம் மதிப்பு வாய்ந்ததாகத் திகழ வேண்டுமாயின் அதன் அங்கத்தவர்கள் விசுவாச மாகவும் அர்ப்பண சிந்தை உள்ளவர்களாகவும் இருப்பது மிக அவசியமாகும். இந்தப் பண்புகளை உடற்கல்வி விளையாட்டுக்களால் மட்டுமே வழங்க முடியும். விளையாட்டுத்துறை சிறந்த ஒழுக்க முறைகளையும், உயர்ந்த இலட்சியங்களையும் போதிக்கும் களமாக விளங்குகின்றது. தனது ஆற்றல்களையும் திறன்களையும் அறிந்த ஒருவராலேயே இயற்கையுடன் முரண்படாது, அதன் தோற்றப்பாட்டை உணர்ந்து அதனுடன் ஒன்றிவாழும் பண்பைக் கொண்டிருக்கமுடியும்.

சிறந்த விளையாட்டு வீரனின் குணாதிசயங் களுள் ஒன்று வெற்றிதோல்விகளை சமமாக நோக்கும் பண்பு, வெற்றியீட்டும்போது கர்வங் கொள்வதோ, தோல்வியடையும்போது மனச் சோர்வடைவதோ அவனிடம் காணப்படமாட்டாது. வெற்றிபெறும் வேளையிலும் பார்க்க தோல்வி யடையும்போதே தோல்விக்கான காரணங்களைக் கண்டறிவதும் அவற்றை நிவர்த்தி செய்து கொள் வதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதிலும், எதிர்காலத்தில் அவ்வாறான நிலைகள் ஏற்படாமல் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவும் வெற்றிபெறுவதற்கான வழிகளைத் தேடிக்கொள் வதிலும் தன்னை ஈடுபடுத்திக்கொள்வான்.

சமூகத்தில் வாழும் ஏனையோருடைய தேவைகள் பற்றிய உணர்வு, ஒருவருக்கு இருப்பது அவசியமாகும். இது விளையாட்டு மைதானத்தில் முறையாகப் புகட்டப்படுகின்றது எனலாம். ஏனை யோரின் தேவைகள், அவர்களது உரிமைகள் என்பவற்றை மதித்து நடக்கும் அவசியம் ஏற்படு கின்றது.

சமூகப்படிநிலையில் உயர்ந்து செல்லும் போது கடமைக் கூறுகளை செவ்வனே செய்து முடிப்பதற்காக சரியான நேரத்தில், சரியான முறையில் தொழிற்படவேண்டியநிலை ஏற்படு கின்றது. இவ் உயரிய மனப்பழக்கத்தை விளை யாட்டுச் செயற்பாடு ஒன்றினை முறையாகப் பயின்று வெற்றிபெறும் ஒருவராலேயே கடைப் பிடிக்க முடியும்.

விளையாட்டுக்குழு ஒன்றில் இடம்பெறும் வீரர் ஒவ்வொருவரினதும் தொழிற்பாடு வரை யறுக்கப்படுவதுடன் அவசியம் ஏற்பட்டாலன்றித் தமது எல்லையை மீறாமல் தனது தொழிற்பாட்டை உடனுக்குடன் சரியான முறையில் நிறைவேற்றக் கடமைப்பட்டவராகின்றார். அவர் தமது கடமையி லிருந்து தவறவோ, பிழை விடவோ, அலட்சியப் படுத்தவோ முடியாது. அவரால் இழைக்கப்படும் தவறுகள், பிழைகள், அலட்சியப்போக்கு, அக்கறை யின்மை என்பவற்றை அவரது குழுவின் ஏனைய வீரர்களோ, சமூகமோ சகித்துக்கொள்ளமாட்டார் கள். தனது எல்லைக்குள் நின்று தனது பங்கை நிறைவேற்றுவதே அவரது பொறுப்பாகும். இவ் வாறு பெறப்பட்ட பயிற்சியானது சமூகத்தில் பிரதி பலிக்கின்றது.

கல்வியின் நோக்கம் ஆரோக்கியமான சமூகப் பிரசைகளை உருவாக்குவதே. இத்தகைய ஆரோக்கியமான சமூகத்தில் ஒவ்வொருவரும் தம்மை உணர்ந்து, சமூக மேம்பாட்டிற்காக தமது பங்கினை வழங்கவேண்டும்.

உடற்கல்வி, விளையாட்டுச் செயற்பாடுகள் பகிரங்கமான தொழிற்பாடாகும். இதனால் உண்மை, நேர்மை, நீதி, சமத்துவம் என்பன மறைக்கப்படவோ, மறுக்கப்படவோ முடியாது. இதனால் அன்பும் நீதியும் கொண்ட சமுதாயம் உருவாகும்.

♣ ♣ ♣

உங்களது அனுமதி இல்லாமல் யாருமே
உங்களைத் தாழ்வாக எண்ணவைக்க முடியாது.
**- எலினோர் ரூஸ்வெல்ட்.**



# சுன்னாகம் வரிசப்புலம் மகமாரி அம்பாள் வரலாற்றுப் பாதையில்

**கலாபூஷணம் க. துரைசிங்கம்**
*ஓய்வுபெற்ற அதிபர்*

**முகவுரை**

சுன்னாகம் நகரின் வடபால் வரிசப் புலத்தில் கோயில் கொண்டிருக்கும் மகமாரி அம்மன் ஆலய வரலாற்றைத் தெரிந்தவரை எழுதுவதே இக்கட்டுரையின் முக்கிய அம்சமாகும். கோயில் வரலாற்றை எழுதுவதற்கு முன்னோடியாக இப்பிரதேசத்தின் ஆதி வரலாற்றை சற்று நோக்குவோம்.

சுன்னாகம் கந்தரோடைப் பகுதிகள் பண்டைய சரித்திர எச்சங்கள் நிறைந்த பிரதேசங்களாகும். விஜயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே அதாவது நுண் கற்காலத்தில் இங்கு நகர அமைப்பு இருந்ததாகவும், இது திராவிட இனக் குடி இருப்பாக இருக்கலாமென்றும் சரித்திர ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்களே என்பதே தொல்லியலாளர்களின் கருத்தாகும். இக்கருத்துக்களின் வழியாக மாவிட்டபுரத்தைத் தொடர்புபடுத்தி மாருதப் புரவீக வல்லியை சுன்னாகத்தில் ஆண்ட உக்கிரசிங்கன் மணம் முடித்ததாக இலக்கியம் சார்ந்த வரலாறுகள் கூறுகின்றன.

கந்தரோடையைக் கதிரமலை இராச்சியம் என்றும் சொல்வர். கந்தரோடையின் சரித்திர எச்சங்களைவிட சுன்னாகம் கதிரமலைச்சிவன் ஆலயம் அமைந்துள்ள சிறுமலைப் பகுதியை (மேட்டுப் பகுதியை) தொல்லியலாளர்கள் ஆராய்வது, உக்கிரசிங்கனின் ஆட்சிக்குச் சிலவேளைகளில் வலுச் சேர்க்கலாம். கி.மு. 7ம் நூற்றாண்டில் இவ்வரசு இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

தொல்லியலாளர்களால் கந்தரோடைப் பகுதிகளில் அவ்வவ்போது எடுக்கப்படும் நாணயங்களைக் கொண்டு, அதில் காணப்படும் குத்து விளக்குகள் மற்றும் மீன்கள் தென்னிலங்கையில் அன்றிருந்த நாணயங்கள் எதிலும் காணப்படவில்லை என்று ஆய்வாளர்கள் கூறுவதால் கந்தரோடை சுன்னாகம் பகுதியில் தமிழர்கள் இருந்திருப்பர் என்பது ஊகமாகிறது.

**காலப்பகுதி**

மேலே குறிப்பிட்ட சரித்திரச் சான்றுகள், கவிதைகள் நிரம்பிய சுன்னாகத்தின் வடபால் உள்ள வரிசப்புலப் பகுதியில் அமைந்திருக்கும் கோயில் மகாமாரி அம்மன் கோயில் ஆகும். இக்கோயிலை ஆதியில் முத்துமாரி அம்மன் கோயில் என்று அழைத்தார்கள். இக்கோயிலின் தோற்றம் வளர்ச்சி பற்றி இனிப் பார்ப்போம்.

சுன்னாகத்தில் ஐயனார் கோயில், கதிரமலைச் சிவன்கோயில், மயிலணிக் கந்தசுவாமி கோயில் என்பன அமைக்கப்பெற்ற காலத்திற்குப் பின்பே வருசப்புல மகமாரி அம்மன் கோயில் அமைக்கப்பெற்றது என்று கருத இடம் உண்டு. மேற்கூறிய கோயில்கள் பற்றிய பாடல்களிலிருந்தும் (ஊஞ்சல்) குறிப்பாக ஊஞ்சல் பாடிய புலவர்கள் வாழ்ந்த காலங்களைக் கொண்டும் பார்த்தால் இது மற்றைய ஆலயங்களின் பின்பே அமைக்கப்பெற்றது என்பதை

அறியலாம். அண்ணளவாகக் கணித்தால் இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன் இது உருவானதாக அறியலாம்.

## தோற்றம்

இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி தொடங்கிய காலப்பகுதியில் ஆட்கொல்லித் தொற்று நோய்களான வாந்திபேதி, கொலரா போன்ற நோய்கள் வந்து மக்களை வாட்டின. இந்த நோய்கள் வந்ததால் ஒரு காலப் பகுதியில் ஒவ்வொரு ஊரிலும் நூற்றுக்கணக்கானோர் இறந்தனர். எல்லாக் கிராமங்களிலும் இது சர்வசாதாரணம் இதனால் இறந்தவர்களின் உடலை தாங்கள் வளவுகளுக்குள் புதைத்தனர்.

வருசப்புலப் பதியும் இதற்கு விதிவிலக்கல்ல. பலர் இறந்தார்கள், தக்க மருந்துகள் கிடைப்பதில்லை. மரணங்கள் மலிந்த பூமியாக இருந்தது. இதனால் அக்கால மக்கள் கடவுளையே நம்பி வழிபட்டு வாழ்ந்தனர்.

அன்று இந்தக் கொள்ளைநோயால் ஒரு கன்னிப் பெண் இறந்துவிட்டாள். மாலை நேரம் இறந்ததால் அப்பெண்ணின் உறவினர்கள் அடுத்தநாள் அடக்கம் செய்யலாமென்று முடிவெடுத்தவர்களாய் இறந்த அக்கன்னிப் பெண்ணின் உடலை பாயினால் சுற்றி வீட்டின் திண்ணை ஓரத்தில் வைத்து விட்டனர். அடுத்தநாட்காலை அவர்கள் எழுந்து பார்த்தபொழுது பாயினால் சுற்றப்பட்டிருந்த அப்பெண் திண்ணையில் குந்திக்கொண்டிருந்தாள். இதனைக் கண்ட உறவினர்கள் பயந்தார்கள்; ஆச்சரியப்பட்டார்கள்; செய்வதறியாது திகைத்து நின்றார்கள்.

"அதேவேளை அக்கன்னிப் பெண் அங்குள்ளோரைப் பார்த்து நீங்கள் ஒன்றுக்கும் பயங்கொள்ள வேண்டாம். இனிமேல் உங்களுக்கு நோய்கள் எதுவும் வராது நான் காப்பாற்றுவேன்" என்று கூறி எழுந்து நடந்து மறைந்து விட்டார்.

"இது என்ன புதுமை? இது தெய்வத்தின் விளையாட்டோ என்று எண்ணியவர்களாய் இது கடவுளின் செயல்தான் என்று நம்பினர். இது அம்மனின் திருவிளையாட்டாகக் கருதினர். மரத்தடியில் கல்லொன்றை வைத்து முத்துமாரி என்று வழிபடத் தொடங்கினர்.

மரத்தடியில் வைத்துப் பூசித்தவர்கள் அம்மனுக்கு சிறுகொட்டில் போட்டு வழிபடத் தொடங்கினர். ஊரவர்களெல்லாம் கூடிவழிபடத் தொடங்கினர், அயல் ஊரவர்கள் இந்த செய்தி கேட்டு வந்து வழிபடத் தொடங்கினர், திருவிளக்கு ஏற்றித் தினந்தினம் வழிபட்டனர், ஆசார சீலரான ஒரு முதியவர் வெள்ளி, செவ்வாய் நாட்களில் பூசை செய்து வந்தார். உருவேறத் திருவேறும் என்பார்கள். தொழத்தொழ அம்மனின் அருட்கடாட்சம் கிட்டிய மக்களெல்லாம் மேன்மையுறத் தொடங்கினர்.

## கட்டடம்

ஊர் மக்கள் கூடி சுண்ணாம்புக் கட்டடம் அமைத்து அம்மனை அதிலிருத்தி வழிபட்டனர். குருக்கள் பூசை செய்யவேண்டும் என்று விரும்பிய மக்கள் பூசை செய்வதற்கு பூசகர் ஒருவரை ஒழுங்கு செய்தனர். அவர் சிவஸ்ரீ சபாரத்தினக் குருக்களின் தந்தையாராவர். அவரின் பக்திச் சேவையால் முத்துமாரி அம்மனின் கோயில் பொலிவுற்றது, நித்திய பூசைகள் நடைபெற்றன. பக்தர்களின் தொகை நாளுக்கு நாள் கூடிச் சென்றது. ஊரே புனிதம் அடைந்ததென்று முன்னோர் சொல்வார்களாம். தந்தையாரின் உடல் நிலை குன்றியதால் சபாரத்தினக் குருக்கள் அவர்கள்

நித்திய பூசைகளை ஏற்றுக்கொண்டார். 1910களில் நைமித்திய பூசைகள் நடைபெறத் தொடங்கின. குறிப்பாக திருவெம்பாவை, நவராத்திரி விழா போன்றவைகளுடன் நாளடைவில் அலங்கார உற்சவங்களும் நடைபெறத் தொடங்கின.

**பரிபாலன சபை**

கோயிலும் கொங்கிறீற்கல் கட்டடமாக மாற்றப்பட்டது. மகா கும்பாபிஷேக நடைபெற்றது. ஊர்மக்கள் கூடி பரிபாலனசபை உருவாக்கினர். படித்துப் பெரும்பதவி வகித்த பெரியோரோடு இளையோரும் கோயிலை மேம்படுத்தத் தொடங்கினர். ஏற்கனவே எழுந்தருளி விக்கிரகம் செய்யப்பட்டது. சுவாமி வீதிவலம் வருவது வழக்கமாகியது. இறைவியை ஊஞ்சலிலிருத்தி பூசைகள் செய்தனர். ஊஞ்சல் பாட்டினை சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் இயற்றிக் கொடுத்தார். வருடாவருடம் இப்பாடலைப்பாடி இறைவியை வழிபட்டனர். நீண்டகாலம் படித்து வந்த ஊஞ்சல்பாட்டு அனர்த்தங்களால் தவறிவிட்டதால் இணுவில் கலாபூஷணம் நா.வீரமணி ஐயர் அவர்களால் ஊஞ்சற் பாடல் மீள எழுதப்பெற்றது. அதுவே இப்பொழுது பாடும் வழக்கத்தில் உள்ளது. அப்பாடலில் சில வரிகளைப் பார்ப்போம்.

மஞ்சளணி குங்குமமும் மாலையாட
மன்னு செவிக் குண்டலங்கள் மின்னி ஆட
கஞ்ச மலர் விழியருளைப் பொழிந்து ஆட
கரம் அபய விரதங்கள் கனிந்தே ஆட

எனத் தொடர்கிறது ஊஞ்சல்பாட்டு.

**மகமாரி கோயிலாகப் பெயர் பெற்றமை**

1950 களிற்குப் பின் வருசப்புலம் மகமாரியென்று பெயர்பெற்ற இக்கோயில் அபரித வளர்ச்சி கண்டதற்கு அம்பாளின் அருட்கடாட்சம் என்றே கூறலாம். கோயிலின் முழுப்பகுதிகளும் சீமெந்துக் கட்டடமாக மாறியது. ஊர் மக்கள் எல்லோரினதும் அயராத தொழிற்பாட்டால் பெருங்கோயிலாக மாறத் தொடங்கியது. உள்வீதி தூண்கள் நிறுவப்பட்டு தரைக்கு சீமெந்து போடப்பட்டது. அடுத்த பன்னிரு ஆண்டுகளின் பின் கோயிலில் மேலும் விசேட அம்சங்கள் பெருகின.

விசேடமாக சுற்றுப்பிரகாரத்தில் பரிவார மூர்த்திகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன. இதனை ஊர்மக்கள் சேர்த்து உபயமாக மேற்கொண்டு இக்கைங்கரியத்தை நிறைவேற்றினார். விநாய கருக்கு, பாமா ருக்குமணி சமேத கோபாலருக்கு, வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியருக்கு, சேத்திரபாலருக்கு தனித்தனி கோவில்கள் அமையப் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் மணிக்கோபுரம் உருவாக்கம் பெற்றது. நீண்டகாலமாக அலங்காரத் திருவிழாவாக இருந்துவந்ததை மகோற்சவமாக மாற்றி வழிபடவேண்டும் என ஊர்மக்கள் விரும்பினர். அம்பாள் கிருபையால் 2006ம் ஆண்டில் மகோற்சவம் நடைபெறும் கோயிலாக மாற்றம் பெற்றது.

**மகோற்சவக் கோவிலாகியது**

2000ம் ஆண்டில் கொடித்தம்பம் நிறுவப்பட்டு சித்திரத்தேர் அவ்வாண்டிலே வெள்ளோட்டம் கண்டு தேரில் அம்பாள் திருவீதியுலாவும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. இத்தேர் உருவாக்கத்திற்கு தேர் திருப்பணிச் சபையை உருவாக்கி உள்ளூர், வெளியூர் நிதியுதவியுடன் இத்திருப்பணியை பூர்த்தி செய்தனர்.

மேலும் 2005ம் ஆண்டில் ஓர் அன்னதான மண்டபம் வேண்டுமென விரும்பிய ஊர்மக்கள் அன்னதான திருப்பணிச்சபையை உருவாக்கி 2007ம் ஆண்டு தைத்திங்கள் 18ம் நாள் அதற்கான கால்கோள் நடைபெற்று திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிராமத்தவரும், உள்நாட்டவரும் மட்டுமன்றி வெளிநாட்டில் வாழும் அம்பாள் பக்தர்களின் பேருதவியாலும் உருவாகிய இத்திருத்தலத்தில் சீரும் சிறப்புமாக ஆகம விதிப்படி கோயிலின் நித்திய நைமித்திய பூசைகள் நடைபெறுகின்றன. காலத்துக்குக் காலம் பரிபாலன சபையினரின் பெருமுயற்சிகளினாலும், அர்ச்சகர்களின் நற்சேவைகளாலும் அம்பாளின் கிருபையாலும் கோயில் நல்ல நிலையில் வளர்கிறது.

**பாடல் பெற்ற ஸ்தலம்**

பாடல் பல பெற்ற பெருமைமிக்கது வருசப்புலம் மகாமாரி அம்மன் 19ம் நூற்றாண்டில் வாழ்ந்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் இத்திருத்தலத்திற்கு ஊஞ்சற் பாடல் பாடியது ஒரு விசேட அம்சமாகும். இந்த ஊஞ்சற்பாட்டு பன்னெடுங்காலமாகப் பாடப்பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்பாடல் இலங்கையில் காலத்துக்குக்காலம் ஏற்பட்ட அனர்த்தங்களால் தொலைந்துவிட்டது. அதன்பின் இணுவில் பிரம்மஸ்ரீ நா.வீரமணி ஐயர் அவர்கள் ஊஞ்சல் பாடல் எழுதியுள்ளார். அந்த ஊஞ்சல் பாட்டே இன்று வழக்கத்தில் இருந்து வருகிறது.

அந்த ஊஞ்சல் பாட்டில் விநாயகர் துதியில்

"சுன்னாகப்பதி வரியப் புலத்தில் வாழ்ந்து சோபனமாய் சுபமருளும் மகாமாரிக்கே" என வருகிறது.

இன்னொரு பாடலில்

"ஆசியருள் நல்வரியப் புலத்தில் மேவும்

ஆரணியே மகாமாரி ஆடீர் ஊஞ்சல்" என்று அம்மனின் அருள் பிரவாகத்தைக் குறிப்பிடுகிறார்.

பிறிதொரு பாடலில்

"கமலமலர்க் கழலிணைகள் கருணையோடு

காசினியில் பத்தருக்கே அருளும் தேவி"

எனக் சிறப்புச் சொல்லப்படுகிறது.

அந்தத் திருவூஞ்சல் பாடலிலே பராக்கு என்ற பகுதியிலே பின்வருமாறு வருகிறது.

சிங்கவா கினியே தேவி பராக்கு
சிற்பதையே கற்பகமே மாரீ பராக்கு
அங்கயற் கண்ணியே ஆயீ பராக்கு
ஆனந்த பைரவியே சூலி பராக்கு

இணுவையூர் கலாபூஷணம் மகாவித்துவான் நா. வீரமணிஐயர் அவர்களின் ஊஞ்சல் பாடல்களைத் தொடர்ந்து மகாமாரி அம்மன் கவசத்தினை பண்ணிசைப் பாவலர் கலாபூஷணம் சு. துரைசிங்கம் அவர்கள் பாடியுள்ளார். அக்கவசம் வருசப்புல மகாமாரி அம்மனை முதன்மையாக வைத்து யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் கோயில் கொண்டுள்ள மாரியம்மன்களைப் பரவிப் பாடுவதாக அமைந்துள்ளது.

அக்கவசத்தில் வரும் சில வரிகளைக் கவனிப்போம்

*குண்டல நாயகி குணநிதி போற்றி*
*மண்டலம் காக்கும் மகமாரி போற்றி* என்றும்

*உருத்திர அம்சமாய் ஊரெல்லாம் இருப்பாய்*
*வந்திடும் மக்களை வசமாய்க் காப்பாய்* என்றும்

*கருமாரி அம்மனாய் கண்ணுடை அம்மனாய்*
*வரும் பகை தீர்த்து வாழ்ந்திட வைப்பாய்* எனவும் தொடர்கிறது.

*சிம்ம வாகினி சிவனின் மோகினி*
*எம்மை காத்தருள் மகமாரி தாயே* என இறைவியை வேண்டுகின்றார்.

இக்கவசமும் அம்மன் கீர்த்தனைகளும் அம்மன் மேல் கவிஞர் துரையரால் ஆக்கப்பெற்ற வில்வ அர்ச்சனைப் பாடலும் திருமதி மு. நாகேஸ்வரி ஆக்கிய நாம அர்ச்சனையும் சங்கீத பூஷணம் S.R.தர்சனன் பாடி ஒலி நாடாவாக வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கவிஞர் துரையர் வரிசப்புல அம்மன்மீது இயற்றிய கீர்த்தனை சங்கீதபூஷணம் S.R தர்சனால் பாடப்பெற்று இலங்கை வானொலி ஒலிக் களஞ்சியத்தில் உள்ளது. இக்கீர்த்தனையை வானொலி நிலையத்தினர் இடையிடை ஒலிபரப்புவார்கள். அக்கீர்த்தனையில் சரணம் ஒன்றினைக் கவனிப்போம்.

*அபிடேக நாயகியே அலங்கார நாயகியே*
*குவிந்திடும் அடியார்க்கு குறையிலா வளமருளும்*
*பவித்திர நாயகியே படர்சடை நங்கையே*
*கவித்துவம் உன்மேனி காணும் எமக்கின்பம்*

என இறைவியின் சிறப்பினை இப்பாடல் எடுத்துக் காட்டுகிறது.

வரிசப்புல மகமாரியை அனுதினமும் வழிபட்டோர் அருட்கடாட்சத்தைப் பெறுகின்றார்கள். "நம்பினார் கெடுவதில்லை". பல ஊர் மக்களையும் தன்பால் ஈர்த்து அருள்பொழியும் தேவியின் பெருமை சொல்லிலடங்கா. மாங்கல்யம் வேண்டியும், மகப்பேறு வேண்டியும், சுகம் பெற்றவர்கள் ஏராளம். பக்தி கொண்ட மக்கள் அம்மனுக்கு பொன்னென்றும் பொருளென்றும் வாரி வாரி வழங்குவது கண்கூடு. அம்பாளும் அடியவர்கள் வேண்டுவதை ஈந்தவண்ணம் இருக்கிறாள்.

அம்பாளின் திருவடியை நம்பி வழிபட்டால் நிச்சயம் கேட்டவரம் தருவாள். அவளின் அருட்பாதத்தை உள்ளன்போடு பூசித்தவர்கள், நேசித்தவர்கள் என்றும் இன்பமடைகிறார்கள்.

"தொழுவார்க்கருளும் தூமணியே போற்றி"

**முக்கிய குறிப்பு**

இவ்வாலய வரலாற்றினை எழுதுவதற்கு செவிவழிக் கதைகளுடன் நிதர்சனத் தகவல்களையும் தந்துதவிய திருமதி செல்லப்பா பூரணம்மா, திருமதி முருகேசு நாகேஸ்வரி, திருமதி இராசா சின்னம்மா, திருமதி சுப்பிரமணியம் இராஜேஸ்வரி மற்றும் இன்றைய கோயில் நிர்வாகத்தினர் ஆகியோருக்கு நன்றிகள்.

* * *

# இளைப்பாறிய அதிபர்கள்



திரு. ஆ. மார்க்கண்டு



திருமதி. த. மயில்வாகனம்



திரு. ஆ. தம்பிப்பிள்ளை



திரு. சி. நடேசு



திரு. கா. ஐயம்பிள்ளை



பிரம்மஸ்ரீ சோ. சோமஸ்கந்த ஐயர்



திருமதி. த. இராசையா



திரு. க. தட்சணாமூர்த்தி



திரு. வீ. ஏரம்பமூர்த்தி

# என்னை வளர்த்த வித்தியாசாலை

**திரு. செ. அரவிந்தன்**
*பழைய மாணவன்*
*(சட்டத்தரணி - லண்டன் மாநகரிலிருந்து)*

"தாயினும் மிக்கதோர் கோவிலுமில்லை" "பெற்றதாயினும் நனிசிறந்தது தன்னைப்பெற்ற திருநாடு" இந்த வகையில் பெற்றதாய்க்கு ஈடாக தாய்த்திருநாட்டுக்கு ஈடாக தெய்வம் குடிகொண்ட கோவிலுக்கு இணையாக ஒன்று உண்டென்றால் அது நமக்கு கல்வி அறிவைத் தந்த பாடசாலையே. அங்கு கலைமகள் குடியிருக்கின்றாள். அன்பு, பண்பு, அறிவு, கடமை, கல்வி என்கின்ற உயர்ந்த வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளை வழங்கு வது பாடசாலை. நம் முன்னோர்கள் எவ்வளவு அழகாக அர்த்தத்தோடு மூன்றாம் வயதில் ஞானம் பெற்ற, பொற்றாளம் பெற்ற ஞானசம்பந்த ரைப்போல் நம் பிள்ளைகளும் கல்வி எனும் ஞானத்தை சிறுவயதிலே பெறவேண்டும் என்ப தற்காக அழகான ஒரு பாடசாலையை தோற்று வித்து அர்தத்தோடு **"திருஞானசம்பந்தர் வித்தியாசாலை"** என்று பெயரிட்டனர்.

ஒரு குழந்தையைப் கண்ணும் கருத்து மாகக் பேணும் தாய்போல எமது பாடசாலை கல்வி அறிவை ஊட்டுகின்றது. வரியப்புல மக்கள் மட்டு மன்றி அண்டை ஊர்களில் உள்ள பிள்ளைகளும் எங்கள் பாடசாலையில் கல்வி கற்றவர்கள். இன்று உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் எல்லாத் துறைகளிலும் தலை சிறந்து விளங்குகின்றனர்.

கடுகு சிறிது என்றாலும் அதன் காரம் பெரிது. எமது பாடசாலை சிறிது என்றாலும் அது தந்து அமுது பெரியது. செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத்தேன் வந்து பாயுது காதி னிலே. அவ்வாறு நான் கல்வி கற்ற எங்கள் திரு ஞானசம்பந்தாவைப் பற்றி பேசும்போது ஓர் இன்ப உணர்வு ஏற்படும்.

எனது ஆரம்பகால படிப்பு இங்குதான் தொடங்கியது. இங்கு ஒரு மாணவன் பள்ளியில் சேருமுன்னர் நவராத்திரி விழாவில் முக்கிய நாளான சரஸ்வதி பூசை அன்று நமது ஆலயக் குருக்கள் ஏடு தொடக்கி வைப்பார். அழகான மஞ்சள் பூசிய இளம் பனை ஓலை (பனையோலைச் சார்) யில் எழுத்தாணியால் எழுதப்பட்ட "ஹரி ஓம் நம நன்றாக கணபதி" துணை என்று தொடங்கி உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்களைக் கொண்ட ஏடு சரஸ்வதி பூசையினன்று பள்ளியில் சேரப்போகும் சிறுவர்களுக்கு ஏடு தொடக்கி வைப்பார். பாருங்கள் நாம் கல்விக்குக் கொடுக்கும் மரியாதை ஒரு புண்ணிய நாள், பூசையில் வைத்த ஏடுகைளக் கொண்டு கல்வி அறிவினைத் தொடக்கி வைப்பார்கள்.

நாம் படித்த பள்ளிக்கூடம் ஒரு கூட்டுக்குடும் பம் மாதிரி. பல குடும்பங்களிலும் பல இடங்களி லிருந்தும் மாணவர்கள் ஒன்று சேர்ந்து படித் தோம். இது ஒற்றுமையை வளர்க்கும் மையமாகப் பணிபுரிகிறது. நான் படிக்கும் காலத்தில் பெண் கள் வெளியில் தனித்துச் செல்வதென்றால் நினைத்துப்பார்க்கமுடியாத விடயம். ஆனாலும் பிள்ளைகளின் நலனில் கருத்திற்கொண்டு பாடசாலைகளில் கற்பித்தல் பணியில் பல பெண் மணிகள் இருந்தனர். அவர்களில் பழையக்கா, தவமணியக்கா, பாக்கியக்கா, பன்னக்கா, குஞ்சக்கா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

எங்கள் பாடசாலை குடும்பம் போன்றது என்று கூறினேன் அல்லவா! அதற்கு உதாரணம் பாடம் கற்பித்துத் தந்த பெண்களை "அக்கா" என்று அழைத்தது. எனது மாணவப் பருவத்தில் தலைமை உபாத்தியாயராக இருந்தவர் திருவாளர்

தம்பிப்பிள்ளை, உதவித் தலைமை உபாத்தியாயராக திருவாளர் வல்லிபுரம் அவர்களும் மற்றும் நடராசா உபாத்தியார், இளையதம்பி உபாத்தியார், வேலுப்பிள்ளை உபாத்தியார், கனகசபை உபாத்தியார் என்பவர்களும் கற்பித்தல் செய்தனர். அத்துடன் கடமையுணர்ச்சியும், கண்டிப்பும் அதேவேளை மாணவர்களின் தேவைகளையும் உணர்ந்து கல்வியறிவை ஊட்டுவித்தார்கள். அந்நாட்களில் மாணவர்கள் பட்டினியோடு கல்வி கற்கக்கூடாது என்று இலவசமாக தாராளமாக பாலும், பாணும் வழங்கினார்கள். இவ் ஆசிரியர்களும் ஆசிரியைகளும் இப்பாடசாலையின் முன்னேற்றத்துக்கு ஏணிப்படியாக இருந்தனர்.

இதன்பின்னர் திருவாளர் ஐயம்பிள்ளை, அவர் சகோதரர் திருவாளர் கனகசபை, அவர்தம் பாரியார் போன்றவர்களும் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அளித்த பங்கு போற்றத்தக்கது.

இப்பாடசாலை உருவாகக் காரணமாகவும் தன் உழைப்பையே தந்த பலரில் காலஞ்சென்ற எனது மதிப்புக்குரிய தந்தை சட்டத்தரணி செல்லத்துரையும் ஒருவர். பல் சந்தர்ப்பங்களில் இப்பாடசாலை உருவாக்கத்துக்கு தானும் மற்றும் பலரும் எப்படிப் பாடுபட்டனர் என்பதை சொல்லியிருக்கிறார். தந்தையாரும் சட்டத்துறைக்கு வருமுன்னர் இப்பாடசாலையின் ஆரம்பகால ஆசிரியராக பணிபுரிந்துள்ளார்.

நான் இப்பாடசாலையின் ஒரு மாணாக்கன் என்று சொல்ல மிகவும் பெருமையடைகின்றேன். எனது மூத்த சகோதரர்களும், சகோதரியும் இப்பாடசாலையில்தான் கல்வியைத் தொடங்கினர். எங்களுக்கு எல்லாம் கல்வியறிவைத் தொடக்கி தாய்க்கு இணையான கோவிலுக்கீடான இந்தப் பாடசாலை இவ்வுலகம் இருக்குமட்டும் இருந்து நமது ஊர்ச் சிறுவர்களுக்கு அறிவெனும் அழியாச் செல்வத்தை அள்ளக் குறையாத அட்சய பாத்திரம்போல் வழங்கும். எல்லோருக்கும் அருள் புரியும் வரியப்புலத்து அன்னை முத்துமாரியும் மற்றும் கருணைக் கந்தனையும் கரம் கூப்பி இச்சிறிய மடலை முடிக்கிறேன்.

வாழி திருஞானசம்பந்தர் வித்தியாசாலை வாழி.

♣ ♣ ♣

## வெற்றிக்கான வழிமுறையின் சுருக்கம்

### (A Crash Course for Success)

- வெற்றிபெற விளையாடுங்கள் – தோல்வியைத் தவிர்க்க அல்ல.
- பிறரின் தவறுகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள்.
- உயர்ந்த ஒழுக்கமுள்ளவர்களோடு சேருங்கள்.
- சிரமப்படாமல் ஏதாவது பலன் கிடைக்காதா என்று எதிர்பார்த்திருக்காதீர்கள்.
- நீண்டகாலத் திட்டங்கள் பற்றியே எப்போதும் சிந்தியுங்கள்.
- உங்களது பலத்தை மதிப்பீடு செய்து அதன்படியே திட்டமிடுங்கள்.
- ஒரு பரந்த, தொலைநோக்குக் கண்ணோட்டத்துடனேயே முடிவெடுங்கள்.
- உங்களது நேர்மையை ஒருபோதும் விட்டுக்கொடுத்துவிடாதீர்கள்.



"உங்களால் வெல்லமுடியும்"

– ஷிவ் கெரா

# இளம்பிள்ளை பராய விருத்தியும் ஆரம்பகால கல்வியும்

**திருமதி. ரேவதி குமாரதாசன்**
*பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியை,*
*யா/சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை.*

குழந்தை பராயத்தின் முதல் எட்டு வயதும் மிக முக்கியமானதாகும். இதில் முதல் மூன்று வயது மிகமிக முக்கியமானது. எதிர்கால ஆரோக் கியம், வளர்ச்சி ஆக்கத்திறனுக்கு அத்திவாரமிடப் படுவது இக்காலத்திலாகும். வேறு எந்த காலத் தையும்விட குழந்தை துரிதமாக கற்றுக்கொள்வது இந்தக் காலத்திலாகும். பச்சிளம் குழந்தை, சிறு குழந்தைகளிடம் அன்பு, பாசம், கவனிப்பு, ஊக்கு வித்தல், மன ஊக்கம் போலவே போசாக்கான உணவு, நல்ல சுகாதார பராமரிப்பு கிடைக்கும் போது அவர்கள் மிகத் துரிதமாக விருத்தியவடை வதுடன் விரைவாக கற்கக்கூடியவராக இருப்பர்.

சகல குழந்தைகளுக்கும் த மது பிறப்பை சட்டரீதியாக எழுத்து மூலம் பதிவு செய்வதற்கும், சுகாதார பராமரிப்பு, போசாக்கு கல்வியைப் பெற வும் மற்றும் ஆபத்து விபத்து சேவை, பாகுபாடு காட்டுதலிலிருந்து விலகியிருத்தல் என்பன போன்ற வற்றை பெற உரிமை உடையவர்கள். இந்த உரிமைகளை மதித்தல், பாதுகாத்தல் மற்றும் அவற்றை நிறைவேற்றுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தல் போன்றவற்றை உறுதிசெய்வது எல்லாப் பெற்றோரதும் அரசினதும் கடப்பாடாகும்.

**பிள்ளைகளின் விருத்தி மற்றும் ஆரம்ப காலக் கல்வியைப் பற்றிய முக்கிய அறிவுரைகள் :**

குழந்தை முதல் எட்டு வயதில் முக்கியமாக முதல் மூன்று வயதில் பெறும் பராமரிப்பும் கண் காணிப்பும் மிக முக்கியமானது. அதுபோலவே அது அவர்களது எதிர்கால வாழ்வில் செல் வாக்கைச் செலுத்தும்.

பிறந்த போதிலிருந்தே குழந்தை துரிதமாகக் கற்றுக்கொள்கின்றது. சீரான போக்கு, ஏற்ற சுகாதார பராமரிப்பை விடவும். பாசம், கவனிப்பு ஊக்கமும் இருப்பின் அவர்களது வளர்ச்சியும் கற்றலும் அதிக துரிதமாக நடைபெறும். குழந்தை களை விளையாடவும், ஆராயவும் ஊக்குவிப் பதன் மூலம் அவர்கள் கற்றுக்கொள்வது போலவே சமூக, உடல் மற்றும் அறிவு வளர்ச்சி அடைவதற் கும் உதவுகிறது.

குழந்தைகளை நடத்தைகளைக் கற்றுக் கொள்வது அதன் அருகில் இருப்பவரின் நடத் தையை பின்பற்றுவதன் மூலமே குழந்தைகளின் வளர்ச்சியும் வேகமும் குறைவடைவதற்குரிய ஆபத்தான வெளிக்காரணிகள் என்ன என்பதை ஒவ்வொரு பெற்றோரும், குழந்தை பராமரிப் பாளர்களும் அறிந்திருத்தல் வேண்டும்.

**பிள்ளைகளின் விருத்தியும் ஆரம்பகால கல்வியும் பற்றிய இவ்விபரங்களை நாம் விரி வாகப் பார்ப்போம்.**

குழந்தை தனது முதல் எட்டு வருடத்தில் முக்கியமாக முதல் மூன்று வயதில் பெறும் பராமரிப்பும் கவனிப்பும் மிக முக்கியமானது. அதுபோலவே அது அவன் அல்லது அவளின் எதிர்கால வாழ்வில் பாதிப்பை ஏற்படுத்தும்.

முதல் சில வருடங்களில் குழந்தை பெறும் பராமரிப்பும் பாசமும் குழந்தையின் வளர்ச்சி ஒழுங்காக நடைபெற வழிவகுக்கும். தூக்குதல், செல்லங் கொஞ்சுதல், அவர்களுடன் பேசுதல் மூலம் குழலந்தைகயின் வளர்ச்சியில் ஊக்கம் ஏற்படுவதோடு உணர்வு பூர்வமான விருத்தி ஏற்படுத்தவும் தாய் குழந்தையை அருகே வைத் துக் கொள்ளல். கேட்கும் தோறும் தாய்ப்பாலூட்ட லால் குழந்தையிடம் பாதுகாப்புப் பற்றிய எண் ணம் மேலோங்கும். போசாக்குப் போலவே ஆறு

தல் பற்றிய எண்ணத்திற்கு குழந்தைக்கு தாயின் மார்பகத்தை உறிஞ்சவேண்டிய தேவை ஏற்படுகின்றது.

ஆண், பெண் எனும் இருபாலாருக்கும் ஒரேவிதமான உடல், உள உணர்வு தேவைகளை ஏற்படுத்தும் கல்வி நிமித்தம் இருபாலாருக்கும் ஒரே மாதிரியான திறமை உளது. அதுபோலவே பாசம், கண்காணிப்பு, பங்களிப்பு வழங்கல் சம்பந்தமான இருபாலாருக்கும் உள்ள தேவை ஒரேமாதிரியானதே. செய்ய வேண்டியவற்றை விளக்கமாக எடுத்துரைத்தல், செய்யக்கூடாதன பற்றியவற்றிற்கும் தடை விதித்தல் நன்நடத்தை யிட்டு புகழ்தல் போன்றவை குடும்பங்கள் மற்றும் சமூகங்களிடையே பலனுள்ள முழுமை யான அங்கத்தவராக்க குழந்தைகளை உற்சாகப் படுத்தும் வெற்றியளிக்கக்கூடிய முறையாகும்.

பெற்றோர்களைப் போலவே குடும்பத்தின் மற்றைய அங்கத்தவர்களும் குழந்தைகளை பாதுகாத்துப் பராமரிப்பதற்கு உதவியளித்தல் வேண்டும். தந்தையின் பொறுப்பு இங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது அன்பு, பாசம், ஊக்கம் பற்றிய குழந்தைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போலவே செம்மையான கல்வி, போதியளவு போசாக்கு சுகாதார பராமரிப்பு என்பவற்றை பெறுவதை உறுதி செய்வதற்கு தந்தைக்குக் கடமையுண்டு. அதன்படி சூழல் பாதுகாப்பு உள்ளது எனவும் சண்டை, சச்சரவு இல்லாதது எனவும் உறுதியளித்து தந்தை உதவமுடியும். முக்கியமாக தாய் கர்ப்பமுற்று இருந்தாலும் அல்லது பால் கொடுக்கும் காலத்திலும் தந்தை வீட்டு வேலைகளைச் செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும்.


பிறந்த போதிலிருந்தே குழந்தை துரிதமாகக் கற்றுக்கொள்கிறது. சீரான போசாக்கு, ஏற்ற சுகாதார பராமரிப்பு என்பவற்றை விடவும் பாசம், கவனிப்பு, ஊக்கமும் இருப்பின் அவர்களது வளர்ச்சியும் கற்றலும் அதிக துரிதமாக நடை பெறும்.

பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் ஏற்படும் உடம்புடன் ஒட்டிய சம்பந்தமும் தாய்ப்பாலூட்டலும் குழந்தைக்கு அதிசிறந்த வளர்ச்சியையும் சக்தியையும் பெற்றுக்கொள்வதற்கும் தாயுடனான பிணைப்பை மேம்படுத்திக் கொள்ளவும் உதவும்.

தொடுதல், கேட்டல், முகர்தல், பார்வை, சுவைத்தல் போன்றவை தன்னைச் சுற்றியுள்ளவற்றை ஆராய்வதற்கு குழந்தை பாவிக்கும் கற்றல் உபகரணங்களாகும். குழந்தையின் மன எழுச்சி உண்மையானது, பலம்மிக்கது. ஏதாவது ஒன்றைச் செய்வதற்கு இயலாது போதல் அல்லது தமக்குத் தேவையான ஒன்று கிடைக்காமல் போதலினால் அவர்கள் வேதனையுறலாம். குழந்தைகள் அனேகமாக பழக்கமில்லாதவர்களுக்கும் இருளுக்கும் பீதியை வெளிப்படுத்துவர். குழந்தையின் பிழையான செயலுக்கு சிரிப்பதாலும் தண்டனை அளிப்பதாலும் மற்றும் புறக்கணிப்பதாலும் குழந்தை வெட்க சுபாவத்தினால் வளர்ச்சியுறவும் தனது மனவெழுச்சியை சாதாரணமாக வெளிப்படுகத்துவதற்கும் இயலாத நிலைமைக்கு உள்ளாகும்.


குழந்தை ஏதாவது கடும் உணர்ச்சியை வெளியிடும்வேளை குழந்தையை பாதுகாத்தல், பராமரிப்பவர்கள் பொறுமையுடனும் இரக்க சுபாவத்துடனும் செயற்படின் குழந்தை மகிழ்ச்சியாக பாதுகாப்புடன் சமநிலையை வளர்க்கவும் அதிக சந்தர்ப்பம் கிடைக்கும்.

◆ ◆ ◆



நிலவின் கீழே துயில் கொண்டிருந்தான்
சூரியன் கீழே குளிர்காய்ந்திருந்தான்
செய்யத்தான் போகிறோம் என்றே வாழ்ந்திருந்தான் – எதுவும்
செய்யாமலேயே மாய்ந்துவிட்டான்.

**– ஜேம்ஸ் அல்பெரி**



# இளைப்பாறிய ஆசிரியர்கள்



திரு. பா. செல்லத்துரை



திரு. கா. கனகசபை



திருமதி. பா. சிவானந்தம்



திருமதி. ப. கனகசபை



திருமதி. க. செல்லத்துரை



திருமதி. சி. தர்மலிங்கம்

# ஆரம்பக் கல்வி வளம் தேர்ச்சி பெறவேண்டுமா?

திருமதி. க. இராஜமனோகரன்
(B. A. Dip.in.Edu.)
*ஆசிரியை*
*சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை.*

ஆரம்பக் கல்வி வளம் தேர்ச்சிபெறவேண்டுமாயின் பின்வரும் செயற்பாடுகளை, வழிமுறைகளைப் பின்பற்றவேண்டும்.

கல்வி வளமானது மனிதவளம், பௌதீக வளம் என இருவகையாக அமைந்துள்ளன. இந்த இரண்டு வளங்களும் திருப்தியாக இருப்பதுடனும், பயன்பாட்டு தன்மைகளும் கொண்டதாக அமைய வேண்டும். வளமுகாமைச் செயற்பாடு, வள ஒதுக்கீடு, வளப்பகிர்வு, வளப்பயன்பாடு, வளப்பேணல், வள அபிவிருத்தி என ஐந்து வகையான செயற்பாடுகளை உடையன. கல்வி, கருமத் தொடரை ஆற்றுவோர் இந்த ஐந்து படிமுறைச் செயற்பாடுகளையும் ஆற்றவேண்டும். வளப்பங்கீட்டினை சரியான முறையில் செயற்படுத்தி அவற்றைப் பேணி பாதுகாத்தல் வேண்டும். இதன் மூலம் ஆரம்பக் கல்வியானது ஓரளவு தேர்ச்சிபெற வைக்கலாம்.

அடுத்து யாழ் மாவட்டத்திலே இரண்டு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகள் அமைந்துள்ளன. ஆனால் அவற்றில் ஒன்றில் மட்டுமே ஆரம்பக் கல்விக்கு பயிற்சி கொடுக்கப்படுகின்றது. அதில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை பாடம் மாறி பயிற்சி பெறவும் சம்மதம் தெரிவிக்கப்பட்டு பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. எனவே இந்த நிலையை மாற்றி, ஆரம்பக் கல்வி ஆசிரியர்களை ஆரம்பக் கல்விக்கே பயிற்சி அளிக்கப்பட்டு, அவர்களை மீண்டும் ஆரம்ப பாடசாலைகளுக்கே அனுப்பினால் ஆரம்பக் கல்வியை மிளிர வைக்கலாம். இதைவிட ஆரம்ப ஆசிரியராக இருப்போரை இடைத்தர, உயர்தர வகுப்புப் பாடங்களை காரணம் காட்டி, வேறு பாடகாலைகளுக்கு இடமாற்றப்படுவதை நிறுத்தி, அவர்களை ஆரம்ப வகுப்புகளுக்கே தொடர்ந்து கடமைபுரிய கல்வி அதிகாரிகள் அக்கறை கொண்டு செயற்படுத்த வேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்களாக கடமை புரியும் ஆசிரியர்கள் படித்து பட்டங்கள் பெற்றதும் ஆரம்ப ஆசிரியர்களாக இருப்பது ஏதோ கௌரவக் குறைவாக எண்ணி இடம்மாற்றம் பெற்று, உயர் வகுப்புப் பாடங்களைக் காண்பிக்க எண்ணுகின்றனர், செயற்படுகின்றனர். இந்த எண்ணங்களை முற்றாக அவர்கள் மனங்களில் இருந்து நீங்க வேண்டும். ஓர் ஆசிரியர் தன்னை வளர்க்கவே, தனது கல்வியை தொடரவேண்டுமே ஒழிய, தான் கற்பிக்கும் சிறார்களை விட்டு நீங்க எண்ணுதல் கூடாது. இந்த நிலை என்று மாறுமோ, அன்று எமது ஆரம்பக்கல்வியில் ஓரளவு முன்னேற்றம் காணலாம்.

புதிய கல்விச் சீர்திருத்தத்தில் ஓர் ஆரம்பக் கல்வி வகுப்பறை செயலூக்கம் கொண்ட வகுப்பறையாகி மிளிர்வது மட்டுமன்றி, வகுப்பறை அமைவு, செயற்பாட்டிடம், விளையாட்டு முற்றம், காட்சிப் படுத்தக்கூடிய இடவசதி, போன்ற நிறமூட்டப்பட்ட மேசை, கதிரைகள் ஆகியன உள்ளடங்கியதாக அமையவேண்டும். இந்த அமைவு ஓரிரு வகுப்புகளில் இருந்தால் மட்டும் போதாது. ஒவ்வொரு பாடசாலையிலும், ஒவ்வொரு ஆரம்ப வகுப்புகளிலும் இது அமைந்திருந்து; கற்றல், கற்பித்தல் செயற்பாடு முன்னெடுக்கப்படுமாயின் ஆரம்ப நிலை நிச்சயமாக உயர்வடையும்.

உலக நாடுகளிலே பயிற்றப்பட்ட பட்டதாரிகளே ஆரம்பக் கல்வியை சிறப்பிக்கின்றார்கள். ஆகவே அந்த நாடுகளைப்போல் எமது நாட்டிலும் பட்டதாரிகள் ஆரம்பக்கல்வியை கற்பிக்கவேண்டும் என்ற புதிய நடைமுறையினை முன்வைத்து நிச்சயமாக இதற்கு நடவடிக்கை எடுப்பார்களேயானால் ஆரம்பக்கல்விநிலை மிளிரும். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் என்ற கருத்து உண்மை

யானால், ஆரம்பக் கல்வியில் எழுத்தை புகட்டும் ஆசானையும் இறைவனாகக் கருதி மதிக்கப்பழக வேண்டும். இதற்கு கல்வி அதிகாரிகளும் கல்வி அமைச்சும் தான் தீர்வுகாண வேண்டும். ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் வரவு, அர்ப்பணிப்பு, ஆக்கபூர்வமான செயற்பாடுகள் என்பவற்றை அவதானித்து வருடந்தோறும் கௌரவிப்பு விழாக் கள் நடாத்தினால் ஆரம்ப ஆசிரியர்கள் பற்று வைத்துக் கடமை புரிவார்கள். இந்த நிலை எப்ப வந்துசேருமோ அன்று எமது ஆரம்பக் கல்வி வளம் விருத்திபெறும்.

எல்லாம் கணினிமயம் என்றெல்லாம் உலக நாடுகளில் பேசப்பட்டுவரும் இக்காலத்தில் கணினி அந்த நாடுகளில் ஆரம்பக்கல்விப் பிள்ளைக ளுக்கு ஓர் நல்ல கற்றல் சாதனமாக விளங்குகிறது. அதேபோல் எமது நாட்டிலும், ஆரம்ப கல்வி புகட்டும் பாடசாலைகளில் கணினிகளின் பாவனை களை காட்டவேண்டும், பயிற்சி அளிக்கவேண்டும். ஆசிரியர்களுக்குக் கூட, ஆரம்ப கணினி அறிவு பெற்று, மாணவர்களுக்கு புகட்டும் காலம் என்று உருவாகுமோ அன்றுதான் உயர்வினை ஆரம்பக் கல்விதனில் காணலாம்.

உள்ளூரில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட் களை கொண்டு, பணச்செலவின்றி கற்பித்தற் துணைச் சாதனங்களை வடிவமைத்தல், மாணவர் களுக்கு ஏற்ற வகையில் கல்வி சார்ந்த ஒலி, ஒளி நாடாக்களை வெளியிடல் போன்ற செயற்பாடு களை மேற்கொள்ள வளநிலையங்களை ஆரம்பக் கல்விக்கும் அமைத்து, அந்தந்த பிரதேச பாடசாலை களுக்கு தேவையான பௌதீக வளப்பற்றாக் குறைகளை ஓரளவு நிவர்த்தி செய்வதுடன் புத் தாக்கங்களை வெளியிடவும், கற்பித்தல் நுட்பங் களை விருத்தி செய்யவும், பயனுறுதி உள்ள செயற் பாடுகளை பாடசாலையில் ஏற்படுத்தமுடியும்.

ஒரு குழந்தையானது முதன்முதலாக பாட சாலை வகுப்பறை, கரும்பலகை, சக மாணாக்கர், விளையாட்டு வசதி, அன்பான ஆசான் என வளங்கள் நிறைந்த ஒரு பாடசாலையைப் பார்த் ததும் தான் இங்குதான் கல்வி கற்கப் போகிறேன் என்ற ஆசை பிறக்கும். ஆரம்ப ஆசிரியர்களாக பெண் ஆசிரியர்களை நியமிப்பதுதான் சிறந்தது. ஏனெனில் அவர்கள் தாயுள்ளம் கொண்டவர்கள், மாணவர்களை தமது பிள்ளைகளைப்போல, அவர்கள் உணர்வுகளை அறிந்து செயற்படக் கூடியவர்கள், அன்புள்ளம் கொண்டவர்கள். எனவேதான் பெண்களே கூடுதலாக ஆரம்பக் கல்வி ஆசிரியர்களாக தொழிற்படல் சிறப்பான தொன்றாகும். எனவே அரசு ஆரம்பக்கல்விக்கு நியமனம் செய்யும்போது இதனைக் கவனத்திற் கொண்டு செயற்படுமாயின் ஆரம்பக் கல்வி வளர்ச்சி தேர்ச்சி பெறமுடியும்.

அடுத்து ஒரு பாடசாலையில் ஆரம்பக்கல்வி விருத்திபெறவேண்டுமாயின் அங்கே கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைய வேண்டும். கற்றல் கற்பித்தல் வெற்றிபெற வேண்டு மாயின் பௌதீக வளங்கள், மனித வளங்கள் பூரணமாக பயன்படுத்தப்பட்டால்தான் வெற்றி யளிக்கமுடியும். ஆனால் தேவையான வளங் களைப் பெறுதல், பராமரித்தல், பாதுகாத்தல் என் பன சீரற்று இருக்கும் பாடசாலைகளிலே பௌதீக வளங்களையாயினும் ஓரளவு பெற்றுக்கொள்ள மாணவர்களின் சமூகங்களை நாடிப் பெறலாம். உதாரணமாக ஓர் மாணவனின் தந்தை தச்சுத் தொழிலாளி எனில் அவரைக் கொண்டு இலகு வானதும், நீண்டகாலப் பாவனை கொண்டது மான தளபாடங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம். சமூகத்தாலும் முடியாதெனில் ஏனைய பாடசாலை நலன் விரும்பிகளை நாடி வளத்தேவைகளை ஓரளவு நிறைவு செய்தால் ஆரம்பக்கல்வி வளர்ச்சியை ஓரளவு ஏற்படுத்தலாம்.

தற்போதைய ஆரம்பக் கல்விச் செயற்பா டானது செயற்பாட்டுக்கே முக்கியத்துவம் கொடுப்ப தால், விளையாட்டு முற்றம் ஒவ்வொரு பாடசாலை களிலும் இருக்கவேண்டும். என்னிடம் வாங்க வசதி இல்லையே என்று ஏங்காது இருக்கும் பொருட் களை கொண்டு ஆக்கி முடிக்கலாம். உதாரண மாக ரயர் சிலவற்றை மண்ணில் நாட்டி, புகுந்து செல்லல் செயற்பாட்டையும் சமநிலையில் நடப் பதற்கு ஓர் நீளமான பலகையை சற்று உயர்வாக வைத்து மாணவர்களை நடக்கவிட்டும் சற்று

பொருத்தமான கயிறு ஒன்றில் முடிச்சுகளை சம னாகப்போட்டுக் உயரத்தில் கட்டியபின் ஏறி இறங்க மாணவர்களை விட்டும் செயற்பாடுகளில் ஈடு படுத்தலாம். முயன்றால் முடியாதது ஒன்றுமே யில்லை.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக பாடசாலை அதிபர் பெயரளவில் மட்டும் இருந்து விடாமல் சுறுசுறுப்பாக செயற்படுபவராகவும், ஆசிரியர் களின் கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டை கண் காணிப்பவராகவும், மாணவர் மத்தியில் அன்புடன் கூடிய செயற்பாடுகளை மேற்கொள்பவராகவும் ஆசிரியர்களுடனும் பாடசாலைச் சமூகங்களுடனும் நெருங்கிய உறவைப் பேணுபவராகவும் அமைந் திருந்தால் ஆரம்பக் கல்வியினை சற்று உயர் வடையச் செய்யலாம்.

அடுத்து நகர்ப்புற வசதி வாய்ப்புக்களைவிட கிராமப்புற வசதி வாய்ப்புக்கள் குறைவாகக் காணப் பட்டாலும் கல்விச் செயற்பாடுகள் ஒன்றாகவே அமைந்து காணப்படுவதால் நகர்ப்புற பாடசாலை ஆசிரியர்களை கிராமத்துக்கும், கிராமப்புற பாட சாலை ஆசிரியர்களை நகரப்புறத்துக்கும் காலத் துக்கு காலம் மாற்றம் செய்வதன் மூலமும் பயிற்சி பெற்ற அனுபவமான ஆசிரியர்களை எல்லாப் பாடசாலைகளும் பயன்படுத்தமுடியும். இதனை அரசு கவனம் எடுத்து செயற்படுத்தினால் ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளை உயர்த்த வாய்ப்புண்டு.

எனவே ஆரம்பக் கல்வியில் உயர்வு ஏற்பட வேண்டுமாயின் மேற்கூறிய ஆலோசனைகள் நடைமுறைப்படுத்தப் பட்டு வந்தால் மட்டுமே குறித்த இலக்கினை அடையலாம் என்பது எனது கருத்தாகும். என்னையும் பலர் கேட்பார்கள் இவ் வளவும் படித்த பின்னும் அந்தப் பாடசாலையிலா இப்பவும் இருக்கிறீர் என்று நான் விருப்புடன் கூறுவேன் எனக்கு ஆரம்பக்கல்வி கற்பிக்கத்தான் விருப்பம் என்பதால், தொடர்ந்தும் ஆரம்பக் கல்வியில் சேவை புரிகிறேன் என கேட்ப வர்களுக்கு பதிலளிப்பேன். இவ்வாறு ஒவ்வொரு ஆசிரியர்களும் பற்றுறுதியுடன் செயற்பட்டு வந்தால் அல்லது அந்த மனப்பக்குவம் எப்ப வருமோ அன்று எமது ஆரம்பக் கல்வியினை உயர்த்தலாம் என்பது பலரின் கருத்தாகும்.

♣ ♣ ♣

All the religions of the world, while they may differ in other respects, unitedly proclaim that nothing lives in this world but Truth.

**- Mohandas Gandhi**



நீங்கள் ஒரு நேர்மையான மனிதராக ஆகிவிடுங்கள், உலகில் ஒரு போக்கிரி குறைந்துவிட்டான் என்று நீங்கள் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

**- தாமஸ் கார்லைல்**

உலகிலுள்ள மிகச் சிறந்த, மிக அழகான பொருள்களைக் காணமுடியாது. தொட்டுணரக்கூட முடியாது. அவ்றறை இதயத்தால் உணர வேண்டும்.

**- ஹெலன் கெல்லர்**

# கல்வித் திட்டமிடல் எவ்வகையில் ஒரு நாட்டின் கல்வி விரையங்களைத் தவிர்க்க உதவும்

**திருமதி. ஜெ. சுரேஸ்** (B. A. Dip.in.Edu).
(பழைய மாணவி)
ஆசிரியர்,
யா/ சுன்னாகம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை.

**அ) கல்வித் திட்டமிடல் எவ்வகையில் ஒரு நாட்டின் கல்வி விரையங்களைத் தவிர்க்க உதவும்.**

ஒரு மனிதனின் நல்வாழ்க்கைக்கான இலட்சியங்களை அடைவிக்கும் கருவியாக கல்வியே விளங்குகிறது. இதனால் அனைத்து நாடுகளினதும், உலக அமைப்புக்களினதும் செறிவான கவனம் இதன் மீதே திருப்பப்பட்டுள்ளது. நாட்டு மக்களின் மகிழ்வான வாழ்விற்கும் பொருளாதார மேம்பாட்டிற்கும், சேவைகளின் செறிவிற்கும் காரணமாக கல்வியே அமைவதனால் அதன்மீது கூடுதல் முயற்சிகளும், மூலதனங்களும் பிரயோகிக்கப்படுகிறது. நாடுகளின் தேசிய வருமானங்களில் பெருமளவு கல்விக்காகச் செலவிடப்படுகிறது. கல்வியில் நலிவான நாடுகளிற்கும் உலக அமைப்புக்கள் கணிசமான அளவு உதவி வருகின்றன. இந்நிலை கல்வி இலக்குகள் புதிய முறையில் அடையப்படுவதற்கும் உறுதி செய்வதற்கும் உயரிய தரத்திலான கல்வித் திட்டமிடல் அவசியமாகும்.

கல்வித் திட்டமிடலானது ஒரு நாட்டிலுள்ள மாணவர், ஆசிரியர், பெற்றோர், அரசியல் தலைவர்கள், நிர்வாகிகள் போன்றோர் கவனத்தில் கொள்கின்ற விடயமாகும். திட்டமிடலானது விஞ் ஞானரீதியான ஒழுங்குமுறையில் அமைந்த ஒரு செயன்முறையாகும். மக்கள் தமது வாழ்வின் தேவைகளையும், குறிக்கோள்களையும் கிடைக்கும் வளங்களின் அடிப்படையில் ஆக்கக்கூடிய வினைத்திறனுடனும், பயனுறுதித் தன்மையுடன் அடைகின்ற விஞ்ஞான ரீதியிலான பொறியே கல்வித் திட்டமிடலாகும். இதன் மூலம் பெறப்படுகின்ற விளைவானது பண்புரீதியாக மட்டுமன்றி தரரீதியிலும் உயர்வாகக் காணப்பட வேண்டும்.

ஒரு நாட்டின் கல்வித் திட்டமிலானது கல்விமுறைச் செயற்பாட்டின் கடந்தகால புள்ளி விபரங்கள், நிகழ் கால மக்கள், வளங்கள் என்பவற்றினையும், எதிர் கால கல்வி முன்னேற்றங்கள் என்ற மூன்று காலப் பகுதிகளினையும் தொடர்புபடுத்தி ஓர் தொடர்ச்சியான செய்முறையே கல்வித் திட்டமிடலாகும்.

ஒரு நாட்டின் கல்விக்கான செலவு வெறுமனே நுகர்வுச் செலவாகக் கருதப்படுவதில்லை. இது தனிநபருக்கும் முழுமையாக சமுதாயத்திற்கும் வருவாய்களை தரக்கூடியதுமான செலவாக கல்விச் செலவு நோக்கப்படுவதனால் அது முதலீட்டுச் செலவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. கல்வித் திட்டமிடலை மேற்கொள்ளும்போதே கல்விக்கான செலவுகள் அதன் மூலம் கிடைக்கக் கூடிய பயன்கள் என்பவற்றினை முன்கூட்டியே திட்டமிடல் வேண்டும். ஒவ்வொரு தனிநபரும் பெற்ற வெவ்வேறு மட்டத்திலான வெவ்வேறு வகையிலான கல்வியின் அடிப்படையில் உழைத்த அல்லது உழைக்கக் கூடிய வருமானம் கணிக்கப்படும். அத்தகைய வருமானம் அவ்வாறான கல்வியைப் பெறுவதற்கு உண்டான பொதுத் துறைச் செலவுகள் மற்றும் தனிநபர் செலவுகளுடன் ஒப்பிட்டு நோக்கப்படும். உழைப்புத் தவிர்ந்த பிற நோக்கங்களை கவனத்தில் கொள்வதாயின் அதற்கு மிகவும் பொருத்தமான கொள்கைத் தொகுதியைத் தீர்மானிக்கவேண்டியது அவசியமாகும். கல்வித் திட்டமிடலின்போது மறைமுக பொருளாதார அம்சங்களைக் கவனத்தில் கொள்ளவேண்டும்.

கல்வித் திட்டமிடலை செவ்வையாக மேற்கொள்ள கல்விப் பிரதேசங்களுக்கு இடையிலும், பிரதேசத்திற்கு உள்ளேயும் நீண்டகாலத்தில் கல்வி

அது தொடர்பாக ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை மிகத் துல்லியமாக கணித்துக் கொள்வதற்கு செலவுப் புள்ளிவிபரங்கள் உதவுகின்றன. கல்விச் செலவுகள் பிரதானமாக நிறுவனமட்டச் செலவுகள், தனியாள் செலவுகள் என வகைப்படுத்தப் பட்டுள்ளன. நிறுவனமட்டச் செலவுகளை நேரடி யான செலவு, மறைமுகமான செலவு என வகைப்படுத்தி திட்டமிடல் மேற்கொள்ளப்படுகிறது.

மாணவர்களின் தொகை பராமரிக்கப்படும் கல்வி மட்டங்களின் எண்ணிக்கை, கற்கை நெறிகளின் எண்ணிக்கை, பேண விரும்புகின்ற ஆசிரியர், மாணவர் விகிதம், மதிப்பீட்டு நடை முறைகள், புறக்கலைத்திட்டச் செயற்பாடுகளின் தன்மையும் அளவும், புலமைப்பரிசில் நடை முறைகள் என்னும் மீண்டெழும் செலவுகளுக்கு ஏற்ப திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டு விரயங் களைத் தவிர்க்க உதவுகின்றன.

பாடசாலைக் கட்டடம், தளபாடம், உபகரணம், ஆய்வுகூடம், விளையாட்டு மைதானம் போன்ற வற்றை கொள்வனவு செய்தல் அல்லது நவீன மயப்படுத்தல் என்பவற்றுக்கான மீண்டெழாத செலவுகள் நீண்டகாலத்திற்குப் பயன்படுத்தக் கூடியதாய் இருப்பதனால் கூடிய கவனம் செலுத்தி செயற்படுத்துவதன் மூலம் கல்வி விரயங்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

அரசாங்கப் பாடசாலைக் கல்விச் செயற்பாடு தொடர்பாக பாடசாலைக் கட்டணம், புலமைப் பரிசில், உதவி நன்கொடைகள், கட்டணக் குறைப்பு ஏற்பாடுகள் பற்றி தெளிவான கொள்கைகளை திட்டமிட்டு செயற்படுத்தும்போது வினைத்திற னான செயற்பாடாக அமைந்து விரயங்களைத் தவிர்க்க உதவும். மாணவன் ஒருவன் கல்வி கற்கும்போது சந்தர்ப்பச் செலவைக் கவனத்தில் கொள்வதன் மூலம் விரயத்தைத் தவிர்த்துக் கொள் ளலாம்.

மேற்கூறிய அம்சங்களின் அடிப்படையில் கல்விக்கான உள்ளீடுகளான மனிதவளம், பௌதீக வளம், நிதி வளம், நேரவளம், தகவல் வளம், தொடர் பாடல் போன்றவற்றை கவனத்தில் கொண்டு கல்வித்திட்டமிடலை செயற்படுத்துவதன் வாயி லாக கல்வி விரயங்களினைத் தவிர்க்க ஏதுவாகிறது.

### ஆ) இதற்கு மனிதவள திட்டமிடல் எவ் வகையில் பயன்படுகிறது

எந்த ஒரு நாட்டிலும் உழைக்கும் தகுதி, விருப்பம், ஆற்றல் என்பவற்றைக் கொண்டி ருக்கும் இளைஞர்கள் யாவரும் கொண்டிருக்கும் இயலளவு, ஆற்றல், மனித வளம் எனப்படும். கல்வித் திட்டமிடலின்போது மனிதவளத்தை திட்டமிடுவதன் மூலம் வேலையின்மை, குறை வான ஆற்றலை மாத்திரமே பயன்படுத்துகின்ற குறைவேலை இன்மையையும் குறைக்க முடியும். எந்தவொரு திட்டமிடலை மேற் கொள்ளும்போது மனிதவலுவினைக் கருத்தில் கொண்டு திட்டத்தினை மேற்கொள்ளுதல் அத்தியாவசியமானது.

மனிதவலு விருத்தி என்பது பல்துறை பரி மாணங்களைக் கொண்டது. உடல்நலம், உளநலம், வாழ்க்கை எதிர்பார்க்கை, செயலூக்கம், கல்வித்திறன், உற்பத்தித் திறன் என பல பரிமாணங்களை உள்ளடக்கிய முழுமையைக் கொண்டுள்ளது. நாட்டின் உற்பத்தி முறைகளை நவீன மயமாக்கும் திறன் மனிதனுக்கு இருப்பதன் அடிப்படையில் கல்வித் திட்டமிடலில் மனிதவலு அபிவிருத்தி பற்றிய ஆறு அம்சங்கள் பின்பற்றப்படுகின்றன.

மனிதவலுத் தேவைகள் பற்றிய சரியான மதிப்பீடுகள், முறைசார் கல்வி, தொழில்பயிற்சி, தூண்டுதல்களை ஏற்படுத்துவற்கான செயற் றிட்டங்களைத் தயாரித்தல், சுகாதார மருத்துவ வசதிக்கான செயற்றிட்டம், பொதுவான அபி விருத்தியுடன் இணைந்த மனிதவலுத் திட்டமிடல் போன்ற அம்சங்களுடன் உணவு நுகர்வு, போசாக்கு, தொழில் வாய்ப்பு, தொழில் செய்யும் இடநிலைமைகள், வீடமைப்பு, உடைமைகள், சமூக பாதுகாப்பு, மனித சுதந்திரம் போன்ற வற்றையும் மனிதவலுத் திட்டமிடலில் கருத்தில் கொள்ளும்போது விசேடமான கல்வித்திட்ட மிடலாக அமையும்.

மனிதவளத்தை பயிற்சியளித்தல், அறிவும் அனுபவமும் உடையவராக மாற்றுதல், விசேட நிபுணத்துவராக மாற்றுதல், வாழ்நாள் முழுவதும் கல்வியளித்தல் போன்ற உயிரியின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதன் மூலம் கல்வித்திட்ட மிடலை வினைத்திறனாக்கலாம். தொழில் நிலை யிலான பயிற்சிகளை பாடசாலைகள் வழங்கு வதைவிட தொழில் நிறுவனங்களே திறமையாக வழங்குகின்றன. காலவிரயத்தையும் நிதி விர யத்தை தவிர்க்கவும் பொருத்தப்பாடற்ற உழைப்பு மனோபாவம் வளராமல் தடுக்கவும் தொழில் நிறுவனங்களில் பயிற்சி வழங்குதல் அவசிய மாகும். எந்த ஒரு குறைவிருத்திப் பொருளாதாரத் திலும் வளங்களும் அரச நிதியும் குறைவாகவே உள்ளன. அவற்றை நேரடியான உற்பத்தித் துறை களில் செலவிடாமல் கல்வியில் செலவிடும்போது அவை பற்றி அக்கறையுடன் செயற்படவேண் டும். உற்பத்தித் திறனுடைய நடவடிக்கையில் ஈடுபடும் ஆர்வம் உடையவர்களாக ஊழியராக மாற்றுவதற்கான தூண்டுகை நடவடிக்கை களிலும் திட்டமிடுவோர் அக்கறை காட்டவேண்டும். கல்வித் திட்டமிடலில் மனிதவலு விருத்தியானது உழைப்புச் செறிவு, மூலதனச் செறிவு என்ப வற்றை வினைத்திறனுடையதாக்கும். மனிதனது தொழில்புரியும் ஆற்றல் அதிகரிக்கப்படின் இயந்திர இறக்குமதிகளையும் எரிபொருள் இறக்கு மதிகளையும் குறைத்து அந்நியச் செலாவணி நெருக்கடிகளிலிருந்து பொருளாதாரத்தை பாதுகாக்க முடியும்.

மனிதவலு சார்ந்த செலவினங்களினால் நாட்டின் விஞ்ஞான தொழில்நுட்பத் துறைகளில் கண்டுபிடிப்புக்களும் ஏற்படும். இவை வளர்ச்சிக் களம், வளங்களின் தொடர்பு நீண்டகாலத் தொழில் வாய்ப்புப் பெருக்கம் என்பவற்றை ஏற்படுத்தும். கல்வியானது இருபக்கத் தொடர்புகளை பொருளா தாரத்துடன் கொண்டுள்ளது. கல்விக்குரிய செல வானது மனிதவள விருத்தி மூலம் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும். இதனால் கல்விக்கான முதலீடுகள் அதிகரிக்கும். கல்விச் செலவினை திட்டமிட்ட சரியான முறையில் நடைமுறைப்படுத்து வதற்கு நாடுகள் ஏற்ற நிறுவன அமைப்புக்களைக் கொண்டிருக்கவேண்டும். மனிதவலு நிறுவனம் ஒன்று நிறுவப்படுதல் வேண்டும்.

இவ்வாறு கல்வித் திட்டமிடலானது மனிதவலு தொடர்பான முன்னுரிமைகள், மனிதவலுப் பிரச் சினைகள், மனிதவலு மதிப்பீடுகள், திட்டச் செயன் முறைகளை மேம்படுத்தல், நடைமுறைகளை ஒருங்கிணைத்தல், ஆராய்ச்சித் திட்டமாதிரிகளைத் தெரிந்தெடுத்தல், உதவிகள் பெற உதவுதல் போன்ற வழிகளில் உதவலாம். அவ்வாறான நிலையில் கல்விக்கான செலவு மனித முதலீடாக அமையும்.

- ☑ கல்வியின் நவீன தொழில்நுட்பங்களை - புதிய வழிகளைக் கற்றுப் பிரயோகித்தல்.
- ☑ தமது அறிவையும், அனுபவங்களையும் மீள் பயிற்சி, தொடருறு பயிற்சி மூலம் மீள உயிர்த்தெழச் செய்தல்.
- ☑ கற்றலுக்குக் கற்றலுக்கான தேர்ச்சிகளை விரிவாக்குதல்.

◆ ◆ ◆

## நவீன மாற்றங்கள் சில

எதிர்கால தொழில்நுட்பவியலானது மக்கள் அற்ற அலுவலகங்கள், அலுவலகமற்ற ஊழியர்கள், காகித ஆவணங்கள் அற்ற அலுவலகங்கள் என்பவற்றை உருவாக்க உள்ளன.

சிங்கப்பூரின் மதிநுட்பத்தீவு (Intelligents Island) ஒவ்வொரு இல்லத்திலும் நவீன தகவல்த் தொழில்நுட்பக் கருவிகளைப் (Fiber Opticalie) பொருத்தி வருகின்றது. தென்கொரியா 5800 கோடி US($) டொலர் செலவில் நிர்மாணித்துள்ள பல்லூடகத் தொகுதி (Fiver Optic Multimedia Network) 2010ம் ஆண்டளவில் அந்நாட்டை முழுமையான தகவல் சமூகமாக மாற்றிவிட உள்ளது.

*நன்றி : "Google"*

# இன்றைய பாடசாலை ஆசான்கள்



(இ-வ) : திருமதி. து. சிவகுமாரன், திருமதி. தே. குமாரதாசன்,
திரு. பொ. கணேஸ்வரலிங்கம் (அதிபர்), திரு.ச.சபாநாதன்,
திருமதி. ஜெ. சுரேஸ், திருமதி. க. இராஜமனோகரன்

# அன்றைய பாடசாலை ஆசான்கள்



# ஞாபகம் (MEMORY)

திரு. ச. சபாநாதன் B.A., Dip.in.Edu.
*யா/ சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.*

கற்றல் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிப்பதும் மாணவர் பரீட்சைப் பெறுபெறுகளில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு முக்கிய விடயமாக விளங்குவதும் ஞாபகமாகும். மாணவர் தாம் கற்றவற்றை ஒரு சிறிய காலப் பகுதிலேயே மறந்து விடுகின்றனர். எனவே நாம் ஏன் மறக்கிறோம் எனும் கேள்விக்கு விடைகாணும் வகையில் மாண வர்களின் மறதிக்கான காரணங்களை அறிந்து மறதிக்குட்படும் அளவின் சதவீதத்தைக் குறைத்து அறிவுபெறும் தொழிற்பாட்டை வினைத் திறனுடைய தாக்குவதும் அதிக காலத்திற்கு நிலைத்திருக்கச் செய்வதும் ஆசிரியர்களின் பொறுப்பாகிறது.

மேலும் தம்மிடம் வருகின்ற மாணவர்களின் அறிவை வளர்ப்பதோடு அவர்கள் பெறும் அறிவை மனதில் நிறுத்தி வைத்து எதிர்கால வாழ்வில் பிரச்சினைகளைச் சந்திக்கும்போது பயன்படுத் தத்தக்க வகையில் மாணவர்களுக்கு உற்சாகமளிக்க வேண்டியது ஒவ்வோர் ஆசிரியரதும் கடமையாகும்.

ஞாபகம் என்பது நினைவு நிலையில் இருக்கும் விடயங்களின் அளவு. மறதி என்பது நினைவு நிலையில் இல்லாத விடயங்களைக் குறிக்கும். ஞாபகம் கற்றல் தொழிற்பாட்டின் தொடர்ச்சிக்கு உதவுகிறது. மறதி கற்றலுக்கு இடையூறாக அமை கிறது. நினைவின் குறைவே மறதியாகும். மறதி யைக் குறைத்தல் பற்றிய அறிவும் ஞாபகத்தை அதிகரித்தல் பற்றிய அறிவும் ஆசியருக்கு அவசி யம். ஆகவே ஆசிரியர், மாணவர்கள் கற்கும் விடயங்களை வாழ்நாள் முழுவதும் ஞாபகத்தில் வைத்திருக்கும் வகையிலான யுக்திகளை மாண வர்களுக்கு கற்றுத் தருவது பயன்தரக்கூடிய தாகும். அதேவேளை மாணவர்களும் கற்கும் விடயங்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்ற முடியும். மாணவர்கள் மட்டுமல்ல பெரியோர்களுக்கும் ஞாபகத்தில் வைத்திருத்தல் முக்கியமானதே. இவ்வகையில் ஒரு விடயத்தை எவ்வாறு ஞாபகத் தில் வைத்திருக்கலாம் எனபதற்கு சில வழிவகை களைக் கூறுவதும் ஞாபகத்தின்மீத செல்வாக்கு செலுத்தும் காரணிகளை அறிவதுமே இக்கட்டு ரையின் நோக்கமாகும்.

ஞாபகம் அல்லது நினைவில் வைத்திருத்தல் என்பது மூன்று உளச் செயற்பாடுகளுனட் சம்பந் தப்பட்டது என உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

1. மனனம் செய்தல்
2. மனதில் நிறுத்தி வைத்தல்
3. நினைவுபடுத்தல்

## 1. மனனம் செய்தல் (Memorisation)

மனனம் செய்தல் என்பது நினைவுத் தொகுதி யில் தகவல்களை இடும் தொழிற்பாடாகும். ஒரு விடயத்தை கற்கும்போதும் ஒரு அனுபவம் ஒன் றைப் பெறும்போதும் மனனம் செய்தல் இடம்பெறு கிறது. நாம் ஒன்றைக் கற்காவிடின் அல்லது அனுப விக்காவிடின், பிறிதொரு சமயத்திலே அதனை ஞாபகப்படுத்தமுடியாது. சூழலில் இருந்து நாம் பெறும் புலக்காட்சிகளை எமது நினைவு வங்கி களில் தரவாக ஏதோ ஒரு வடிவில் வைப்புச் செய்யக் கூடிய வகையில் மாற்றியமைக்கப்படுகின்றன. இந்த மனனம் செய்தல் அல்லது கற்றல் என்பது ஞாபகத்தின் ஏனைய இரு நிலைகளாகிய மனதில் நிற்றல், நினைவுபடுத்தல் என்பவற்றிற்கு அடித்தள மாக அமைவதால் ஞாபகச் செயல்முறையில் இது முக்கியத்துவம் உடையதாகின்றது.

இம்மனனம் செய்வதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பல உண்டு.

### கற்போனின் இயல்புகள்

கற்போனின் இயல்கள் என்னும்போது கற்கும் மாணவர்களின் அக்கறை அல்லது கவனம் எவ்வளவு தூரம் இருக்கின்றது மற்றும் அவரிடம் காணப்படும் ஊக்கம் (Mortivation) நுண்மதி (Intelegence) அவனுக்குக் கிடைக்கும் பின்னூட்டல் (Feed back) அவனது ஆளுமை (Personality) என்பவற்றில் தங்கியுள்ளது.

## 2. கற்கும் விடைய ஒழுங்கமைப்பு

ஒரு வியடம் தனித்தனி கூறுகளாக இருப்பதைவிட அவை ஒரு ஒழுங்கமைப்பில் காணப்படும் போது அதனை இலகுவாக ஞாபகப்படுத்தலாம். ஒழுங்கற்று காணப்படுபவற்றை ஏதோ ஒரு அமைப்பாக்கத்தில் கொண்டுவருவது நன்கு மனனம் செய்வதற்கு உதவும்.

உ+ம் (i) 112358 என்னும் இலக்கத்தை இவ்வாறு தனித்தனி கூறுகளாக கற்பதைவிட 11, 23, 58 என அமைப்பாக்கம் செய்யும்போது மனனம் செய்தல் இலகுவாகின்றது.

உ+ம் (ii) இதேபோல வானவில்லில் உள்ள ஏழு நிறங்களை ஞாபகப்படுத்துவதற்கு அந்நிறங்களின் முதல் எழுத்துக்களை ஒழுங்கமைத்து VIBGYOR என்னும் வடிவில் இலகுவாக மனனம் செய்யக்கூடியதாக இருக்கும். இங்கு,

V - Vilot
I - Indigo
B - Blue
G - Green
Y - Yellow
O - Orange
R - Red

ஆகிய நிறங்களைக் குறிக்கும். இவ்வாறு கற்கும் விடயங்களை ஒழுங்கமைப்பது மனனம் செய்வதற்கு பெரிதும் உதவும்.

## 3. கற்கும் சூழல்

கற்கும் சூழல் கற்றலுக்கு பொருத்தமாக அமையும்போது கற்றல் இலகுவாகின்றது. கற்கும் சூழல் எனும்போது அமைதியான இடம், பௌதீக வசதிகள், பொருத்தமான நேரம், களைப்பற்ற நிலை என்பவற்றைக் குறிக்கும்.

## 4. ஓய்வு

கற்றலுக்கு இடையே விடப்படுகின்ற ஓய்வும் மாணவர்களின் மனனம் செய்யும் ஆற்றலை அதிகரிக்கின்றது. உளவியலாளர்கள் செய்த பின் வரும் பரிசோதனையின் முடிவுகள் இதை மேலும் விளக்குகின்றன. A, B, C எனும் மூன்று சம வலுவுள்ள மாணவர் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு பின்வரும் நேரசூசிப்படி கற்பிக் கப்பட்டது.

<table>
<tr><th>குழு A</th><th>குழு B</th><th>குழு C</th></tr>
<tr><td>1 மணிநேர படிப்பு (ஒரே விடயம்)</td><td>1 மணிநேர படிப்பு (ஒரே விடயம்)</td><td>1 மணிநேர படிப்பு (ஒரே விடயம்)</td></tr>
<tr><td>2 மணிநேரம் ஓய்வு</td><td>1 மணிநேரம் ஓய்வு</td><td>1 மணிநேர படிப்பு (வேறு விடயம்)</td></tr>
<tr><td rowspan="2">1 மணிநேர படிப்பு (வேறு விடயம்)</td><td>1 மணிநேர படிப்பு (வேறு விடயம்)</td><td rowspan="2">1 மணிநேர படிப்பு (வேறு விடயம்)</td></tr>
<tr><td>1 மணிநேர ஓய்வு</td></tr>
</table>

கற்றலில் நிறைவில் மதிப்பீடு செய்யப்பட்ட போது குழு A கூடிய அளவு விடயங்களையும் குழு C குறைந்த அளவு விடயங்களையும் மனனம் செய்து இருந்தனர் என்ற விடயம் தெரியவந்தது. இப்பரிசோதனையில் இருந்து குழு A க்கு இரண்டு பாடங்களுக்கும் இடைப்பட்ட 2 மணிநேர ஓய்வு அவர்களின் மனனத்திறனை அதிகரித்துள்ளது. குழு Cக்கு 2 பாடங்களுக்குமிடையில் ஓய்வு விடப் படவில்லை ஆதலால் அவர்களது மனனத் திறன் குறைவாக இருந்தது.

## 5) பாடத்தின் கருத்துடமை

ஒரு பாடம் விளக்கத்துடன் கூடியதாக இருந்தால் கற்றல் இலகுவாகின்றது. விடயங்களை சிறு தொகுதிகளாக்கி கருத்துக்களை வழங்கும்போது மனனம் செய்தல் இலகுவாக நிகழ்கின்றது. விளக்கத்துடன் கற்கும்போது விடயங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு நினைவில் நிற்கும் திறன் அதிகரிக்கின்றது.

விளக்கம் இன்றியும் சில விடயங்களை மனனம் செய்யவேண்டியுள்ளது. இது நெட்டுரு முறை எனக்கூறப்படும் சூத்திரங்கள், பெறுமானங்கள், ஆண்டுகள், தேவாரம் போன்றவற்றைப் படிப்பதற்கு நெட்டுரு செய்தல் அவசியமாகின்றது.

## 6) கற்கும் முறை


ஒரு விடயத்தை மனனம் செய்யும்போது முழுமையாகவும் மனனம் செய்யலாம் பகுதி பகுதியாகவும் மனனம் செய்யலாம். முழுமையாக மனனம் செய்தல் தொகுதி முறை எனவும், பகுதி பகுதியாக மனனம் செய்தல் பகுதி முறை எனவும் கூறப்படும். இரு முறைகளிலும் நன்மைகளும் உண்டு, தீமைகளும் உண்டு. முழுமையாக மனனம் செய்யும்போது அது விளக்கத்துடன்

கூடியதாக அமையும். தொடர்புகள் நன்கு விளங்கும். எனவே கெஸ்ட்ரோல்ட் உளவியலாளர்கள் முழுமையாக மனனம் செய்வதை வலியுறுத்துகின்றனர். ஆனால் முழுமையாக மனனம் செய்வதற்கு நீண்டநேரம் தேவைப்படும். இதேவேளை பகுதியாக மனனம் செய்யும்போது முன்னேற்றத்தை அறிய உதவியாக இருக்கும். ஒவ்வொரு பகுதி பகுதியாக மனனம் செய்து கூறும்போது அது அடுத்த பகுதியை மனனம் செய்வதற்கு ஊக்கலாக அமையும். எனினும் இம்முறை விளக்கத்துடன் கூடியதாக இல்லை என்பது உளவியலாளர்களின் கருத்தாகும்.

எனவே சிறந்த முறையில் மனனம் செய்வதற்கு தொகுதி முறையில் சில தடவைகள் படித்து அதன் பொருளையும் அமைப்பு, தொடர்பு போன்றவற்றையும் நன்கு கிரகித்தபின்பு அதை சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொன்றையும் தனித்தனியாக மனனம் செய்து இறுதியில் எல்லாப் பகுதிகளையும் இணைத்து தொகுதியாகப் படித்து மனனம் செய்வதே உகந்த முறையாகும்.

### மீட்டல்

மீட்டல், கற்றல் செயற்பாட்டில் முக்கியமான ஒன்றாகும். நாம் கற்கும் விடயங்களை ஞாபகம் வைத்திருப்பது காலத்தோடு தேய்வடைகிறது. எனவே அவற்றை மீட்டல் மூலம் மீண்டும் மீண்டும் கற்று ஞாபகப்படுத்துவதனூடாக விடயங்களை ஞாபகத்தில் வைத்திருக்கமுடியும். எபிங்ஹோஸ் (Ebbinghaus) என்பவர் வரைந்த வளையி இது தொடர் பான மேலதிக விளக்கத்தை தருகிறது.




இவரது வரைபில் இருந்து 20 நிமிடங்களின் பின் 58%மான சொற்களும் ஒரு மணித்தியாலத்தின் பின் 44% மான சொற்களும் ஒருநாளின் பின் 38%மான சொற்களும் ஞாபகத்தில் இருக்கும் என்பதை விளங்கிக்கொள்ளமுடிகிறது. இதிலிருந்து காலத்தோடு ஞாபகம் தேய்வுறுவதை அவதானிக்கமுடிகிறது. மீட்டல் இதனைக் குறைத்து ஞாபகத்தை அதிகரிக்கிறது.

ஞாபகச் செயன்முறையில் மனனம் செய்தலுக்கு அடுத்தபடியாக களஞ்சியப்படுத்தல் / மனதில் நிறுத்தி வைத்தல் இடம்பெறுகிறது.

### 2. களஞ்சியப்படுத்தல் அல்லது மனதில் நிறுத்தி வைத்தல் Storage

மாணவர்கள் தாம் பெற்ற விடயத்தைக் கற்றபின் நினைவில் நிறுத்தி வைக்கவேண்டும். இல்லாவிடின் அது மறக்கப்பட்டுவிடும். களஞ்சியப்படுத்தல் என்பது ஒரு விடயத்தை குறிக்கப் பட்ட காலத்திற்கு மனதில் நிறுத்தி வைப்பதாகும். களஞ்சியப்படுத்தல், மனனம் செய்தல் எனும் இரு செயற்பாடுகளும் இலகுவில் வேறுபடுத்தி அறிய முடியாதவை. ஆனால் வெற்றிகரமாக ஞாபகப் படுத்த இவை இரண்டும் ஒன்றில் ஒன்று தங்கியிருப்பது முக்கியமாகும்.

களஞ்சியப்படுத்தல் மூன்று வெவ்வேறு வகையான நினைவுக் களஞ்சியங்களில் இடம் பெறுவதாக உளவியலாளர்கள் கருதுகின்றனர்.

1. புலனுக்குரிய ஞாபகம் (Sensory register)
2. குறுங்கால ஞாபகம் (Short term memory)
3. நீண்டகால ஞாபகம் (Long term memory)

### 1. புலனுக்குரிய ஞாபகம்

புலனுக்குரிய ஞாபகம் என்பது சூழலில் இருந்தான தூண்டி ஒன்று புலக்காட்சிக்குரிய நரம்புத் தொகுதியிலே மிகக் குறுகிய காலத்திற்கு அதாவது ஒரு செக்கனிலும் குறைவான காலத்திற்கு நிலைத்திருப்பது புலனுக்குரிய ஞாபகம் எனப்படும். இந்த தூண்டி மறைந்த பின்பும் புலக்காட்சியிலும் நிலைத்து நிற்பதுபோலத் தோன்றுவது தூண்டிச் சுவடு (Stumuli trace) எனப்படும் ஒவ்வொரு புலனுக்கும் தனித்தனியாக புலனுக்குரிய ஞாபகம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

எனினும் இவற்றில் இரண்டு முக்கியத்துவம் உடையதாகக் கருதப்படுகிறது.

1. காட்சிப்புலனுக்குரிய உளப்பட வடிவம் (Iconic memory) இது பார்த்தலுடன் தொடர்புடையது.
2. எதிரொலிக்கும் ஞாபகம் (Echoic memory) இது கேட்டலுடன் தொடர்புடையது.

### குறுங்கால ஞாபகம்

தேவைகளைப் பொறுத்து குறுகிய காலத்திற்கு நாம் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கும் தகவல்களைக் குறிக்கும்.

உ+ம் அ. தொலைபேசி விபரக் கொத்திலிருந்து ஒரு இலக்கத்தை டயல் செய்யும்வரை ஞாபகத்தில் வைத்திருப்பார்.

ஆ. கடையில் பொருட்களைப் பார்த்து எதனை வாங்குவது என தீர்மானித்து கடைக்காரரிடம் கூறும்வரை உள்ள ஞாபகம்.

இவை குறித்த செயற்பாடுகள் நிறைவேறும் மட்டுமே ஞாபகத்தில் நிற்கும். பின்னர் மறக்கப் பட்டுவிடும்.


குறுங்கால ஞாபகத்தில் பேணுவதற்கும் சில உபாயங்கள் உண்டு.

பொருளுள்ள விடயங்கள் குறுங்கால ஞாபகத்தில் இலகுவில் பேணப்படும்.

TH EDIAMON DYE AR என்பதைவிட இதனை பொருளுள்ளதாக்கும்போது அதாவது THE DIAMOND YEAR என நோக்கும்போது ஞாபகத்தில் நிற்கும்.

மேலும் பொருட்கள் தொகுதியாக்கப்பட்டிருக்கும்போது இலகுவாக ஞாபகப்படுத்தலாம்.

182615291943 இவ் எண்ணை ஞாபகத்தில் வைத்திருப்பது கடினம். ஆனால் இதனை 1826 1529 1943 என தொகுதியாக்கினால் இலகுவாக ஞாபகத்தில் வைத்திருக்க முடியும்.



இவ்வாறு தொகுதியாக்கப்பட்டு நோக்கும் போது ஞாபகப்படுத்துவதில் சிரமமிருக்காது. இவ்வாறு ஞாபகப்படுத்துவதற்காக தொகுதியாக்குவது சங்கிங் (Chunking) முறை என அழைக்கப்படும்.

### நீண்ட காலஞாபகம் / நெடுங்கால ஞாபகம்

தகவல்கள் ஒப்பீட்டளவில் நிரந்தரமாக எமது ஞாபகத்தில் பேணப்படுவதைக் குறிக்கும். நீண்ட கால ஞாபகம் மூன்று வெவ்வேறு வகையான ஞாபகங்களாக வகுக்கப்படும்.

**அ) காட்சிசார் ஞாபகம் / நிகழ்ச்சிசார் ஞாபகம்**

எமது வாழ்வியல் அனுபவங்கள் நெடுங்கால ஞாபகத்தில் பதிவு செய்யப்படுவதைக் குறிக்கும்.

**ஆ) சொற்பொருள்சார் ஞாபகம்**

எண்ணக்கருக்கள், விதிகள், கோட்பாடுகள் போன்றவற்றை நெடுங்கால ஞாபகத்திலே பேணப்படுவதைக் குறிக்கும்.

**இ) செயன்முறை சார் ஞாபகம்**

குறித்த செயல்களை செய்தல் தொடர்பான செயன்முறை ஞாபகமாகும்.

### நெடுங்கால ஞாபகத்தில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

நீண்டகால ஞாபகத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் பல உண்டு.

1. பயிற்சி : மனனம் செய்யும் வியடத்தை திரும்பத் திரும்பத் படித்தல் பயிற்சி எனப்படும். பயிற்சி 2 வகைப்படும்.

1. இடைவிட்ட பயிற்சி
2. குவிந்த பயிற்சி

இடைவிட்ட பயிற்சி என்பது கற்றலுக்கிடையே இடைவெளிவிட்டு கற்பதாகும்.

வாசித்தல் ⟶ ஓய்வு
வாசித்தல் ⟶ ஓய்வு

குவிந்த பயிற்சி என்பது ஒவ்வொரு தடவை கற்ற பின்பம் அதிக ஓய்வின்றிக் கற்பதைக் குறிக்கும்.

இவ்விரு முறைகளையும் ஆராய்ந்து அறிந்த ஒஸ்ரின் (Austin) என்னும் உளவியலாளர் தனது ஆய்வின் இறுதியில் குவிந்த பயிற்சி யைவிட இடை விட்ட பயிற்சியே அதிக பயன்தரக் கூடியது எனக் கண்டறிந்து கூறியுள்ளார். அவரது பரிசோதனை யின் விளைவுகள் பின்வருமாறமைந்தன.

| | நினைவில் வைத்திருந்த நூற்றுவீதம் | | |
|---|---|---|---|
| | கற்று முடிந்த பின் | 2 கிழமையின் பின் | 4 கிழமையின் பின் |
| குவிந்த பயிற்சிக் குழு | 65% | 13% | 11% |
| இடைவிட்ட பயிற்சிக் குழு | 65% | 46% | 33% |

இப்பரிசோதனையின் முடிவில் இருந்து இடைவிட்ட பயிற்சியே நீண்டகால ஞாபகத்திற்கு உகந்தது என அறியமுடிகிறது.

**மீட்கும் சூழல்**

முன்பு கற்ற விடயத்தை நினைவுகூர முற்படு கையில் நினைவுகூரும் சூழல் கற்றல் நிகழ்ந்த சூழலிலிருந்து வேறுபட்டுக் காணப்பட்டால் மறதி ஏற்படுகிறது. சூழல் மாற்றமே, இதற்குக் காரணம். கற்கும்போது சூழலில் காணப்பட்ட குறிகளும் சாடைகளும் மீட்கும் சூழலில் அருகிக் காணப் படுதல் மறதிக்குக் காரணமாகிறது.

**கற்கும் வேகம்**

விரைவாகக் கற்கும்போது ஞாபகத்தில் நிற் கும் அளவு அதிகரிக்கின்றது. விரைவாகக் கற்றல் நிகழ்கையில் விளக்கம் பெறுதல் விரைவாக ஏற் பட்டிருத்தல் வேண்டும். மேலும் விரைவாகக் கற் கும்போது கவனத்தை சிதைக்கும் தூண்டிகளின் தாக்கம் குறைவாக இருக்கும். பின்வரும் வரைபு கற்றல் வேகம் கூடும்போது மறதி குறைவதைக் காட்டுகிறது.

**உளநிலை மாற்றங்கள்**

பாடத்தைக் கற்கும்போதிருந்த மனநிலை யில் இருந்து மீட்கும்போதிருக்கும் மனநிலை மாறுபட்டிருக்குமாயின் நினைவுபடுத்தல் இயலா மல் போகலாம். இடைக்காலத்தில் ஏற்பட்ட மனப் பாதிப்பு மறதிக்கு காரணமாகின்றது. அச்சம், பயம், கோபம் போன்ற மனவெழுச்சிகளுக்கு உட்படும் போது மறதி ஏற்படலாம்.

**உடலியல் மாற்றம்**

நோய் காரணமாக உடலியல் அல்லது உடற் றொழியல் மாற்றம் ஏற்படலாம். மேலும் போதைப் பொருள் பாவனை குடிவகை போன்ற வற்றால் உடலுக்கு தீங்கு ஏற்படலாம். இதனால் ஞாபகத்திற்கு கொண்டுவருதலில் பாதிப்பு ஏற் படலாம்.

**அடக்கல்**

சிலர் சில விடயங்களை மறக்கவேண்டு மென விரும்புவர். இதனால் அவ்விடயங்களை தமக்குள் அடக்கிக் கொள்வார். எனவே அவ்விடயங் களில் மறதி ஏற்படலாம். இதுவே அடக்கல் எனப் படும். அதாவது தமக்கு விருப்பமில்லாத விடயங் களை நனவிலி நிலையில் அடக்கிக் கொள்வதால் மறதி ஏற்படுகிறது.

**மிகைக்கற்றல்**

இது நீண்டகால ஞாபகத்தை அதிகரிக்கும் செயல்முறை ஆகும். நினைவிலே மீட்கக்கூடிய அளவிற்கு நெடுங்கால ஞாபகத்திலே வைத்திருக் கக்கூடிய வகையில் கற்றலை மேற்கொண்ட பின்பு அதேவிடயத்தை மேலும் கற்றல் மிகைக் கற்றலாகும். இது களஞ்சியப்படுத்தலை உயர்த்து கிறது. ஆனாலும் மிகைக்கற்றல் நிகழ்கின்ற அதே வேகத்திலேயே நினைவிருத்தல் வீதம் அதிகரிக்கப் படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**நினைவுபடுத்தல்**

கற்றல் விடயங்களை நினைவில் நிறுத்தி வைத்து பின்னர் தேவையானபோது அவற்றை நினைவுபடுத்துவதை இது குறிக்கும். இது மூன்று வகையாக நோக்கப்படுகிறது.

**இனங்காணல் / மீட்டறிதல்**

கற்ற விடயங்களை/அது தொடர்பான குறிகள், சாடைகள் என்பவற்றை சந்திக்கும்போது அவற்றை ஏற்கனவே தெரிந்த விடயங்களாக அறிந்துகொள் ளலைக் குறிக்கும் பரீட்சைகளில் பல விடைகளில் இருந்து ஒரு விடையைத் தெரியும் பல்தேர்வு

வினாக்களில் விடையை இனங்காண்பதற்கு இது பயன்படுகிறது.

**நினைவு கூர்தல்**

எமது மனதில் நிறுத்திவைத்தவற்றுள் தேவையான தகவல்களை நனவு நிலைக்குக் கொண்டு வருதல் நினைவுகூர்தல் ஆகும். ஞாபகப்படுத்தலில் நினைவுகூர்தலானது மீட்டறிதலிலும் பார்க்க கடினமான பணியாகும்.

**மீளக்கற்றல்**

முன்னர் கற்றுக்கொண்ட ஒரு விடயத்தை குறித்த காலஇடைவெளியின் பின்னர் மீண்டும் கற்பதற்கு எடுக்கும் நேரம் நினைவுபடுத்தும் திறனைக் குறிக்கும் ஒரு அளவாகக் கருதப்படுகிறது. இவ்வாறு மீளக் கற்பதற்கு எடுக்கும் நேரம் குறுகியதாக இருப்பின் ஞாபகமட்டம் தாழ்வானது என்றும் முடிவு செய்யப்படும்.

இவ்வகையில் ஞாபகம் என்பது எம்மால் வளர்க்கப்படவேண்டியது. கற்ற விடயங்களை ஒழுங்கமைத்தல், பயிற்சி, மனனம், மீட்டல் போன்றவற்றின் மூலமாக வளர்த்துக்கொள்ள வேண்டும். அன்றாடம் கற்கும் விடயங்களை அன்றன்றைக்கே வீட்டில் பயிற்சி செய்வது அவசியம். தரப்படும் வீட்டு வேலைகளை ஒழுங்காகச் செய்தல் வேண்டும். இவற்றினூடாக ஞாபகத்தை அதிகரித்து கற்றலில் உயர்வடையலாம் என்பதில் ஐயமில்லை.

♣ ♣ ♣

No great man ever complains of want of opportunity.

- Ralph Waldo Emerson



ஒரு சராசரி மனிதன் தனது சக்தியிலும் திறமையிலும் வெறும் 25% மட்டுமே தனது வேலைக்குச் செலவழிக்கிறான். தங்களது திறமையில் 50%க்கு மேல் செலவழிப்பவர்களை இந்த உலகமே பாராட்டுகிறது. 100% திறமையையும் அர்ப்பணிப்பவர்களை இவ்வுலகம் தலைவணங்கிப் போற்றுகிறது.

- ஆன்ட்ரூ கார்னெஜி



அறியாமை வெட்கப்படவேண்டிய ஒன்றுதான். ஆனால் அறிந்துகொள்ள விருப்பமில்லாமை அதைவிடப் பெரிய வெட்கக்கேடாகும்.

- பென்ஜமின் ஃபிராங்ளின்

## பவளவிழா நிகழ்வுகளிலிருந்து....

















# பவளவிழாக்காணும் என் பாடசாலை

*லண்டன் மாநகரிலிருந்து*
**திருமதி. தவமணிதேவி மார்க்கண்டு**

யாழ்ப்பாண பாரம்பரிய நிலையிலும் சைவமும் தமிழும்தழைத்தோங்கி நிற்கும் பல ஊர் களில் சுன்னாகம் முதன்மை பெறுகின்றது எனலாம். ஓர் இனம் தனது கலாசாரத்தையும் மொழியையும் காத்து நிற்பதற்கு ஆலயங்களும், வித்தியா சாலைகளும் முதன்மை வழிகாட்டிச் செல்கின்றன. அந்த வகையில் எட்டுத் திக்கிலும் கோவிலாய் அமைந்து அழகுறு ஆலயமாய் சந்திரசேகரப் பிள்ளையார் கோவில், ஐயனார் கோவில், வரியப் புலம் மகமாரி அம்மன்கோவில், கதிரமலைச் சிவன் கோவில், மயிலணி முருகமூர்த்தி ஆலயம், இராஜ ராஜேஸ்வரி ஆலயம், சிவன் ஆலயம், முத்துமாரி யம்மன் ஆலயம் (வடலி அம்மன்), சுன்னாகம் வடக்கு சிவபூதவராயர் ஆலயம் என அணிவகுத்து நிற்கும்.

சுன்னாகம் வரதபண்டிதர், குமாரசாமிப் புலவர், வேதமந்திரம் ஓதி நிற்கும் உயர் அந்தண குலத்தோர் எனும் பெருமைகளோடு சுன்னாகம் சந்தை பிரபல்யம் பெற்று அமைகின்றது. இத்தனை சிறப்புக்கள் உடையவூரில் வரியப்புலம் பதியிலே அமைந்த திருஞானசம்பந்தர் வித்தியாசாலை இன்று பவளவிழாவாண்டிலே தலைநிமிர்ந்து நிற்பது, எம் அனைவருக்கும் பெருமை தருகின்ற விடயமாகும். "வளரும் பயிரை முளையிலே தெரியும்" என்கின்ற முதுமொழிக்கு அமைய, மாணவர் களின் ஆரம்பக்கல்விக்கு ஆழமான அத்திவாரம் இட்டு சமய, மொழி, கலாசாரம் என்னும் முப்பரி மாண நிலைகளையும் முறையாய் போதித்து உயர்ந்த நிலையிலே மாணவர்களை உருவாக்கி விடுகின்ற பெருமை சுன்னாகம் திருஞானசம்பந் தர் வித்தியாசாலைக் கூடத்திற்குரிய தனித்தன்மை யாகும். சமய குரவர் நால்வரிலே மிகவும் இளைய வராய் மூன்று வயதினிலே தேவாரம் பாடி, எமது சமய நெறியில் புதுமை தந்த திருஞானசம்பந்தப் பெருமானின் நாமத்தையே இந்த வித்தியாசாலை கொண்டிருப்பது ஒருவித அருள் நிறைந்த அற்புதம் என்றே கூறவேண்டும்.

இந்த வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியை அழகுறக் கற்றுவந்த அவ்வூர் மாணவர்கள் இன்று உலக நாடுகளில் உயர்பணிகளில் மேலோங்கியிருப்பது சுன்னாக மண்ணிற்கும், திருஞானசம்பந் தர் வித்தியாசாலைக்கும் பெருமை தருகின்ற விடயமாகும்.

*"தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்கு*
*கற்றனைத்தூறும் அறிவு"*

என்ற திருக்குறளில் திருவள்ளுவர் கூறியது போல, இங்கு கல்விகற்ற மாணவர்கள் வெளிநாடு சென்று கல்விகற்று உயர் பதவிகளில் இருக்கி றார்கள்.

*"கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு"*

என்னும் முதுமொழிக்கு ஏற்ப, எத்தனை இடர் வந்தும் ஆரம்பத்திலே அமைகின்ற அத்திவாரக் கல்விக்கே முழுமையான சிறப்பும் பலமும் அமைகின்றது. அந்த வகையில் கடந்த எழுபத்தைந்து ஆண்டுகளாக பல மாணவ மணிகளை உருவாக்கி உயர்ச்சிக்கு வழிகாட்டி நிற்கின்ற திருஞானசம்பந் தர் வித்தியாசாலையின் பவளவிழாவிலே உமது ஊருக்கும் எம்மக்களுக்கும் ஏற்படுகின்ற பெருமிதம், மகிழ்வு உற்சாகம், ஊக்கம் என்கின்ற நிலைகளிலும் கடல்கடந்து வந்தாலும் எமது மண்ணின் வாசனை நுகர்ந்து வாழ்கின்ற எம் எண்ணங்களை பகிர்ந்து கொண்டு பவளவிழா வாழ்த்துக்களை மனமாறத் தெரிவித்து நெடிது காலம் பெரும் வளர்ச்சி காணவேண்டும் என சிவன்பார்வதியை பிரார்த்திக்கிறேன். வாழ்க நம் சைவ சமயம் வாழ்க, நம் தமிழ் மொழி வளர்க, நம் கலைகள் ஓங்குக, நம் திருஞானசம்பந்தர் வித்தியாசாலை.

◆ ◆ ◆

# நீங்களும் ஒரு சிறந்த ஆசிரியர்

**ச. அனிதா**
*(பழைய மாணவி)*

ஆசிரியர்கள் எல்லோரும் கற்பித்தல் என்ற ஒரே செயலைத்தான் செய்கின்றனர். இருப்பினும் ஒரு சில ஆசிரியர்களே சிறந்த ஆசிரியர்கள் எனப் போற்றப்படுகின்றனர். சமூகத்தில் இவர்களுக் கென்ற தனிப்பட்ட கௌரவமும், மரியாதையும் கிடைக்கின்றது. சில ஆசிரியர்களின் கண் அசை வில் மட்டுமே ஆயிரம் கட்டளைகள் நிறைவேற்றப் படும். சில ஆசிரியர்கள் எப்படித்தான் கஷ்ரப் பட்டாலும் மாணவர்கள் இவர்களின் சொல்லை காதிலே வேண்டுவதில்லை. இதற்கான மூலகார ணங்கள் என்ன? ஒரு சிறந்த ஆசிரியர் எவ்வாறு இருக்கவேண்டுமென மாணவர்களால் எதிர்பார்க் கப்படுகிறது?

*உலகம் ஒரு நாடகமேடை. அதிலுள்ள ஒவ் வொரு ஆணும் பெண்ணும் வெறுமனே நடிகர் களே*

என்ற ஷேக்ஸ்பியரின் கருத்துக்கேற்ப இந்த ஆசிரிய பாத்திரத்தில் நடிபங்கு எப்படி இருக்கவேண்டும் என்பதை நோக்குவோம்.

## வெளித்தோற்றம் :

இன்றைய உலகமானது புறத்தோற்றத்திற்கு மிகுந்த மதிப்பு அளிக்கின்றது. ஆசிரியர்களின் புறத்தோற்றமும் மிகவும் அழகான முறையில் அமைந்திருக்கவேண்டும். விலை குறைவான ஆடையாக இருந்தாலும், தமது உடையை நேர்த் தியாகவும், அழகாகவும் உடுத்தவேண்டும். நிமிர்ந்த நடை, முகத்திலே சாந்தமான புன்னகை எப்பொழு தும் காணப்படவேண்டும். இவ்வாறு வெளித்தோற் றம் காணப்படும்போது அகமும் எப்பொழுதும் உற்சாகமாக இருப்பதை உணரமுடியும்.

## கற்பித்தல் முறை :

சிறந்த ஆசிரியர் என்ற நிலையினை அடை வதற்கு மிக முக்கிய காரணியாக கற்பித்தல் முறை அமைந்து காணப்படுகிறது. எல்லா ஆசிரியர் களும் ஒரே பாடத்திட்டத்திற்கு (Syllabus) அமைவாக கற்பித்தாலும் சில ஆசிரியர்களே நன்றாகக் கற்பிக்கின்றனர் என்ற பெயரைப் பெறுகின்றனர்.

சில ஆசிரியர்களின் கற்பித்தல் முறையா னது அவாக்ள் விளங்கப்படுத்துவதை அவதானித் தாலே பரீட்சையை இலகுவாக எழுதிவிடலாம். அதேநேரம் இவர்கள் தொடர்ந்து கற்பித்துக் கொண்டு இருக்கவேண்டும் போலத் தோன்றும். அதேவேளை சில ஆசிரியர்களின் கற்பித்தல் முறை யானது மாணவர்களுக்கு நித்திரை உணர்வைத் தூண்டுவதோடு எப்போது கற்பித்துமுடித்து வகுப்பை விட்டுச் செல்வார் என்ற வெறுப்பான மனநிலையை ஏற்படுத்திவிடும். முதலில் ஒரு ஆசிரியர் ஒரு விட யத்தைக் கற்பிக்கும் முன்னர் அந்த விடயத்தோடு தொடர்பாக மாணவர்களுக்கு ஏலவே உள்ள அறிவை கேட்டறியவேண்டும். பின்னர் மாணவர் களின் நிலைமைக்கேற்ப தனது கற்பித்லை ஆரம் பிக்கலாம். எந்தவொரு வியடத்தையும் அடிப்படை யில் இருந்து புரியவைப்பது நல்லது. இங்கே நேரம், பரீட்சை நெருங்கும் காலம் என்பனவற்றை கருத்திற்கொண்டு செயற்படுவது நல்லது. கூறிய விடயத்தை மறுபடியும் திரும்பத் திரும்ப கூறாமல் புதிய விடயங்களை நோக்கி நகர வேண்டும். ஒரு விட யத்தை கற்பிக்கும்போது அத னோடு தொடர்பாக பத்திரிகையில், தொலைக்காட்சியில், இணையத்தில் வந்த தகவல்களையும் கூறிக்கொள்ள வேண்டும். முக்கியமாக கடந்த காலத்தில் பரீட்சைகளில் கேள்வி கேட்டுள்ள விதங்கள் பற்றியும் தெரிவிக்கவேண் டும். கடினமான விடயப் பொருட்களையும் இலகு வான நடை முறை உதாரணங்கள் மூலம் விளங் கப்படுத்து வது மாணவர்களுக்குப் பரீட்சை நேரத் தில் ஞாபகம் வைத்துக் கொள்வதற்கு இலகுவாக அமையும். மாணவர்களுக்கு சோம்பல் ஏற்படாத வண்ணம் நகைச்சுவைத் தன்மை சிறிதளவு வைத்திருப்பது நன்மையானது.

கற்பித்தல் முடிகின்ற நேரத்தில் இதுவரை கற்பித்த விடயங்களை சுருக்கமான முறையில் மீளவும் கூறவேண்டும். முதல்நாள் கற்பிக்கின்ற விடயத்தில் அடுத்த வகுப்பில் வினாக்களை வினாவவேண்டும். அப்பொழுது மாணவர்கள் வகுப்பிலே விழிப்பாக எந்நாளும் இருப்பார்கள். மாணவர்கள் கற்கின்ற மனநிலையில் (mind) இல்லாதபோது கற்பிக்காமல் விடுவது சிறந்தது. மூளையின் உற்சாகமான செயற்பாட்டிற்காக தற்பொழுது உளவியல் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தும் நடைமுறையும் காணப்படுகிறது.

## உறவாடல் முறை :

ஆசிரியர் மாணவர்களுக்கிடையிலான உறவு ஒரு சுமுகமானதாக அமையவேண்டும். ஆசிரியர், மாணவர்களின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறைஉடையவராக இருத்தல் வேண்டும். வகுப்பறையில் முன்வரிசையில் இருக்கும் மாணவரை மடடும் கவனிக்காமல் பின்வரிசையில் இருக்கும் மாணவரையும் கவனிக்கவேண்டும். எல்லா மாணவர்களின் பெயரையும் வகுப்பிலே கூறி அழைத்தல் வேண்டும். இதனால் மாணவர்கள், ஆசிரியர் தன் மீது அன்பு, அக்கறை காட்டுவதாக உணர்ந்து கொள்வர். சில ஆசிரியர்கள் மாணவர்களுடன் மிகுந்த அன்பு, அக்கறையுடன் நடந்துகொள்வதைக் காணமுடியும். இவர்கள் தம்முடைய சொந்தப் பணத்தைக்கூட மாணவர்களுக்காக செலவு செய்வதைக் காணமுடியும். வறுமைப்பட்ட பிள்ளைகளுக்கு கொப்பி, பென்சில், உணவுப் பொருட்கள் வாங்கிக்கொடுத்தல், தலைமுடி வெட்டுவதற்குகூட காசு கொடுத்தல் போன்ற வற்றைக் குறிப்பிடலாம்.

ஒரு மாணவன் எந்த விடயத்தில் பலவீனமாக இருக்கின்றான் என்பதைக் கண்டறிந்து பெற்றோர்களிடம் அதுபற்றி தெரிவிக்கவேண்டும். ஒரு மாணவன் கல்வியில் ஆர்வம் இல்லாமல் இருப்பதற்கு அவனது தனிப்பட்ட குடும்ப பின்னணி ஏதாவது காரணமாக இருக்கின்றதா என்பதை விசாரித்து அறியவேண்டும். மாணவர்களுக்கு தனிப்பட்ட பிரச்சினைகள் காணப்படும்போது அவர்களுக்கு அந்த சமயங்களில் சிறந்த அறிவுரையும், ஆறுதலும் கொடுக்கலாம். இது மிகவும் சிறப்பானதாகும். மாணவர்களின் நடத்தை மாற்றங்களை அவதானிக்கவேண்டும். பாராட்டவேண்டிய சந்தர்ப்பத்தில் மாணவர்களைப் பாராட்டவேண்டும். மாணவர்களோடு உறவாடலில் அன்பும், கண்டிப்பும் சந்தர்ப்பத்திற்கேற்ற மாதிரி வழங்கவேண்டும்.

## விசேட திறமைகள் :

ஆசிரியர்களுக்கு மேற்கூறப்பட்டுள்ள கற்பித்தல் திறன், உறவாடல்திறன் என்பவற்றோடு இதர திறமைகள் காணப்படுவது முக்கியமாகும். அதாவது விளையாட்டு நிகழ்வுகள், கலை கலாசார நிகழ்வுகள் போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துவது எந்த மாணவனிடம் என்னென்ன திறமை இருக்கிறது என்பதை இனங்கண்டு பொருத்தமான போட்டிகளில் பங்குபெறச் செய்து வெற்றியீட்ட வைத்தல்.

பணிபுரியும் இடத்தில் இடம்பெறுகின்ற பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கக் கூடியவராகவும், அவற்றுக்கான சிறந்த தீர்மானங்களை எடுப்பவராகவும் காணப்படவேண்டும். மாணவர்கள் மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகள், குழப்பங்கள் என்பவற்றை சுமுகமான முறையில் தீர்த்துவிடுகின்ற ஆற்றல் இருக்கவேண்டும். பொருத்தமான அறிவுரைகளை தகுந்த இடத்தில் வழங்க வேண்டும். உங்களிடம் ஏதாவது பொறுப்புக்கள் வழங்கப்பட்டால் அதனை சரியான முறையில் நிறைவேற்றிக்காட்டவேண்டும்.

கல்வி கற்கும் காலம் பசுமையான காலமாக அமையவைக்கவேண்டியது ஆசிரியர்களின் கைகளிலும் தங்கியுள்ளது. மேலே குறிப்பிடப் பட்டுள்ள வழிமுறைகளை கடைப்பிடிக்கும்போது நீங்களும் ஒரு சிறந்த ஆசிரியராக உருவாகலாம். ஒளிமயமான எதிர்கால சந்ததியினரை உருவாக்கலாம்.

♣ ♣ ♣

# சூழல் பாதுகாப்பின் அவசியம்

**திருமதி வீ. சியாமளா** (B.Sc.)
*(பழைய மாணவி)*
*ஆசிரியை,*
*யாழ். இந்து மகளிர் கல்லூரி.*

குமுறிவரும் ஓயாத அலைகளைக் கொண்ட கடல், பரந்து கிடக்கும் வானம், விரிந்து கிடக்கும் நிலப்பரப்பு, அதனைப் போர்த்தி உள்ள பசுமைக் கம்பளம் இவற்றை எல்லாம் பார்த்த அன்றைய மனிதன் இவை எல்லாம் அச்சுறுத் தலுக்குள்ளாகும் என சிந்திக்கவில்லை. சிந்திக்கத் தவறியதன் விளைவுகளை இன்று மனிதன் உணரத் தொடங்கிவிட்டான்.

நாம் குடிக்கும் நீர், உள்ளிழுக்கும் காற்று, உண்ணும் உணவு இவை எல்லாம் தூய்மை யானவை அல்ல. மனிதன் தன் செயல்களால் அதிலும் கடந்த மூன்று தசாப்தங்களுக்குள் சூழலை மிக மோசமாகத் தரக்குறைவாக்கி விட்டான். சூழல் என்பது வளிமண்டலம், நீர், காற்று போன்றவைகளை உள்ளடக்கிய விலங்கு களினதும், தாரவங்களினதும் உயிரியல் சார் காரணிகளும், மனித வர்க்கத்தின் சுற்றாடலி லுள்ள பௌதிகவியற் காரணிகளும் எனப் பொருளாகின்றது. அமிலமழை, பூகோண வெப்பநிலை உயர்ச்சி, ஓசோன்படை பாதிப்பு, கடல் மாசுறுதல், தொழிற்சாலை நச்சுக் கழிவு கள் வெளியேறி நாடு கடந்து செல்லல், கைத் தொழில் மய நாடுகள் அழிக்கமுடியாத மற்றும் மீள்சுழற்சிக்குட்படுத்தமுடியாத நச்சுக்கழிவு களை நேரடியாகவும், மறைமுகமாகவும் மூன் றாம் மண்டல நாடுகளில் குவித்தல், யுத்த விளைவு கள் எனப்பல சர்வதேச சுற்றாடல் பிரச்சினை கள் இனங்காணப்பட்டுள்ளன.

இதனைவிட நமது நாட்டில் காடழிப்பு, கடல்மண் மற்றும் பாறை அகழ்தல், இயற்கை வளம் சுரண்டல், தொழிற்சாலைகளிலிருந்தும், வாகனங்களிலிருந்தும் நச்சுக்கழிவானது வெளியேறல், நகரங்களிலிருந்து வீசப்படும் கழிவுகள், செயற்கைப் பசளைகள் போன்ற பீடை கொல்லிகளின் அதிகரித்த பாவனை போன்றன சுற்றாடலைப் பாதிப்படையச் செய்கின்றன.

1880ம் ஆண்டளவில் உலகின் நிரப்பரப் பில் 80% காடுகளால் சூழப்பட்டிருந்தது. ஆனால் இன்று 20% காடுகளால் சூழப்பட்டி ருக்கிறது. 1881ம் ஆண்டு 2.7 மில்லியனாக இருந்த சனத்தொகை இன்று 17 மில்லி யனைக் கடந்துவிட்டது.

இன்றும்கூட குறைபாடு உள்ள குழந்தை கள் பிறக்கின்றனர். அண்மையில் உலகின் கைத்தொழிற்சாலையில் தீ விபத்து, நச்சு வாயுக்கள் பரவலினால் பல பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. தற்போது அணுகுண்டுப் பரிசோதனையால் சூழல் மோசமாகப் பாதிக் கப்படுகிறது. நீருக்குள் பரிசோதனையை நடத்துவதால் விளைவைக் குறைக்கலாம். கடலலை தாக்கம் கூடிய கரையோரப் பிரதே சங்களில் அணுகுண்டுப் பரிசோதனை நிலை யங்களை நிறுவக்கூடாது.

உலகில் ஒவ்வொரு வருடமும் யூலை மாதம் 5ம் திகதி உலக சுற்றாடல் தினமாகக் கொண்டாடப்படுகிறது. இதன்போது சுற்றாடல் பாதுகாப்பின் அவசியம் பற்றியும், சுற்றாட லைப் பாதிக்கும் காரணிகள் பற்றியும் வலியு றுத்திக் கூறப்படுகிறது. மேலும் எமது நாட்டில் சனத்தொகை மற்றைய நாடுகளிலும் விட சற்றுக்குறைவாகவே உள்ளது. ஆனால் கல்வி யறிவு வீதம் கூடுதலாக உள்ளதால் இது சுற்றா டல் பாதுகாப்பிற்கு அனுகூலமாக உள்ளது.

இதன் மூலம் சுற்றாடலைப் பாதுகாக்கக் கூடிய தாக உள்ளது.

உலகில் வெப்பம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. ஒரு நிலையில் துருவப் பிரதேசத்தில் உள்ள பனிக்கட்டிகள் உருகி தீவுகள், கண்டங்கள், நீரில் மூழ்கும் அபாயம் காணப்படுகின்றன. ஓசோன் படை நலிவதால் புறஊதாக் கதிர்களின் தாக்கம் கூடி மனிதனுக்குப் பல தோல் நோய்கள் ஏற்படும். சுற்றாடல் மாசுபடல், இயற்கைச் சமநிலை தளர்வுற்று உயிர்வாழ்க்கைக்கு நெருக்கடிகள் ஏற்படும். இதனால் மனிதனின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும்.

சனத்தொகை அதிகரிக்க பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை, சேனைப் பயிர்ச்செய்கை, அபிவிருத்தித் திட்டம், வெட்டுமரத்தேவைகள் போன்ற தேவைகளுக்காக காடுகள் அழிக்கப்படுகின்ற. இதனை அழிப்பதால் வெப்பநிலை உயர்ச்சி, மழை வீழ்ச்சி குறைவு, வெள்ளப் பெருக்கு என்பன ஏற்படுகிறது. மண்ணரிப்பினால் மண்வளம் குன்றுகின்றது. இதைத் தடுக்க சுற்றாடற் பாதுகாப்பு மிக அவசியமாகும். இலங்கை போன்ற கைத்தொழில் நாடுகளில் பல கைத்தொழில் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

போர்பால் நகரிலே 1984ம் ஆண்டு யூலை மாதம் 3ம் திகதி யூனியன் கார்பைட்டுக்குச் சொந்தமான பூச்சி நாசினிப் பொறித் தொகுதியிலிருந்து நச்சு வாயுவானது வெளியேறி நாலாயிரம் பேர்வரை பூச்சி புழுக்களைப் போல செத்து மடிந்தனர். ஆயிரக்கணக்கானோர் பாதிப்பு அடைந்தனர். இதன் தாக்கம் இன்றும் அந்நர மக்களைப் பாதிக்கிறது. இதுவும் சுற்றாடல் பாதுகாப்பில் கருத்திற்கொள்ளப் படவேண்டிய ஒரு விடயமாகும்.

2004ம் ஆண்டு நடந்த சுனாமி அனர்த்தமும் சுற்றாடல் பாதுகாப்பு கருத்திற்கொள்ளப் படவேண்டிய ஓர் விடயமாகும். பாதுகாப்புக் குறைபாடு காரணமாகவே சுனாமிப் பேரலையின் இராட்சத தாண்டவத்திற்கு கரையோரப் பகுதி உள்ளாகியது. இதனால் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் செத்து மடிந்தன. மக்களின் சொத்துக்கள், உடமைகள் நாசமாகி அநாதரவாகி விடப்பட்டனர். இறந்த மனிதரின் விலங்குகளின் அழுகிய உடல்களின் நாற்றத்தால் கிருமிகள் பரவிச் சூழல் மாசடைந்தது. பல தொற்று நோய்களும் பரவின. பல கிராமங்கள் இருந்த அடையாளமின்றி மயானங்களாக மாறின. இவற்றின் அபிவிருத்தி இன்னமும் நம் நாட்டில் முழுமை அடையவில்லை.

சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தலும் சூழற் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஓர் வழியாகும். 1800ம் ஆண்டளவில் ஏற்பட்ட கைத்தொழிற்புரட்சியின் பின் மனிதன் விந்தை மிகு விஞ்ஞான தொழில் நுட்பத்தால் இயற்கைப் படைப்புக்களை வென்று கொண்டிருக்கின்றான். ஆனால் இவ்வெற்றி மனித இன அழிவிற்கும் தொடக்கம் என்பதை இன்றும் மனிதன் உரணவில்லை.

சுற்றாடல் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் அபிவிருத்தியோடு இணைந்த விஞ்ஞான வளர்ச்சியே நமக்குத் தேவையானதாகும். இனிவரும் நூற்றாண்டுகளில் மனித குலம் எதிர்கொள்ள வேண்டிய மிக முக்கியமானதும், கட்டாயமானதுமான பிரச்சினை சூழல் மாசடைதலைத் தடுப்பதேயாகும். எனவே சூழலைப் பாதுகாக்க திடசங்கற்பம் பூணுவோம்.

♣ ♣ ♣

Life is as tedious as a twice-told tale
Vexing the dull ear of a drowsy man.

- William Shakespeare,
*"King John", Act 3 scene 4*



# கலையும் வாழ்வும்

க. துர்சினி B.A.
*(பழைய மாணவி)*

கலை என்றால் என்ன என்று திட்டவட்டமாக வரையறுத்துக் கூறிவிடமுடியாது. ஏனெனில் கலை என்பது மனிதத் திறனோடு சம்பந்தப்பட்டது. அதாவது மனிதனது உள்ளத்து உணர்வுகளை அவனால் இயலக்கூடிய திறனால் எடுத்துரைக் கப்படுவது எடுத்துணர்த்தப்படுவது ஆகும். இக் கலை மனிதனோடு இணைந்து வருகின்றபோது அவனது வாழ்க்கையையும் புலப்படுத்தி நிற்கின் றது. ஒரு காலத்தில் தோற்றம்பெற்ற கலைகளை கொண்டே அக்கால மனிதனது வாழ்க்கை முறை களை அறிந்து கொள்ளலாம்.

கலையினுடைய தோற்றம் பற்றி நோக்கி னால் கலை மனித தோற்றப்பாடுடன் ஆரம்பிக் கப்பட்ட கலை காலத்திற்கு காலம் வேறுபட்டனவாக காணப்படுகின்றன. ஆதிகாலத்தில் ஆடுதல், பாடுதல், வரைதல் என்பன கலைவடிவமாகக் காணப்பட்டது. அதாவது ஆதிகால மனிதனது வாழ்க்கை வேட்டையாடுதலையே மையமாகக் கொண்டிருந்தது. மிருகங்களை வேட்டையாடு வதற்காக எலும்புகளையும் கற்களையும் தேய்த் தும் உரோஞ்சியும் ஆயுதங்களைச் செய்தான். அங் கேயே கலைநயம் ஆரம்பித்துவிட்டது. மிருகங் களை இலகுவில் வேட்டையாடுவதற்கு மிருகங் களை போன்ற உருவங்களை ஓவியமாகத் தீட்டி யும் வடிவங்களாக வடிவமைத்தும் வைத்து அவற்றை நாடிவரும் மிருகங்களை எளிதில் வேட்டையாடினான். அத்துடன் வேட்டையாடிய மிருகங்களை நெருப்பை மூட்டி சுடும்போது அனைவரும் சுற்றியிருந்து கைகளைத் தட்டியும் தமக்குத் தெரிந்த மொழிகளில் பாடியும் ஆடியும் மகிழ்ந்தனர். அத்துடன் அக்கால கட்டத்தில் மொழிகள் இல்லாத காலம் என்பதால் கைகளை பயன்படுத்தியே கருத்துக்களைப் பரிமாறினர். தமது சக்திக்கு அப்பாற்பட்ட இயற்கையை வழி படும்போதும் படையல்களைப் படைத்துப் பாடி ஆடி வழிபட்டனர். இவ்வாறாக ஆதிகால மனிதனது வாழ்க்கையும் இணைந்து காணப்பட்டது.

காலப்போக்கில் இலக்கியம், கட்டடம், சிற்பம், ஓவியம், நாடகம், நடனம், இசை, ஓவியம், திரைப் படம் என கலை வடிவங்களின் எண்ணிக்கைகள் அதிகரித்துச் செல்கின்றன. இவ்வாறு அதிகரித்துச் சென்றாலும் மனிதனது வாழ்க்கையை விட்டு அப்பால் செல்லவில்லை. மனித வாழ்க்கையின் முரண்பாடுகள் பற்றியும் மனிதனது மனங்களில் இருக்கின்ற ஆசைகள், எண்ணங்கள், விருப்பங் கள், உணர்வுகள் என்பவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றது.

மனித வாழ்க்கையின் சிறு செயல்கள் கூட கலைநயம் மிக்கவையாகவே காணப்படுகின்றது. வயல்களில் வேலை செய்யும்போதும் ஏனைய கடின மான வேலைகளில் ஈடுபடும்போது சரி மக்கள் தமது களைப்பைப் போக்க ஆடிப்பாடுகின்றனர். உணவு சமைத்தல், உடை அணிதல், அழகுபடுத் தல், வீடுகட்டுதல், கைப்பொருட்களை உருவாக்குதல், ஆபரணங்களை அணிதல், ஆலய கிரியைகள் என்றெல்லாம் கூறிக்கொண்டே செல்லலாம்.

ஒரு கலைப்படைப்பினை பார்க்கின்றபோது அல்லது கேட்கின்றபோது ஒரு மனிதனது ரசனை யைப் பற்றி அறிந்துகொள்ளக்கூடியதாக இருக் கின்றது. ஒரு காலகட்டத்தில் தோற்றம் பெற்ற கலைவடிவத்தைக் கொண்டு அக்காலத்தின் அரசியல் பொருளாதார விடயங்களை அறிந்து கொள்ளலாம். உதாரணமாக எந்தையும் தாயும் என்ற நாடகத்தின் ஊடாக அக்கால கட்டத்தின் நிலைமைகளை அறிந்து கொள்ளலாம்.

மனிதன் தன்னால் வெளிப்படையாக பேசமுடி யாத சிலவற்றை ஏதோ ஒரு கலையின் ஊடாக சாதிக்கின்றான். மனிதன் பிறந்தபோது தாலாட்டு பாடலைக் கேட்கிறோம். ஒருவன் இறந்தபோது ஒப்பாரியைக் கேட்கிறோம். இவ்வாறு மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும்வரை இசையோடு பின்னிப் பிணைந் துள்ளான். ◆ ◆

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்



பாடசாலை மைதான நலனோம்பு சபை



# ஆரோக்கியமும் வாழ்வும்

**செல்வி. சி. தீபா**
*(பழைய மாணவி)*
*ஆசிரியர்,*
*யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி.*

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் ஆவர். ஆதலால் எதிர்கால சந்ததியினர் எவ்வாறு வாழவேண்டும் என்பது இன்றைய பிள்ளைகளின் வளர்ச்சியை முறையைக் கொண்டு தீர்மானிக்கப் படும். அந்த வகையில் உடற்கல்வியும் சுகாதார மும் முக்கிய இடம் வகிக்கின்றன.

கல்வியும் சுகாதாரமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றன. சுகாதாரத்தை உயர்ந்த நிலையில் வைத்திருப்பதானது கல்வியின் வெற்றிக்குக் காரணமாக அமையும். ஒரு சமுதாயத்தின் கல்வித் தரம் உயர்வடையும்போது சுகாதாரம் தொடர்பான சரியான தீர்மானத்தை எடுப்பதும் இலகுவானதாகும். ஒருவரின் உடலுடன் தொடர்பான விடயங்கள் மட்டுமன்றி சூழலுடனான நற் தொடர்புகள், குடும்பத்துடனான நல் உறவுகள், நோய்கள் இன்றி வாழ்வது, சிறப்பான வாழ்க்கைக் கோலம் போன்றவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் சுகாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்தமுடிவதுடன் நாட்டின் சுகாதார அபிவிருத்திக்கும் பங்காற்றவும் முடியும்.

சுகாதாரம் தொடர்பாக ஒவ்வொரு சமயமும் அதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்தி நிற்கின்றன. அந்த வகையில் இந்து மதம் சுகாதாரத்தின் பண்புகளாக சுத்தம், உடல்வலிமை, சிறந்த உணவுப் பழக்கம் எனும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும், கிறிஸ்தவ மதம் ஒவ்வொருவரும் உடல் நலத்தைப் பேண இறைவன் மீது நம்பிக்கை வையுங்கள் என்பதும், இஸ்லாம் மதம் மனிதனது ஆரோக்கியக்கியத்திற்கும் உடல் மற்றும் உள விருத்திக்கும் அத்தியாவசியமானது மனமே என உடல் உள சுத்தம் என்பன பற்றிக் கூறுகின்றன. பௌத்த மதம் ஆரோக்கியம் சிறந்த வருமானமாகும். மகிழ்ச்சி உன்னதமானதோர் செல்வமாகும் எனவும் கூறியுள்ளது. ஒவ்வொரு மதமும் தமது சுகாதாரப் பழக்கவழங்கங்களைக் கொண்டே தமது சமய வழிபாட்டு முறைகளை அமைத்துள்ளதைக் காணலாம்.

ஒருவர் தனக்கும் தனது குடும்பத்திற்கும் நாட்டிற்கும் பயனுள்ளவர்களாக வாழவேண்டுமானால் உடற்றகமை (Physical fitness) மிகவும் அவசியம். எனவே தான் உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் என்ற திருமூலரின் பாடல் உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. சிறப்பாக சீராக வாழ்வதற்கு ஆரோக்கியமான உடல் நலம் தேவை. இதற்கு உடற்பயிற்சி அவசியம். உடற்பயிற்சி செய்வதன் மூலம் உடலிலுள்ள தசை மண்டலங்களும் நரம்பு மண்டலங்களும் வலுவடைகின்றன. இதன் மூலம் சிறந்த உடற்தோற்றத்தை பெற்றுக்கொள்ள முடிகின்றது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது ஆன்றோர் வாக்கு. நோய் இன்றி இருப்பவரே நிறைந்த செல்வம் படைத்தவர் என்பதும் நோயுடன் இருப்பவர் நிறைந்த செல்வம் பெற்றிருந்தும் பயனில்லை என்பதும் இதன் பொருளாகும். எனவே நோயின்றி வாழ எம்மிடத்தே பின்வரும் பொருத்தமான வாழ்க்கைக் கோலத்தினைக் கட்டியெழுப்புதல் இன்றியமையாததாகும்.

- சிறப்பான உணவுப் பழக்கங்கள்
- பொருத்தமான உடல் நிறையைப் பேணுதல்.
- சுறுசுறுப்பாக வாழப் பழகுதல்.
- புகைபிடித்தல், மதுபானம் அருந்துதல், போதைவஸ்துப் பாவனை போன்றவற்றைத் தவிர்த்தல்.
- மகிழ்ச்சியாக இருத்தல்
- தங்களதும் சூழலினதும் சுத்தம் பேணுதல்.

போன்றன சில முக்கிய பண்புகளாக அமைகின்றன. இவ் ஒவ்வொரு பண்புகளையும் சிறப்

பாக நடைமுறையில் பின்பற்றுதல் மூலம் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய வைத்தியசாலைச் செலவு கள், வைத்தியர்களுக்கு செலவழிக்கும் பணம், நேரம் ஆகியவற்றை மீதப்படுத்தக்கூடியதாக இருக்கும். அத்துடன் வயதுவந்த காலங்களில் ஏற்படக்கூடிய உயர் குருதி அமுக்கம், நீரிழிவு நோய், இதயக் கோளாறுகள், ஆஸ்துமா, நுரை யீரல் புற்றுநோய் போன்றன பெருமளவில் ஏற்படு வதைத் தவிர்த்துக் கொள்ளக் கூடியதாயிருக்கும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையமுடி யும் என்பார்கள். அதேபோல் நாம் ஆரோக்கியத்து டனும் சுறுசுறுப்புடன் இருந்தால்தான் சிறப்பாக வாழமுடியும். எனவே தான் ஆரம்ப காலங்களில் இருந்தே அதாவது சிறுவயதிலிருந்தே சரியான சுகாதாரப் பழக்க வழக்கங்களிலும் உடற்பயிற்சி யிலும் ஈடுபடுவதன் மூலம் தற்காலமும் எதிர்கால மும் இனிதே கழியும்.

◆ ◆ ◆

அகம்பாவம் என்பது முட்டாள்தனத்தின் வலி தெரியாமல் இருக்கச் செய்யும் மருந்தாகும்"

– நியூட் ரோக்னே

வெற்றியாளராக ஆவதற்கு முயற்சிப்பதைவிட பண்புடையவராக முயற்சியுங்கள்.

– அல்பெர்ட் ஐன்ஸ்டின்

Courage is what it takes to stand up and speak; courage is also what it takes to sit down and listen.

**- Winston Churchill**



Hatred does not cease by hatred, but only by love; this is the eternal rule.

**- Buddha**

# இளைய சமுதாயத்தினரின் கல்வியின் போக்கு

**செல்வி. அ. கஜேந்தினி** (B.A.)
*பழைய மாணவி,*
*ஆசிரியர்,*
*யா/கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் ம.வி.*

### 1) ஆரம்பகால இலக்கியங்களில் கல்வி

மனிதகுல வரலாற்றிலும் வளர்ச்சியிலும் காலத்திற்குக் காலம் பல்வேறு துறைகள் சார்ந்த கல்வி விருத்தியானது ஏற்படுத்திவந்த விளைவு கள் ஏராளம். கிறிஸ்து தசாப்தத்திற்கு முற்பட்ட காலத் திலிருந்தே உலகின் பல்வேறு நாடுகளிலும் சமயம் தொடக்கம் அறிவியல் வரையிலான பல துறைகள் சார்ந்த கல்வி வளர்ச்சியடைந்து வந்துள்ளதையும் கல்வியின் பெருமைகளையும் சிறப்புக்களையும் நற்பயன்களையும் நம் முன்னோர் வலியுறுத்தி வந்துள்ளதையும் காணலாம்.

தமிழின் தொன்மை இலக்கியங்களான சங்கச் செய்யுட்களிலும் கல்வியின் சிறப்பும் பெருமை யும் நற்பயனும் வலியுறுத்தப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம்.

*உதாரணமாக :*

புறநானூற்றில் ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் கல்வியின் அவசியம் பற்றி பின்வரு மாறு குறிப்பிடுகின்றார்.

*உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்*
*பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே!*

சங்க காலத்தைத் தொடர்ந்து வந்த சங்க மருவியகாலம், பல்லவர் காலம், நாயக்கர் காலங் களிலும் அதன் பின்னரும் தமிழர்களது பல துறைகள் சார்ந்த கல்வியறிவு முன்னேற்றம டைந்து வந்தமையை இலக்கியங்கள், கல்வெட் டுக்கள், செப்பேடுகள், மெய்க்கீர்த்திகள், புதை பொருட் சின்னங்கள், கட்டடக் கலைகள் முதலிய வற்றின் மூலம் அறிய முடிகின்றது. இவை யாவற்றினுள்ளும் உலகம் போற்றும் தெய்வப் புலவன் வள்ளுவன் முதல் ஔவையார், கல்வியில் பெரி யன் கம்பன் வரை படைத்தளித்த ஆழ்ந்தகன்ற அறிவுசால் அரும் பொக்கிஷங்கள் இன்று அனைத்துலகினதும் கவனத்தை ஈர்த்து நிற்கின்றது. கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடமை என்ற அதிகாரங்களில் கல்வியின் பெருமையை திருவள்ளுவர் வலியுறுத்தி யுள்ளார். இது போலவே தமிழில் எழுந்துள்ள அறநூல்களும் பிறவும் கல்வியின் அவசியத்தை பறைசாற்றியுள்ளன.

### 2) குருகுலக் கல்வியும் நவீன கல்வியும்

எமது வரலாற்றிலே நீண்டகாலமாக நிலவி வந்த குருகுலக் கல்வியானது பாரதத்திலும் ஈழத் திலும் 19ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து ஆங்கிலேயர் ஆட்சி நிலைபெற்றதைத் தொடர்ந்து மெல்ல மெல்ல அருகலாயிற்று. அதேசமயம் நவீன கல்விமுறை வேகமாக பரவலடையலா யிற்று. இதனால் மரபுக் கல்வியில் இருந்து நவீன கல்விமுறை பின்வரும் விடயங்களில் வேறுபட்டு நிற்கின்றது. அவையாவன.

- மரபுக்கல்வி சமயக் கல்விக்கு முக்கியத்துவம் அளித்திருந்தது. ஆனால் நவீன கல்வி சமயக் கல்வியுடன் அரசியல், பொருளியல், புவியியல், சமூகவியல், வரலாற்றியல், அறி வியல் எனப் பலதுறைகளையும் உள்ளடக்கி விசாலமடைந்தது.
- மரபுக் கல்வி சமூகத்தின் ஒரு சிறு பகுதியி னரது சொத்துடமையாக விளங்க, நவீன கல்வி பொதுவுடமையாக விசாலமடையத் தொடங்கின.
- குருகுலக் கல்வி சாதாரண உழைப்பாள ருக்கு எட்டாக் கனியாகவே விளங்கியது. ஆனால் நவீன கல்வி பொதுமக்கள் அனை வரையும் தன்னுள் ஈர்த்துக் கொண்டது.
- மரபுக் கல்வியில் போதிக்கப்பட்ட சமயக் கல்வி இடைக்காலத்தில் மடங்களிலும் ஆதீனங் களிலும் தஞ்சம் அடைந்திருந்தது. ஆனால்

நவீன கல்வி சகல துறைகளிலும் ஒளிவீசத் தொடங்கியது.

- பிரித்தானிய ஏகாதிபத்தியத்தை வெறுத்தவர் கள் அவர்களது ஆட்சியினால் ஏற்பட்ட பெரு நன்மைகளை உச்சிமேற்கொண்டு புகழ்ந் தார்கள். அதில் நவீன கல்விமுறையும் ஒன் றாகும். இதனைப் பாரதியார்

  *"...... மேற்றிசை இருளினை வெருட்டிய ஞான*
  *ஒண் பெருங் கதிரின் ஓரிரு கிரணம் என்*
  *பாலரின் மீது படுத்தலுற்றனவே"*

எனப் போற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரித்தானிய ஏகாதிபத்திய நவீன கல்வி முறையை பாரதியார் புகழ்ந்தபோதிலும் அவர்கள் தமக்கு சாதகமான முறையிலேயே நவீன கல்வி யையும் வளர்க்க முனைந்ததை கண்ட பாரதியார் வெகுண்டெழுந்து தாய்மொழி மூலமான தேசியக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினார். பாரதி யார் அமரர் ஆகிவிட்டபோதிலும் அவரின் கருத்துக் களின் முக்கியத்துவம் உணரப்பட்டு அதற்கான முயற்சிகளில் யாவரும் ஈடுபட்டு இருப்பது பாரதி யின் சுயபாஷைக் கல்வியின் தீர்க்கதரிசனத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## 3) இளந்தலைமுறையினரும் முதிய தலைமுறையினரும்

இன்றைய உலகில் இளந்தலைமுறையி னரும் முதிய தலைமுறையினரும் ஒருவரில் ஒருவர் தங்கியிருப்பது கால ஓட்டத்தின் ஊடே தலைமுறை முரண்பாடுகள் ஏற்படுவதும் நாம் காணும் நிகழ்ச்சிகளேயாகும். இளைஞர்கள் முதி யோர் ஆவதும் குழந்தைகள் இளைஞோராகி முதியவராவதும் இயற்கையே. காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும் என்ற முதுமொழி இங்கு நினைவுகூரத்தக்கதாகும்.

இளஞ்சந்ததியினரை முதியோர்கள் குறை சொல்வதும் நாம் அன்றாடம் காணும் சம்பவங் களாகும். முதியோர்கள் தான் அறிவும் அனுபவ மும் மிக்கவர்கள், நன்னடத்தை உடையவர்கள், உலகினைப் புரிந்து கொண்டவர்கள், உண்மை களை ஆராய்ந்து கண்டறியத் தக்கவர்கள். இளையவர்கள் படபடப்பு மிக்கவர்கள் விரைவில் உணர்ச்சி வசப்படுபவர்கள், பொறுப்பற்றவர்கள் அனுபவமற்றவர்கள், நன்னடத்தை இல்லாதோர் உலகினைப் புரிந்துகொள்ளும் மனோபக்குவம் அற்றவர்கள் என்ற மனப்பாங்கு முதியவர்களிடம் காணப்படுவதை மறுப்பதற்கில்லை. இது ஒரு வகையில் முதியோரின் அறியாத் தனமாகும்.

அறிவுக்கும் வயதுக்கும் தொடர்புகிடையாது. புலனடக்கம், புத்திக்கூர்மை, கல்வி கேள்விகளில் மிகுதியான நாட்டம் என்பன இன்றைய இளை யோரிடையே மிக அதிகமாக இருப்பதனைக் காணலாம். இதனால் நைடதம் பாடிய அதிவீரராம பாண்டியன் வெற்றிவேட்கை நீதிநூலில்

*பெரியோர் எல்லாம் பெரியருமல்லர்*
*சிறியோர் எல்லாம் சிறியருமல்லர்*

எனக் கூறியுள்ளார்.

இதேபோல புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார்

*பெரியோரை வியத்தலும் இலமே*
*சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே!*

என்று பாடியுள்ளார்.

இந்த வகையில் இந்துமத வரலாற்றிலும் தமிழ் இலக்கிய உலகிலும் உலக வரலாற்றிலும் சிறியோரால் பெரியவர்கள் வழிநடத்தப்பட்டதற்கு பல சான்றுகளைக் காட்டலாம். அவற்றுள் சில வற்றை குறிப்பிடுவது சாலப் பொருந்தும் அவை யாவன.

- முருகன் சிவனுக்கு உபதேசம் செய்தமை.
- சம்பந்தர் மூன்று வயதில் தேவாரம் பாடியமை.
- சிறுவனாகிய மெய்கண்டதேவர் முதியவராகிய அருணந்திசிவாச்சாரியாருக்கு உபதேசம் செய்து மாணவனாக்கிக் கொண்டமை.
- கரிகாற்சோழன் நீதி வழங்கியமை.
- சிறு பராயத்திலே மகாகவிகளான இக்பால், பாரதி ஆகியோரும் வீரத்துறவியாகிய சுவாமி விவேகானந்தரும் தமது செய்கைகளாலும் கூற்றுக்களாலும் தமது ஆசிரியர்களைத் திணறடிக்கச் செய்தமை.
- இந்தியாவில் வாழும் சிறுவனான திருக்குறள் திருமூலநாதனின் அபூர்வ ஆற்றலையும் புலமைத் திறனையும் கண்டு உயர்கல்வி நிறுவனங்கள் ஆறு வயதிற்குள்ளேயே பல விருதுகளையும் ஆறரை வயதில் கௌரவ டாக்டர் பட்டத்தையும் வழங்கியமை.

♦ தென்னாபிரிக்காவிலும் இங்கிலாந்திலும் டென்மார்க்கிலும் சுவிற்சலாந்திலும் வாழ்ந்து கொண்டிருக்கும் நான்கு சிறுவர்களின் அபூர்வ ஆற்றலைக் கண்டுவியந்த உயர் கல்வி நிறுவனங்கள் 10 வயதிற்குள்ளேயே கௌரவ டாக்டர் பட்டங்களையும் பல விருது களையும் வழங்கிச் சிறப்பித்தமை.

என சிறியவர்களின் ஆற்றல்களையும் திறனையும் அடுக்கிக்கொண்டே போகலாம். எது எப்படி இருப்பினும் இளந்தலைமுறையினரும் முதிய தலைமுறையினரும் தமக்கிடையே எவ்வளவு தான் முரண்பாடுகளும் இடைவெளிகளும் காணப் பட்டாலும் இருபகுதியினரும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்து இயைந்து செல்வதன் மூலமே முன்னேற்றம் காணமுடியும்.

## 4) இளஞ்சமுதாயத்தினரும் தொழில்நுட்ப வளர்ச்சியும்

ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் சூழ்நிலை பெரும்பாதிப்பினை ஏற்படுத்துகின்றது. காலத் திற்குக் காலம் இளைய தலைமுறையினரின் சூழ்நிலை வேறுபடுவதால் அவர்களது அறிவும் அனுபவங்களும் வேறுபட்டு அமைகின்றன. ஒருவனது குடும்பம், பொருளாதார நிலை, காலச் சூழல், கல்வியறிவு, சுபாவம், சொந்த வாழ்வில் அவன் அடையும் பாடுகள் முதலியவற்றிற் கேற்பவே அவனது அனுபவங்கள் அமை கின்றன. அந்த அனுபவங்களிற்கு ஊடாகவே அவன் தன்னையும் புறஉலகினையும் நோக்கு கின்றான்.

இன்று அசுர வேகத்தில் விஞ்ஞான தொழில் நுட்ப திறன்களும் சாதனங்களும் வளர்ந்து கொண்டு செல்கின்றன. இதனால் பல சாதக பாதக விளைவுகள் ஏற்படுவதை கண்கூடாகவே காண் கின்றோம். இதன் தாக்கம் இளம்தலைமுறையி னரையே வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. இலாப நோக்குடன் மேற்கொள்ளப்படும் விளம்பர முயற்சி களும் பிறவும் உணர்வுகள் கிளர்ந்தெழும் பருவத் தினை ஒழுக்கப் பிறழ்வுக்கும் வன்செயலுக்கும் இட்டுச் செல்கின்றன. பத்திரிகைகள், சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள், சர்வதேச வலைத் தொடர்புகள், மின்னஞ்சல் போன்றனவும் கூட துரதிஷ்டவசமாக பாலியலை மூலதனமாகக் கொண்டு கொள்ளை இலாபம் ஈட்ட முனை கின்றன. இது இன்றைய உலகின் கலாசார சீரழி விற்கு வழி சமைத்துள்ளதெனலாம்.

மேலும் கடந்த 25 வருடங்களிற்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர்ச் சூழலும், அதன் தாக்கங்களும் பிற காரணங்களாலும் இளந் தலைமுறையினர் மேலைத்தேய நாடு களுக்கு புலம்பெயர்ந்து செல்கின்றனர். இவர்கள் மேலை நாடுகளின் கலாசார சீரழிவுகளுக்கு அடிமை யாவதோடு தமது சமய சமூக விழுமியங்களையும் அலட்சியப்படுத்துவதையும் காணுகின்றோம்.

நவீன உலகம் ஒரு கிராமம்போல் சுருங்கிக் கொண்டு இருக்கின்றது. தொழில்நுட்ப சாதனங் களின் அதீத வளர்ச்சியும் திறந்த பொருளாதார நடவடிக்கையும் உலகமயமாதலை துரிதப்படுத்து கிறது. இதனால் பல இனங்களின் தனித்துவங் களும் மரபார்ந்த சமய சமூக விழுமியங்களும் சிதைந்து கொண்டு செல்கின்றன.

உலக நிலையாமை, வாழ்வியல் கோலங்கள், போர்க்கொடுமை, பேரழிவுகள் பற்றி நம் முன்னோர் இலக்கியங்கள் வாயிலாகவே அறிந் தனர். ஆனால் இன்றைய இளந்தலைமுறை யினர் இலக்கியங்களை நாடவேண்டிய தேவை யில்லை. நேரடியாகவே அனுபவிக்கின்றனர். இலங்கையில் மட்டுமன்றி உலகின் பல பாகங் களிலும் இதனை நாம் காணமுடியும்.

கணினித் தொழில்நுட்ப முன்னேற்றம், செவ் வாய், வியாழக் கிரங்களில் ஆய்வுகள், இயந்திர மனிதன் (றோபோ), ஐதரசன் எரிபொருட்கள், புத்தம்புதிய வாகன கண்டுபிடிப்புக்கள், மருத்துவ வளர்ச்சி போன்றன ஒருபுறம். எயிட்ஸ், ஓசோன் படல ஆய்வுகள் மறுபுறம் வறுமைநிலை, போர்க் கொடுமைகள், புலப்பெயர்வுகள், சமாதான தூதுக் குழுக்கள், வட்டமேசை மாநாடுகள், ஐக்கிய நாடு கள் சபையின் தலையீடுகள் மற்றொருபுறம் இவை யாவற்றிற்கும் மத்தியில் சிக்கித் தவிக்கும் இளம் தலைமுறையினரின் எதிர்காலம் பற்றி சகலரும் சிந்திக்கவேண்டும், செயற்படவேண்டும். ஏனெ னில் இன்றைய இளஞ்சமுதாயத்தை அடுத்து வரும் இளஞ் சமுதாயம் கண்டிக்காத அளவுக்கு

இவர்களது சிந்தனைகளும் செயற்பாடுகளும் அமையவேண்டும்.

## இளஞ் சமுதாயமும் நவீன கல்வியும்

கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படும் யுகத்தில் நாம் வாழ்ந்து வருகின் றோம். வசதியும் வாய்ப்பும் மிக்கவர்களுக்கே கல்விச் செல்வம் உரியது என்ற நிலை மாறி இன்று மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் மக்களும் கல்வி கற்கக்கூடிய சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

தாய்மொழிக் கல்வி விருத்தி, இலவசக் கல்வி விருத்தி போன்றன மட்டுமன்றி மகாபொல, புலமைப்பரிசில் முதலியனவும் வறிய மக்களை கல்வியின் பால் நாட்டம் கொள்ளச் செய்தது. எமது நாடு இன்று வரை மேற்கொண்டுவரும் இலவசக் கல்வித்திட்டம், இலவச பாடநூல் விநியோகம், இலவச சீருடை வசதிகள், புலமைப் பரிசில்கள் முதலியவற்றால் பலரும் நன்மை பெறுகின்றனர்.

மிக நீண்டகால வரலாற்றைக் கொண்ட தமிழர் களது கல்வியியலானது தமிழகத்தை மையமாகக் கொண்டே வளர்ந்து வந்துள்ளது. இன்றும்கூட நாம் தமிழகத்தைப் பெரிதும் நம்பியே வாழ்ந்து வருகின்றோம். 21ம் நூற்றாண்டின் முதல் தசாப் தத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம் எமது கல்வி முறையின் வரலாற்று வளர்ச்சியை நோக்கு தல் சாலப் பொருந்தும்.

நீண்டகாலமாக இருந்துவந்த குருகுலக் கல்வி முறையானது, பிரித்தானிய ஏகாதிபத்திய ஆட்சியின்போது 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதி யில் அறிமுகப்படுத்தப்பட்ட நவீன கல்வி முறை யினால் மறையத் தொடங்கியது. இப் பிரித்தானி யக் கல்வி முறையே இன்று வரை சிற்சில மாற்றங் களுடன் எம்மால் பின்பற்றப்பட்டு வருகின்றது. ஆனால் பிரித்தானியாவின் கல்வி முறையில் வியக்கத்தக்க வகையில் எத்தனையோ மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டும் மீள் பரிசீலனைகள் செய்யப் பட்டும் வருகின்றன. அத்துடன் எமது நாட்டில் இன்று கல்வியியல் ஒரு தனித்துறையாக வளர்ச்சியடை யத் தொடங்கினாலும் மேலைநாட்டு கல்வியியல் போல வளர்ச்சியடையாமை துரதிஷ்டமேயாகும். இருப்பினும் நவீன தகவல் தொடர்பு சாதனங் களின் மூலம் கல்வியறிவு மாணவ சமுதாயத்திற்கு மட்டுமன்றி சகல மக்கட் பிரிவினர் மத்தியிலும் பரப்பப்படவேண்டும் என்ற எண்ணம் மேலோங்கி யிருப்பது வரவேற்கத்தததாகும்.

## 6) உயர்கல்வியில் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

இன்றைய மாணவர்கள் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைவதற்கே அரும்பாடு படு கின்றனர். பரீட்சையில் சித்தியடையாதிருப்போர் ஒரு புறமிருக்க பரீட்சையில் சித்தியடைந்தோர் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக் கின்றனர். குறிப்பாக....

- சித்தியடைந்த அனைவரும் பல்கலைக்கழகம் செல்லமுடியாது மிக மிக மட்டுப்படுத்தப்பட்ட தொகையினரே அனுமதி பெறுகின்ற நிலைமை.
- மாவட்ட கோட்டா அடிப்படையிலும் விகிதாசாரப் படியும் அனுமதி வழங்கப்படுவதால் சிறுபான் மையினர் பாதிக்கப்படுதல்.
- Z - வெட்டுப்புள்ளி (Z - Score) அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி தரப்படுத்தப்படுவ தால் குறிப்பிட்ட சில பாடங்களைக் கற்கும் மாணவர்கள் பாதிக்கப்படுவர்.
- முன்னைய ஆண்டு மாணவரின் அனுபவத் தைக் கொண்டு பாடத் தெரிவுகளை தற்போ தைய மாணவர் மேற்கொள்வதால் அவர் களின் சிந்தனை, அறிவு, ஆற்றல்கள் மழுங்க டிக்கப்படுதல்.
- பரீட்சை எழுதிய பின் பல்கலைக்கழகம் செல்வதற்கு காத்திருக்கவேண்டிய நிலை.
- பல்கலைக்கழகம் சென்று 3 அல்லது 4 வருடங்களிற்கு அல்லது அதற்கும் மேலாக கல்வி கற்று வெளியேறினாலும் தகுந்த வேலை வாய்ப்புத்தேடி பல ஆண்டுகளாக அலைந்து திரியும் நிலைமை.

போன்ற இடர்களை எதிர்கொள்கின்றனர். நமது இளஞ்சமுதாயத்தினர் இவ்வாறான இடர் களை கல்வியில் எதிர்கொள்வதால் சமூகத்தில் ஏற்படும் எதிர்விளைவுகளையும் சிந்திப்பது நலமே யாகும். உயர்கல்வி பின்தள்ளப்பட்டுச் செல்வதால் பலரது நாட்டம் குன்றிப்போய்விடுகிறது. இதனால் கல்வியை இடையிலே நிறுத்திவிட்டு வெளிநாடு

களுக்குச் செல்கின்றனர். சிலர் திருமண பந்தத்தில் இணைந்து விடுகின்றனர். யுத்தசூழல் நெருக்கடி நிலைகளால் வாழ்க்கை பற்றிய அவர்களது சகல நம்பிக்கைகளும் தகர்த்தெறிந்து விடுகின்றன.

மேலும் இன்றைய கல்விமுறை பரீட்சைப் பெறுபேறுகளையே பிரதான குறிக்கோளாகக் கொண்டு விளங்குவதால் பரீட்சைகளில் ஏற்படும் வெற்றி தோல்விகள் மாணவர்களது உள்ளத்தில் தாழ்வுச் சிக்கலையும் விரக்தியையும் ஏற்படுத்தி விடுகின்றன. அத்துடன் இன்றைய கல்விமுறை மாணவர்களை புத்தகப் பூச்சிகளாக மாற்றிவிடு கின்றது. இதனால் கற்றலை இன்றைய மாண வர்கள் பெரும் சுமையாகவே கருதுகின்றார்கள். அத்துடன் பாடத் திட்டங்கள் விரிவடைந்து செல்வ தோடு கலைத்திட்டச் செயற்பாடுகளும் பல்கிப் பெருகியுள்ளதைக் காணலாம். இதனால் இன் றைய இளஞ் சிறார்கள் பாடசாலைக்குச் செல்லும் போது தமது நிறையிலும் கூடிய புத்தகப் பைகளை சுமக்கமாட்டாது சுமந்து செல்லும் பரிதாபக் காட் சியை காணும்போது அவர்களுக்கு கல்வியின் மீதே வெறுப்பு ஏற்படுவதற்கான காரணங்களை எம்மால் இலகுவில் புரிந்துகொள்ளமுடிகின்றது.

### 7) இளந்தலைமுறையினரை நல்வழிப் படுத்தல்

மாணவர்களை சிந்திக்க வைக்கும் வகை யிலும் ஆக்கத்திறனை வளர்த்துக்கொள்ளும் வகையிலும் கல்விமுறை அமைதல் வேண்டும். புத்தகப் படிப்பை மட்டுமன்றி மனித மேம்பாட்டி னையும் வளர்க்க முயலவேண்டும். நற்குணங் களையும் நன்நடத்தைகளையும் மன உறுதியை யும் உயர் விழுமியங்களையும் வளர்ப்பதற்கும் பேணிப் பாதுகாப்பதற்கும் ஏற்ற இடங்களாக கல்லூரிகளும் பாடசாலைகளும் விளங்குதல் வேண்டும்.

உலகின் பல பகுதிகளிலும் இன்று பாலியல் கல்வி முக்கியத்துவம் பெற்று வருகின்றது. பாலி யல் கல்வி தொடர்பாக இளந் தலைமுறையினரை விழிப்படையச் செய்யவேண்டும். பாலியல் கல்வி என்றவுடன் முதியோர்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை. பாலியல் கல்வி என்பது ஆண், பெண் இருபாலாரது தன்மைகள், அவர்களின் சமூகப்பங்கு, மனித உறவுகள் என பல்வேறு விடயங்கள் பற்றிச் சொல்லும் கல்வியாகும். தன்னுள் எழும் உணர்வுகள் என்னென்ன? அவை ஏன் வருகின்றன? இன்றைய சமூகச் சூழலில் அவற்றை முறைப்படுத்துவது எப்படி போன்ற பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்படுகின்றன.

பூவுலகில் இன்று எல்லாமே அறிவியல் கணினிமயமாகிக் கொண்டு இருக்கின்றது. எதை யும் அறிவியல் ரீதியாக சிந்திக்கும் ஆற்றலை இன்றைய விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றங் கள் இளம்சமுதாயத்திற்கு நல்கி வருகின்றது. விஞ் ஞானத்துடன் மெய்ஞ்ஞானத்தையும் இணைத்து மனித நேயத்தை வளர்ப்பதற்காக அனைவரும் பாடுபட்டால் மனித வாழ்க்கை அர்த்தமுள்ளதாக வும் மேம்பாடுடையதாகவும் மிளிரும்.

மாணவவர்கள் கல்வியின் மீது ஆர்வம் கொள்ளும் வகையில் அகப்புறச் சூழல்கள் அமைய வேண்டும். பெரும்பாலான குடும்பங்களில் அநேக மாணவவர்கள் தமது நேரத்தின் பெரும்பகுதி யினை தொலைக்காட்சி பார்ப்பதிலம் கணினியில் கேம்ஸ் (Computer games) விளையாடுவதிலும் தமது நேரத்தின் பெரும்பகுதியை வீணடிக்கின்றார் கள். இது மாணவர்களின் கல்விக்கு ஓங்கி அறை யப்படும் சாவு மணியாகும்.

இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்வதோடு அரசியல் மாற்றத்திற்கேற்ப கலைத்திட்டங்களை மாற்றியமைக்கும் செயற்பாட்டை நிறுத்தி அர்த்த புஷ்டியான ஒரு கலைத்திட்டத்தை ஒழுங்குபடுத்தி அதனை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நல்ல தொரு இளஞ்சமுதாயத்தை எதிர்காலத்தில் தோற்று விக்கலாம் என்பதில் சற்றேனும் ஐயப்படத் தேவை யில்லை. இதற்கு முதிய தலைமுறையினரும் இளந்தலைமுறையினரும் பேதங்களை மறந்து நல்லெண்ணத்துடன் கைகோர்த்துச் சென்றால் நல்லதொரு எதிர்காலத்தை வரப்போகின்ற இளஞ்சந்ததியினருக்கு கையளித்து உதவலாம்.

மனிதனிடம் மறைந்திருக்கும்
பூரணத்துவத்தை வெளிப்படுத்துவே கல்வி
*(சுவாமி விவேகாநந்தர்)*

♣ ♣ ♣

# ஆசிரியரும் சிறுவர் உளநலமும்

**திருமதி. ஜெ. பழனிவேல்**
*(பழைய மாணவி)*
*ஆசிரியர்,*
*யா/இணுவில் மத்திய கல்லூரி.*

இன்றைய சிறுவர்கள், நாளைய உலகத்தை உருவாக்கப் போகிறவர்கள். ஆதலினால் சிறுவர்களின் விருத்தியானது பொருத்தமான வகையில் மேம்பாடு அடைய உதவுவது பெரியவர்களாகிய எமது கடமையாகவும், பொறுப்பாகவும் இருக்கின்றது.

சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லத்தொடங்கிய காலம் முதல் அவர்களது நாள்களின் கணிசமான பகுதி பாடசாலையிலேயே கழிகின்றது. இதனால் சிறுவர்களை அவதானிப்பதிலும், வழிப்படுத்துவதிலும் அவர்களது திறன்களை வளர்த்தெடுப்பதிலும், அவர்களது படிப்பு என்கிற அறிவுத்தேவைக்கு அப்பால் அன்பு, அரவணைப்பு, ஆதரவு போன்ற உணர்ச்சித் தேவைகளை வழங்குவதிலும் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது.

அனேகமான சிறுவர்கள் தங்கள் ஆசிரியர்கள் மீது பற்றும், அவர்களது சொல், செயல் என்பவற்றின்மீத அதீதமான நம்பிக்கை உடையவர்களாகவும், ஆசிரியர்கள் கூற்றே வேதவாக்காகவும், முடிந்த முடிபாகவும் எண்ணத் தலைப்படுவார்கள். ஆசிரியர்கள் இவ்வாறான ஒரு செல்வாக்கு நிலையில் இருப்பதனால் ஆசிரியர்களின் பொறுப்புக்களும் அதிகமாகின்றன. எனவே, ஆசிரியர்கள் தங்களிடம் கற்கின்ற பிள்ளைகளின் எல்லாவிதமான வளர்ச்சியிலும் அக்கறை செலுத்த வேண்டியவர்களாகின்றனர்.

கற்றல் செயற்பாடுகள் மாணவர்களின் உடல்நலத்தில் மட்டுமன்றி உளநலத்திலும் தங்கியுள்ளது. கற்றலுக்கான ஆர்வம், உந்துதல் தொடக்கம் கருத்தூன்றல், கிரகித்தல், ஞாபகத்தில் இருத்தல், நுண்ணறிவு விருத்தி எனக் கற்றலின் எல்லாப் பகுதிகளும் ஒழுங்காக நடைபெறுவதற்கு மாணவர்களின் உள்ளம் நலமாக இருக்க வேண்டும். உளநலம் பிரச்சினைகள் உடைய மாணவர்கள் வகுப்பறையில் மற்றைய மாணவர்களைக் குழப்புதல், கற்பித்தல் செயற்பாடுகளில் ஆசிரியருடன் ஒத்தழையாமை போன்ற பலவிதமான இடர்தரு நடத்தைகளைக் காட்டலாம். எனவே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுங்காகவும் நன்றாகவும் நடைபெறுவதற்கு மாணவர்களது உளநலம் மேம்பாடான ஒரு நிலையில் இருப்பது அவசியமாகின்றது.

குடும்பத்திற்கு அடுத்ததாகப் பிள்ளையின் முக்கிய சமூகமயமாக்கல் மையமாகப் பாடசாலை விளங்குகின்றது. பிள்ளைகளின் உளநலத்திற்கும், அவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கும், சமூக மயமாக்கலுக்கும் இடையே நெருக்கமான தொடர்பு இருப்பதனால், சிறுவர்களின் உளநலத்தில் பாடசாலை ஆசிரியர்களின் பொறுப்பு மிக முக்கியமாக அமைகின்றது.

பாடசாலையிலே கல்வி கற்கின்ற சிறுவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவராகவே இருப்பர். ஒவ்வொருவரும் தமக்கெனச் சில துறைகளிலேனும் திறமையாகச் செயற்படக் கூடியவர்களாக இருப்பர். இவ்வகையில் ஆசிரியர்கள் சிறுவர்களின் ஆற்றல்களையும், திறன்களையும் இனங்காணக்கூடியவர்களாக இருப்பதோடு, அவ்வாற்றல், திறன்கள் ஊடாக, அவர்களது உளநலத்தினை மேம்படுத்தக் கூடியவராகவும் செயற்படுவது விரும்பத்தக்கது.

பிள்ளைகளின் உள ஆரோக்கியம் எவ்வாறான நிலையில் இருக்கின்றது என்பதனை அவர்களது செயற்பாடுகள் மூலம் அறிந்து கொள்ளலாம். பிள்ளைகளது சயமவலுக் குழுக்களுடனான செயற்பாடுகள், உணர்வுகளை வெளிக்காட்டும்

தன்மை, உற்சாகம், அக்கறையுடன் தொழிற்படுதல், நம்பிக்கைக்குரியவராக இருத்தல், குடும்பச் சூழல், பாடசாலைச்சூழல் என்பனவற்றில் இருக்கின்ற ஆரோக்கியமான ஒழுங்குவிதிகளைப் பேணி மதித்து நடத்தல், பிறருக்கு உதவி செய்தல், மற்றையவர்களிடம் தேவை கருதி உதவி பெறத் தயக்கம் காட்டாமை, வகுப்பின் அல்லது குழுவின் நன்மை கருதி நேர்மையான முறையில் செயற்படுதல் போன்ற இயல்புகள் உள்ள சிறுவர்களின் உளநலம் பொதுகவாகச் சிறப்பான முறையில் அமைந்ததாக இருக்கும். எனினும் குடும்பம், பாடசாலை போன்ற சமூகச்சூழல் பிரச்சினைக்குரியதாக இருக்கும்போது உளநலம் உள்ள பிள்ளைகள், அச்சூழலுக்கு இசைந்துபோகாது தமது எதிர்ப்பைக் காட்ட முயற்சி செய்வதை ஆரோக்கியமானதென்றே கூறலாம்.

எல்லாப் பிள்ளைகளது வாழ்விலும், மகிழ்ச்சி, துக்கம், கோபம், இழப்பு, பயம், விரக்தி, கசப்பு போன்ற உணர்வுகள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில், அச்சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற துலங்கலை சரியான அளவிலே பிள்ளை வெளிப்படுத்துமாயின் அப்பிள்ளையின் உளம் நலமாக இருக்கின்றது எனும் முடிவுக்கு வரலாம். உளநலம் குறைவான பிள்ளைகள் குறித்த சந்தர்ப்பத்திற்கான துலங்கலை ஒழுங்கற்ற முறையில் மாறி வெளிக்காட்டுபவர்களாக இருப்பார்கள்.

பொதுவாக உளநலம் உள்ள சிறுவர்கள் விளையாடுதல், கற்றல், தமது நாளாந்த கருமங்களைச்செய்தல், வீடு, பாடசாலை, ஆலயம்போன்றவற்றில் தமது கடமைகளைச் செய்தல், சகபாடிக் குழுக்களுக்கு முன்மாதிரியாகவும், சகபாடிக் குழுக்களால் மதிக்கப்படுபவர்களாகவும் குடும்பத்துடனும், வகுப்பறை, பாடசாலைச் செயற்பாடுகளுடனும் சமூகத்தோடு ஒத்திசைவாக நடக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். மேலும் பொருத்தப்பாடாக ஒளிவு மறைவு இன்றி மனந்திறந்து பேசும் இயல்பினை உடையவர்களாகவும், மற்றவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாகவும் இருப்பார்கள். இவ்வாறான பரந்துபட்ட ஈடுபாடுகளும், செயற்பாடுகளும் அவர்களது ஆளுமையை வளர்கின்றது. வயதிற்கு ஏற்ற ஆளுமை வளர்ச்சியினைப் பெற்றவர்கள், ஆரோக்கியமான உளநலத்தன்மை உடையவர்களாக இருப்பார்கள். மேலும் அறியாத விடயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உடையவர்களாகவும், கற்பனைத் திறன் வாய்ந்த படைப்பாக்கச் செயற்பாடுகளில் அதிக ஈடுபாடு காட்டுபவர்களாகவும் இருப்பார்கள். இவ்வாறாக சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நல்ல காரியங்களைச் செய்பவர்களாகவும், சமூகத்தோடு ஒத்து வாழ்கின்றவர்களாகவும் இருப்பவர்களே சிறந்த உளநலம் உள் பிரஜைகள் என்றே கூறலாம்.

பிள்ளைகளின் உளநலத்தை இயலுமானளவு மேம்படுத்த வேண்டியதிலும் ஆசிரியரின் பங்கு அவசியமாகின்றது. சிறுவர்களின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும் ஏற்றவாறு செயற்பாடுகள், வாய்ப்புகள் அமைகின்றபொழுது உளநல மேம்பாடானது தானாகவே நடைபெறும். எனினும் சில பிள்ளைகளின் உளநலம் குறைபாடான நிலையிலே இருக்கும். அவர்களது உளநலத்தை செம்மையடையச் செய்ய ஆசிரியர்கள் முயலவேண்டும். அவர்களை மற்றவர்கள் முன்பு அடையாளப்படுத்தி, தனிமைப்படுத்தி அணுகுவதை இயன்றளவு தவிர்த்துக்கொள்ளவேண்டும். முடியுமானவரை ஏனைய மாணவர்களுடனான இணைந்த செயற்பாடுகளின் மூலம் உளநலம் குறைபாடுள்ள பிள்ளைகளைச் செம்மையாக்கல் நல்லது.

உளநலம் செம்மையாக்கப்படவேண்டிய பிள்ளைகளை அவர்களது நடத்தைப் பாங்குகள் மூலம் இனங்காணலாம். சரியான காரணம் இல்லாமல் அழுதல், அளவுக்கு மிஞ்சி நித்திரை கொள்ளல், படுக்கையை நனைத்தல், முரட்டுத்தனம் காணப்படுதல், மூர்க்கத்தனமான சுபாவத்தை உடையவராக இருத்தல், தேவையின்றி உரத்து சத்தமிடுதல், சேர்ந்து விளையாடமுடியாத தன்மை, அமைதியின்றி அந்தரப்படுதல், வேலைகளைச் செய்துமுடிக்க இயலாமை, எதிர்காலம் பற்றிய மறைவான எண்ணம் இருத்தல், ஒழுங்கற்ற பாடசாலை வரவு காணப்படுதல் போன்ற அம்சங்கள் ஒரு சிலரில் காணப்படுமாயின் அவர், உளநலம் குறைவானவர் என்ற முடிவுக்கு வரலாம்.

உளநலம் குறைவாக அமைவதற்கு ஏதுவான காரணங்களைப் புரிந்துகொண்டு, பொருத்தமான முறையில் அவர்களை அணுகி வழிப்படுத்த ஆசிரியர்கள் முயலவேண்டும்.

வாய்ப்புக்கள், வளங்கள், வசதிகள் எல்லாம் ஒரேவிதமாக இருந்தாலும், பிள்ளைகள் எல்லோரும் ஒரேவிதமான உளநிலையில் இருப்பார்கள் எனக்கூறமுடியாது. பல்வேறுபட்ட காரணிகள் சிக்கலான வகையிலே செல்வாக்குச் செலுத்துவதே இதற்குக் காரணமாகும். இக் காரணிகளை பரம்பரைக் காரணிகள், சூழல் காரணிகள் என்ற இரண்டு பெரும்பகுதிக்குள் அடக்கலாம்.

பெற்றோரிடமிருந்து பிள்ளை சந்ததி சந்ததியாகப் பெற்றுக்கொள்கின்ற காரணிகளே பரம்பரைக் காரணிகளாகும்.தாய், தந்தையில் இயல்புகள் மட்டுமன்றி, நான்கு தலைமுறையினருக்கு முற்பட்ட இயல்புகள்கூட பரம்பரை ரீதியாகப் பெற்றுக்கொள்ளப்படலாம். பரம்பரைக் காரணிகள் சாதகமாக அமையுமாயின் உளநலம் மேம்பாடு உடையதாக இருக்கும்.

பரம்பரைக் காரணிகள் மட்டுமன்றி சூழல் காரணிகளும் குழந்தைகளின் உளநலத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன. தாய், தந்தை, சகோதரர்கள், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள், பாடசாலைச் சமூகத்தினர், சகபாடிக் குழுக்கள், சமூக அங்கத்தவர்கள், செல்லப் பிராணிகள் போன்ற உயிரியல் சூழல் காரணிகளும், வீடு, விளையாட்டிடம், விளையாட்டுப் பொருட்கள், வகுப்பறை, பாடசாலைச் சூழல் போன்ற பௌதீகச்சூழல் காரணிகளும் ஒருவருடைய உளநலத்தில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

பாடசாலைச் சூழலைப் பொறுத்தவரையில் ஒரேவிதமான தூண்டல்கள் கிடைக்கின்றபோதும் பிள்ளைகள் எல்லோரதும் துலங்கல்கள் ஒரே விதமாக இருப்பதில்லை. இவ்வாறு இருப்பதற்கு பல காரணங்கள் இருக்கலாம். எனினும் பரம்பரைக் காரணிகளின் செல்வாக்குகளும் தூண்டலுக்கான துலங்கல் வேறுபாட்டிற்கு காரணமாக இருப்பதனை மறந்துவிடக்கூடாது.

சிறுவர்களின் உளநலம் மேம்பாடு அடைவதற்கு ஆசிரியர் பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகின்றது. பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகளாக தூயநீர், தூய காற்று, போசாக்கு உணவு, மருத்துவ சுகாதார வசதிகள் என்பன கிடைக்க வகை செய்தல், குடும்பச்சூழல் அன்பானதாகவும், ஆதரவு கொடுப்பதாகவும், ஒற்றுமையானதாகவும் இருத்தல், பாதுகாப்பான சூழலை ஏற்படுத்தல், பிள்ளைகள் பார்த்துப் பின்பற்றுவதற்குரிய நல்ல முன்மாதிரிகளைப் பெற்றுக்கொடுத்தல், நம்பிக்கை ஏற்படுவதற்கு வழி செய்தல், மாற்றமடையாத சூழலை ஏற்படுத்தல், எதிர்கால நிகழ்வுகளைத் திட்டமிட்டு நடாத்த ஊக்குவித்தல், உடல், உளவிருத்திச் செயற்பாடுகள் வயதிற்கு ஏற்றனவாய் இருக்கின்றனவா என அவதானித்து பின்னடைவுகள் காணப்படின் தகுந்த நடவடிக்கைகள் எடுத்தல், உளநெருக்கீடுகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களைக் குறைத்தல், கற்றல் வாய்ப்புகளை வழங்குதல், நாளாந்த அனுபவங்களைப் பெற்றுக்கொள்ள வாய்ப்புக்களை வழங்குதல், தன்னம்பிக்கை, சுய செயற்பாடு, கூட்டுச் செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்களை வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

மேற்குறிப்பிட்ட சந்தர்ப்பங்களை குடும்பம், சூழல், பாடசாலை, சமூகம் என்பவற்றிலே ஏற்படுத்துவதற்கு வழிகாட்டுவதன் மூலம், நாம் ஆரோக்கியமான உளநலம் உடைய சிறுவர்களை உருவாக்கலாம் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

"வளங்கள் பல வழங்கி
வளமான சிறுவர்களை
உருவாக்குவோம்".

◆ ◆ ◆

# அன்றைய எங்கள் ஆசான்கள்

**திரு. க. கருணைநாயகம்**
*(பழைய மாணவன்)*
*இயக்குநர்*
*கர்ணன் கல்வி நிலையம்,*
*சுன்னாகம்.*

அறிவைக் கூர்மைப்படுத்தி, தன்னடக்க முள்ள, பண்பாடுடைய நற்பிரஜையை உரு வாக்குவதே கல்வியின் நோக்கம். இத்தகைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அமைக் கப்பட்ட நிறுவனமே பாடசாலை. பாடசாலை என்கின்ற நிறுவனம் தனித்து இயங்கமுடியாத தொன்று. அது சமூகத்தோடிணைந்து செய லாற்றுவதாலேயே சமூக நிறுவனம் என்று கூறப்படுகின்றது.

இந்த வகையில் சுன்னாகத்து மக்களின் அறிவுப் பசியை போக்குவதற்காக 1933இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாசாலை இவ் வருடம் பவளவிழா கொண்டாடுவதையிட்டு பேருவகை அடைவதில் நானும் ஒருவன். நான் இவ்வித்தியாசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்கும் பெரும்பேறைப் பெற்றேன்.

அப்பொழுது, தலைமை ஆசிரியராக இருந்தவர் தம்பிப்பிள்ளை வாத்தியார். இவ ருடைய காலத்தில் நல்ல தலைமைத்துவத் துடன் இவ்வித்தியாசாலை மிளிர்ந்தது. முந் நூறுக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்ற னர். கணித பாடத்தை கசப்பின்றிப் புகுத்து வதில் இவருக்கு நிகர் இவரே.

விஜயதசமி அன்று எனது கல்விக்கு அத்திவாரம் இட்டவர் இராசா வாத்தியார். இவர் மாணவ வளத்தை அதிகரிப்பதிலும், நினைத்த தைச் சாதிக்கவேண்டும் என்ற மனத்துணிவும், எத்தகைய பிரச்சினைகளாயினும் அவற்றை எதிர்கொண்டு செயலாற்றும் வல்லமையும் கொண்டவராக விளங்கினார். இவரது செயற் பாடு வித்தியாசாலையின் வளர்ச்சிக்கு தூண்டு கோலாய் அமைந்தது.

கண்டிப்போடும், சுறுசுறுப்போடும் கதிரை யில் அமராமல் வகுப்பறையைச் சுற்றிச் சுற்றி வலம் வந்து கற்பித்தலை மேற்கொண்ட பெண் ஆசிரியர் திருமதி தவமணி இராசையா. இவர் அ, ஆ... எழுத்துக்களை மண்ணில் எழுதிப் பழக்கியது என் மனதில் நீங்காத நினைவு களாக இன்றும் உள்ளது. கிட்டத்தட்ட 2km தூரத்தில் இவருடைய இல்லம் இருந்தபோதும், படலை திறக்குமுன்னரே பாடசாலை முன் காத்திருப்பார். நடந்து வருகின்ற இவ்வாசிரிய ருக்கு பின்னாலே ஒரு கூட்டம் அவரைத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும். அவரு டைய கற்பித்தற் செயற்பாட்டை ஏனைய ஆசிரி யர்கள் கவனிப்பார்களேயானால், அது அவர் களுடைய ஆசிரிய வாண்மை விருத்திக்கு பெரும் உதவியாக இருந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

நான் இவ்வித்தியாசாலையைவிட்டு உயர் கல்விக்காக வேறு பாடசாலை சென்றபோதும், இவருடைய துடிப்புமிக்க கல்விச் செயற்பாட்டை மற்றவர்களின் வாயிலாக அறிந்தேன். அறு பது வயதிலும், அயராது ஒரு விநாடியேனும் வீணாகாமல் கல்விச் செயற்பாட்டை மேற் கொண்ட உத்தம ஆசிரியர். இவரது அத்திவாரம், பலரை உயர் பதவி வகிக்க உதவியது என்றே கூறலாம்.

"ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது" என்பார் கள். இந்தவகையில் அனுபவக் கல்வியை எம்மவர்க்கு வழங்கியவர் திருமதி. செல்லம்மா செல்லத்துரை (பன்னக்கா). எப்போதும் நிதா னத்துடனும், பொறுமையுடனும் பன்னக் கலையை பயிற்றுவித்தார். பாடசாலையின் தெற்குப் புறத்தில் உள்ள தனியான அறையில்

அவரது கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றது. பன்னவேலைப் பாடம் என்றால் எங்கள் எல்லோருக்கும் நல்ல ஆர்வம். எப்போது அப்பாடம் வரும் என ஆவலோடு காத்திருப்போம்.

கையில் எப்போதும் பிரம்புடன் கணித பாடத்தைப் போதித்தவர் நடராசா ஆசிரியர். சிறந்த ஆளுமைமிக்க ஆசிரியராக அக்காலத்தில் விளங்கினார். கலையார்வத்தை வளர்ப்பதோடு பொறுமை என்ற நற்பழக்கத்தை மாணவர் மனதில் பதிய வைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் சித்திரபாடத்தைப் போதித்தவர் வேலுப்பிள்ளை ஆசிரியர். அவரிடம் அதிக தண்டனை பெற்ற மாணவர்களுள் நானும் ஒருவன். வார்த்தைகளை அளந்து பேசுபவர் வல்லிபுரம் ஆசிரியர். கட்டையான கம்பீரத் தோற்றம் கொண்ட இவர் "ஒழுக்கம் விழுப்பம் தரும்" என்ற உயரிய சிந்தனையை வாழ்க்கையில் எப்போதும் கடைப்பிடிக்கவேண்டும் என்று வலியுறுத்துவார். இவரைக்கண்டால் எல்லோருக்கும் அச்சம்தான்.

"வாசிப்பு மனிதனை பூரண மனிதனாக்கும்" என்ற சிந்தனையை எம்மனதில் பதித்தவர் திருமதி. தங்கம்மா மயில்வாகனம் (பழையக்கா). தொலைத்தொடர்புச் சாதனங்கள் வளர்ச்சியடையாத அன்றைய காலத்தில் உலகப் பொதுவிடயங்களை தானே தேடி அறிந்து அவற்றை எமக்குச் சொல்லித் தருவார். கல்வியைத் தேடி அறிதல் வேண்டும் என அடிக்கடி வலியுறுத்துவார்.

"முஷ்டி" (Boxing) விளையாட்டு என்றால் நினைவுக்கு வருபவர்கள் இளையப்பா வாத்தியாரும், கனகசபை வாத்தியாரும். கணிதத் துறையில் வல்லுநர்களாக இருந்தாலும், விளையாட்டுத் துறையிலும் நல்ல பயிற்சியாளர்களாக விளங்கினார்கள். பல மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கி மாவட்ட மட்டங்களில் பல வெற்றிகளைப் பெற்று வித்தியாசாலையின் புகழைப் பரப்பினர்.

நான் கல்விகற்ற காலத்தில் திருமதி இராசம்மா சிவானந்தம் (பாக்கியக்கா) ஆசிரியராகக் கடமையாற்றினார். ஆனால் அவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. எனினும் அவருடைய தன்னடக்கமும், அமைதியான சுபாவமும் மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அக்கால ஆசிரியர்களின் சீரிய ஒழுக்கமும், கடமையுணர்வும், பாடசாலையில் கொண்ட பற்றும், மாணவர்களை வழிப்படுத்திய திறனும், ஆசிரியர், மாணவர் மத்தியில் நிலவிய குடும்ப உறவும், அக்கால மாணவர்களை நல்ல நிலைக்கு இட்டுச் சென்றதென்றே கூறலாம்.

அன்றைய எங்கள் ஆசான்கள் ஆதலால் என்றும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

◆ ◆ ◆

ஓராண்டு நோக்கிருந்தால், பூக்களை வளருங்கள்
புத்தாண்டு நோக்கிருந்தால், மரங்களை வளருங்கள்
முடிவில்லா நோக்கிருந்தால், மனித குலத்தை வளருங்கள்.

**- கீழை நாட்டுப் பழமொழி.**

# கல்வியின் முக்கியத்துவம்

திரு. க. மணிவண்ணன்
*(பழைய மாணவன்)*
*கலைப்பீடம்,*
*யாழ் பல்கலைக்கழகம்.*

கல்வி என்பதைக் குறிக்கும் 'எடியுகேஷன்' என்ற சொல் 'எடுகோ' என்ற லத்தீன் மொழியிலிருந்து தோன்றியதாகும். அதற்கு "வெளிக் கொண்டுவா" எனப் பொருள் கொள்ளப்படுகிறது. நம் பண்பாட்டில் கல்வியின் உண்மையான நோக்கம் மாணவர்களின் அறிவைப் பெருக்குவதும், அனுபவத்தைப் பெறுவதற்கும் அவர்களின் நல்ல பழக்க வழங்கங்களை வளர்த்து எதிர்காலத்தைச் சிறப்புடன் அணுகச் செய்வதுமேயாகும். ஒரு சமுதாயத்தின் நாகரிகத்தை எடுத்துக்காட்டுவது கல்வி. அதனால் கல்வியானது ஆதிகாலந்தொட்டு இன்றுவரை எல்லோராலும் போற்றப்பட்டு வருகிறது. ஒருவனிடம் மறைந்து கிடைக்கும் ஆற்றலைத் தோண்டி வெளிக்கொணர்வதாகும். "கல்வி" என்பது வளர்த்தல் என்னும் பொருளையுடையது என்பர். கல்வியினுடாகப் பல்வேறுபட்ட அறிவுத் துறைகளும் ஆற்றல்களும் வளர்கின்றன. ஆகவே கல்வி அறிவை வளர்த்தலால் அது "வளர்த்தல்" என்னும் பொருளையேயுடையது என்பதுதான் பொருந்தும் என்று கூறுகிறார் "ஆடம்ஸ்" என்னும் கல்விச் சிந்தனையாளர். ஒருவன் பெறும் பல்வகைப்பட்ட அனுபவங்களே கல்வியாகும். அனுபவங்களினூடாகவே ஒருவன் அறிவைப் பெறுகிறான். கல்விச் சிந்தனையாளர் "ஜோன் டூயி" என்பார் " கல்வி என்பது அனுபவங்களை அனுபவங்களால், அனுபவங்களினூடாக அளிப்பதாக அமைய வேண்டும்" என்று கூறுகிறார். "மனிதருக்குள் மறைந்து கிடக்கும் பூரணத்துவத்தை வெளிக் கொணவர்தே கல்வி" என்பார்.

**"மகாத்மா"**

"கல்வி என்பது குழந்தைகளிடமிருந்து முழு மனிதனை வெளிக்கொணர்வது; முழு மனிதனை உருவாக்குவது; அவனுடைய ஆளுமையை வளர்ப்பது. எனவே மனிதனின் உடல், உள்ளம், ஆன்மா இருதயம் என்பவற்றை ஒருமித்த வகையில் விருத்தி செய்வது; ஆளுமையை அடையச் செய்வதே கல்வியின் பயனாகும்" என்று கூறுகிறார்.

ஆங்கில கவிஞனான வில்லியம் வேர்ட்ஸ் வேர்த் "மனிதத் தன்மையினை மனிதர் பெறப் பயிற்சியளிப்பதே கல்வி" என்கிறார். மனிதத் தன்மையானது அறவழி நடத்தலாகும். வங்கக் கவிஞர் ரவீந்திரநாத் தாகூர்" சுதந்திரமான சிந்தனையும் கலையை உணரும் அழகுணர்ச்சியும் கலையை உணரும் அழகுணர்ச்சியும் இரக்க சிந்தனை யும் படைப்பாற்றலும் ஒருவனிடத்தில் வளரத் துணைபுரிவதே கல்வி என்றார். கல்வி என்பது ஓர் ஆய்வு என்ற முடிவுக்கு வரலாம்போல் தோன்று கின்றது. ஒருவன் தன்னையும் தான் வாழும் சூழலையும் அறிந்து கொள்ளத்துணை நிற்பது கல்வி. தான் வாழும் சூழலையும் சமூகத்தையும் அதன் பாரம்பரியத்தையும், நாகரிகத்தையும் பண்பாட்டையும், ஆராய்ந்து உணரவும் அவற்றைப் பேணிப்பாதுகாக்கவும் ஒரு தலை, முறையிலிருந்து அடுத்த தலைமுறையினருக்குப் பரப்பவும் சிறந்த ஒரு சாதனமாகத் திகழ்ந்து வருகிறது. சுருங்கக் கூறின் சமுதாயம் காண விழைகின்ற சான்றோனை உருவாக்கிச் சிறந்த ஒரு குடிமகனை நாட்டுக்கு அளிக்க உதவுவதே கல்வியின் பயனாகும். இதன் மூலம் தனிமனிதன் தன்னுடைய கலாசாரத்தைத் தெரிந்துகொண்டு சிக்கல் இல்லாமல் வாழக் கற்றுக் கொள்கிறான்.

கல்வியின் உலகளாவிய செயற்பாடாகக் கருதுவதாவது உருவாக்கத்தக்கதாகவும், வளர்ச்சியடையத்தக்கதுமான மனித இனத்

தைத் தகுதி உடையதாக்கும் நிலை மற்றும் அம்மக்களின் செயற்படுத்தல் என்று கியூபர் (Cuber) கருத்துத் தெரிவிக்கிறார். ஒவ்வொரு சமுதாயமும் சீர் கெடாமலிருக்கக் கல்வி இதைச் செய்து வருகிறது என்றும் அவர் கூறுகிறார். குழந்தைகளுக்கு நாட்டவர் வழக்குகளும், வழக்காறுகளும் போதிக்கப்பட்டு சமுதாயம், நிலைபெறச் செய்கிறது. இவ்வாறு சமுதாயப் பண்பாடு மரபுரிமை பாதுகாக்கப்படுகிறது. இவ்வாறு எல்லாச் சமுதாயத்திலும் எல்லா இனத்திலும் தவிர்க்கமுடியாத ஒன்றாக இருக்கிறது.

கல்வி நவீன சமூகத்தில் மதம், அரசாங்கம், பொருளாதாரம் மற்றும் குடும்பம் போன்றவற்றில் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இது குடும்பத்தின் அமைப்பு, திருமணம் ஆகியவற்றிலும் நவீன கல்வியினால் நிறைய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. குடும்பத்தில் கணவன் மனைவி மற்றும் குழந்தைகளிடையே உறவுகளையும், புதிய செயற்பாடுகளையும் ஏற்படுத்துகின்றன. நவீன சமூகத்தில் கல்வி பல்வேறு வர்க்கங்களின் செயல்கள் மற்றும் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற ஒரு சிறப்பான அமைப்பாகத் திகழ்கிறது. அரசியல் ரீதியில் நவீன கல்வி குடியரசாக விளங்குகிறது. கல்வி, நாட்டுப்பற்றின் தத்துவத்தை உணர்த்துகிறது. மதச்சார்பற்ற எண்ணங்களின் மூலமாக மரபுசார்ந்த நம்பிக்கையைத் தற்காலப் போக்கிற்கு ஒவ்வாததாக்கிவிட்டது. நவீன கல்வியின் தனிச்சிறப்பு என்னவெனில் அது எல்லாச் சமுதாயங்களிலும் எல்லாச் செயல்களிலும் ஒரு அடிப்படையான அஸ்திவாரமாக அமைந்திருக்கிறது.

"சோக்கிரட்டீஸ்" கல்வி பற்றிக் கூறப் புகுந்தபோது கல்விக்கு எல்லை இல்லை. கல்வி என்பது வாழ்க்கை. அதை அடையக் கூடிய ஒரே வழி சுய அனுபவமும் அறிவு சேர்க்கும் ஊக்கமும், தளராத அறிவுத்திறனுமாகும் என்று கூறியுள்ளார். கல்வி என்பது வாழ்க்கை என்னும் கருத்தை ஏற்றுக்கொண்ட பிளேட்டோ அத்தகைய வாழ்க்கையிலிருந்து பெறும் அறிவு அனுபவத்திலிருந்து உதிக்கவேண்டும். அந்த அறிவு சிந்தனையைத் தூண்டவேண்டும். சிந்தனையைத் தூண்டல் புதுத்தன்மை பெற்று முழுமை பெற்றதாக எல்லோருக்குமுரிய பொதுச் சொத்தாக மாறவேண்டும் எனக் கூறினார். எனவே கல்வி வாழ்க்கையையும் சமூக முன்னேற்றத்தையும் நோக்கமாகக் கொண்டிருக்கவேண்டும். பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகள் சமுதாயப் பிரதிபலிப்பாக விளங்கவேண்டும்.

♣ ♣ ♣

எல்லோரிடமும் இணக்கமாக இருங்கள். ஆனால், ஒரு சிலரிடம் மட்டும் நெருக்கமாக இருங்கள். உங்களது முழு நம்பிக்கையை அவர்களிடம் வைக்கும் முன், அந்த ஒரு சிலரை நன்றாகச் சோதித்துப் பாருங்கள். உண்மையான நட்பு என்பது மெதுவான வளர்ச்சியுடைய ஒரு செடியாகும். அது முழு வளர்ச்சியைப் பெறுவதற்கு முன்னால் துன்பத்தின் அதிர்ச்சியை அனுபவிக்கவும் தாங்கவும் வேண்டும்.

**- ஜோர்ஜ் வாஷிங்டன்.**



# மனிதனை மனிதம் மிக்கவனாக வளர்க்க இளம்பராயத்திலே சாரணியத்தைப் பின்பற்றுவோம்

**க. பரணீதரன்**
*பழைய மாணவன்*
*(சாரணன்)*

மாணவ சமுதாயம் சாரணியத்தில் இணைந்து கொள்வதன் மூலம் தம்மை ஆளுமை கொண்ட மனிதனாக மாற்றியமைக்கமுடியும். இப்புனிதமான சாரணியத்தில் உள்ள விடயங்களை பார்க்கும்போது இது புலனாகும். சாரணன் எனப்படுபவன் நம்பிக்கைக்கு பாத்திரமானவன், பற்றுதியுடையவன், நேசமும் மரியாதையுமுடையவன், மற்றொரு சாரணனுக்கு சகோதரன், தைரியமுள்ளவன், பிராணிகளின் தோழன், ஒத்துழைப்பவன், மனமகிழ்வுடையவன், சிக்கனமானவன், சிந்தனை சொல் செயல்களில் தூய்மையானவன் இவை எல்லாம் இளம் பருவத்திலேயே சாரணியத்தின் ஊடாக மாணவர்களிடையே செல்லும்போது நல்ல மனித நேயப்பண்புகளை கொண்ட மனிதனை உருவாக்கமுடியும். மனிதன் என்பது தானாக உருவாக இவை வழிகோலும். சாரணியத்தின் பலவேறுபட்ட வளர்ச்சிப் படிமுறைகள் உண்டு. ஆரம்பபிரிவு மாணவர்கள் குருணைச் சாரணர்ள என்றும் அதன்பின்பு கனிஷ்ட, சிரேஷ்ட சாரணர் ஆகவும், 18 வயதுக்கு மேல் திரி சாரணராகவும் செயற்படமுடியும். தொடர்ந்து சாரணத் தலைவராக இருந்து ஏனையவர்களை வழிப்படுத்தமுடியும். சாரண வாழ்க்கைக் காலத்தில் பல்வேறு பயிற்சிகளைப் பெற்று தகைமை அடையின் தகைமைச் சின்னங்களைப் பெறமுடியும்.

இது தானாகவே தலைமைத்துவப் பண்பை வளர்க்கும். அங்கத்துவ சின்னம், சாரண விருது, ஜனாதிபதி விருது எனப் பல வகையான விருதுகளைப் பெறமுடியும். இதனால் தரம் உயர்த்தப்படும் சாரணத் தலைவர்களில் அதி உயர் விருதாக தருசின்னம் காணப்படுகிறது. பல்வேறுபட்ட பயிற்சிகள் மூலம் தருசின்னம் எனப்படும் அதிஉயர் விருதைப் பெறமுடியும். இது எல்லாத்துறையில் இருப்பவர்கள்கூட பெற்றுச் சிறந்த சமூக சேவையாளராக சமூகத்துக்கு உதவமுடியும்.

சாரணியம் என்பதை உலக நாடுகளுக்கு அறிமுகப்படுத்தியவர் மேஜர் ஜெனரல் றொபேட் ஸ்ரிஸ்ன்சன் சிமித் பேடன் பவல் பிரபு அவர்களே. அவர் 1857ம் ஆண்டு மாசி மாதம் 22ம் நாள் லண்டன் நகரில் பிறந்தார். அவர் 1907ல் இச்சாரண இயக்கத்தை ஆரம்பித்தார். இது உலக நாடுகளில் எங்ஙனம் பரவத் தொடங்கியது. நமது நாட்டில் 1912ல் மாத்தளை கிறிஸ்தவக் கல்லூரியில் முதன் முதல் இவ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இவரது சகோதரியும், துணைவியாரும் இவ் இயக்கத்தில் பெண் சாரணிகளாகப் பணியாற்றினர். பேடன் பவல் பிரபு படகு ஓட்டல், வேட்டை ஆடல், ஆடல், பாடல், படம் வரைதல், நடிப்பு, சமையல் என்பவற்றிலும் வல்லவராக விளங்கினார். சாரணிய வாழ்க்கையூடாக முன்பு கூறியதுபோல் குழுவாகச் செயற்படும் திறன், மனப்பாங்கு விருத்தி கூட்டாகச் செயற்படுவதன் மூலம் காரியங்களை இலகுவாகச் செய்துமுடிக்கலாம். இதற்கு சாரணியம் ஒரு முன் உதாரணம்.

ஒரு சாரணன் முறையான பயிற்சிகளைப் பெற்று வளர்ச்சி பெறுவானாயின், நிச்சயமாக அவன் வீட்டிற்கும் தேசத்திற்கும் பயனுள்ள நற்பிரஜையாக உருவாகமுடியும். சாரணனாக இணைத்துக்கொண்ட ஒருவன் இறக்கும்வரை

சாரணனாக இருப்பான். நமது நாட்டில் சார ணிய ஆலோசனைச் சபையில் போஷகரும், பிரதம ஆணையாளருமாக ஜனாதிபதியே நியமிக்கப்படுவார். பதில் போஷகர்களாக பிரதம நீதியரசர், உயல்கல்வி அமைச்சர், பிரதம மந்திரி ஆகியோர் நியமிக்கப்படுவர். இதிலிருந்து சாரணியத்தின் பெருமையை விளங்கிக் கொள்ளமுடியும்.

மேலும் உயர்கல்வி வாய்ப்புக்கள் சார ணியத்தில் உள்ளவர்களுக்கு அதிகம் காணப் படுகிறது. வெட்டுப்புள்ளி அடிப்படையில் பல் கலைக்கழக புகுமுகத்திற்கு சாரணர்களுக்கு 5 புள்ளிகள் வழங்கப்படுகின்ற நடைமுறை குறிப்பிடத்தக்கது.

மானிடப் பண்புகளை மனித சமுதாயத் தில் வளர்க்க பாடசாலை மாணவ மாணவியர் சாரணியத்தில் இணைந்து கொள்ள எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் பங் களிப்பு வழங்க முன்வருவது வரவேற்கத்தக்க தாகும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, பெரியோரை மதித்தல், தலைமைத்துவம், நேரமுகாமைத்துவம் போன்ற நற்பண்புகள் அனைத்தும் தானாகவே மாணவச் செல்வங் களுக்கு ஏற்படும். இது ஓர் அனுபவக் கற்ற லாகவே அமையும். பேடன் பவல் பிரபுவின் நற்பணியினாலே உலக நாடுகளில் அவர் புகழ் மேலோங்கி நிற்கின்றது. அவ்வழியில் நமது பாடசாலை மாணவச் செல்வங்களும் இப் பவளவிழா ஆண்டில் பிரபுவின் வழியில் வாழ்ந்து பாடசாலையில் புகழையும் வளர்த்து நாமும் நற்பிரஜைகளாவோம்.

♣ ♣ ♣

ஒன்றும் செய்யாமல் காத்திருப்பவர்களுக்கும் சில நன்மைகள் கிடைக்கலாம். ஆனால் அவையெல்லாம் துடிப்புடன் செயலாற்று பவர்களுக்குக் கிடைத்ததுபோக எஞ்சியிருப்பவையே.

**- ஆப்ரஹாம் லிங்கன்**



ஒரு பையனைத் தந்தை கேட்டார் :

"தம்பி! மீன்கள் நீரிலே வாழ்வது உனக்கு ஆச்சரியமாகத் தோன்றவில்லையா?"

பையன் சொன்னான் :

"அது ஆச்சரியமில்லை அப்பா! தான் வாழ்ந்த நீரிலேயே அது கொதித்துக் குழம்பாகிறதே, அதுதான் ஆச்சரியம்!"

இறைவா! மனிதனுக்கு நீ எண்ணங்களை வைத்ததில் ஆச்சரியமில்லை. அந்த எண்ணங்களிலேயே அவன் வெந்து வெந்து அழிகின்றானே, அதுதான் ஆச்சரியம்!

**- கவிஞர் கண்ணதாசனின் புஷ்ப மாலிகாவிலிருந்து**



பவளவிழாச் சபை



விழாக் குழு



மலர்க் குழு



பழைய மாணவர் சங்கம்

# 1990களின் நினைவுகளோடு...

**ச. அனிதா** (B.A.)
*(பழைய மாணவி)*

பாடசாலை வாழ்க்கைக் காலம்
சிட்டுக்குருவிகளாய் சிறகடித்து
மகிழந்திருந்து
கவலைகளை மறந்திருந்த பொற்காலம்
மீண்டும் திரும்பாத அந்தக்காலம்
மறக்கமுடியாத ஞாபகங்களாய்
அன்பான அதிபர் கணக்கில் மாணவர்கள்
மழைவிட்டால் மட்டும் கண்டிப்பானவராய்
மாறிவிடும் ஏரம்பமூர்த்தி ஐயா!
தமிழைத் திருத்தமுறக் கற்றுத்தந்த
கனகசபை (குஞ்சக்கா) ஆசிரியை
கல்வியோடு கலந்து ஒழுக்கத்தையும்
போதிக்க முருகன்போல் வந்துநின்ற திருமுருகன் ஆசிரியர்
காதிலே கிள்ளி மறந்த விடயங்களை
ஞாபகத்திற்கு கொண்டுவரும் ரேவதி ஆசிரியை
தமிழ்த்தினப்போட்டியென்றால் எமது
பாடசாலையை வெற்றிகள் பல பெறச்செய்து
புகழ்பெற்றுத் தந்த வளர்மதி ஆசிரியை
எல்லா மாணவர்களிலும் அன்புகொண்ட
ஜெயா (அக்கா) ஆசிரியை
பாடசாலையின் ஆசிரியர்களாய் இல்லாவிடினும்
பிரப்பந்தடி கொண்டு உடற்பயிற்சி அளித்த
வைத்தீஸ்வரன் ஆசிரியர்
இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளை
பயிற்றுவித்த சுகந்தி அக்கா, செல்வி அக்கா
உங்கள் யாவரையும் மறக்கமுடியுமா?

♣ ♣ ♣

# வித்தியாசாலையின் மலர்ச்சியிலும் வளர்ச்சியிலும் பங்காற்றிய பெரியோர்கள் நினைவாக...

வாழ்க வித்தியாசாலை வாழ்க வித்தியாசாலை
வாழிய வாழியவே
சுன்னை வளமுற உதித்த நற்சாலை
வாழிய வாழியவே.

நாராயணனின் சிந்தையில் உதித்த
ஞான சம்பந்த வித்தியாசாலை
திருஞான சம்பந்த வித்தியாசாலை
வாழிய வாழியவே

(வாழ்க)

கந்தைய வள்ளலின் கருணை உள்ளத்திலும்
கனக சபையின் கனதன கொடையிலும்
மலர்ந்த ஞான சம்பந்த வித்தியாசாலை
வாழிய வாழியவே

(வாழ்க)

ஐயாக்குட்டியின் அயராத் துடிப்பிலும்
இராமலிங்கத்தின் இடையறா முயற்சியில்
வளர்ந்த ஞானசம்பந்த வித்தியாசாலை
வாழிய வாழியவே

(வாழ்க)

தருமசீலன் தம்புவின் தயவின்
முருகேசுவின் முகாமைத்துவத்திலும்
வளர்ந்த ஞான சம்பந்த வித்தியாசாலை
வாழிய வாழியவே

(வாழ்க)

கற்க மறுப்பவர் வாழ மறுப்பவர்
என்று கடமை புரியும்
அதிபர் ஆசிரியர் மாணவர் அனைவரும்
வாழிய வாழியவே

(வாழ்க)

வாழ்க வித்தியாசாலை வாழ்க வித்தியாசாலை
வாழிய வாழியவே
சுன்னை வளமுறை உதித்த நற்சாலை
வாழிய வாழியவே
என்றும் வாழிய வாழியவே
நன்றாய் வாழிய வாழியவே.

*முன்னாள் அதிபர்*

**அமரர் கா. ஐயம்பிள்ளை அவர்களின்**

*நாட்குறிப்பேட்டிலிருந்து*

சுதந்திரம் என்பது மிகவும் அருமையான பொருள் அதை என்ன விலை கொடுத்து வாங்கினாலும் வாங்கலாம். ஒரு மனிதன் தன் உடம்பைத் தவிர வேறெந்த உடம்பிலும் புகுந்து வசிக்க விரும்பமாட்டான். அதேபோல் ஒரு தேசம் மற்றொரு தேசத்தின்கீழ் அடிமைப்பட்டு வாழ மனப்பூர்வமாக விரும்பாது. சுதந்திர உணர்வு என்து எந்த ஒரு ஜீவராசிக்கும் இயல்பாக எழுகிற ஓர் உணர்வாகும். இது கடவுளின் அருளாகும். அடிமை நிலை கடவுளின் கட்டளைக்கு நேர் விரோதமான ஒரு நிலையாகும்.

*- மகாத்மா காந்தி -*

## Flash Back

- **நீங்கள் எப்படி இருந்தீர்கள்?**
- **நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்?**
- **நீங்கள் எப்படி இருப்பீர்கள்?**
- **குறிப்பிட்டுக் கூறும்படியாக நீங்கள் வாழ்க்கையில் சாதித்தது என்ன?**

வாருங்கள்!
ஓர் ஓய்வான சூழ்நிலையில்
இந்த தனிப்பட்ட அம்சங்களைப் பற்றி பேசுவோம்.

# English in SriLanka

**Mrs. Thusianthy Sivakumaran**
*Teacher*
*(Primary Trained)*
*J/ Chunnakam Thirugnanasampanthar Vidyasalai.*

When the English came to our country they of course brought their language with them. English makes us full; it increases our knowledge; it betters our skills. At first of course very few Sri Lankans learnt it. But now it is spoken, written and read by large numbers and it is the medium of instruction in colleges and the upper classes of some schools. In Sri Lanka, it is high time the government introduce a bill to the effect compulsary second language for the that English should be made the G.C.E (O/L) exam. To us a very sound knowledge of English is a must we haven't good books on science or maths in our native languages. Hence, we are unable to study science or maths without knowledge of English. The students of medical and E-faculty are bound to study English. A good knowledge of English is useful to all students of higher studies. Our Sri Lankan students have to read more and more books to update their English knowledge. They also need to know what is happening around the world. It can happen only trough an international language.

It is the language of mass communication. There has been a great revolution in the fields of information and education with the coming of television and computer. The internet and fibre optics communication net works have given tremendous momentum to the integration of international economics through facilitation of trade and financial Viability. Better an more effective methods of receiving information and passing them into the masses have been possible with this system. All these facilities demand more and more people capable of handling English with a high degree of efficiency.

English is the language of trade, we need more people who could use English to carryout the task demanded by the world trade. The technology expects without communicative fluency in English cannot fully activate the process of global marketing.

Communicating in English serves in numerous ways. First and for most paves the quick way for economic development. Secondly in crates a healthy understanding. Thirdly it lays the foundation for an exchange of ideas of multi cultural activities. Most people believe that language English could act as a link language to promote good relations among the various communities of our country.

English is the language of the united nations. Therefore it is very important that we learn good cultural English. Nowadays a knowledge of English introduces a man to the society mean educated one.

♣ ♣ ♣

# பொது அறிவு

1. பழங்களில் காணப்படும் உயிர்ச்சத்து.
   விற்றமின் C
2. காடு அழிப்பதனால் மழைவீழ்ச்சி குறையக் காரணம்?
   நீராவியாகும் தன்மை குறைகிறது.
3. கொடிய வரட்சிக் காலத்தில் மணற் கரைகளில் சூரிய ஒளி முறிவடைவதால் நீர் நிலை போன்று தோன்றுவது எது?
   கானல் நீர்
4. உடற்பயிற்சிக்கு உகந்த நேரம்?
   காலைநேரம்
5. கடல்வாழ் உயிரினங்களில் பாலூட்டி எது?
   திமிங்கிலம்
6. அணில் தாவிப்பாயும்போது அதன் உடலில் சமனிலையில் வைத்துக்கொள்ள பயன்படும் உறுப்பு
   வால்
7. எமது நாட்டின் வர்த்தகப் பயிர்கள் எவை?
   தேயிலை, இறப்பர், தென்னை
8. இலங்கையில் பிரதான கனியப்பொருட்கள் எவை?
   இரத்தினக்கல், காரீயம், இல்மனைட், சுண்ணாம்புக்கல்
9. இலங்கையின் ஜனாதிபதி யாரால் தெரிவு செய்யப்படுவார்?
   மக்களால்
10. பின்வருவனவற்றை கண்டுபிடித்தவர் யார்?

| | |
|---|---|
| மின்குமிழ் | - தோமஸ் அல்வா எடிசன் |
| நீராவிக் கப்பல் | - ஸ்ரீவின்சன் |
| வானொலி | - மார்க்கோணி |
| தந்தி அனுப்புதல் | - மோர்ஸ் |
| தொலைக்காட்சி | - சுவாகிரின் |
| மின்கலம் | - உவோல்ற்றா |
| புவியீர்ப்பு | - நியூற்றன் |
| ஆகாய விமானம் | - ரைட் சகோதரர் |

11. குட்டியை வயிற்றுப் பகுதியில் வைத்துச் செல்லும் மிருகம் எது?
    கங்காரு
12. இலங்கை மக்களின் பிரதான உணவு எது?
    நெல்லரிசிச்சோறு.
13. இலவச சீருடை பாடசாலைகளில் வழங்கும் திட்டம் நடைமுறைக்கு வந்த ஆண்டு எது?
    1992
14. பூமியிலுள்ள ஒரு மனிதனின் நிறை சந்திரனில் எவ்வளவாக இருக்கும்?
    1/6 பங்கு (பூமியில் 60kg எனில் சந்திரனில் 10kg)
15. மனித உடலில் உள்ள இரத்த வகை எவை?
    A, B, AB, O

16. பகலில் ஏன் நட்சத்திரங்கள் தெரிவதில்லை?
சூரிய ஒளியின் பிரகாசத்தால் அவை தெரிவதில்லை.

17. இலங்கையில் மின்வெட்டு அமுலுக்கு வருவதற்கான முக்கிய காரணம் யாது?
நீர் தேக்கங்களில் நீர் வற்றிவிடுதல்.

18. பாடசாலையில் கொண்டாடப்படும் நிகழ்ச்சிகள் சில கூறுக.
நவராத்திரி, தமிழ்த்தின விழா, ஆசிரிய தின விழா

19. தமது நாட்டின் வெப்பநிலைக்கு ஏற்ற துணி வகை எது?
பருத்தி

20. கிராம மட்டத்தில் குழந்தைகளின் போசாக்கின்மைக்கு அரசினால் வழங்கப்படும் போசாக்கு உணவு எது?
திரிபோசா

21. காசுக் கட்டணங்களை எந்த அலுவலகங்கள் மூலம் அனுப்பலாம்?
தபால் (அஞ்சல் அலுவலகம்)

22. இலங்கைக்கு மட்டுமே உரித்தான சில விலங்குகளை எழுதுக.
மரஅணில் / காட்டுச்சேவல் / மரநாய் / கானாங்கோழி

23. வங்கியில் சேமிப்பதால் ஏற்படும் நன்மைகள் 2 தருக.
பணத்திற்குப் பாதுகாப்பு கிடைக்கும், வட்டி கிடைக்கும்.

24. பின்வருவனவற்றுள் தொழிற்சாலைகள் அமைந்துள்ள இடங்கள் எவை?

| | |
|---|---|
| கண்ணாடி | - நாத்தாண்டியா |
| ஒட்டுப்பலகை | - ஜின் தோட்டை |
| ரயர் ரியூப் | - களனி, களுத்துறை |
| கட்டிப்பால் | - பொலநறுவை |
| எண்ணெய் சுத்திகரிப்பு | - சப்புகஸ்கந்த |
| ஓடு | - ஒட்டிசுட்டான், அந்தாண்டிய |
| உருக்கு இரும்பு - ஒருலெலவில் | - ஒருவெல |
| இல்மனைட் சுத்திகரிப்பு | - புல்மோட்டை |

25. ஐதரசன் வாயு நிரப்பப்பட்ட பலூன் மேல்நோக்கிச் செல்வதற்கு காரணம் என்ன?
வளியிலும் பாரம் குறைந்த வாயு என்பதால்

26. உருண்டையான பூமியில் வசிக்கும் நாம் விழாமலிருப்பதன் காரணம் என்ன?
பூமியின் ஈர்ப்பு சக்தி

27. இரவு பகல் உண்டாகும் காரணம்?
புவிச் சுழற்சி

28. நகரங்களில் குடிநீரை சுத்திகரிக்க உதவுவது எது?
குளோரின்

29. மனித சரீரத்தில் (உடம்பில்) உள்ள எலும்புகள் எத்தனை?
206

30. வளர்ந்த மனிதலுக்கு மொத்தம் எத்தனை பற்கள்?
32

**செல்வி. ச. நிருஷா**
*தரம் - 5.*

# விடுகதை

1. ஒன்றையொன்று பார்க்காது ஒன்றாய் எதையும் பார்க்கும் அது என்ன?
   **கண்கள்.**
2. களத்து மேட்டு நெல்லைக் காவல் காக்கும் விளக்கு அது என்ன?
   **நிலா**
3. மணமில்லாத மலர்கள் மாலை கட்டாத மலர்கள் அது என்ன?
   **நட்சத்திரங்கள்**
4. நாண் ஏற்றாத வில்; நாயகன் தொடாத வில் அது என்ன?
   **வானவில்**
5. பலகையில் எழுதாத பலப்பம்; பாப்பா உடைக்காத பலப்பம் அது என்ன?
   **எழுத்தாணி**
6. கொத்தனார் கட்டாத வீடு, குடிக்கூலிக்கு விடாத வீடு அது என்ன?
   **தூக்கணாங்குருவிக்கூடு**
7. வேலி போடாத வயல்; விதைத்தாலும் விளையாத வயல் அது என்ன?
   **வானம்**
8. அலைகள் இல்லாத குளம், ஆட்கள் இறங்காத குளம் அது என்ன?
   **கண்**
9. இரவில் கண்விழிப்பாள் பகலில் தூங்குவாள் அவள் யார்?
   **அல்லிப்பூ**
10. காட்டில் மேட்டில் பாடுவான், கச்சேரியில் பாடமாட்டான் அவன் யார்?
    **வண்டு**
11. மணியோசை வரும் முன்னே செய்தி வரும் பின்னே அது என்ன?
    **தொலைபேசி**
12. பஞ்சை தின்று படுத்தே கிடந்தவன் உறங்கவும் வைப்பவன் அவன் யார்?
    **தலையணை**
13. தண்ணீரில் இணைந்தவர்களை வெந்நீர் பிரித்து வைக்கும். அவன் யார்?
    **பச்சை முட்டை, அவித்த முட்டை**
14. சிவப்பனுக்கு நீர் ஊற்றினால் கருப்பன் ஆவான் அவன் யார்?
    **நெருப்பு**
15. உடன் வருவான் ஆனால் துணைக்கு வரமாட்டான் அவன் யார்?
    **நிழல்**
16. பாடிப் பறப்பவன் பயமுறுத்தித் திரிபவன் அவன் யார்?
    **நுளம்பு**
17. சுமக்கத் தெரிந்தவனுக்கு பாடவும் தெரியும். அவன் யார்?
    **கழுதை**
18. நின்றவன் நின்றபடி மாலைகளைச் சுமந்த படி நின்றான். அவன் யார்?
    **சிலை**
19. கையில் உள்ள கரும்பு தண்ணீரைக் கண்டால் விரியும் அது என்ன?
    **குடை**
20. தேய்வான் செருப்பும் அல்ல வளர்வான் மரமும் அல்ல. அவன் யார்?
    **நிலா**

**செல்வி. இ. தனுசியா**
*தரம் - 5.*

உங்கள் வாழ்க்கையின் எந்தச் சவாலையும் பூரணமாக வெற்றி கொள்ளத் தேவையான அனைத்துத் திறன்களும் உங்களிடம் அமையப் பெற்றுள்ளது. உங்களிற்குத் தேவையானது எல்லாம் அடையவேண்டும் என்ற ஒரு தேவையேயாகும்

# கிளி

கிளியே கிளியே பறந்து வா
பச்சைக் கிளியே ஓடி வா

பாலும் சோறும் நான் தருவேன்
படுக்க இடமும் நான் தருவேன்
பசுமை போன்ற பச்சை நிறம்
கொவ்வைப் பழம்போல் சொண்டாகும்.
இந்த நிறங்கள் உனக்குமே
யார்தான் இங்கே தந்ததுமே (பச்சைக்கிளியே)

பழங்கள் தந்தால் உண்பாயோ
பயற்றங்காயும் வேண்டுமோ
தானியங்கள் தந்தாலே
நறுக்கு நறுக்கிப் போடாயோ
நல்ல செல்லப் பிராணியே
நல்ல கதைகள் கூறாயோ?

**த. சகானா**
*தரம் - 4*

# நான் ஓர் ஓவியரானால்

1. ஓவியக்கலை மிகவும் உயர்ந்த கலையாகும்.
2. கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்கும் அழகுக்கலை அது.
3. இக்கலையில் எனக்கு நாட்டம் அதிகம் உண்டு.
4. சித்திரமும் கைப்பழக்கம் என்பர்.
5. இந்த உண்மையை நன்குணர்ந்து இளமை முதல் சித்திரங்கள் வரைவதில் ஆர்வமுடன் செயற்பட்டு வருகிறேன்.
6. எதிர்காலத்தில் நல்ல ஒரு ஓவியராக வர நான் பெரிதும் விரும்புகிறேன்.
7. நான் ஓவியரானால் எனது மனதில் வரும் கற்பனைகளை வண்ண ஓவியங்களாக வரைவேன்.
8. எழில்மிகும் இயற்கைக் காட்சிகளைத் தூரிகைகள் கொண்டு வண்ண ஓவியங்களாக வடிப்பேன்.
9. சிறுவர் முதல் பெரியோர் வரை பார்த்து இரசிக்கத்தக்க படங்களை வரைவேன்.
10. பத்திரிகைகளுக்கும் நூல்களுக்கும் தேவைப் படும் ஓவியங்களை வரைந்து கொடுப்பேன். இதன் மூலம் அதிக வருமானத்தையும் பெறுவேன்.
11. வருடந்தோறும் நான் வரைந்த சித்திரங் களை மக்கள் பார்த்திட உதவும் வகையில் ஓவியக் கண்காட்சிகளை நடத்துவேன்.

**ந. கஜலக்ஷனா**
*தரம் - 5.*



# உங்களுக்குத் தெரியுமா?

1. இலவசக் கல்வியின் தந்தை - CWW. கன்னங்கரா C/945
2. இலவசப் பாடநூல் விநியோகம் - 1980
3. இலவசச் சீருடை விநியோகம் - 1997
4. இலங்கை மக்களின் எழுத்தறிவு வீதம் 92.8%
5. ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வதிவிடம் - ஜனாதிபதி மாளிகை
6. பிரதமரின் உத்தியோகபூர்வ வதிவிடம் - அலரி மாளிகை
7. சபாநாயகரின் உத்தியோகபூர்வ வதிவிடம் - மும்தாஜ் மஹால்
8. உலகின் முதலாவது பெண் பிரதமர் - சிறிமாவோ பண்டாரநாயக்கா
9. உலகின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட பெண் ஜனாதிபதி - சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க.
10. இலங்கையின் மொத்த சனத்தொகையில் ஆண்கள் 50.5% - பெண்கள் 49.5%
11. சுதந்திர வர்த்தக வலயம் அமைந்துள்ள இடங்கள் - கொக்கல, கட்டுநாயக்கா, பியகம.
12. இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றும் உரைகளை பதிவு செய்யும் புத்தகம் - ஹன்சார்ட்

**ஜெ. அனுஜா டில்றுக்சி**
*தரம் - 4.*

# உங்களுக்குத் தெரியுமா?

உயரப் உயரப்போகுது
ஊஞ்சல் உயரப் போகுது
விண்ணைத்தொட்டு
மண்ணைத் தொட்டு
வேகமாக ஆடுது.

அஞ்சலாவும் ஆமினாவும்
அமர்ந்து ஊஞ்சல் ஆடினம்
ஆகாயத்தை எட்டிப் பார்த்து
ஆனந்தமாய் பாடினம்

கயிற்றை மரத்தில் கட்டி வைத்துக்
கடினப் பலகை மெத்தையிட்டு
காதர் கந்தன் உன்னி ஆட்ட
கவிதை சொல்லி ஆடினம்

சிறுவர் நாங்கள் பொழுதுபோக்க
சேர்ந்து ஊஞ்சல் ஆடுவோம்
சிந்தை மகிழக் கதைகள் பேசிச்
சிரித்து குதித்து ஆடுவோம்.

**ஜெ. சிந்துஜா**
*தரம் - 4*



# சிறுவர்களும் பாடசாலை வாழ்வும்

சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்லவேண்டிய வயது தற்போது ஆறு வயதாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்தச் சிறுவர்கள் தமது ஆறு வயதில் பாடசாலை என்னும் கல்விக்கூடத்திற்கு கல்வி என்னும் படகில் காலடி எடுத்து வைக்கின்றனர். தமது தாய் தந்தையுடனும் வீட்டுச் சூழலையும் அனுபவித்த இந்தப் பிஞ்சு உள்ளங்களுக்கு அதிபர், ஆசிரியர்கள் ஏனைய மாணவ நண்பர்கள் என்ற புதிய உறவுகள் கிடைக்கின்றன.

பாடசாலையில் காலடி வைத்த இந்தச் சிறார்கள் தமது ஆரம்பக்கல்வியை கால்கோள் விழாவுடன் ஆரம்பிக்கின்றனர். பாடசாலை வாழ்வை இனிதே திறமையுடனும் நிறைவுடனும் தொடருவதற்காக அவர்களுக்கு பாடசாலையில் அதிபர், ஆசிரியர்களும், பெற்றோர்களும் அயராது உழைத்து வருகின்றனர்.

பாடசாலை வாழ்வில் சிறுவர்கள் கல்வி மட்டுமல்லாது காலையில் உடற்பயிற்சிநெறிகள், ஆடல், நாடகம் போன்றவற்றையும் இக்காலத்தில் நிறைவாகப் பெற்றுக் கொள்கின்றனர். இதற்காக மெய்வல்லுநர் போட்டிகள், தமிழ் மொழித்தினப் போட்டிகள், ஆங்கிலதினப் போட்டிகள், சித்திரப் போட்டி, நாடகப்போட்டி போன்றவற்றில் பங்குபற்றி தமது திறமையை இந்தப் பாடசாலை வாழ்விலே காட்டி பரிசில்களையும் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை பெறுகின்றனர்.

ஆறு வயதிலிருந்து பத்து வயது வரையான காலப்பகுதியை ஆரம்பப் பாடசாலைகளிலேயே கழிக்கும் இச்சிறுவர்கள் தமக்குவேண்டிய சகல துறைகளிலும் பாடங்களிலும் திறமைசாலிகளாக முன்வருவதையும் புலமைப்பரிசில் பரீட்சைகளில் தோற்றி சித்தியடைவதும் இப்பாடசாலை வாழ்விலேயே ஆகும்.

இந்தப் பாடசாலை வாழ்வு ஒரு மகிழ்ச்சிகரமான இன்பமான காலம். இக்காலப்பகுதியைப்போல ஒரு காலத்தை வேறு எக்காலத்திலும் தேடிப்பெறமுடியாது. இன்றைய சிறுவர்கள் நாளைய நாட்டின் தலைவர்கள். எனவே இவர்களின் பேச்சு, எண்ணம், செயல் என்பன புனிதமடையவேண்டும். பழைமையின் அத்திவாரத்திலே புதுமையைப் போற்றவேண்டும். மற்றும் அறிவிலே தெளிவும் நெஞ்சிலே உறுதியும், அகத்திலே அன்பும் குடிகொள்ளவேண்டும். இத்தகைய நல்ல கல்வி மூலம் பாடசாலை வாழ்வில் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் வழிசெய்யக்கூடிய வாழ்வினை சிறுவர்கள் தேடிக்கொள்வதே அவர்களின் குறிக்கோளாக அமையவேண்டும்.

**மோ. பவித்திரா**
*மாணவி தரம் - 5*

Anyone can become angry - that is easy, but to be angry with the right person at the right time, and for the right purpose and in the right way - that is not within everyone's power and that is not easy.

**- Aristotle**



# நல்லதைச் செய்வோம்

மானிடராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடவேண்டும் மனிதப் பிறப்பு பெறவேண்டு மெனில் பல புண்ணியங்கள் செய்யவேண்டும். அந்த வகையில் மனிதனாகப் பிறந்தவர்கள் புண்ணியம் செய்தவர்களாவர். இம்மானிட வாழ்விலே காலடி பதித்திருக்கும் எல்லோரும் நல்லவர்களாக இருக்கவேண்டும். தீயனவற்றை விலக்கி வாழவேண்டும்.

ஒளவையாருடைய பாடலிலே "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது. அதனிலும் அரிது கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது" என்று கூறப்பட்டுள்ளது. அரிய பிறவியான மானிடப் பிறவி எடுத்தவர்கள் நல்லதையே செய்யவேண் டும். இவ்வாறு நன்மை செய்து வாழ்ந்து கொண்டி ருப்பவர்கள் ஒரு சிலரே ஆவார்கள்.

நல்லதோர் வீணை செய்து அதனைப் பாது காக்காது விடுவதுபோல் இன்று மனிதர் தம் இனத்தையே பல சாதிகளாக வகுத்து, அதிலே ஏற்றத்தாழ்வு கொண்டு அதனால் சண்டைகள் சச்ச ரவுகளுடன் வாழ்கின்றனர். அதனை முதலிலே ஒழிக்கவேண்டும். இதனை பாரதியார் "சாதிகள் இல்லையடி பாப்பா உயர்ச்சி தாழ்ச்சி கொள்ளல் பாவம்" என்று சாதி வேறுபாட்டை ஒழிக்கவேண்டும். சாதிகள் இல்லாத சமூகமாக மாறவேண்டும் என வலியுறுத்திச் சென்றுள்ளார்.

வாழ்க்கை என்பது ஒரு கலை. ஒரு சாரார் எப்படியாவது வாழ்வதுதான் வாழ்வு என்பர். இன்னொருசாரார் இப்படி வாழ்வதுதான் வாழ்வு என்று கருதி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். எப்படியாயினும் ஒழுங்காக நல்ல முறையில் வாழ்வதையே மக்கள் விரும்புகின்றார்கள்.

ஒருவரிடத்தில் அன்பு, பாசம், இரக்கம், பொறுமை, நேர்மை முதலிய நல்லொழுக்கங்கள் கல்வியின் மூலம் கிடைக்கப்பெற்றால் நல்வாழ்வு வாழலாம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. "அன்பெனப்படுவது தன் கிளை செறாமை" என சங்கப்பாடல் உறவினர்களை கேடடடையாது காத்தல் ஆகும் எனக் கூறுகிறது.

குடும்பம் என்னும் கோயிலிலுள்ளவர்களிட மும் அன்பு செலுத்தவேண்டும். ஆசிரியரிடமும் அன்பாக இருக்க வேண்டும். நண்பனிடமும் அன்புடையவராக இருக்கவேண்டும். எதிர்கால சமுதாயத்தில் நற்பிரஜையாக வாழவேண்டும். சமூகத்தில் மதிப்பாக இருக்கவேண்டுமெனில் சமூகத்தில் அன்புடையவராக இருக்கவேண்டும்.

வையகத்தில் வாழ்வாங்கு வாழவேண்டு மெனில் நாம் பெரியவர் வார்த்தையைக் கேட்க வேண்டும். அவர்களை மதிக்கவேண்டும். அறிவில் சிறந்தவர்களைப் போற்றவேண்டும். நற்பண்பு களுடன் கூடிய கல்வியைப் பெறவேண்டும். கல்வியின் அவசியத்தை புரிந்துகொள்ளவேண்டும்.

விஞ்ஞானமயமான இவ்வுலகிலே மனிதனை மனிதனாக வாழவைப்பது நற்பண்புகள் ஆகும். மக்கள் பண்பு இல்லாதவரை "அரம்போலும் கூர்மை யரேனும் மரம்போல்வர் மக்கட் பண்பில்லாதவர்" என்பர். பண்பெனப்படுவது ஒருவனது துன்பத்தைக் கண்டு அவனுக்கு உதவி செய்வதும் உதவி செய்தவரை நன்றி மறக்காமல் செய்வதுமே. செய்நன்றிப் பண்பில் கர்ணன், கும்பகர்ணன் சிறந்து விளங்கக் காண்கிறோம்.

"கதி இழக்கினும் கட்டுரை இழக்கிலேன்" என்று உண்மை பேசுவதையே உயிரினும் மேலாகக் கொண்டு வாழ்வில் வெற்றி பெற்றவன் அரிச்சந் திரன். அரிச்சந்திரனைப் போல் பொய் கூறாது வாழ்ந் தால் நல்வாழ்வு பெறலாம். அறிவை வளர்ப்பதன் நோக்கம் என்னவெனில் ஒழுக்கத்தை வளர்ப் பதேயாகும். நமது வாழ்க்கை ஒழுங்காக அமைய நாட்டின் எதிர்காலம் ஒழுக்கநெறியில் வளர இளம் சமுதாயத்திலிருந்தே ஆணிவேர்போல் ஊன்றப் படவேண்டும்.

நல்வாழ்விற்கு சுத்தமும் முக்கியமாகும். "சுத்தம் சுகம் தரும்" என்றும், "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்றும் போற்றுகின்றனர்.

எனவே வாழ்க்கை வாழும்போது நீரைவிட்டு பாலை மட்டும் உண்ணுகின்ற அன்னப்பறவை யைப்போல போதும் என்ற மனமே பொன்செய் யும் மருந்து என்ற மனநிறைவோடு வாழ்வதனால் மட்டுமே நாம் வாழ்வில் நலமாக வாழலாம். எம்வாழ்வு நலம்பெறுவதற்கு நல்லதையே செய் வோம், நல்வாழ்வு பெறுவோம்.

ஓங்குக நற்பண்புகள்

**மு. கேதுசன்**
*தரம் - 3*

# தமிழ் மொழி

தமிழ் எனது தாய்மொழி. இதற்கு அமுது என்றும் பெயர். பொருப்பிலே பிறந்தது; சங்கம் வளர்த்தது; ஏட்டிலே தவழ்ந்தது. கற்றோர் நினைவிலே நடந்து வளர்கின்றது. இது அழகுடையது; இனிமையுடையது; தொன்மையுடையது.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதானது எங்கும் காணோம் என்றார் கவிஞர் பாரதி. தமிழை உயிராகப் போற்றுகிறார் பாரதிதாசன். இத்தரணியில் எங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் தமிழ் முழங்கும்.

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசுவது எங்கள் தமிழ்மொழி. வள்ளுவரை, இளங்கோவை, கம்பனை, பாரதியை, பாரதிதாசனை, தங்கத்தாத்தாவை இன்னும் எத்தனை எத்தனை வித்தகரை எமக்குத்தந்தது.

எனவே இத்தகைய மகத்துவம்மிக்க தமிழைத் தாய்மொழியாகக் கொண்டு தமிழர் என்று சொல்வதில் பெருமிதம் அடைகின்றோம்.

*வாழ்க தமிழ்மொழி*
*வளர்க அதன் புகழ்*

**ப. கோபிகா**
*மாணவி*

# பாரதியார்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலில் தோன்றாமை நன்று" என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கமைய இவ்வுலகிலே புகழோடு தோன்றிப் புகழோடு மறைந்த பெரியார்கள் பலர்.

இப்பெரியார்களுள் எண்ணங்களிலும் செயல்களிலும் புரட்சி செய்து மக்களின் மனதிலே நீங்காத இடத்தைப் பெற்றவர் பாரதியார் என்றால் அது மிகையாகாது.

எட்டயபுரப் பதியிலே எளிமையான குடும்பத்தில் சின்னச்சாமி ஐயருக்கும், வள்ளியம்மைக்கும் 1882ம் ஆண்டு அருந்தவப்புதல்வனாக அவனியில் தோன்றினார். சுப்பையா என்ற பிள்ளைத் திருநாமத்துடன் வளர்ந்துவரும் காலத்தில் ஐந்தாவது வயதிலே அன்னையை இழந்தார்.

தந்தையின் அரவணைப்பில் வளர்ந்துவரும் காலங்களில் ஆங்கிலக் கல்வியிலும், ஆங்கிலேயருடைய ஆட்சியிலும் வெறுப்புடையவராகக் காணப்பட்டார். ஆங்கிலேயருடைய ஆட்சியிலே தமிழ் வலிமையிழந்து, உரிமை இழந்து நிற்பதைக் கண்டு மனங்கலங்கிய பாரதி, தமிழ் புத்துயிர் பெறவேண்டும், தமிழ்மொழி வாழவேண்டும் என நினைத்து, பல அரிய கருத்துக்களை கவிதை மூலம் வெளிப்படுத்தினார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதானது எங்கும் காணோம்" என்றும், "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்றும், "வானமளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி தமிழ்மொழி" என்றும், தமிழ்மொழியை சிறப்பித்துப்பாடி மக்களின் மனதிலே தமிழ்மொழியின் இனிமையைப் பரப்பினார்.

ஆங்கிலேயருடைய ஆட்சியிலே அடிமைப் பட்டுக்கிடந்த பாரதமக்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டவிரும்பினான் பாரதி.

"விண்ணில் இரவி தனை விற்றுவிட்டு எவரும் போய் மின்மினி கொள்வாரோ?"

கண்ணிலும் இனிய சுதந்திரம் போனபின் கைகட்டிப் பிழைப்பாரோ என்று விடுதலை உணர்வை ஊட்டும் பல கவிதைகளைப் பாடினார். இவரின் கவிதைகள் நல்ல பலனைத் தந்தது என்றே கூறலாம். மக்களின் மனதிலே சுதந்திர தீபம் சுடர்விட்டு பிரகாசித்தது.

பாரதியார் வாழ்ந்த காலப்பகுதியிலே பாரத மக்களிடையே அறியாமையும், மூடக்கொள்கை களும் மண்டிக்கிடந்தன. சமூகப் பிரச்சினைகள் தலைவிரித்தாடின. இவற்றால் நாடு கெட்டுவிடும் என நினைத்த பாரதியார் மக்களை நோக்கி சாதிக் கொடுமைகள் வேண்டாம் அன்புதனில் செழித்தி டும் வையம் பாருக்குள்ளே தெய்வம் ஒன்று - இதில் பற்பல சண்டைகள் வேண்டாம் என்று கூறி, பாரதமக்களிடையே இருந்த பகைமை உணர்வை நீக்கினார். மக்களின் அறியாமையைப் போக்கி நாட்டுப்பற்றையும், மொழிப்பற்றையும் வளர்த்த பாரதியார் பெண்களின் விடுதலைக்காகவும் குரல் கொடுக்கத் தவறவில்லை.

*"மாதர் தம்மை இழிவு செய்யும்*
*மடமையைக் கொளுத்துவோம்"*
*"பெண்கள் அறிவை வளர்த்தால் - வையகம்*
*பேதமையகற்றிடும் காணீர்"*


என்று பெண்களின் முக்கியத்துவத்தை உலகிற்கு உணர்த்தினான். ஆணும், பெண்ணும் சரிநிகர் என்பது இவரது முடிவு. நன்மைகளை ஈன்று, புரந்து, வீரஞ்சேர்த்து உலகிற்கு அளிப்பவர் பெண் என்பதை பறைசாற் றினான் பாரதி.

இவ்வாறெல்லாம் மக்களின் மனதிலே விழிப் புணர்வை ஏற்படுத்தி சமூகத்தை சீர்திருத்திக்கொண் டிருந்த பாரதியார் மதம் கொண்ட யானையின் மூர்க்க குணத்தால் 1921ஆம் ஆண்டு இவ்வுலகை நீத்தார்.

தமிழ் உள்ளவரை பாரதியாரின் பெயரும், புகழும் அழியாது என்பது உறுதி
*வாழ்க பாரதியார் நாமம்*
*வளர்க தமிழ்மொழி*

**ந. சிவந்தினி**
*மாணவி*

# Mahatma Gandhi



Mahatma Gandhi was a great leader of India. He was born at por ban bander on 2nd October 1869. His father's name was Karam Chand Gandhi. After passing Matriche went to study law and became a barrister.

Kasturba Gandhi his wife. He played an important role in freedom of India. He followed the path of non violence. He always spoke the truth.

He believed in one God for all religions. He held prayers at Birla House and Hari Jan Cdony. He favoured tha uplift of poor people. He worked for the progress of villages.

He wanted to establish Ram Balya in India. He was against casteism. He was shot dead on 30th January 1948. Mahatma Gandhi is also knowanas Bapuji.

*M. Mathusha*
Grade – 5.

# தாய் சொல்லைத் தட்டாதே

மண்புழு ஒன்று ஒரு தோட்டத்தில் தனது குழந்தையுடன் வசித்து வந்தது. ஒருநாள் தாய் மண்புழு தனது குழந்தையை வளையில் விட்டுவிட்டு இரை தேடுவதற்காக வெளியில் சென்றது. அது வெளியே செல்லமுன் தன் குழந்தையிடம் "நான் திரும்பி வரும் வரையும் இந்த வளையை விட்டு ஓரிடமும் செல்லக் கூடாது. ஏதாவது அவசரம் என்றால் வளை யில் இருந்து மெதுவாக உடலை வளைத்து மேலே வரவேண்டும். மேலே வந்தவுடன் எதிரிகள் யாராவது இருக்கிறார்களா என்று பார்த்துவிட்டுத்தான் வெளியே வரவேண்டும்" என்று எச்சரித்தது தாய் மண்புழு.

அதற்கு சிறிய மண்புழு சரியென மேலும் கீழும் தலையசைத்தது. தாய் மண்புழு வெளியே சென்ற சிறிது நேரத்தில் சிறிய மண் புழுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. எனது அம்மாவைப்போல் மற்ற மண்புழுக்களும் இரை தேடுவதற்காக வெளியே சென்றி ருக்கும். அந்த மண்புழுக்களின் வளைகளில் அவர்களின் குழந்தைகள் என்னைப்போல் சும்மா இருப்பார்கள்.

அவர்களை எல்லாம் கூட்டி வந்து தோட் டத்தில் விளையாடலாம். அம்மா வரும்வரை உல்லாசமாக இருக்கலாம் என்று எண்ணி யது. உற்சாக மிகுதியால் தாய் மண்புழு கூறிய எச்சரிக்கையை மறந்து சடாரென்று மேலே ஏறி வெளியே வந்தது சிறிய மண்புழு.

அப்போது அருகில் நின்ற கோழி ஒன்று சிறிய மண்புழுவைப் பார்த்துவிட்டது. உடனே ஓடோடி வந்தது அந்தக்கோழி. கோழியைக் கண்ட சிறிய மண்புழு மீண்டும் வளைக்குள் நுழைய முயன்றது. ஆனால் அதன் உடலின் பெரும்பகுதி வளைக்கு வெளியே வந்துவிட்ட தால் சிறிய மண்புழுவால் உடனடியாகத் தப்ப முடியவில்லை. கோழி வந்து சிறிய மண்புழு வைக் கொத்தித் தின்றது. தாய் சொல்லைக் கேளாமல் வெளியே வந்த மண்புழு பரிதாப மாகத் தனது உயிரை மாய்த்துக்கொண்டது.

**செல்வி. கௌ. கஸ்பிரியா**
*தரம் – 5 மாணவி.*

## யார் புத்திசாலி?

எப்போதுமே மிருகங்கள் மனிதரை விட புத்திசாலிகளாக இருக்கின்றன. முப்பது குதிரைகள் பந்தயத்தில் ஓடினால் ஐம்பதாயிரம் மனிதர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். முப்பது மனிதர்கள் பந்தயத்தில் ஓடினால் ஒரு குதிரை கூட வந்து பார்ப்பதில்லையே.

# நவிலும் நன்றிகள்

தரமான கல்வியைப் பெற்றுக் கொடுத்து வளமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பதே ஒவ்வொரு பெற்றோரினதும் நோக்கமாகும்.

இந்நோக்கத்தை நிறைவேற்றவென 1933இல் ஆரம்பிக்கப்பட்ட இவ்வித்தியாசாலை தனது சேவையை எழுபத்தைந்து ஆண்டுகள் நிறைவு செய்து பவளவிழா காணும் இவ்வேளையில் பவளவிழா நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக "திருஞானம்" என்னும் பவளவிழா மலர் வெளியிடுவதில் வித்தியாசாலைச் சமூகம் மகிழ்ச்சியும், பெருமிதமும் அடைகின்றது.

கடந்த பாதையைக் காட்டி நின்று, கடக்கவேண்டிய பாதைக்கு வளஞ்சேர்க்கும் நோக்கோடு வெளிவரும் இம்மலருக்கு ஆசிச் செய்திகள், வாழ்த்துச் செய்திகள் வழங்கிய பெரியோர்களுக்கும், ஆக்கங்களை வழங்கிய பாடசாலை ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

மேலும் இம்மலர் வெளிவருவதற்கு நிதி உதவி வழங்கிய உள்நாட்டு, வெளிநாட்டு ஆர்வலர்கள், விளம்பரங்கள், வழங்கிய அன்புள்ளங்களுக்கும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், மைதான நலனோம்பு சபையினர், நலன் விரும்பிகள், பெற்றோர்கள், மலர்க்குழுவினர், இம்மலரினை அச்சிட்டு உதவிய யுனெசய பிறிண்டேர்ஸ் நிறுவனத்தாருக்கும் எமது மனமுவந்த நன்றிகள்.


வணக்கம்

*பாடசாலைச் சமூகம்,*
*யா/ சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை,*
*சுன்னாகம்.*


பவளவிழா மலர் வாழ்த்துகிறோம்

# ANURA

K. K. S. Road, Chunnakam.



Internet Cafe & Video





Local, IDD, Net 2 Phones, Video Calls,
Video Filming,
Photo Copy, Fax Scaning, Reloads,
CD & DVD Writing
& Sales, Stationeries etc...

அனுரா இன்ரநெற் க[f]பே

பாடசாலை முன்பாக

தொ.பே: 0776184334

பவளவிழா மலர் வாழ்த்துகிறோம்



# TIP TOP &
## SHANTHAN HOTEL



# ரிப் ரொப் &
# சாந்தன் உணவகம்

- சகல விதமான சிற்றுண்டி வகைகளையும், தரமாகவும் நியாய விலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.
- இல்லங்களிலும், நிறுவனங்களிலும் நடைபெறும் சகல விழாக்களுக்கும் உரிய சிற்றுண்டி வகைகளை ஓடர் முறையில் பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை முன்பாக







Printed By: ANDRA Digital Printing Tel:0212228929